# ஒருத்தி நினைக்கையிலே

தொடர்கதை

## சுஜாதா



COMICS PDF TIMES

SS

புதிய தொடர்கதை

"ரோஜா"வில் சுஜாதா எழுதும் முதல் தொடர்கதை, இது. பட்டணத்தையும், பட்டிக்காட்டையும் கலந்து எழுதியிருக்கிறார். தொடக்கமே உள்ளத்தைக் கவர்கிறது!

# 1

மெட்ராஸ் வர்றதுக்கு ஒரு மணி முன்னலேயே எனக்கு முழிப்பு கண்டிருச்சு. மாணிக்கம் பிளாட்பாரத்தில இறங்கி சன்னல் வழியா காப்பி கொடுத்தான்.

"பல்லு விளக்கலேயே"

"பாதகமில்லே. ஒரு முறை தண்ணில கொப்பளிச்சுரு, இல்லே பல்பொடி வாங்கியாரவா?"

"வேண்டாம். அதுக்குள்ளாற ட்ரெய்னு ஊதிறப்போவுது"

"அப்ப குடிச்சுக்க"

"இது என்ன ஸ்டேசன்"

"அரக்கோணம். இங்க நியாயமாப் பார்த்தா நிக்கக் கூடாது"

காப்பி வெந்நித் தண்ணி மாதிரி இருந்தது. குடிக்கிறப்ப அம்மா காலேல எழுப்பி எழுப்பி ஆதரவா தருவாங்களேன்னு ஞாபகம் வந்து உடனே கண்ணில தண்ணியும் வந்திருச்சு. மாணிக்கம் சன்னலில் இருந்தே பாத்துக்கிட்டு இருந்தான். "ஏன் குணு? அழுவறியா?"

"இல்லே, கண்ல கரி விழுந்துருச்சு"

"இது டீஸல் வண்டி இல்ல? கண்ல கரி எப்படி விழும்"

"ஏதோ தூசு, வெச்சுக்கயேன்" என்று சிரிக்க பாடு பட்டேன்.

"வாரம் ஒரு முறையாவது வந்து பாக்கப் போறமில்ல. தங்கவேலு வேற வர்றதா சொல்லி இருக்காரு. பெரம்பூர்ல இருந்து சின்னம்மா வரும். நான் வருவேன். அப்பாரு ஏன் அம்மா கூட உன்னே விட்டுட்டு பதினஞ்சு நாளைக்கு மேல இருக்க முடியாது. ஓடியாந்திரும், பாரு"

அம்மா என் கையில கட்டியிருந்த கருப்புக் கயித்தைப் பார்த்துக்கிட்டேன்.

"எப்பவும் இதைப் போட்டுக்க, பாப்பா. காத்து கருப்பு அண்டாதுன்னு சாமியாரு சொல்லி வெச்சிருக்காரு"

அம்மாவை பஸ் ஸ்டாண்டில பார்த்ததும் அவள் கண்ணில் தயாரா, கண்ணீர் இருந்தது.

"செவ்வாக்கிளமை தவராம எண்ணே வெச்சுக்க தலேயில, வெள்ளிக்கிழமை அம்மன் படத்துக்கு கொஞ்சம் பூ வையி. எதாவது கோவிலுக்கு சாமி கும்பிட மாதம் ஒரு முறையாவது தவறாமப் போய்வா..." எத்தன உபதேசங்கள்!

எத்தினி சம்பளம் தருவாங்க. எப்படி மெம்மேல அது உசரும், எங்க தங்கி இருக்கப்போறே என்று தான் அப்பாவுக்குக் கவலே "நம்ம கிராமத்தில இருந்து பட்டணத்துக்கு வேலேக்கு போற ஒரே பொண்ணு என் மவதான்"

அதான எனக்கும் பயமா இருக்குது. ஊர் சனமே தப்புப் பண்ணிட்டான்னு சொல்லுது. அத்தைக் கிளவி வந்து "அது எப்படி தனியா அனுப்பப் போகும்? நம்ம வளக்கத்திலேயே இல்லாதது. கட்டிக்க ஆளில்லேயா, வசதி இல்லியா? எதுக்காவன்னு இப்ப மவளேத் தனியா அனுப்புறேன்"னு கேக்க,

"என்னவோ, அதான் புடிவாதமா போறேங்குது. முதக்கா நம்ம குடும்பத்திலயே படிச்ச பொண்ணு. சர்க்காரு எல்லா சம்பளமும் பாத்துக்கிட்டாங்க. நெலலா பாஸ் பண்ணி வேலேக்கு மனுப் போட்ட உடனே கிடைச்சிருச்சு. நம்ம ஊர் என்ன தொண்ணூறு மைலு? அப்பப்ப போய்ப் பாத்துக்கிட்டா போவுது. ஆசையை கெடுப்பானேன்?"

"இத பாரு தங்கம்? நான் இன்னிக்கு சொல்



COMICS PDF TIMES

சுஜாதா

ரேம்.உம் பொண்ணு கெட்டு சீரளிஞ்சி திரும்பி வரப் போவுது. அப்புறம் வருத்தப்பட்டு ஏதும் பிரயோசனமில்லே"

"எம் பொண்ணே உனக்கு தெரியாது கிளவி. குணம் தங்கம்!"

எனக்கு எல்லாமே குழப்பமாக இருந்திச்சு. எங்க குடும்பத்தில பொஸ்தவத்தை தொட்டவ நான் ஒருத்திதான். மாணிக்கம் தான் படிச்சிருக்க வேண்டியவன். மாங்காமரத்தை விட்டு சின்னப் பிள்ளேல இறங்கினுத்தானே? வாத்தியார் அய்யா வந்து சொல்லிப் போட்டாரு, "உம்மவன் லாயக்கில்லே, படிப்பு ஏருது"ன்னு அப்பா மவனைக் கோவிச்சுக்காம வாத்தியார் அய்யாவை கோவிச்சுக்கிட்டாரு.

முதல்ல என்னே ஸ்கூலுக்கு அனுப்பறதா இல்லே. பிறகு வயசுக்கு வர்ற வரைக்கும் அனுப்பலாம்னுங்க. இருக்கற பரிசு எல்லாம் வாங்கினேன். அவங்க சொல்லித்தான் தெரியும், எங்களுக்கு. நாங்க தாள்த்தப்பட்ட வகுப்புன்னு, வாத்தியார் தான் சொன்னுரு. "நீங்க அதிர்ஷ்டம் பண்ணவங்க. உங்களுக்காக அரசாங்கம் சலுகையெல்லாம் தருது"ன்னு.

அவரே தாசில்தார் கிட்ட சர்ட்டிபிகேட்டெல்லாம் வாங்கி என்னே மடவாக்கம் ஐஸ்கூல்ல சேத்துவிட்டாரு. இங்கு இருந்து கட்டு சாதம் கட்டிக்கிட்டு காலேல பஸ்ல போவறதை கிராமத்தில வேடிக்கை பாத்தாங்க. மாவட்டத்தில முதலாவதா பாஸ் செஞ்சு தந்தி பேப்பர்ல போட்டோ எல்லாம் போட்டப்ப அடியாத்தேன்னு வீட்டுக்கு வந்து துக்கம் விசாரிக்கருப்பல விசாரிச்சாங்க. நான் படிப்பை நிறுத்திறலாம்னுதான் இருந்தேன். பள்ளிக்கூடத்திலயே மனுப் போட்டு புதுசா தாலுக்காவில பெண்களுக்குன்னு காலேஜ் ஆரம்பிச்சாங்க. அதில சேத்துவிட்டுட்டாரு, வாத்தியாரு.

## சார்லசை அடித்தவர்!

இளவரசர் சார்லசின் திருமணத்துக்கு அழைக்கப்பட்டவர்களில் எசம் என்பவரும் ஒருவர்.

இவர் சார்லஸ் படித்த பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர்.

ஒழுங்காக நடந்து கொள்ளாததற்காக இவர், இரண்டு முறை சார்லசை அடித்து இருக்கிறார்!



எதுக்கு விவரிப்பானேன்? இன்னி தேதிக்கு பி.எஸ்ஸி. முடிச்சுட்டேன். பவுதிகத்தில எல்லாத்தையும் உருப்போட்டே பாஸ் செய்துட்டேன். அரசாங்கத்தில கிளார்க்கு உத்தியோகத்துக்கு மனுப் போட்டதில, என் மார்க்கைப் பாத்துட்டே வேலேக்கு வாங்கன்னு சொல்லிட்டாங்க. ஆரம்பத்தில மூன்னூறோ நானூறோ சம்பளமாம். இதோ போய்க்கிட்டிருக்கேன்.

வண்டி புறப்பட மாணிக்கம் எனக்கு கொஞ்சம் கவலேயைக் கொடுத்துட்டு தொத்தி ஏறிக்கிட்டான்.

நான் இதுவரை பட்டணத்தைப் பாத்தது கிடையாது. மடவாக்கம் டவுனேவிட பெரிசா எதையும் பாத்ததில்லே.

சேக்ஸ்பியர் எல்லாம் பாடத்தில படிச்சிருந்தாலும் ஒரு வார்த்தை இங்கிலீசு பேச வராது.

எனக்கு பதினெட்டு முடிஞ்சிருச்சு. காதல் கீதல் எல்லாம் புஸ்தவத்திலயும், ஒண்ணு ரெண்டு சினிமாவிலயும்தான் பாத்திருக்

கேன். என் அண்ணனை விட்டா ஒரு ஆம்பிளை கூடப் பேசினதில்லே.

எனக்கு பல விசயங்கள் புரியறதில்லே. காதல்னு சொல்றது எல்லாம் ஏதோ கெட்ட வார்த்தைன்னு தான், திங்கான விசயம்னு தான் நெனைப்பு. கதைல சில சமயம் ஒரு மாதிரி வர்றப்ப ராமிகிட்ட மன்னிப்பு கேட்டுப்பேன். "பையாலஜி"யில் படிச்சதில ஒரு மாதிரி புரிஞ்சாலும் எனக்குன்னு வந்தப்ப, என்னை பந்தல் கட்டி வாசல்ல ஒக்காத்தி வெச்சப்ப, எனக்கு அழுகைதான் வந்துச்சு. பொண்ணுங்கறதிலை சில சங்கடங்கள் எல்லாம் இருக்குதுன்னு ஏதோ விவரம் இல்லாம ஒரு மாதிரி பயமா, இல்லே வயத்துக்குள்ள என்னமோ மாதிரியான உணர்ச்சியா சில வேளைகளில் ஏற்படும்.

கல்லூரியில வளந்த பையங்க "டெஸ்க்" மேல சுகுணா சுகுணான்னு எழுதி வெச்சிருப்பாங்க. பாதைல போறப்ப பாட்டு பாடுவாங்க. பஸ்சில அனுவசியத்துக்கு கிராமம் வரைக்கும் வருவாங்க. நான் நிமிந்து பாத்ததில்லே. ஒரு வார்த்தை பேசினதில்லே. ஆம்பிளை வாத்தியார் ஏதாவது கேள்வி கேட்டாக்க தலை நிமிராம தமிழரசியைப் பாத்துகிட்டுதான் பதில் சொல்வேன். ஏதாவது பசங்க அதிகம் தொந்தரவு பண்ணிட்டா, என் அண்ணன் கிட்ட சொல்லிடுவேன். அவன் செமையா அடிச்சுருவான்.

இதுவரைக்கும் நான் ட்ரெய்ன்ல போனது மூணு முறை. சினிமா பாத்தது இரண்டு முறை. பாவாடை தாவணி இல்லாம சட்டை கால்சராய் போட்டுக்கிட்டது, கலெக்டர் காலேஜுக்கு வந்தப்ப,ஒரு முறை. என்னைக் கொண்டு போய் பட்டணத்தில தனியா விடப் போறாங்க. நெனைச்சாலே வயத்துக்குள்ள நிகீர்ங்குது.

சென்ட்ரல் ஸ்டேசன்ல வந்ததும் என் பெட்டி படுக்கையை அண்ணனே தூக்கிக்கிட்டாரு.

"சார் நாலணா குடு சார்.நான் தூக்கியாரேன்" என்று ஒரு பையன் அவன் பின்னாலேயே நடந்தான். போடான்னு அண்ணன் விரட்ட, எனக்கு பேச்சு செத்துப் போய் மலைப்பா இருந்தது. இத்தனை சனங்களை மாரியம்மன் திருவிழாவில் கூடப் பாத்ததில்லே. இத்தனை பெரிய கடிகாரத்தை நான் ஆயுசில பாத்ததில்லே.

மாணிக்கமும் ஆன்னு பாத்துக்கிட்டுதான் வந்தார். அவராவது ஒரு முறை ரெண்டு முறை மெட்ராஸ் வந்திருக்கார். கைல விலாசம் வெச்சிருந்தார்.

டிக்கட்டை கொடுத்துட்டு வெளிய வந்ததும் பூச்சி பறக்கற மாதிரி மஞ்ச மஞ்சளா வண்டிங்க.அதுல ஒரு வண்டி கிட்ட போயி அண்ணன் தன் கைல இருந்த விலாசத்தைக் காட்டினார்.

"ரெண்டு சவாரியா"

"நாங்க ரெண்டு பேர் தான்"

"மீட்டருக்கு மேல ஒரு ஒண்ணாரை ரூவான்னு ஏறு"

"இங்கருந்து அந்த இடம் எத்தனை தூரம் இருக்கும்?"

"இன்னய்யா நான் என்ன மேப்பு வெச்சிருக்கனா! அங்கபோய் போலீஸ் காரரைக் கேளு"

"போலீசெல்லாம் வேண்டாண்ணே"

"இரு, குணா. பஸ்சு எதுனாச்சியும் வருமா பாக்கறேன்"

தங்கவேலு ஸ்டேசனுக்கே வரதா சொன்னாரு. இந்த கூட்டத்தில எங்களை எங்க தேடிக்கிட்டு இருப்பாரோ..

எதுர்த்தாப்பல ஆஸ்பத்திரி கட்டடமும், பெரிசு பெரிசா சினிமாகாரங்க படமும் தெரிஞ்சது.

"என்ன தம்பி தங்கறதுக்கு ஓட்டல் வேணுமா, ரெண்டு பேரும் சவுரியமா இருந்துக்கலாம். பக்கத்தில தான் இருக்குது. நல்ல சாத்தோட்டமா ரூமுங்க"

மாணிக்கம் புரியாம, "குணா, இங்கயே இரு. நான் போயி பஸ்சு என்னன்னு விசாரிச்சுக்கிட்டு வர்றேன்"னு போயிட்டாரு.

எனக்கு பயமாத்தான் இருந்தது. போற வர்றவங்க பெரும்பாலும் என்னை கவனிக்கலே. கவனிக்கறவங்க கவனிக்கிற விதம் நல்லால்லே.

ஒரு பையன் படத்துக்கு ஊதுவத்தி புடிச்சுக்கிட்டு காசு கேட்டான்.

சக்கர வண்டியில ஒருத்தரை தள்ளிக்கிட்டு போறாங்க.

மீன் வாடை அடிச்சுது.

மார்ல எளுதி சட்டை

---

"பன்னீர் புஷ்பங்கள்" சாந்தியை ஒப்பந்தம் செய்யப் போனால், அவர் போடும் நிபந்தனைகளை ஏற்க வேண்டும்.

"கட்டிப் பிடிக்க மாட்டேன்; கவர்ச்சியாக உடுத்த மாட்டேன்; ஆபாசமாக ஆட மாட்டேன். கற்பழிப்பு காட்சிக்கு இணங்க மாட்டேன். கதாநாயகனோடு உருள மாட்டேன்" என்று வாய்ப்பாடு ஒப்புவிக்கிறார், சாந்தி.

"சினிமா தொழிலுக்கு வந்துவிட்டு, "அப்படி நடிக்க மாட்டேன்; இப்படி நடிக்க மாட்டேன்" என்று சொன்னால், நிலைத்து நிற்க முடியாதே" என்று சொன்னால், "நான் ஒரு நடிகையாகவே காலத்தைக் கழிக்க விரும்பவில்லை" என்றார், சாந்தி.

"இன்னும் மூன்று ஆண்டுதான், நடிப்பேன். அதன் பிறகு, ஒரு நல்ல மாப்பிள்ளையைத் தேடி திருமணம் செய்து கொள்ளுவேன். எனக்கு பிடித்த மாப்பிள்ளை கிடைக்காது போனால், நடனப் பள்ளிக்கூடம் நடத்துவேன். எனக்கு முறைப்படி நடனம் ஆடத் தெரியும்" என்று சொன்னார், சாந்தி.

12–ம் வகுப்பு தேறி உள்ள சாந்தி, இப்பொழுது தபால் மூலம் பட்டப் படிப்பு படித்து வருகிறார்.

சாந்திக்கு கடக ராசி. அவர் ராசிப்படி, 21 வயதில், சாந்தி பெயரும் புகழும் அடைய வேண்டுமாம்.

"அப்படியென்றால், இப்பொழுது உங்களுக்கு 21 வயதா?" என்று கேட்டால், "என்னைப் பார்த்தால் 21 வயதுப் பெண் போலவா தெரிகிறது?" என்று கேட்கிறார், சாந்தி.



# இமயத் திருநாடு

**துறைவன்**

நெஞ்சில் நேர்மை
நினைப்பில் உறுதி
இது நம் முதலீடு—இங்கு
வஞ்சனை நீங்கிய
வாழ்வே பெருமை
இது நம் குறள் ஏடு

தாயகம் உயர்க
தன்னலம் குறைக
இதுவே பொதுவாழ்வு—சிறு
தீயவர் கயவர்
தேசப் பகைவர்
அழிவதில் தவறேது?

எல்லாச் சாதியும்
இணைந்தொரு சாதி
இயற்றிடு வோம் நாட்டில்!—நம்
எல்லா மக்களும்
நல்லோர் ஆகுக
எழுதுக பொன் ஏட்டில்!

துன்பக் கண்ணீர்
துடைத்திடும் எண்ணம்
அது நம் பண்பாடு—இதய
அன்பைத் தருவோம்
அன்பைப் பெறுவோம்
அதுவே கோட்பாடு

சகோதர பாசம்
சமத்துவ நேசம்
இது நம் அணுகுண்டு—தீய
பகைவரைச் சுட்டுப்
பொசுக்கி யழிப்போம்
எதிரிகள் எவருண்டு?

இழைகள் ஆயிரம்
நெசவோ ஒன்று
இது ஒருமைப்பாடு—நம்
அழகிய பாரதம்
மலைகளில் இமயம்!
அற்புதத் திருநாடு!



இந்த அழகி அமெரிக்காவைச் சேர்ந்தவர். பெயர் ஸ்டேசி. இவர் ஒரு சண்டைக்கு தயாராக நிற்கிறார்! அது என்ன சண்டை? 35-ம் பக்கம்.

போட்டுக்கிட்டு ஒரு பொண்ணு டக் டக்னு நடந்து போச்சு.

எங்கண்ணன் தலை எதித்தாப்பல தெரியுதான்னு பாத்தேன்.

சிவப்பு தபால் வண்டிங்க நின்னுகிட்டு இருந்தது. பெரிய நாய் ஒண்ணை மார்ல தோல் பட்டை கட்டி அழைச்சுகிட்டு போனுங்க.

போலீஸ்காரங்க விசில் கேட்டுக் கிட்டே இருந்தது.

சனங்க நின்னுகிட்டே காகிதத்தில தட்டு வெச்சு இட்லி தின்னுகிட்டு இருந்தாங்க.

கண்ணுடிக்குள்ள டிக்கெட்டு வித்துகிட்டு இருந்தாங்க.

சைக்கிள் ஸ்டாண்டு பக்கத்தில புள்ளையார் கோயில்.

சாக்கடை நாத்தம் அதிகமா இருந்துச்சு.

அண்ணனைக் காணம். எங்க போனுருன்னு நான் அவர் போன பக்கமே அடிக்கடி பாத்துகிட்டு இருக்குறப்ப, ஓர் ஆளு எங்கிட்ட வந்து, "உங்க பேர்தானே குணு"ன்னுன்.

"ஆமா"

"உங்களை வரச் சொன்னுரு. அதோ அங்க பஸ் ஸ்டாண்டாண்டை நிக்கருரு"

"யாரு, அண்ணனு?"

"ஆமா. விடுங்க நான் எடுத்துக்கறேன்"

என் பெட்டி படுக்கையை எடுத்துகிட்டு விரைவாக நடந்தான். நான் அவன் பின்ன நடக்க,இடப் பக்கமா இருந்த வாசல்ல வெளியே வந்தோம்.

"எங்க நிக்கிருரு"

"அதாங்க, பஸ் ஸ்டாண்டாண்டை"

அவன் வேகத்துக்கு நடக்க சிரமமாத்தான் இருந்தது. எதித்தாப்பல பஸ் எல்லாம் போறபக்கம் போகாம நேரா ஒரு சந்தில நுழைஞ்சான்"

"குறுக்கு வழி வாங்க"

எனக்கு அந்த ஆள் மேல எதும் சந்தேகமே ஏன் ஏற்படலே? என் பேரைச் சொன்னதாலயா? அண்ணன் சொல்லி அனுப்பிச்சிருக்காருன்னு நாம் பாட்டுக்கு பலி ஆடு மாதிரி போறேன்.

அந்தாளு இன்னெரு சின்ன சந்தில நுழைஞ்சப்புறம்தான் எனக்கு ஒரு மாதிரி சந்தேகம் வந்தது. "எங்கங்க போறிங்க?"ன்னேன்.

"இங்கதான் உங்க அண்ணன் இருக்காரு. வாங்க வேகமா! வாம்மா"

நான் நின்னுட்டேன்.

"அட வாங்கன்ன. அவரு காத்திருக்காரில்லே! உடனே தங்கச்சியை அழைச்சுட்டு வான்னு தானே சொல்லி அனுப்பிச்சிருக்காரு"

"நீங்க யாரு?"

அவன் சிரிச்சு கிட்டு எங்கிட்ட வந்து "நான் தான் மெட்ராஸ்"

என் மேல கழுத்தை சுத்தி கை போட்டு மாரோட மூச்சுத் திணர்ற மாதிரி அழுத்தி, என்னை சரக்குனு ஒரு வீட்டு வாசலுக்கு இழுத்துகிட்டு உள்ள எடுத்துக்கிட்டு போனுன்.

(தொடரும்)



# ஒருத்தி நினைக்கையிலே

## சுஜாதா

**2**

(சென்ற வாரம்: அவள் பெயர் சுகுணா. சென்னைக்கு முதல் முறை அண்ணனுடன் வருகிறாள். அண்ணன் பெயர் மாணிக்கம். சுகுணா கிராமத்துப் பெண். அரசாங்க சலுகைகளால் படித்து பட்டம் பெற்று ஒரு வேலை கிடைத்து முதன் முதல் பட்டணத்துக்கு வருகிறாள், சென்ட்ரல் ஸ்டேஷன் அவளுக்கு மலைப்பாக இருக்கிறது. அண்ணன் அவளை நிறுத்திவிட்டு பஸ் விசாரிக்கப் போகிறான். அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறாள். ஒருவன் அவளை அணுகி பெயர் சொல்லி அழைத்து, "உங்களை வரச் சொன்னாரு. அங்க பஸ்டாண்டாண்டை நிக்கிறாரு" என்று கூப்பிடுகிறான். அவன் பின் நம்பிக்கையுடன் செல்கிறாள். அவன், அவளை ஒரு சந்தின் வழியாக அழைத்து செல்கிறான், குறுக்கு வழி என்கிறான். சந்தேகம் வந்து நிற்கிறாள். நீங்க யாரு, என்கிறாள். நான் தான் மெட்ராஸ் என்கிறான். "மெட்ராஸ்" அவள் கழுத்தை சுற்றி கைபோட்டு மார்பை அழுத்தி ஒரு வீட்டுக்குள் இழுக்கிறது. இனி படியுங்கள்.)

எனக்கு முதல்ல கத்தணும்னுதான் தோணிச்சு. பாதி கத்தல் தொண்டையை மீறி வர்றதுக்குள்ள வாயைப் பொத்திட்டான். "ஹ ஹ ஹ் சத்தம் போடக் கூடாது" யாரு இதுன்ன ஒரு ஆள் சேந்துக்கிட்டான்.

"அண்ணே! அண்ணே!" என்று மனசுக்குள்ள உரக்க கத்தினேன். நகத்தால அவனைக் கீறிப் பார்த்தேன். ம்ம்னு முனகல் மட்டும் தான முடிஞ்சுது.

இது வரைக்கும், பதினெட்டு வயசு வரைக்கும், என்னை ஓர் ஆம்பிளை தொட்டது இல்லை. எங்கப்பாரு கூட அஞ்சு வயசுக்கப்புறம் என்னை எடுத்து வெச்சுகிட்டு இருந்ததா ஞாபகம் இல்லை.

இப்ப என்னடான்னா மெட்ராசுக்கு வந்த முதல் நாளே ரெண்டு பேரு என்னை போட்டு எல்லா இடத்திலயும் தொடறது தெரிஞ்சுது. எனக்கு, அய்யய்யோன்னு மெட்ராஸ் முழுக்க கேட்கும் படியா அழணும்னு தோணிச்சு. மூச்சு திணறிச்சு.

அவங்க ரெண்டு பேரும் என்னை பெரும்பாலும் தூக்கிகிட்டே மாடிப் படியில போற மாதிரி தெரிஞ்சுது. எனக்குள்ள பயம் எல்லை மீறிப் போயி கொஞ்ச நேரம் மயக்கம் கூட வந்தது.

மயக்கமான வேற ஏதாவது செஞ்சுருவாங்களோன்னு அச்சமும் கூடவே வந்துருச்சு. அந்த வேற ஏதாவது என்னன்னு எனக்கு சரியாகத் தெரியாது. ஏதோ தப்பு காரியம் தான்னு தெரியும்.

இதுவரைக்கும் பெண்ணுங்கறதால என்னைக் காப்பாத்திக்கவோ கவலைப் படவோ அவசியமே நேர்ந்ததில்லை. இப்பதான் எதுக்கு படிச்சு தொலைச்சோம்; எதுக்கு பட்டணத்துக்கு ஆசைப்பட்டு வந்தோம்; எதுக்கு பாழாப் போற வேலை, பேசாம கிராமத்தில வீட்டிலயே இருந்துகிட்டு......

என்னத்தை செய்வேன் கிலி! மூஞ்சியெல்லாம் ரத்தம் பாஞ்சாப்பல சூடு.

சரக்குனு ஒரு ரூம்ல என்னைத் தள்ளிட்டாங்க. நான் மூலையிலே போய் விழுந்தேன்.

"இத பாரு உம் பேர் என்ன"ன்னான்.

நான் அய்யோன்னு கத்த ஆரம்பிச்சேன்.

என்னை கிட்ட வந்து பளார்னு அடிச்சான். "சத்தம் வரக் கூடாது. சத்தம் வந்தா முப்பத்திரண்டு பல்லும் எகிறிக்கும். பேர் என்ன, சொல்லு"

என்னை ஏமாத்தி அழைச்சுகிட்டு வந்த ஆள்,



-"பாட்டி! கூடையோடு எங்கே கிளம்பிவிட்டீர்கள்?"

"கூடைப் பந்து போட்டி நடக்கிறதாமே! அது எப்படியிருக்கிறது என்று பார்க்கப் போகிறேன்."

"குணு"ன்னுன்.

சிகரெட்டு பத்த வெச்சுகிட்டாங்க.

"தெலுங்கு தேசமா?"

நான் பதில் சொல்ல வில்லே. "மீஊரு ஏமி? ராஜ மந்திரியா?"

தலேயை ஆட்டினேன்.

"தமிளா"

தலேயை அசைத்தேன்.

"சோக்காத்தான் இருக்குது. எங்கடா புடிச்ச?"

"பாத்தாலே படு கண்ட்ரின்னு தெரிஞ்சு போச்சு. அண்ணன்காரன் இருக்கான். பஸ் விசாரிக்க போயிருக்கான்."

அண்ணன் என்று கேட்டதும் எனக்கு அழுகை வந்து விசிச்சு விசிச்சு அழுதேன்.

"சத்தம் போடாம கொஞ்ச நேரம் அழுவு, பரவால்லே"

அவன் என் பொட்டியை எடுத்து பூட்டை நோட்டம் பார்த்தான். நான் பூ பூன்னு அழுவ றேன். "பொட்டியெல்லாம் சோக்காத்தான் இருக்கு. சாவி எங்க"ன்னு எங்கிட்ட கேட்டான்.

"எல்லாம் கழுத்தில தான் மாட்டியிருக்கும்"

நான் உடனே கழுத்தில பின் குத்திருந்த சாவியை எடுத்து அவங்க முன்னுலை எறிஞ்சேன்.

பணமெல்லாம் அண்ணன் கிட்டதான் இருக்கு. அண்ணன் இந்நேரம் என்ன தவி தவிச்சுக் கிட்டு இருப் பாரோ? எங்க எல்லாம் அலேயராரோ! எப்ப கிராமத்துக்கு போயி, எப்ப அவங்களுக்கு தெரிஞ்சு, யாருக்கு சொல்லி, எப்படி இந்த எடத்துக்கு வந்து என்னே மீட்டுகிட்டு போகப் போறுங்களோ. அய்யோ! இவங்க எதுக்காக என்னே இங்க கூட்டியாந்திருக் காங்க? பணத்துக்கா, வன்னு, பணம் இல்லேயே.



பொட்டில இருக்கறதை ஒவ்வொண்ணு உதறிப் போட்டான். நேத்தைக் குத்தான் டவுன்ல 66 ரூபாய்க்கு அண்ணன் எடுத்துக் கொடுத்த சேலே, ரவிக்கை, பாவாடை, பாடி எல்லாத்தையும் எனக்கு முன்னுலயே சிரிச்சுகிட்டு நிதானமா பாத்து அனுபவிச்சு எடுத்து போடறுன்.

மத்தவன் "குணு குணு"ன்னு கூப்பிடுகிறுன். எனக்கு எல்லாமே நின்னு போய்ட்ட மாதிரி இருக்குது. என் எஸ். எல். சி. சர்ட்டிபிகேட்டு, அப்புறம் டிகிரி சர்ட்டிபிகேட்டு, கோப்புக்குள்ள இருந்த என் மத்த சர்ட்டிபிகேட்டுகளே எல்லாம் பாக்றுன்.

"அண்ணே படிச்ச பொண்ணு"

"அடிசக்கை"

"நீ படிச்சிருக்கியா"

தலேய ஆட்டினேன்.

"எது வரைக்கும்?"

"அது எதுவரைக்கும்னு சொன்னு உனக்குத்தான் புரியப் போறதோ! இத பாரு, பொண்ணு நீ எதும் பயப்பட வேண்டாம். இப்ப போய் உங்கள் அண்ணனே கூட்டியாரேன். சத்தம் போடாம இங்கயே இருந்துக்க. உன்னே நாங்கள் ஒண்ணும் செய்துர மாட்டோம். ஏண்டா கோபாலு நாம இந்தப் பொண்ணே எதாவது செய்துருவோமாடா?"

"சேச்சே! யாரு சொன்னுங்கா"

"அதனுல குளி; மூஞ்சியை அலம்பிக்க; பவுடர் போட்டுக்க. இத பாரு, இந்தக் கதவைத் திறந்தா பாத்ரூமு. எங்கயும் வெளிய போக வேண்டாம். வெளிய போனு ஆபத்து. இந்த மெட்ராஸ் பொல்லாத

# பெண்ணாகப் பிறந்தாலே...

உத்திரப்பிரதேசத்தில் ஒரு பெண் போலீஸ் அதிகாரி.

அவள் மீது ஆண் அதிகாரிகள் புகார் செய்தார்கள்.

வழக்கமான புகார் தான்!

அந்தப் பெண் போலீஸ் அதிகாரி கண்டவர்களுடன் சுற்றுகிருள் என்றும், தன்னுடன் பணிபுரியும் ஆண் அதிகாரிகளுடன் உடல் உறவு வைத்து இருக்கிருள் என்றும் அரசாங்கத்துக்கு மனு அனுப்பினுர்கள்.

அதன் பேரில், அந்தப் பெண் போலீஸ் அதிகாரி மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பப்பட்டாள்.

அவள் திருமணம் ஆகாதவள், இன்னும் அவள் கன்னி கழியாமலே இருப்பதாக டாக்டர்கள் பரிசோதனை செய்து, அறிக்கை கொடுத்தார்கள்.

அவள் நிரபராதி ஆனுள்.

அவள் மீது புகார் கூறிய இரு ஆண் அதிகாரிகளும் வீட்டுக்கு அனுப்பப் பட்டார்கள்!

---

ஊரு. அங்கங்க உன்னை கெடுத்திடுவாங்க. அதால சமர்த்தா இங்கயே இருந்துக்க. சத்தம் மட்டும் போடக் கூடாது. பக்கத்து ரூம்பில வயசானவரு தாத்தா படுத்திருக்காரு. இல்லேடா, கோவாலு?"

"ஆமாண்ணே, அவருக்கு சத்தம் ஆகாது"

"அய்யா! நான் பத்து மணிக்கு ஒரு வேலைக்கு போகணும். அவங்க காத்திருப்பாங்க"

"வேலை என்ன வேலை. அதைவிட நான் தர்றேன், பாரு. நல்ல வேலை கோபாலு நம்ம இந்த பொண்ணுக்கு கொடுக்கப் போற வேலையில் மாசச் சம்பளம் உண்டாடா?"

"அது ஏன் மாசச் சம்பளம்? தினச் சம்பளம், அவருக்கு அவரு, பத்து நிமிசத்துக்கு பத்து நிமிசம்!"

"அதனுல வேலையைப் பத்தி கவலையே படாதே, பொண்ணு! கோபாலு பொண்ணு உடம்பு எப்படி?"

"அதை ஏங்கறிங்க. ஒரு பக்கம் பாத்தா சரிதா. ஒரு பக்கம் ராதிகா. அப்பப்ப சுமலதா"

"வாழ்க! அப்ப சுமலதா. ஸாரி குணு! நாங்க போய் வரவா? கத்தக் கூடாது. கத்திஞ என்ன ஆகும்னு பரிட்சை பாத்தே ஆகணும்ஞ பாரு. அப்பறம் வருத்தப் படுத்தக் கூடாதுல்ல, பொன்னுரங்கம் சொல்லலைன்னு? கோபாலு,போலாமாடா"

"எல்லா சவுகரியமும் உள்ளயே உனக்கு இருக்கறதால வெளிப்பக்கம் பூட்டி வெச்சுட்டு போறம். வரட்டுமா, குணு?"

அவங்க போனதும் நான் ஒரு பாட்டம் விசிச்சு அழுதேன். உரக்க கத்திப் பாக்கலாமான்னு தோணிச்சு.முதல்ல சன்னல் வழியா எட்டிப பாத்தேன். கதவை திறந்து பாத்தேன். திறக்க முடியலே. எல்லாத்துக்கும் வெளியதான் தாப்பால போல இருந்தது.

உள் பக்கம் கதவை திறந்து பாத்தா சிறுநீர் நாத்தம் தாக்கிச்சு. மூணடிக்கு ஆறடி ஒரு பாத்ரூம். ஒரு பிளாஸ்டிக் பக்கேட்டு. மேல் பக்கத்தில கையகலத்துக்கு ஒரு சன்னல்.

பக்கெட்டு மேல ஏறி சன்னல் வழியா கொஞ்சம் எட்டிப் பாக்க முடிஞ்சுது.

சுவத்தாண்ட பம்ப் அடிச்சுக்கிட்டு இருந்தாங்க. தூரத்தில சினிமாவுக்கு போர்டு எழுதிக்கிட்டிருந்தாங்க. பட்டறை மாதிரி தெரியுது.

இங்க இருந்து சத்தம் போட்டா அவங்கள்ள யாருக்காவது தெரிஞ்சே ஆகணும்னுட்டு லேசா அந்த சன்னல் கதவை உயாத்தி "இத பாருங்க, இத பாருங்கன்னு" கத்தினேன்.

தூரத்தில போர்டு எழுதிக்கிட்டு இருந்த ஆளுக்கு கேட்டிருக்கணும். திரும்பிப் பாத்தான். இங்க பாக்கருன், அங்க பாக்கருன். சத்தம் எங்கிருந்து வர்றதுன்னு தெரியாம மேல பாக்கருன். சைடால பாக்கருன்.

"இங்கதாங்க, மேல! மேல!"

அண்ணாந்து வானத்தைப் பாக்கருன். எனக்கு தெரியற மாதிரி நான் அவனுக்கு தெரியலே போல. மேலும் என் நெத்திக்கு மேல எழ அந்த வாளி உயரம் பத்தலே.

"இங்கதாங்க. காப்பாத்துங்க! காப்பாத்துங்க!"

அவனுக்கு சரியாகக் கேட்டதோ கேக்கலேயோ. பட்டறைக்குள்ள போனுன்.

நான் காத்திருக்கையில சரக்குனு காலுங் கீழ சரிஞ்சு கீழ விழுந்தவளை அவன் புடிச்சு கட்டினுன். "ஏய் புத்தியை காட்டுற பத்தியா! பேசாம இருக்கணும்னுதானே சொன்னேன். பக்கெட்டு மேல ஏறிக்கிட்டியே! கோபாலு, யார்ரு பக்கெட்டை வெச்சாங்க? பொண்ணு அது மேல ஏறி கத்துதுல்ல. பக்கெட்டு வேண்டாம்டா. எடுத்துரு. இத பாரு, நீ என்ன சத்தம் போட்டாலும் மத்தவருக்கு கேக்கறதுக்கு முன் எங்களுக்கு கேக்கும். கேட்டா என்ன செய்வோம், கோபாலு?"

"கன்னத்தில அறைவோம், பொன்னுரங்கம்!"

திடீர்னு தேள் கொட்டினுப்பல வலக் கன்னத்தில ஒண்ணு விட்டான்.

பிரமிச்சுப் போயிட்டேன். மண்டைக்குள்ள மணி அடிச்சாப்பல சத்தம் கேட்டுது. அடப் பாவிங்களா! இதுவரைக்கும், எனக்கு நெனவு தெரிஞ்ச வரைக்கும். யாரும் என்னை அடிச்சதே கிடையாது. என் வாழ்க்கையில் முதல் அடி. முதல் முறையா இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போவுதோ, எனக்கு அழுகை அழுகையா வந்திச்சு.

என்னை அப்படியே கீழ போட்டுட்டு மறுபடியும் கதவை சாத்திக்கிட்டு அவங்க ரெண்டு பேரும் கிளம்பிப் போய்ட்டாங்க.

எங்கயும் போறவங்

மலர்: 22 இதழ்: 32
துன்மதி: ஆவணி 7(23-8-81)

**அட்டையில்**

புதுமுகம் கலைச்செல்வி






குற்றவாளிக் கூண்டில் டைரக்டர் பாரதிராஜா!, குற்றம் சாட்டுகிருர்,நடிகை அருணு! அடுத்த வார (30-8-81) "ராணி" இதழில் பாருங்கள்.




நல்லதை எடுத்துக் காட்டுவதே, விமர்சனத்தின் நியாயமான **நோக்கம்.**

—கோபீ.



# கழுகுப் பார்வை

சிவாஜி கணேசன்—ஸ்ரீபிரியா நடிக்கும் "தியாகி" என்ற படத்துக்காக ஸ்ரீபிரியா குளிக்கும் காட்சி, வாகினி படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது!

ஸ்ரீபிரியா குளிக்கும் காட்சி படமாக்கப்பட்ட அரங்கு பக்கம், பத்திரிகைக்காரர்களைகூட அனுமதிக்கவில்லை. கேமராமேன் மட்டும் நின்று அந்தக் காட்சியை படமாக்கினர்.

"கங்கை அவள் கண்ணுக்குள்" என்ற படத்தின் மூலம் டைரக்டர் ஆனவர், ஏ. பி. ஜெகதீஷ். படம் முடிந்து, இன்னும் திரையைப் பார்க்கவில்லை. அதனால், டைரக்டருக்கு என்ன? இப்பொழுது, "என் வாழ்வு உன்னோடுதான்" என்ற படத்தின் டைரக்டர் ஆகிவிட்டார்!

இதே போலத்தான், "வலம்புரி சங்கு" படத்தின் மூலம் டைரக்டர் ஆன பானுதாசனுக்கு, அந்தப் படம் வெளிவராமலே, "அந்தி மயக்கம்" என்ற படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்து இருக்கிறது.

வாடகை வீட்டுக்காரியான ஜெயமாலினி, இப்பொழுது சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு இருக்கிறர்!

ஜெயமாலினி இன்னொன்று கட்டவும் திட்டமிட்டு இருக்கிறர். அது, சினிமா தியேட்டர்! தியேட்டர் கட்ட இடம் தேடிக்கொண்டு இருக்கிறர். "வீடு கட்டி முடிந்ததும், தியேட்டர் கட்டுவேன்" என்று சொன்னர், ஜெயமாலினி.

திருமணம்?

தியேட்டர் கட்டிய பிறகுதான் யோசிக்க வேண்டும்!

பாரதிராஜா, ராதிகாவை அறிமுகப்படுத்தினர். பிறகு, ரதியை கொண்டுவந்தார். அடுத்து அருண! ரோகிணி, சுவிதா ஆகிய இருவரையும் "நிழல்கள்" படத்தின் மூலம் நடிகை ஆக்கினர்!

ஆனல், இதுவரை பாரதிராஜா அறிமுகப்படுத்திய எந்த நடிகைக்கும் தனது அடுத்தப் படத்தில் அவர் வாய்ப்பு கொடுத்தது இல்லை.

"அலைகள் ஓய்வதில்லை" ராதா மட்டும் அதற்கு விதிவிலக்கு!

பாரதிராஜா டைரக்டு செய்யும் "டிக்...டிக்...டிக்" என்ற படத்தில் ராதாவும் நடிக்கிறர்!

☆



புதுமுகம் சுபதி வசந்தத்தைத் தேடுகிறரோ!, (படம்: "வசந்தத்தில் ஒரு வானவில்")

ளா தெரியலே. பெரிய கட்டடத்துக்குள்ளவே எங்கயாவது இருப்பாங்கன்னுதான் தோணிச்சு.

இது என்ன கட்டடம்? அந்த அளவு சின்னதாத்தான் இருந்துச்சு. மர மேசைமேல பானே வெச்சு, அதுமேல அலுமினிய தம்ளர் கவுத்திருந்தது. எதிர் நாப்பல சுவத்தில ஏதோ படம் மாட்டியிருக்க வேண்டிய இடம் காலியா ஊதுவத்திப் புகை கறை படிஞ்சு இருந்தது. மூட்டைப்பூச்சி நசுக்கிய நாத்தமும், இன்னும் என்ன என்னவோ அடையாளம் கண்டு பிடிக்க முடியாத நாத்தங்களும் இருந்தன. பல இடத்தில கார பேந்திருந்தது.

மறுமுறை பாத் ரூமுக்குப் போய், அவங்க பக்கெட்டை எடுத்துக்கிட்டு போயிட்டதால, எம்பிப் பாத்தேன். அந்த ஆளு நிதானமா போர்டு எழுதிக்கிட்டிருந்தான். சத்தம் வந்ததைப் பத்தி அவன் மறந்து போயிருக்கணும். என்ன செய்யறது?

ஒரு பெண் இந்த மாதிரி சூழ்நிலேல என்னதான் செய்ய முடியும், மூலையில உக்காந்துகிட்டு விக்கி விக்கி அழறதைத் தவிர?

கிராமத்தில ஆலமரத்து அடியில் விழுதை எல்லாம் சேத்துக் கட்டி ஊஞ்சலாடினது ஞாபகம் வந்தது. சுதந்திரம்ங்கிறது எவ்வளவு இனிமையானது! எவ்வளவு முக்கியமானதுன்னு தோணிச்சு.

அண்ணன் இப்ப எங்கெல்லாம் அலேஞ்சுக்கிட்டு இருப்பாரோ. ஒரு வேளே அவரும் வேறவிதமா ஏமாந்துப் பட்டாரோ?

அவர் கிட்ட பணம் இருக்குது. அவர் ஆண் பிள்ளை. நான் பொட்டை. என்ன செய்ய முடியும்?

தரையில உக்காந்தேன். துக்கம் தாளாம உடம்பெல்லாம் சுரம் போல இருந்தது.

கதவு திறந்தது.

புதுசா ஓர் ஆளு உள்ள வந்தான்.

(தொடரும்)

# 3

(சென்ற வாரம்: அவள் பெயர் சுகுணு. சென்னைக்கு முதல் முறை அண்ணனுடன் வருகிருள். அண்ணன் பெயர் மாணிக்கம். சுகுணு கிராமத்துப் பெண். அரசாங்க சலுகைகளால் படித்து பட்டம் பெற்று ஒரு வேலை கிடைத்து முதன் முதல் பட்டணத்துக்கு வருகிருள், சென்டிரல் ஸ்டேஷன் அவளுக்கு மலைப்பாக இருக்கிறது. அண்ணன் அவளை நிறுத்திவிட்டு பஸ் விசாரிக்கப் போகிருன். அவள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிருள். ஒருவன் அவளை அணுகி பெயர் சொல்லி அழைத்து, "உங்களை வரச் சொன்ருரு. அங்க பஸ்டாண்டாண்டை நிக்கிருரு" என்று கூப்பிடுகிருன். அவன் பின் நம்பிக்கையுடன் செல்கிருள். அவன், அவளை ஒரு சந்தின் வழியாக அழைத்து செல்கிருன், குறுக்கு வழி என்கிருன். சந்தேகம் வந்து நிற்கிருள். நீங்க யாரு, என்கிருள். நான் தான் மெட்ராஸ் என்கிருன். "மெட்ராஸ்". அவள் கழுத்தை சுற்றி கைபோட்டு மார்பை அழுத்தி ஒரு வீட்டுக்குள் இழுக்கிறது. இனி படியுங்கள்.)



# ஒருத்தி நினைக்கையிலே...

சுஜாதா

உள்ள நுழைஞ்சது சின்னப் பையன், ஊர்ல நம்ம கதிரேசன் போலத் தான் இருந்தான். நான் விக்கி விக்கி அழுவறது அவனுக்கு ஓர் உபத்திரமா இல்லே.

எதும் பேசாம ஒரு பொட்டலத்தை ஸ்டூல் மேல வெச்சான். அழுக்கு அலுமினிய தம்ளர்ல தண்ணி. தலைகுப்ற டபராக்குள்ள கவுத்தி காப்பி எல்லாத்தையும் வெச்சுட்டு போய்ட்டான்.

அவனை "தம்பி இது என்ன இடம்?"னு கேட்டுப் பாத்தேன். பதில் சொல்லலே.

நான் அந்த பலகாரப் பொட்டலத்தை தொடாம அழுதுகிட்டே இருந்தேன்.

"யாரது, நச்சு நச்சுன்னு சத்தம் போட்டுக்கிட்டு? கொஞ்சம் மெதுவா அளுவு. தூக்கம் கெட்டுப் போவுதில்ல"

பக்கத்து ரூம்புல ஒரு பொம்பளை குரல் கேட்டுது.

நான் கொஞ்சம் அடக்கமா அழுதேன். எதுக்கு அழுவறம்னு சரியாத் தெரியலே.

இன்னேரம் வீட்டில இருந்தா என்ன அட்டகாசம் பண்ணிக்கிட்டிருப்பேன்! வாக்கால்ல குளிக்கப் போயிருப்பேன். "சுகுணுவா? அவ என்ன தனுக்கு, என்ன சொகுசு"ன்னு ஊர்சனம் மொத்தமும் பேசிக்கும்.

காலைல எழுந்திருக்கறதுக்கு எட்டு எட்டரை ஆகும். அவசர அவசரமா காலேஜுக்கு கிளம்பறதுக்கு அம்மா, பாட்டி, மாணிக்கம் எல்லாரும், ஏன் அப்பா கூட ஒத்துழைக்கணும்.

"பாத்தும்மா பாத்து. பஸ்சு புழுதியைக் கிளப்பிட்டு வரும். ஒதுங்கிப் போறியா? கண்ட கண்ட இடத்தில சாப்பிடாதே. டவுன்ல நம்ம லலிதாக்கா இருக்காங்க. அவங்க மத்தியாணம் சாப்பாடு கொண்டு குடுப்பாங்க"

ஒரு நாள் காலேஜில லேட்டாயிருச்சுன்னுக் கூட உடனே வண்டி கட்டிக்கிட்டு அப்பா டவுனுக்கு வந்துருவாங்க. இப்படி பாத்துப் பாத்து என்னை வளத்தாங்க. எதுக்கு? இந்த மாதிரி ஒரு சாக்கடை போல அறையில அடைப்பட்டு ஈமொக்கிற பண்டத்தை எவனே ஒரு சின்னப் பையன் வெச்சுட்டுப் போயி, அடுத்தது என்ன நடக்கப் போவுதுன்னு தெரியாத நிலையில அண்ணனையும் இழந்து...

எத்தனைதான் அழுவறது! என் வாழ்க்கையிலயே இதுவரைக்கும் மொத்த மொத்தம் அழுததைவிட சாஸ்தியா இன்னிக்கு காலையில இருந்து அழுது தொலைச்சாயிருச்சு. மாரை வலிச்சுது. தொண்டை வரண்டு போய் வயிறு பூரா திகில் ரொம்பிக்கிச்சு. எப்ப எதாவது சத்தம் கேட்டாலும் என்ன என்னவோ செய்ய வராங்கன்னு குப்புனு வேர்த்துட்டு வரும்.

தாகம். ஆனுல் அந்த அலுமினிய தம்ளர்த் தண்ணியை சாப்பிட மனசு வரலே. எதாவது கலந்து கிலந்து வெச்சிருந்தாங்கன்னு?

இவங்க முதல்ல யாரு? எதுக்கு என்னை அடைச்சுப் போட்டிருக்காங்க?

வராந்தாவில நடந்து போறவங்க எல்லாரையும் அய்யா அய்யான்னு கூப்பிட்டுப் பார்த்தேன். எல்லாரும் காது கேளாதது போல நடந்து போறுங்க. எல்லாரும் இதில கூட்டு போல இருக்குது.

என்னமா மாட்டிக்கிட்டேன்?

ஏடி என்ன, இது சுகுணு, நீ படிச்ச பொண்ணு; சும்மா பூ பூன்னு அழுதுக்கிட்டு இருந்தா என்ன பிரயோசனம்? கொஞ்சம் யோசிச்சுப் பாரு.

யோசிச்சேன். ஒண்ணும் படலே.

ரூமை சுத்து முத்தும் பாத்தேன். என் பொட்டியை அவங்க சிரழிச்சுட்டு போயிருந்தாங்க. என் சேலே, பாடி, பாவாடை எல்லாம் சிதறிக் கிடந்தன. மேல பாத்தேன். விட்டத்தில சேலையைத் தொங்க விட்டு முடிச்சுட் போட்டு தூக்குல போட்டுட்டு...

சே! அது கோழைத்

**மலர்: 22 இதழ்: 33**

துன்மதி: ஆவணி 14
(30-8-81)

## அட்டையில்

நடிகை ஸ்ரீதேவி

## அடுத்த இதழில்



கவிஞர் கண்ணதாசன் அமெரிக்காவுக்குச் செல்லு முன் எழுதிய சிறுகதை! அடுத்த வார (6-9-81) "ராணி" இதழில் இடம் பெறுகிறது. படிக்கத் தவறாதீர்கள்.

## சிரி! சிந்தி!!



துறப்பதுதான், இன்பத்தின் இரகசியம்.

—கார்னிஜி.

தனம்!

பின்ன என்னை அவங்க சேதப்படுத்தறதுக்குள்ள என்னதான் செய்யறதாம்?

என் நோட்டுப் புத்தகம், ஊர் போய் சேர்ந்த உடனே எங்கப்பா தபால்ல சேத்துருன்னு சொன்ன கார்டு, என் பேனு, படிக்க கொண்டு வந்த "பெண்ணின் மாட்சி" புத்தகம், அம்மா கொடுத்த பூண்டு ஊறுகாய் பாட்டில், ரிப்பன், சோப்பு டப்பா, கொண்டை ஊசி, தலைவலி தைலம், பிளாஸ்டிக்கில பட்டாம் பூச்சி, ஸ்டேப்ளர்...எதும் பிரயோசனம் இல்லையே.

யோசிச்சுப் பார்த்தேன், இங்க இந்த கட்டிடத்துக்குள்ள இருக்கிறவங்க யாரும் எதும் உதவி செய்ய மாட்டாங்கன்னுதான் தோணுது. என்ன சத்தம் போட்டாலும் யாரும் கேக்கப் போவுறதில்லை. நமக்கு உதவி வெளிய இருந்துதான் வரணும். வெளி மனுசங்ககூட எப்படி தொடர்பு கொள்றது? அதான் யோசிக்கணும்.

மறுபடி அந்த பாத்ரூமுக்குப் போய்ப் பார்த்தேன். சன்னல் கதவு மூடியிருந்தது. இங்கிருந்து எட்டாது. வாளியை எடுத்துட்டுப் போய்ட்டாங்க. என்ன செய்ய?

சோப்பு டப்பாவை எடுத்துக்கிட்டு வந்து சன்னல் கண்ணாடி மேல எறிஞ்சேன். ரெண்டாம் தபா எறிஞ்சபோது அது உடைஞ்சுது.

திரும்ப உள்ளாற வந்தேன். நோட்டுப் புத்தகத்தில காயிதம் கிழிச்சு அவசர அவசரமா எழுதினேன்.

"அய்யா! என்னைக் காப்பாத்துங்க! இந்த கடுதாசி கிடைக்கிற இடத்துக்கு மேல உடைஞ்ச சன்னல் தெரியும். அந்த ரூம்ல நான் அடைஞ்சு கிடக்கேன். என்னை இங்க பலாத்காரமா கொண்டு வந்திருக்காங்க. அடிக்கிறுங்க" என்னைக் காப்பாத்துங்கய்யா. எங்கப்பா பேரு அமிர்தலிங்கம். வீரவாக்கம் கிராமத்தில வி. எம்.மா இருக்காரு. அவருக்கோ அல்லது போலீசுக்கோ உடனே தகவல் சொல்லி என்னை மீட்டுக்கிட்டு போங்க அய்யா! எம் பேரு சுகுணு"

கடுதாசியை சோப்பு டப்பாவில சுத்தி சுமாரா பொட்டலமாக்கி குறி பாத்து அந்த ஓட்டையை நோக்கி எறிஞ்சேன்.

நல்லவேளை, அது அடிபடாம தப்பிச்சு வெளிய சுத்தமா பாஞ்சு போயிருச்சு. எனக்கு மாங்கா அடிச்சு பழக்கம்! யாரும் பாக்க மாட்டாங்களா! பாத்துத்தான் ஆகணும்! நான் இதுவரைக்கும் வெள்ளிக் கிழமைக்கு வெள்ளிக் கிழமை முருகன் கோவிலுக்குப் போனதெல்லாம் வீணுயிடுமா? நல்லவங்களுக்கு கடவுள் உதவ மாட்டாரா? உதவத்தான் செய்வார். யாராவது வருவாங்க. வரத்தான் போறுங்க.

கன்னத்தை துடைச்சுக்கிட்டேன். பலகாரப் பொட்டலத்தை பிரிச்சுப் பார்த்தேன். பழசாப் போன தோசை சுருட்டி வெச்சிருந்தது. பசிச்சுது. ஆனால் அதை சாப்பிட விருப்பமில்லை. ஓரத்தில வெச்சுட்டேன்.

தரையில இரைஞ்சிருந்த பொருள்களை எல்லாம் மறுபடி பெட்டிக்குள்ள அடுக்கினேன். அம்மா எனக்கு புதுசா எடுத்த சேலையைப் பார்த்ததும் மறுபடி அழுகை வந்தது. "அம்மா......அம்மா"ன்னு கொஞ்ச நேரம் அரற்றினேன். இப்ப அவங்கல்லாம் எவ்வளவு தூரத்தில இருக்காங்க? என்னைப் பத்தி எப்ப கவலைப்பட ஆரம்பிப்பாங்க?

அண்ணன் மாணிக்கம் போய் எப்ப சொல்லுவாரு? எப்ப நான் காணுமப் போயிட்டேன்னு போலீசுக்கு புகார் கொடுப்பாரு. மாணிக்கம் கொஞ்சம் புத்தி மந்தம். சாமர்த்தியம் போதாது. என்ன செய்யப் போறுரோ. "பாப்பா... பாப்பா"ன்னு கிட்டு ஸ்டேசன்லயே நேரத்தை வேஸ்ட் பண்ணும இருக்கணும். தங்க



"கர்ஜனைதானே பார்க்க வேண்டும்? கூட்டிப் போகிறேன்!"

வேலு வந்து தொலைச்சிருந்தாருன்னு இந்த கதி ஏற்பட்டு இருக்குமா?

மாணிக்கம் அண்ணன் எங்க இருக்காரோன்னு குழப்பமா சிந்திச்சுக்கிட்டு அந்த ரூம்ல ஓரத்தில தலையைப் புடிச்சுக்கிட்டு உக்காந்தேன். நான் ஏவிவிட்ட கடுதாசி யார் கையில போய்ச் சேர்ந்திருக்குமோ.

மாணிக்கம் பல் விசாரித்துவிட்டு சென்டிரல் எதிராக இருந்த டிராஃபிக்கை மலைத்துவிட்டு குறுக்கே கடக்க முடியாமல் திண்டாடி பாதாள பாதையில் செலுத்தப்பட்டான்.

படியில் பலர் உறங்கிக் கொண்டு இருந்தார்கள். எதிரே போகும் பாதை புரியாமல் அது எங்கயோ குழப்பமாகக் கொண்டு விட மேலே வந்ததும் தலை கால் புரிவதற்கு சற்று நேரமாயிற்று.

குணவை எங்கவிட்டோம் என்று புரியவே கொஞ்சம் தாமதமாயிற்று. அவள் நின்றிருந்ததாக அவன் நினைத்த இடத்தில் இப்போது ஒரு வடக்கத்தி சேட்டு. ஏராளமான சாமான்கள். அருகே சக்கர வண்டியில் ஒரு தாத்தாவை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

"குணு! குணு!" என்று இரு முறை கூப்பிட்டுப் பார்த்தான். "இங்கே தானே விட்டுட்டுப் போனேன்? ஒருக்கா டீ

குடிக்கப் போயிருக் குமோ? போகாதே!"

சிறிது நேரம் திருதிரு வென்று அலேந்தான். மறு படி பிளாட்பாரத்தில் போய்ப் பார்க்கலாமா என்று அனுவசியத்துக்கு அங்கே போனுன். ஒரு பெண்ணின் பின்பக்கம் குணவைப் போல் இருக்க "என்ன பாப்பா உன்னே எங்கெல்லாம் தேடறது" என்று கேட்டு முடிப்பதற் குள், அந்தப் பெண் வேற்று முகமாகத் திரும்பி "பார் டன்?" என்ருள்.

"மன்னிச்சுக்கங்க, மன் னிச்சுக்கங்க" என்று பின் வாங்கினுன். அந்தப் பெண் தன் அருகில் இப்போது சேர்ந்து கொண்டுவிட்ட வாலிபனுடன் சேர்ந்து சிரித்தாள்.

குணுவின் மேல் ஆத் திரம் வந்தது. "துடுக்குப் பொண்ணு! சொன்ன இடத்தில நிக்காமல் எங்க போய்ட்டா? வரட்டும் செமத்தியா கன்னத்தில ஓர் அறை அறையறேன்!"

எத்தனேயோ சனங்கள் அவனே எட்டி நிரடிவிட்டுச் சென்ருர்கள். அவசரம் அந்தப் பிரதேசம் பூரா விரவியிருந்தது. சுகுணு வைத் தவிர எல்லோரும் தெ ன் ப ட் டா ர் க ள். போலீஸ் விசில் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தது. வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. சந்தடி யில் மாணிக்கம் செய்வது அறியாமல் ஓர் ஓரத்தில் ஒதுக்கப்பட்டு சமைந்து போய் நின்ருன்.

அவனுக்கு சுகுணு தொலேந்து போயிருக்கக் கூடும் என்பது இன்னும் உதயமாகவில்லே. சுற்றி லும் பரக்கப் பரக்க விழித் துக் கொண்டு தலேயை அடிக்கடி சொரிந்து கொண்டு தன் தங்கை வரக் காத்திருந்தான்.

சேட்டு வீட்டுக்குப் போய்விட்டான். அந்த இடத்தில் இன்னும் பதி ஞறு பேர் வந்து போய் விட்டார் கள். சற்று நேரம் கான்க்கிரீட் பெயர்ந்திருந்த அந்தப் படி மூலேயில் உட் கார்ந்திருந்தான். பெட்டி படுக்கையும் காணும், தங்கையையும் காணும், தங்கவேலுவையும் காணும்.

தங்கவேலுவின் விலா சம் பெட்டியில் இருக் கிறது. அவனிடம் பணம் மட்டும் இருக்கிறது. தங்க வேலு வந்து அழைத்துப் போயிருப்பாரோ என்று தெரியவில்லே. "என்னிடம் சொல்லாமல் எப்படி புறப் பட்டுப் போவாள்? புரி யவே இல்லேயே!"

தங்கை காணுமல் போய்விட்டாள் என்கிற சங்கதி அவனுக்கு உரைக்க சரியாக நாற்பத்தைந்து நிமிடம் ஆயிற்று. அங்கே போலீஸ்காரர் போல இருந்த ஒருவரிடம் சென்று "அய்யா" என்ருன்.

"ஏய் ஆட்டோ! லேன்ல பாப்பா" என்ற அவர் பிர்ர்ர் என்று ஊதிவிட்டு "என்னப்பா" என்ருர்.

"தங்கச்சியோட வந் திருந்தேங்க. இங்க விட் டுட்டு போயிருந்தேன். காணங்க"

"யோவ் டாக்சி இங்க எத்தனே நேரம் நிறுத் துவே! பளிச்சுனு போய்க் கிட்டே இரு. என்ன சொன்ன? தங்கச்சி?"

"த ங் க ச் சி யை க் காணங்க"

"ரெயில்ல போயி ருச்சா? காதலா?"

"இல்லிங்க, ஊர்ல இருந்து வரங்க"

"ஓடிப் போயிருச்சா? வயசென்ன இருக்கும்?"

சட்டென்று வயசு சொல்ல வரவில்லே. அவர், மறுபடி சுறு சுறுப்பாக ஊதினுர்.

"காணங்க"

"காணம்னு என்னே என்னய்யா பண்ணச் சொல்றே? சின்னப் பிள் ளேல இருந்தே அடக்கி வெக்காம இப்ப வந்து வருத்தப்பட்டு என்ன பிர யோசனம்? அதும் டிராஃப் பிக் கான்ஸ்டபிள் கிட்ட





ராதா ("அலைகள் ஓய்வதில்லை") "ஆனந்த ராகம்" என்ற படத்தில் நடிக்கிறார். படத்தில் ராதா கார் ஓட்டிச் செல்லும் காட்சிகள் இடம் பெறுகின்றன. இதற்காக, ராதா தனியே கார் ஓட்டிப் பழகி வருகிறார்.

★ சந்திரசேகருக்கு தினசரி காதல் கடிதங்களாக வந்து குவிந்து கொண்டு இருக்கிறதாம்.

ஒரு கல்லூரி மாணவி, "உங்கள் நினைவாக, எனக்கு உங்கள் தாடியில் இருந்து ஒரு முடியைப் பிடுங்கி அனுப்பி வையுங்கள்" என்று எழுதியிருக்கிறார்.

இன்னொரு மாணவி, "என்னை திருமணம் செய்து கொண்டால், உங்களை மற்றப் பெண்களைப் போல கூஜா தூக்க வைக்க மாட்டேன்" என்று கடிதம் அனுப்பியிருக்கிறார்.

நிறையப் பெண்கள் "உங்கள் தாடிக்கு முத்தங்கள்" என்று கடிதத்தை முடிக்கிறார்கள்" என்று சொல்லி சிரித்தார், சந்திரசேகர்.

★ "சங்கர்லால்" என்ற படத்தின் டைடிலில் இசை அமைப்பாளர் பெயரைக் காட்டும்பொழுது, "இசை: இளையராஜா, கங்கை அமரன்" என்று இருவருடைய பெயரையும் போடுகிறார்கள்.

சங்கர் — கணேஷ் போல, இளையராஜா— கங்கை அமரனு?

★ சுகாசினிக்கு முதல் தடவையாக, ஒரு படத்துக்கு தனியாக ஒளிப்பதிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்து இருக்கிறது.

"போலீஸ் போலீஸ்" என்ற படத்துக்கு சுகாசினி, ஒளிப்பதிவாளர் ஆக ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறார்.

★ "போக்கிரி ராஜா" என்ற படத்தில், முத்துராமன் முதன் முறையாக வில்லனாக நடிக்கிறார். ஏவி. எம். புரொடக்சன்சார் தயாரிக்கும் இந்தப் படத்தின் கதாநாயகன் ரஜினிகாந்த். ஸ்ரீதேவி, ராதிகா ஆகியோரும் நடிக்கிறார்கள். எஸ். பி. முத்துராமன் டைரக்டு செய்கிறார்.

★ விஜயகாந்தின் அப்பா இ. காங்கிரஸ்காரர். மதுரை மாநகராட்சியில் உறுப்பினராக இருப்பவர்!

விஜயகாந்தோடு பிறந்தவர்கள் 10 பேர். 5 ஆண், 5 பெண். விஜயகாந்த் மூன்றுவதாகப் பிறந்தவர்.

"நான் ரஜினிகாந்தைப் போல, "ஸ்டைல்" காட்டுவதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ரஜினி "ஸ்டைல்" எனக்கு வந்து விடக் கூடாது என்பதற்காகவே, நான் ரஜினிகாந்த் நடித்த படங்களைப் பார்ப்பது இல்லை" என்று சொல்லுகிறார், விஜயகாந்த். ★

வந்து சொல்றியே. அத பாரு, தொப்பி வெச்சுக்கிட்டு எஸ். ஐ. நிக்கறார் பாரு, அவர் கிட்ட சொல்லு. இல்லை போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ!"

அவர் குறிப்பிட்ட அதிகாரி மோட்டார் சைக்கிள் அருகில் துடிப்பாக நின்று கொண்டு இருந்தார். மாணிக்கம் வருவதற்குள் அதை உதைத்து படபடவென்று புறப்பட்டுப் போனார்.

ஒருவேளை சுகுணா அவசரமாக கக்கூஸ் போயிருப்பாளோ என்கிற யோசனை லேட்டாக உதயமாக, பெண்பிள்ளை பொம்மை போட்ட இடத்து வாசல் அருகில் போய் கொஞ்ச நேரம் நின்றான். மார்பில் பின் குத்திக் கொண்டே பெரிய பொட்டுடன் வெளிப்பட்ட பெண்பிள்ளை ஒருத்தி மாணிக்கத்தை விரோதமாகப் பார்த்து "கஸ்மாலம்! இங்க கூட உடறதில்லை! ச்சீ நீயும் மனுசனய்யா? கூடப் பொறந்த தங்கச்சி கிடையாது?" என்றாள்.

"தங்கச்சியைத் தான் தேடிக் கிட்டு வந்தேன்" என்றதை அவள் கவனிக்காமல் யாரையோ கூப்பிட்டாள்.

கழுத்தில் கைக்குட்டை கட்டிய ஆள் அருகில் வந்து "இன்னா செங்கமலம்" என்றான்.

"தரித்திரம்! இந்த ஆளு இங்க கூட துரத்தரான்யா! ஆந்தை மாதிரி பாத்துக்கிட்டு!"

"இன்னடா!" என்று அவன் மாணிக்கத்தின் சட்டையைக் கொத்தாகப் பிடித்து அவனை முத்தமிட விரும்புபவன் போல் தன் பால் இழுத்துக் கொண்டான்.

"இன்னா, கிஸ்னா? இன்னா செல்லம்?" என்று பல பேர் சூழ்ந்துகொள்ள, இப்போது மாணிக்கத்துக்கு அந்தக் கூட்டத்தை சரியாகப் பார்க்க முடியவில்லை. "பளார்" என்று ஒருத்தன் அடித்தது மட்டும் கேட்டது.

(தொடரும்)



ஜெயசித்ரா, மாமியாருடன் சண்டை போட்டு அலுத்துப்போய் விட்டாரோ! "மாமியாரா, மருமகளா?" என்ற படத்தில் ஸ்ரீகாந்த்—ஜெயசித்ரா.

# ஒருத்தி நினைக்கையிலே



COMICS PDF TIMES

## சுஜாதா

**4**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள்.

அவ்வளவு கவலையிலும் எப்படித் தூங்கிப் போனேன்னு எனக்கு தெரியலே. அலுப்பு, பசி எல்லாம்தான் காரணமாக இருக்க முடியும். யாரோ கதவைத் திறக்கற சத்தம் கேட்டு வாரிச் சுருட்டிக் கிட்டு எழுந்தேன். உடனே ஓரத்தில் ஒதுங்கிக் கிட்டேன்.

இரண்டு பேர் உள்ள நுழைஞ்சாங்க.அவங்கள்ள ஒருத்தனை காலேல பார்த்திருக்கேன். என்கிட்ட இருந்து வாளியைப் பிடுங்கி, அடிச்சவன். இன்னொருத்தன் புதுசு. லேசா எதையோ மென்னுக்கிட்டு இருந்தான். என்கிட்ட எதையோ எறிஞ்சான். நான் பாக்கக் கூட இல்லே.

“என்ன எதாவது சாப்ட்டியா?” அந்தப் பொட்டலத்தைப் பார்த்தான்.

“சாப்பிடலே போலிருக்கே. பட்டினி கிடக்கப் போறயா? உண்ணாவிரதமா?”

“என்னை எதுக்காக இங்க கொண்டு வந்து இருக்கிங்க” தைரியமா கேட்டுப்பிட்டேன்.

“இதோ இப்ப தெரியப் போவுது, கண்ணு”

“அண்ணே இப்பவே வா? எங்கயாவது கத்திக் கித்தி ஊரைக் கூட்டப் போவுது!”

“இல்லேடா, கத்தாது. கத்தமாட்டில்ல, குணா! குணா, உன் பேர் மொத்தமே குணாதானா?”

நான் நடுக்கத்தில் பேசாமல் இருந்தேன்.

“சரக்கை கவனிச்சில்ல?”

“பர்ஸ்ட் கிளாஸ்”

“எல்லாம் நம்ம கோபாலு வேலேன்னா சுத்தம். உடம்பைப் பாரு, சும்மா வில்லு கணக்கா நின்னு விளையாடுது, பாரு! பேர் சொல்லமாட்டியா கண்ணு? பேர் சொல்லு...”

நான் வாயடைத்துப் போய் இன்னும் ஓரத்தில ஒதுங்கிக் கிட்டேன். “அய்யா, அய்யா, உங்களுக்கு எத்தனை பணம் வேணும்னாலும் தரோம். என்னை விட்டுடுய்யா”

“பணம் நாங்கல்ல தரப் போறோம்! இப்ப போட்டது என்னங்கறே? பணம்தான்! எடுத்துக்க. டேக் இட்! டேக் இட் பேபிக் குஞ்சு!”

அவன் கீழே கிடந்த பர்சைக் காட்ட, நான் பேசாம நின்னுகிட்டு இருந்தேன்.

“டேக்கிட்டுன்னா மாட்டியா! பேபார்சி!”ன்னு அதட்டினான்.

“திட்டாதிங்க! அது பாவம், பூகணக்கா இன்னிக்குத்தான் வந்திருக்கு. இன்னும் மூக்கணாங் கயிறு போடலே. கொஞ்சம் ரப்பாத்தான் இருக்கும். அதுக்குன்னு லட்டு மாதிரியான பெண்ணைத் திட்டலாமா, பிரதர்! நீங்கள் செய்யறது நல்லாவே இல்லே. நீ வாம்மா கண்ணு”

அவன் எங்க வாங்கறான்? கடவுளே! முருகா! எனக்கு புரிய ஆரம்பிக்கிற விசயம் வயித்தை குபீருங்குதே. என்னத்தை செய்வேன். என்னைக் காப்பாத்த ஆள் இல்லையா!

அவன் சன்னலே மூடி, உள்ளே விளக்கைப் போட்டான். தாப்பாலே சரிபார்த்தான்.என் பெட்டில இருந்த சேலையை எடுத்து சன்னலுக்கு திரை மாதிரி போட்டு அடைச்சான். “என்ன பிரதர்! நீ ஆரம்பிக்கிறியா, நான் ஆரம்பிக்கவா!”

“வேண்டாங்க! வேண்டாங்க! என்னை விட்டுருங்க”

“விட்டுருவோம், கொஞ்ச நேரத்தில விட்டுருவோம்! இல்லே பிரதர்? ரெண்டு பேருமா சேத்து எத்தினி நேரம் ஆவப் போவுது! பத்து நிமிச வேலே! வாம்மா புல் புல்”

அவன் கிட்ட வர வர, நான் பின்னால சரியறேன். சுவத்தோட ஒட்டிக் கிட்டே இடப் பக்கமா நழுவறேன்.

இன்னொருத்தன் செருப்பைக் கழட்டிட்டு, சட்டையை கழட்டிட்டு முண்டா பனியனோட நிக்கறான், கையைக் கட்டிக் கிட்டு. அவசரமோ பதட்டமோ காட்டலே. “இத பாரு, நீ முரண்டு பிடிக்கப் பிடிக்கத்தான் இதில திரில்லே! கடிப்பியா? கடிச்சுப் பாரு! அடிப்பியா? அடிச்சுப் பாரு. இறுக்கப் பொத்திப்பியா. ஊம்! அதும் சரிதான்! எனக்கு அவசரமே இல்லே”

“அய்யோ ...... அய்யய்யோ”

“என்னது! ஒரு திறப்பு விழா நடக்கப் போவுது. இப்பபோய் அச்சானியமா, அய்யோங்கலாமா? இல்லே திறப்பு விழா ஆயிருச்சா?”

சுவர் மூலைக்கு வந்துட்

---

### கிப் சிப்!

“அலை” படத்தில் நடித்துள்ள இரண்டு எழுத்து இளம் நடிகைக்கு கடுமையான காவல் போடப்பட்டு இருக்கிறது. வேறு தமிழ்ப் படத்தில் நடிப்பது என்றால், “அலை” டைரக்டரின் உத்தரவு கிடைக்க வேண்டுமாம்.

[illegible] தமிழ்ப் படம் என்றால்



தான், இந்தக் கட்டுப்பாடு. தெலுங்கு என்றால், நடிகை சுதந்திர பறவையாக செயல்படலாம்!

“ஸ்ரீ” நடிகை குறிப்பிட்ட ஒரக்கண் பார்வை நடிகை, வெற்றி சித்ரமான ஒரு நடிகை தானும்!

[illegible] வெற்றிச் சித்ரம் என்ன சொல்லப் போகிறதோ!



# கழுகுப் பார்வை

கமலஹாசன் நடித்த "ஏக் துஜே கே லியே" என்ற இந்திப் படம், இப்பொழுது பம்பாயில் ஓடிக் கொண்டு இருக்கிறது.

இதற்கு இடையில் "கவுதம் என்டர்பிரைசஸ்" என்ற பட நிறுவனம், கமலஹாசனும் ரதியும் சேர்ந்து நடித்த "உல்லாசப் பறவைகள்" என்ற படத்தை "தோ தில் திவானி" என்ற பெயரில் இந்தியில் "டப்" செய்து பம்பாயில் வெளியிட்டு இருக்கிறது. "கமலஹாசன் நடித்த படம். ஐரோப்பாவில் படமாக்கப்பட்டது" என்றும் விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள்.

இதை எதிர்த்து, கமலஹாசன் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார். "தோ தில் திவானி" என்ற படத்தில் நான் நடித்து இருப்பதாக விளம்பரப் படுத்துவதற்கு தடை விதிக்க வேண்டும்" என்று கமலஹாசன் தனது மனுவில் கூறியிருக்கிறார்.

"முரட்டுக்காளை" படம் வந்த வேகத்தில், தங்களது அடுத்த படத்துக்கும் ரஜினிகாந்தை ஒப்பந்தம் செய்து, முன் பணம் கொடுத்தார்கள்!

இப்பொழுது அவர்களுக்கு ரஜினிகாந்தை வைத்து, படம் எடுத்தே ஆக வேண்டும் என்ற நிலை! கொடுத்த முன் பணத்தை திரும்ப வாங்க முடியாதே! அதனால், ரஜினிகாந்தை வைத்து, "போக்கிரி ராஜா" என்ற படத்தை எடுக்கிறார்கள், ஏவி. எம். நிறுவனத்தார்!

ஜெயப்பிரதா மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்படுகிறார். அதிகப் படங்கள் இல்லாவிட்டாலும், இந்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிப் படங்களிலும் நடித்துக் கொண்டு இருக்கிறார்.

வாகினி படப்பிடிப்பு நிலையத்தில், ஓர் இந்திப் படத்தில் நடித்துக் கொண்டு இருந்த ஜெயப்பிரதாவிடம், "நீங்கள் எப்பொழுது திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்?" என்று "ராணி" நிருபர் கேட்டார்!



ஜெயப்பிரதா

"சினிமாவில் நான் இன்னும் ஒன்றும் சாதிக்கவில்லை. எதாவது ஒரு கோல் போட்ட பிறகுதான் திருமணத்தைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்று சொன்னார், ஜெயப்பிரதா.

## வாழையடி வாழை!

காஷ்மீர் முதல்வர் சேக்அப்துல்லா, கட்சியின் தலைவர் ஆகவும் இருந்தார். இப்பொழுது தனது கட்சியின் தலைவராக தன் மகன் டாக்டர் பரூக்கை நியமித்து இருக்கிறார்!

தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டதும், டாக்டர் பரூக் கூறியது:—

"காஷ்மீரில் இ. காங்கிரஸ் கட்சியை கலைக்க இந்திரா காந்தி முன்வர வேண்டும்!"

---

டேன். மறுபடி இந்தப் பக்கம் ஓடத் தொடங்கிட்டேன்.

இவன் இன்னும் கிட்ட வந்து என் சேலை முனையைப் பிடிச்சுக்கிட்டான். சரக்குனு உள் பாவாடை வரைக்கும் உருவிட்டான்.

நான் மாரைப் பொத்திக்கிட்டேன்.

"மூடிக்க! எல்லாத்தையும் மூடிக்க! கொஞ்சம் கொஞ்சமா ஆரஞ்சுப் பழம் உறிக்கர மாதிரி உறிக்கத்தானே போறம்"

"வேண்டாம்யா! விட்டுருங்கய்யா"

"ரேப் செய்கிறபோது யாராவது பாதில விட்டதா சரித்திரம் இருக்கா, புள்ளை?"

இப்ப அவன் என்கிட்ட வந்துட்டு மார் மேல பதிச்சிருக்கிற கையை விலக்கினான்.

நான் ஆளக் கடிச்சேன்.

அவன் சிரிச்சுக்கிட்டே "எனக்கு இதெல்லாம் பழக்கம்"னு அப்படியே தாவாங்கட்டையை இரண்டு விரலால அழுத்தி கடிக்க விடாம தடுத்தான்.

கன்னத்தில ஓட்டை விழுகிற மாதிரி வலிச்சுது. உதறித் தள்ளினேன். அந்த சக்தில கொஞ்சம் பின் வாங்கிட்டான்.

"பிரதர், ரொம்ப ஆயிருச்சு! போதும்"னான், இன்னொருத்தன்.

என்னைப் பிடிச்சு அப்படியே மல்லாத்தினான்.

முழங்காலால என் மார்மேல அழுத்தினான்.

மூச்சுத் திணறிச்சு. "முருகா! முருகா! கந்தா! சரவணா! கார்த்திகேயா! சண்முகா!"ன்னு கூவினேன்.

கதவு தட்டற சத்தம் கேட்டுது.

சடக்குனு ஒருத்தன் என் வாயைப் பொத்தினான்.

"என்னடாது! முருகன் வந்துட்டானா"

நான் உம் உம்னு திமிறி முனகிறேன்.

இன்னொருத்தன் மெதுவா கதவாண்டை போய் "யாரு? யாரது?"ன்னான்.

அடுத்தவன் கை என்னை மூச்சு முட்ட அழுத்துது.

"கதவைத் திற"

"ஆள் யாரு,சொல்லு"

"திறடா, கதவைன்னா?"

"இங்க ஒருத்தரும் இல்லை"

"இப்ப திறக்கப் போறியா? உடைக்கட்டுமா"

"யார்ராவன்."

இப்ப கதவு "தடால் தடால்"னு உடைக்கிறாப்பல சத்தம் போடுது.

"அய்யா அய்யா"ன்னு நான் சொல்ல விரும்பினது, "அவ்வா அவ்வா"ன்னு மெல்ல கேக்குது. அந்த ஆளுக்கு கேக்கணுமே.

"பிரதர், எவனோ புதுசா இருக்கு? என்ன செய்யலாம்?"

"திறக்காதே"

"இடிக்காதிங்க. உள்ள உடம்பு சரியில்லை!"

"பாத்துறலாம். திறடா சோமாரி! போலீசைக் கூட்டியாரட்டுமா? வெட்டிக் கருமாதிங்களா திறங்கடா"

இன்னும் இடிக்கிற சத்தம் கேக்குது.

"என்ன பண்றது, பிரதர்? திறந்து ஓடிரலாமா? தயாரா?"

"இரு இரு"

அதுக்குள்ள கதவு வெடிச்சிருச்சு. உள்ள ஓர் ஆள் பூந்து உடனே சாத்திக்கிட்டான். என் வாயைப் பொத்திக்கிட்டிருந்த அவனைப் பார்த்தான். "அப்

படியா சேதி!"

"யார்ரு, நீ"

"உங்க பாட்டன்! விடுரா, அந்தப் பொம்பளேயை!"

அவன் கைல பளபளப்பா இருந்துச்சு. அதை வேகமா "டாய்"னு சுழட்டினுன்.

ரெண்டு பேரும் அவன் மேல பாஞ்சாங்க.

அவன் பிச்சுவா மாதிரி ஏதோ வெச்சுக் கிட்டு இருந்ததை காட்டி, "கிட்ட வராதிங்க. கீறிப்பிடுவேன்"

நான் எழுந்து ஒடி ஒரத்தில நின்னு அழுது கிட்டே என் சேலேயை சேகரிச்சுக்கிட்டேன்.

அவன் இந்த சமயத்தில் கதவுக்கு பின்பக்கமா முதுகைப் பதிச்சுக்கிட்டு "ஒண்டியா ஒரு பொம்பளே கிடைச்சா இப்படித்தான் சீரழிக்கிறதோ!" என்றுன்.

"அய்யோ"ன்னு ஒருத்தன் முழங்கையைத் தேச்சுக்கிட்டு உக்காந்துட்டான். உடனே ரத்தம் தெரிஞ்சுது. என் வாயைப் பொத்தினவன் நாய் போல குழைஞ்சு உக்காந்துட்டான்.

"வேண்டாம் பிரதர்! வம்பு வேண்டாம்! இது என் சம்சாரம்."

நான் "இல்லே இல்லே பொய்"னு கத்தினேன்.

முழங்கையைப் பிடிச்சுக்கிட்டு இருந்தவன் "கோபாலு கோபாலு"ன்னு கத்தினுன்.

"கோபாலும் இல்லே. கோவிந்துமில்லே! ஒதுங்குடா"

அவங்க ரெண்டு பேரும் பயந்து நடுங்கி ஒதுங்க, புதுசா வந்த ஆளு கக்கியைக் காட்டி அவங்களே ஒரத்துக்குக் கொண்டு போய் நிறுத்திவிட்டு, முதல் முறையா என்னேப் பார்த்தான்.

"இனி பயப்படாதம்மா. இங்க வாங்க! செருப்பு இருக்கா?"

நான் அழுதுகிட்டே, "இருக்கு"ன்னேன்.

செருப்பு, ரூம்ல இங்க ஒண்ணும் அங்க ஒண்ணுமாக் கிடந்தது.

"அதை எடும்மா! பயப்படாம எடு!"

கண்ணேத் துடைச்சுக்கிட்டே எடுத்தேன்.

"பாத் ரூம்ல சாணி எதாவது இருக்கா, பாரு?"

"இல்லிங்க"ன்னு அழுது கிட்டே சிரிச்சேன்.

"கக்கூஸ் தண்ணி கூட இல்லியா"

"வேண்டாம், பிரதர், நாங்கள் யாருன்னு உனக்கு தெரியாது. ராங் பண்ணுத!"

"அடப் போங்கடா குருட்டுக் ——— ங்களா! எடும்மா செருப்பை! டேய், உக்காருங்கடா. ரெண்டு பேரும் உக்கார்றிங்களா?



"நீங்கள் இலவசமாகத் திருமணம் செய்து வைக்கிறீர்களாமே? அறுபதுக்கு அறுபது செய்து வைப்பீர்களா!"

---

இல்லே, ஜெனரலாஸ்பத்திரி கிட்டத்தான் இருக்கு, ரத்தம் வாங்கிக்க அனுப்பட்டுமா?"

இப்ப அவன் வேட்டி எல்லாம் ரத்தக்கரையா இருந்தது.

"போடும்மா! செருப்பால அவங்க தலேல, கன்னத்தில, ஏன் இடுப்புக்கு கீழ கூடப் போடு! ஊம் தயங்காதே! ஏண்டா டேய் சாக்கடைப் பயல்களா? ...ம்! போடு..."

"எனக்கு வந்த ஆத்திரத்தில செருப்பை எடுத்துக்கிட்டு ஒருவன் தலேல செமத்தியா ஒண்ணு வெச்சேன்.

"என்ன இது! பலமே இல்லாம! நல்லா வைம்மா! மூஞ்சில ஆணி படறுப்பல போடும்மா"

அவனே மூஞ்சில அடிக்கத்தான் வீசினேன்! செருப்பு பிஞ்சுச்சு. அப்பால போய் விழுந்தது.

"இந்தா என் செருப்பை எடுத்துக்க"ன்னு காலே உதறினுன். "இப்பதான் சாணியை மொதிச்சுட்டு வந்திருக்கேன்!"

எனக்கு என்னே கட்டுப்படுத்தவே முடியலே. அழுகை அப்படியே பிரளய மாட்டம் வந்தது.

"அய்யா முருகன் தான்யா உங்களே இங்க அனுப்பி வெச்சாரு! ..."

"முருகன் இல்லே: உன்னுடை சோப்பு டப்பா! தராஜுக்கு கார் ரிப்பேர்





சாந்தி ("சிவப்பு மல்லி") இப்பொழுது இறங்கி வந்து இருக்கிறார்!

"என்னைத் தொடலாம். கட்டிப் பிடிக்கலாம். ஆனால், ஆபாசமாக மட்டும் நான் ஆடை அணிய மாட்டேன்" என்று கூறுகிறார்.

"கவர்ச்சியைக் காட்ட, சாந்தியிடம் என்ன இருக்கிறது?" என்று கேட்கிறார், அனுபவப்பட்ட, ஒரு தயாரிப்பாளர்.

★ விஜயகாந்தின் உண்மையான பெயர், விஜயராஜா. அதை. "விஜயகாந்த்" என்று மாற்றியவர், டைரக்டர் காஜா.

★ பிரமிளா என்ன செய்து கொண்டு இருக்கிறார்?

"மலையாளத்தில் இப்பொழுது நானே "பிசி" நடிகை" என்கிறார், பிரமிளா.

சரி, தமிழ்ப் படங்களில் ஏன் பிரமிளா நடிக்கவில்லை?

"கதாநாயகியாக இருந்த என்னை துணை வேடங்களில் நடிக்க அழைக்கிறார்கள். என்னையே நான் தாழ்த்திக்கொள்ள தயாராக இல்லை" என்று சொன்னார், பிரமிளா.

இன்னொரு செய்தி— பிரமிளாவிடம் விவாகரத்து கேட்டு அவருடைய கணவர் விஜயகுமார் வழக்குத் தொடுத்து இருக்கிறார்!

★ இந்தி நடிகர் தர்மேந்திராவுக்கு இரண்டாவது மனைவி ஆன, நடிகை ஹேமா மாலினி, அம்மா ஆகப் போகிறார்.

ஹேமா மாலினிக்கு இது மாதம் 7.

★ சுகாசினியிடம், "ஒரு நாள் நடிப்பேன் என்கிறீர்கள்; மறுநாள் "கேமராவுமேன்" ஆக பணியாற்றவே விரும்புகிறேன் என்கிறீர்கள். நீங்கள் என்னதான் செய்யப் போகிறீர்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியுமா?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு சுகாசினி அளித்த பதில்: "இப்போது நான் எதுவும் சொல்வதற்கு இல்லை."

★ "அலைகள் ஓய்வதில்லை" படத்தில், குடும்பப் பெண் பாத்திரத்தில் நடித்தாலும், என்னைத் தொடர்ந்து, கவர்ச்சி பாத்திரத்தில் நடிக்கவே அழைக்கிறார்கள்" என்று வேதனையோடு கூறுகிறார், "சில்க்" சுமிதா.

★ ரஜினிகாந்த் மனைவி லதா, "பி. ஏ." பட்டப் படிப்பில் வெற்றி பெற்றார்.

லதா, சென்னை எத்திராஜ் கல்லூரியில் "பி.ஏ." இறுதியாண்டு படித்துக் கொண்டு இருந்தபோது, ரஜினிகாந்த் மீது காதல் வயப்பட்டார். திருமணத்துக்குப் பிறகும் லதா, தொடர்ந்து படித்து, தேர்வு எழுதினார்.

லதா வெற்றி பெற்ற செய்தி வந்ததும், நண்பர்களுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தார், ரஜினி.

லதா, இப்பொழுது கர்ப்பமாக இருக்கிறார்.

★ "சின்ன சின்ன வீடு கட்டி" படத்தில், தயாரிப்பாளர் ராஜ்கண்ணு அறிமுகப்படுத்திய ஜெயா, சின்ன வீட்டுக்காரி ஆகி, கோர்ட்டுக்குப் போனது பழைய செய்தி.

புதுச் செய்தி: ஜெயாவின் தங்கை அனு, "ராகம் தேடும் பல்லவி" என்ற படத்தில் கதாநாயகியாக அறிமுகம் ஆகிறார். அறிமுகப்படுத்துபவர், டைரக்டர் டி. ராஜேந்தர்.

இதில் ஒரு கிசு கிசு:— ஜெயாதான், குழந்தை பெற்ற பிறகு கொஞ்சம் இளைத்து, "அனு" ஆகியிருக்கிறார், என்கிறார்கள்!



ராதிகாவை ஈரப் படுத்துபவர், சுமன். (படம்: "ஈர விழி காவியங்கள்").

எந்த மட்டில இருக்குன்னு பார்க்க வந்தேன்... டப்பா கிடந்தது!"

"அப்பா!"ன்னு பெருமூச்சு விட்டேன்.

"உறுதியா சேலை இருந்தா கொடு. தப்பா நினைச்சுக்காதே. சோமாரிங்களை கட்டறதுக்கு"

நான் பெட்டியில் இருந்து ஒரு சேலையை எடுத்துக் கொடுத்தேன் அதை வெச்சு ரெண்டு பேர் கையையும் சேர்த்து அந்தாளு கட்டினாரு. "உங்களை எல்லாம் அம்மணமாக் கூட்டிட்டுப் போவணும்டா.

"இத பாருங்க! உங்க பேரு என்ன?"

"சுகுணா"

"சுகுணா! இனி பயம் இல்லை. கொஞ்ச நேரம் இங்கதான் இருங்க. நான் இவங்களை கொண்டுபோய் பூக்கடை போலீஸ் ஸ்டேசன்ல விட்டுட்டு வந்துர்றேன். பயப்படவே பயப்படாதிங்க. ஏய் டபுள் சோமாரிங்களா —— த்தா உங்களை திட்டறதுக்கு வார்த்தை கூட தெரியலை! நடங்கடா"

அவங்க ரெண்டு பேரும் தயங்கித் தயங்கி நடக்கறப்ப என்னைப் பார்த்து "எங்க போற, கவனிச்சுக்கறேன் பாரு"ன்னான்.

அவனை தாடைல அடிச்சு "கவனிக்கலாம், நீ போடா! சுகுணா! நீங்கள் இங்கயே இருங்க. உங்களை ஒருத்தரும் இனி ஒன்னும் பண்ணிற முடியாது"

அவங்க போனதும் நான் அப்படியே உக்காந்து கைகூப்பி அழுதுகிட்டு பாடினேன்.

"நாள்என்செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடிவந்த
கோள் என் செய்யும் கொடுங்கூற்று என்செய்யும் குமரேசர் இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே."

(தொடரும்)

# ஒருத்தி நினைக்கையிலே...



## சுஜாதா

**5**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். இரண்டு பேர், சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, ஒருவன் வந்து அவளைக் காப்பாற்றினான்.

**பா**ட்டை சொல்லி முடிச்சதும் எனக்கு கொஞ்சம் ஆறுதலா இருந்தது.

அவங்களை போலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு போய் விட்டுட்டு வர்றதா சொன்ன ஆள் திரும்பி வர்ற வரைக்கும் அந்த நல்ல மனுசனை எனக்கு அனுப்பி வெச்ச கடவுளைப் பத்தி யோசிச்சேன்.

அந்த ஆளு முகத்தைக் கூட சரியாப் பார்க்க நேரமில்லே. வந்தவுடன்தான் அவருக்கு தாங்ஸ் சொல்லணும். வந்துருவார். இல்லே, என் அதிர்ஷ்டம் அவரை அவங்க ரெண்டு பேரும் சமாளிச்சு அடிச்சு தப்பிச்சுக்கிட்டு மறுபடியும் என்கிட்ட வந்தாங்கன்னா?

சே...அப்படி நினைக்காதே! அந்த ஆளு என்ன தைரியமான ஆளு, எப்படி கத்தி வீசினாரு!

அவர் போய்விட்டு திரும்பி வர்ற வரைக்கும் எனக்கு கொஞ்சம் நடுக்கமாத்தான் இருந்தது. கதவு திறந்திருந்தாலும் ஓடிப் போக திராணியில்லே.பயம். இந்த ஊர்ல வேற என்னை என்ன நடக்குமோ. பேசாமல் கிராமத்துக்குப் போயிரலாம்.

ஆனால் அண்ணன்? அவர் எங்கதான் அலைஞ்சுக்கிட்டு இருக்காரோ! இப்ப அவரை வேற கண்டுபிடிச்சு ஆகணுமே! இந்த ஆள் வரட்டும், கேக்கலாம்.

அவர் கையைத் தட்டிக்கிட்டே வந்தாரு. "ஸாரி! ஸ்டேசன்ல நேரமாயிட்டுது. அவங்க இன்னும் கேஸ் பதிவு பண்ணலே. இன்ஸ்பெக்டர் வர்ற வரைக்கும் காத்திருன்னுங்க. நான்தான் ஏட்டாண்டை சொல்லிட்டு, "அந்த பொண்ணு தனியா காத்திருக்குது. பயப்படும்"னு சொல்லிட்டு வந்துட்டேன். வாங்க,இனி எந்தப் பயமும் இல்லே"

"தாங்ஸ்" மெதுவா சொல்ல முடிஞ்சுது.

"உங்கள் கையெல்லாம் இன்னும் நடுங்குது. எல்லாம் ஆயிருச்சு. இனிமேல் பத்திரத்துக்கு வந்தாச்சு நீங்கள். என்னது? கண்ணீர் வேண்டாம், போதும்! உங்கள் பேர்கூட மறந்து போச்சு"

"சுகுணா"

"சுகுணா, பயப்படாதீங்க. நீங்கள் எந்த ஊரு சொல்லுங்க"

"மடவாக்கம் பக்கத்தில வீரவாக்கம்னு கிராமம்"

"இங்க எதுக்கு வந்திங்க?"

"வேலை ஒத்துக்க, எனக்கு அரசு வேலை கிடைச்சிருக்கு. சேந்துக்க அண்ணனோட வந்தேன்"

"அவரு எங்கே?"

"பிரிஞ்சுட்டோம்"

"என்னதான் நடந்தது?"

எல்லாத்தையும் சொன்னேன். என்னை நேராக் கூடப் பார்க்காமல் தன் கையையே பாத்துக்கிட்டு அந்த ஆளு கேட்டுக்கிட்டு இருந்தாரு. அப்பப்ப எதுக்கோ சிரிச்சுக்கிட்டாரு. "அடப் பாவி அடப் பாவி"ன்னு சொன்னார்.

"எதுவரைக்கும் படிச்சிருக்கிங்க?"

"பி எஸ் ஸி"

"சரிதான்! சின்ன ஓர் எட்டு வயசு பொண்ணு போல நடந்துகிட்டிருக்கிங்க. போகட்டும். இப்ப முக்கிய வேலை உங்கள் அண்ணனைக் கண்டு பிடிக்கணும், அவ்வளவுதானே? பேர் சொல்லுங்க"

"மாணிக்கம்"

"அந்த ஆளு கொஞ்சம் புத்திசாலித்தனமா நடந்துகிட்டு இருந்தா உடனே அருகாமையில போலீஸ் ஸ்டேசன்ல போய் புகார் கொடுத்திருப்



"எனக்கு போதை ஏறிவிட்டது, வேண்டாம்" என்று டெல்லி கணேசிடம் ஜெயமாலா சொல்லுகிறாரோ! (படம்: "அன்றுமுதல் இன்றுவரை")

# நீங்கள் எழுதியவை

## தமிழா தூங்காதே!

புதிய ரெயில்வே மண்டலங்கள் அமைக்கப்படும் என்று ரெயில்வே ராஜாங்க மந்திரி அறிவித்து இருக்கிறார். இதைத் தொடர்ந்து மலையாளிகளுக்காக "தென் மேற்கு ரெயில்வே" அமைக்க வாய்ப்பு இருக்கிறது. இந்த நேரத்தில் தமிழர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால், மதுரைவரை மலையாளிகளுக்கு தாரை வார்க்கப்பட்டுவிடும்!

அக்டோபர் மாதத்தில் புதிய கால அட்டவணை வெளி வர இருக்கிறது. இந்த அட்டவணையிலாவது திருநெல்வேலியைக் கவனிப்பது நல்லது. கொல்லத்துக்குப் போல நெல்லைக்கு ஒரு பகல் எக்ஸ்பிரஸ் ரெயில் விட வேண்டும். அல்லது கொல்லம் எக்ஸ்பிரஸை நெல்லை வழியாக விடலாம். செங்கோட்டை பாசஞ்சரை எக்ஸ்பிரஸ் ஆக்கலாம்.

பாண்டியன் எக்ஸ்பிரஸ் வேகத்தைக் கூட்டி, மதுரையில் புறப்படும் நேரத்தை இரவு 9 மணி ஆக்கினால், சுற்றுப்புற ஊர்களில் இருந்து ரெயில் பிடிக்க வருகிறவர்களுக்கு வசதியாக இருக்கும்.

ஏ. பிரபாகரன்,
அம்பத்தூர்.

## இது என்ன அநியாயம்!

மருந்துகள் எல்லாவற்றுக்கும் விற்பனை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மருந்துக் கடைக்காரர்கள் மறைமுகமாக விற்பனை வரி வசூலிக்கிறார்கள்!

ரூபாய்க்கு 8 காசு முதல் 10 காசு வரை இந்த வரி வசூலிக்கப்படுகிறது!

"எஸ். டி." (சேல்ஸ் டாக்ஸ்) என்று குறிப்பிடுவது இல்லை. "டி. எஸ்." என்று குறிக்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம் என்று அவர்களுக்கே வெளிச்சம்!

இந்த அநியாய வரியைக் கேட்க ஆள் இல்லையா? மத்திய — மாநில அரசுகள் கண்ணை மூடிக் கொண்டு இருப்பது ஏன்? மற்ற வியாபாரிகளும் "டி. எஸ்." விதித்தால் என்ன ஆகும்?

ஆர். சீதாராமன்,
சென்னை.

## மஞ்சள் கயிறு

மஞ்சள் கயிறு மங்கலத்தின் சின்னம். ஆனால், இப்பொழுது நாகரிகப் பெண்கள் மஞ்சள் கயிறு அணிவது இல்லை. தங்கச்




சங்கிலி அணிந்து கொள்ளுகிறார்கள்.

கன்னிப் பெண்கள்கூட கழுத்தில் தங்கச் சங்கிலி போட்டுக் கொள்ளுகிறார்கள். இதனால் மணமான பெண்களையும், கன்னிப் பெண்களையும் பிரித்துக் காண முடிவது இல்லை. இளைஞர்கள் வாலாட்டிவிடுகிறார்கள். மணமான பெண்கள் மஞ்சள் கயிறு அணிந்து கொண்டால், எல்லோருக்குமே நல்லது.

பி. சாந்தகுமார்,
சேலம்.

---

பார். முதல்ல அங்க போய் விசாரிக்கலாம். அதுக்கு முன்னாடி உங்கள் புடவை கிழிஞ்சிருக்கு; வேற மாத்திக்கிட்டு வாங்க. உங்கள் கண்ணில பசி தெரியுது. எங்கயாவது ஓட்டல்ல போய் சாப்பிடலாம். இருங்க, எங்கிட்ட எவ்வளவு பணம் இருக்குன்னு பாக்கறேன்"

பையைப் பார்த்தார்.

"ஆறரை ரூபா இருக்கு. போதும் சமாளிச்சுக்கலாம். என்னை யாருன்னு கேக்கவே இல்லையே, நீங்கள்!"

"மன்னிச்சுக்கங்க. என்னைப் பொறுத்தவரையிலும் நீங்கள் என் முருகக் கடவுள்தான்!"

"அய்யய்யோ! அதெல்லாம் கிடையாதுங்க. அவரு எங்க, நான் எங்கே? அவருக்கு என்னா வரும்படி! நான் எதோ தபால் ஆபிஸ்ல மணியாடர் பாரம் எழுதிக் கொடுத்து ...ஏங்க உங்கள் அப்பாயின்ட்மென்ட் ஆடர்ல பேர் போட்டு இருக்கா?"

"ஆமா, ஏன்?"

"இல்லை, ஒரு பேச்சுக்கு கேட்டேன். ஒரு வேலை பேர் போடலைன்னா அங்க போய் நான் சேந்துக்கலாமேன்னுட்டு"

"எனக்கு வேலை வேண்டாம். நான் ஊருக்கு போயிடறேன்"

"சேச்சே! அப்படி விட்டுர்றதா. மெட்ராஸ் அவ்வளவு மோசம் இல்லைங்க. சுமார் கால் பாகம் நல்லவங்க இருக்காங்க. அங்கங்கே காந்தி சிலை வெச்சிருக்காங்க, பார்த்திங்களா"

நான் சிரித்தேன்.

"அப்பாடா! சிரிக்கவே மறந்து போயிட்டிங்கன்னே நினைச்சேன். நீங்கள்ளாம் என்ன செய்யணும் தெரியுமா? இப்ப நானே உங்கள் மாதிரி பொண்ணா இருந்து அந்த சந்தர்ப்பத்தில என்ன செய்திருப்பேன், தெரியுமா?"

"என்ன?"

அவர் பதில் சொன்னதை எழுத முடியாது. ஆனால் அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது.

"சிரிக்காதிங்க. இந்த பேமானிப் பயலுகளுக்கு எல்லாம் அந்த மாதிரிதான் செய்யணும். முஸ்லிம் தேசங்களில திருடின கையை வெட்டிர்றதில்லை? ஏன் உங்கள் கன்னம் இப்படி சிவப்பாகி விட்டது? எதாவது தப்பா பேசிட்டேனா?"

"ஒரு நாளைக்குள்ளாற கேக்காததை எல்லாம் கேட்டாச்சு. பாக்காததை எல்லாம் பாத்தாச்சு"

"இப்ப ஆர்ய பவன்ல தோசையும் பாக்கணும்! வாங்க, எங்கூட"

"கொஞ்சம் வெளிய இருக்கிங்களா, பொடவை மாத்திக்கிட்டு வரேன்"

அவர் வெக்கப்பட்டுகிட்டு "ஸாரி"ன்னு சொல்லிட்டுப் போயிட்டார். நான் சிதறிக் கிடந்த எல்லாத்தையும் பொட்டில அவசரமா அடைச்சுப் போட்டேன். சேலை மாத்திக்கிட்டேன். சடையை சரிபண்ணிக் கிட்டேன். முகத்தை துடைச்சுக் கிட்டேன். வெளிய வந்தேன்.

"இங்கிலீஷ் பேசுவிங்களா"

"பழக்கமில்லை"

"அர்த்தம் புரிஞ்சுப்பிங்கல்ல"

"டிகிரி வரைக்கும் படிச்சிருக்கேன்"

"அப்ப சரி. யு லுக் ப்ரெட்டி"ன்னாரு.

சொன்ன குரல்ல எதும் வித்தியாசமா இல்லை. "இப்ப மணி பன்னண்டு"ன்னு சொல்ற மாதிரி சொன்னாரு.

அவரை நான் தைரியமா பாத்தேன்.

என்னைவிட நல்ல உயரமா இருந்தாரு. கன்னுக்குட்டிக்குக் கண்ணு மை தடவின மாதிரி பெரிய கண்கள். மீசை கொஞ்சம் அடர்த்தியா இருந்தாலும் பயப்படுத்தலை. சட்டைல இங்கிக்கரை இருந்தது. ஏகப்பட்ட பேப்பர் அடக்கியிருந்தாரு. கெடிகாரம் கட்டிருந்தாரு. ஆனால் பாத்தா அப்படி ஒண்ணும் வசதியுள்ளவரா தெரியலை.

என்கூட நடக்கத்

தயங்கி கொஞ்சம் இடைவெளி விட்டே நடந்தாரு. அவர் கூட நடக்கறப்ப பட்டணம் அவ்வளவு பயமா இல்லே. யாரும் எங்களை கவனிக்காம அவங்க அவங்க காரியத்தைப் பாத்துக்கிட்டுப் போய்க்கிட்டு இருந்தாங்க. பெரிய வண்டி நிறைய சின்ன சின்னதா பிளாஸ்டிக் சாமானுங்க போய்க்கிட்டு இருக்க, முதல் முறையா எனக்கு அதெல்லாம் பாக்கணும் போல இருந்தது. கூடவே அண்ணனைப் பத்தி கவலையும் இருந்தது.

"எத்தனை மணிக்கு வேலைல சேரணும்?"

"அது ஆயிருச்சு! ஆனால் நான் வேலைக்குப் போறதா இல்லே. எனக்கு வெலவெலத்துப் போச்சுங்க. உங்க பேர் கேட்டு வெச்சுக்கவே இல்லையே!"

"பேர் சொன்னா சிரிப்பீங்க"

"ஏன்?"

"முருகன்! அதான் பேரு"

எனக்கு சிரிப்புத்தான் வந்தது. சந்தோஷம் நிரம்பித்தான். "ஆனால் எனக்கு அந்த முருகன் மேல் நம்பிக்கையெல்லாம் கிடையாது"

"நீங்கள் கருப்புச் சட்டை கட்சியா?"

"எனக்கு சாமியை நினைக்க எல்லாம் நேரம் இல்லீங்க. அப்பப்ப எதாவது செய்துகிட்டு சம்பாதிச்சுக்கிட்டு இருக்கறதுக்கே எனக்கு பொழுது சரியா இருக்குது. கோவிலுக்கு ஒரு காலத்தில நிறைய போய்க்கிட்டு இருந்தேன். அவரு என்னடான்னா தான் உனக்கு நான் வேணும்னு எனக்கும் நீ தேவையில்லேப் பான்னுட்டு விலகிட்டேன். இப்ப நான் நம்ம பக்கமே திரும்பலே"

"யாரு?"

"கடவுள்தான்! சரித் துதிக்கிறது வேற விசயத்தை"

"அப்படி சொல்லக் கூடாதுங்க. நீங்கள் கோயிலுக்கு போனது எல்லாம் எப்பவாவது நிச்சயம் பலன் கிடைக்கும்"

"எப்ப? அடுத்த நூற்றாண்டிலயா! எதோ, போனா பளிச்சுன்னு பலன் கொடுக்க வேண்டாம்! இல்லாட்டா என்ன சாமி அது? மன்னிச்சுக்கங்க, மத்தபேர் பக்தியைக் கேலி செய்ய எனக்கு விருப்பம் இல்லே. கும்பிடுறவங்க கும்பிடட்டும். இதோ பக்கத்திலயே கந்தசாமி கோவில் இருக்குது. மசால் தோசை தின்னுட்டு கும்பிடப் போகலாம்"

பெரிய சந்து மாதிரி இருந்த சுறுசுறுப்பான இடத்தில இருந்தது, அந்த ஓட்டல். "இங்க பாதம் அல்வா சாப்பிடணு"ம்னு மாடிக்கு அழைச்சுட்டுப் போய் வட்டமா சலவைக் கல் மேசையில உக்காந்தோம். சர்வர் வந்து "ஃபேமிலி ரூம் அங்க இருக்குது"ன்னார்.

"ஃபேமிலி இல்லேப்பா. முறுகலா ரெண்டு தோசை கொண்டா"

அவர் எங்களை ஒரு மாதிரி பாத்துக்கிட்டே போக "ஃபேமிலி இல்லேன்னு தள்ளிட்டு வந்திருக்கேன்னு நினைச்சுக்கறும் பாருங்க! பார்வையே சொல்லுதே. இதான் இந்த ஊர்லயே கன்றாவி. நல்லவங்க இருக்காங்கன்ன நம்பிக்கையே சுத்தமா கிடையாது"

"அங்க வேணா போயிர



## மனிதனை கடித்த பாம்பு சாவு!

பாம்பு கடித்து மனிதர்கள் சாவது உண்டு. ஆனால், ஒரு மனிதனை கடித்த பாம்பு செத்துவிட்டது!

இந்த அதிசயம் உத்திரப் பிரதேசத்தில் நடந்தது. அங்கு ஒரு கல்லூரி. அந்தக் கல்லூரியில் இரவு நேர காவலாளி ஒருவர் இருந்தார். போன வாரம் அவர் காவலுக்கு இருந்த பொழுது, ஒரு நல்ல பாம்பு அவரை கடித்து விட்டது. அவர் அலறித் துடித்தார். அக்கம் பக்கத்தவர்கள்




பாம்பை அடிக்க ஓடி வந்தார்கள். ஆனால், பாம்பு செத்துக் கிடந்தது!

அதைப் பார்த்து எல்லோரும் அதிசயித்தார்கள்.

பாம்பை பரிசோதனைக்கு அனுப்பினார்கள். அப்பொழுது ஓர் உண்மை தெரிந்தது.

காவலாளி கஞ்சா தின்பது உண்டு. பாம்பு கடித்த நேரத்திலும் அவர் கஞ்சா சாப்பிட்டு இருந்தார். அவரை கடித்த பொழுது கஞ்சா நஞ்சு பாம்பு உடலில் ஏறிவிட்டது. இதனால்தான் பாம்பு செத்தது!

காவலாளி நன்றாக இருக்கிறார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

# கொறிக்க..

## பெண்கள் விளையாட தடை!

ஆசிய பெண்கள் ஆக்கி விளையாட்டுப் போட்டி ஜப்பானில் நடந்தது. அதில் கலந்துகொள்ள பாகிஸ்தான் பெண்கள் அணி செல்வதாக இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் அந்தப் பெண்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

"பெண்கள் விளையாடுவதை ஆண்கள் பார்க்கக் கூடாது. அது முஸ்லிம் மதக் கோட்பாட்டுக்கு விரோதம்" என்று முஸ்லிம் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இதனால் பெண்கள் அணிக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்தது.

ஜப்பானுக்குப் போக பெண்கள் தயாராக இருந்தார்கள். இந்தத் தடையைக் கேள்விப்பட்டதும், அவர்கள் விக்கி விக்கி அழுதார்கள்!

## மந்திரி குமாரியை கண் அடித்த மந்திரி!

ஒரு பெண்ணை பார்த்து கண் அடித்ததாக ஒரு மந்திரி மீது வழக்கு நடக்கிறது!

அந்தப் பெண் சாதாரணப் பெண் அல்ல. மந்திரி குமாரி— ஒரு மந்திரியின் மகள்!

வழக்கு தொடரப்பட்டு இருக்கும் மந்திரியின் பெயர், ரஞ்சன்ஜா. இவர் பீகார் உதவி உணவு மந்திரியாக இருக்கிறார்.

மந்திரி குமாரியின் பெயர், பிரதிபா. மராட்டிய மாநில முன்னாள் பெண் நிதி மந்திரி சாந்தியின் மகள்.

மந்திரி மகள் பிரதிபாவைப் பார்த்து மந்திரி ரஞ்சன்ஜா கண் அடித்தாராம்! பிரதிபா போலீசில் புகார் செய்தார். அதன் பேரில் ரஞ்சன்ஜா மீது கோர்ட்டில் வழக்கு நடக்கிறது.

## இந்திராகாந்தி "டிரஸ்டு"

பிரதமர் இந்திரா காந்தி பெயரில் "டிரஸ்டு" ஒன்றை மராட்டிய முதல் அமைச்சர் அந்துலே தொடங்கியிருக்கிறார்!

ஓர் ஆண்டு காலத்துக்குள் இந்த "டிரஸ்டு"க்கு ரூ. 5 கோடி சேர்ந்து இருக்கிறது!

பெரிய பெரிய முதலாளிகள் இலட்சக் கணக்கில் பணம் கொடுத்து இருக்கிறார்கள்.

"பணக்காரர்கள் கொடுக்கிறார்கள். நான் வாங்கிக் கொள்ளுகிறேன். இதில் என்ன தப்பு?" என்று அந்துலே கேட்கிறார்!

## கார் நம்பர் ரூ. 5 இலட்சம்!

புதிய கார்களை பதிவு செய்து கொண்டதும், அதற்கு நம்பர் கொடுக்கிறார்கள். ஆங்காங்கில் கார் நம்பர்களை ஏலம் போடுகிறார்கள். ராசியான நம்பர்களை ஏலத்தில் எடுக்கிறார்கள்.

6-ம் நம்பருக்கு ஏகக் கிராக்கி!

சமீபத்தில் 6-ம் நம்பர் ஏலம் போடப்பட்டது. ரூ. 5 இலட்சம் ஏலம் போயிற்று.

ஏலம் எடுத்தவர்—ஒரு சினிமா நடிகர்!

## வேலை இல்லாத மந்திரிகள்!

உத்திரப்பிரதேசத்தில் 12 மந்திரிகளுக்கு வேலையில்லை!

அவர்கள் மந்திரிகள் ஆக நியமிக்கப்பட்டாலும், அவர்களுக்கு இலாகா ஒதுக்கப்படவில்லை!!



கலைவாணன்—அருணா காதலின் தொடக்கம்தான், இது. இன்னும் கரையை அடையவில்லை.
(படம்: "கானலுக்குக் கரையேது")

லாம்"

"இப்ப போய் பிரயோசனம் இல்லே"

சுருள் சுருளா தோசை வந்தது.

"தோசை என்ன விலைப்பா"

"ஒண்ணு ஐம்பதுங்க"

"அப்ப அம்மாவுக்கு இன்னொரு தோசை கொண்டா"

"வேண்டாங்க, ப்ளீஸ்"

சாப்பிடுங்க. ஆறரை ரூபா வரைக்கும் சாப்பிடலாம். எனக்கு பசி மூஞ்சியை நல்லா அடையாளம் கண்டுக்கத் தெரியும்"

தோசை நல்லாத்தான் இருந்தது. நெய் வாசனை வந்தது. "காதை மடக்கிட்டு சாப்பிடுங்க"ன்னார்.

எனக்கு அடக்க முடியாம சிரிப்பு வந்தது.

"ஏன் சிரிக்கிறிங்க"ன்னரு.

"காலேல, காலேல. அந்த ரூம்ல, செருப்பு கழட்டி..."

"மொத்துங்கன்னு என்னவோ கரப்பாம் பூச்சி அடிக்கிற மாதிரி அடிக்கிறிங்களே, பல்லே உதுத்து இருக்க வேண்டாமா?"

"எனக்கு அப்பகூட சிரிப்பு வந்தது. கக்கூஸ் தண்ணி இருக்கான்னு நீங்க சீரியஸா கேட்டப்ப..."

"பின்ன என்ன? அந்த ஆளுங்களை விடப்போறதில்லே, நான். உங்களை ஒப்பேத்திப்பிட்டு அவங்களை கவனிக்க போலீஸ் ஸ்டேசன் போறேன். இன்னும் எதாவது சாப்பிடுறிங்களா?"

"போதுங்க"

"வேற எதாவது வேணுமா, சார்?"

"வேணும்ப்பா! பில்லு"

ஓட்டலை விட்டு வெளி வந்தப்ப எனக்கு பசியும் பயமும் போனதால தெளிவு வந்திருச்சு. இவரை வெச்சுக்கிட்டு அண்ணனை கண்டு பிடிச்சுட முடியும்னு தைரியம் வந்துருச்சு. அதோட இந்த ஆளைப் பார்த்ததும்...

அதை அப்பறம் சொல்லறேன்.

(தொடரும்)

# 6

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். இரண்டு பேர், சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, ஒருவன் வந்து அவளைக் காப்பாற்றி அழைத்துப் போனான்.

**மா**ணிக்கத்துக்கு வெற்றிலை பாக்கு போட்ட செங்கமலத்தைப் பார்க்க அச்சமாக இருந்தது. பல்லுக்குள் ரத்தம் கரித்தது.




அவன் எதிர்க்காமல் இருப்பதைப் பார்த்துவிட்டு அந்த கழுத்து கைகுட்டை ஆசாமி "டாய்" என்று தொடையில் வீரமாகத் தட்டிக் கொண்டு, மாணிக்கத்தின் மேல் பாய்ந்தான். அவன் குடித்திருந்தான் போலும். நாற்றம் அடித்தது.

மாணிக்கத்துக்கு அழ வேண்டும் போல இருந்தது. அவனை காலரை விடவில்லை. "அய்யா! என் தங்கச்சியைக் காணம்யா. என் தங்கச்சியை தேடிட்டு கிராமத்தில இருந்து வரய்னயா"

"பின்ன யான் என் கூடவே ஒதுக்குப்புறத்துக்கு வரியாம்,கஸ்மாலம்" என்றாள் செங்கமலம்.

"அம்மாடி! நீங்கள் எங்கக்கா மாதிரி"

"அக்காளாம்! உனக்கு இன்னாடா வயசு!"

செல்லம் என்பவன் கராத்தே பாணியில் மாணிக்கத்தைப் பதம் பார்த்துக் கொண்டிருக்க, தூரத்தில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் தெரிய, "அய்யா அய்யா ஏட்டய்யா காப்பாத்துங்க" என்று இரைந்து கத்தினான். அவர் அதை கவனிக்கும்படியாக இல்லை.

கூட்டம் சேர்ந்து கொள்ள, "ஏனய்யா சும்மாயிருக்கிற ஆளைப் போட்டு தர்ம அடி அடிக்கிறே" என்று ஒரு குரல் எழ,

"உனக்கு இன்னாச் சுரா?" என்று அவன் எதிர்த்துக் கேட்க, "சும்மா இருக்கிற ஆளா? உனக்கு இன்னா தெரியும்? இந்த ஆளு இன்னா செஞ்சான் தெரியுமா?"

"இன்னா செஞ்சான்?"

"எனக்கு சொல்லவே நாக்கு கூசுது"

"அடப்போ, போனாப் போவுது. ஏதோ தெரியாம செய்திருப்பான். ஏன்யா தெரியாமதான செஞ்ச?"

"என் தங்கச்சியைத் தேடிக்கிட்டு வந்தங்க. அவ்வளதாங்க நான் செஞ்சது! சும்மா காரணமில்லாம சட்டையைக் கிழிச்சு அடிக்கிறாங்க. என்னங்க இது அநியாயம்."

"இந்தப் பொண்ணு கிட்ட ராங் பண்ணியாம்? இதான் உன் தங்கச்சியா"

"இவுனுக்கு நாந் தங்கச்சியா! இன்னு கஸ்மாலம், இது"

"ஏட்டய்யாவைக் கூப்பிடுங்கய்யா.இவங்க என்னை அடிக்கிறது நியாயமா, கேக்கலாம்" மாணிக்கம் இப்போது அழ முற்பட்டான்.

"ச்சே! பொட்டைப் புள்ளை மாதிரி அழுதுகிட்டு வெக்கமா இல்லே? செல்வம் விட்டுரு! போய்த் தொலையட்டும். ஏய் இனிமே இந்த மாதிரி பொம்பளைகல ராங் பண்ண எலும்பை எண்ணிடுவேன். நம்ம ரஜனி ஜெய் ஹிந்த் சங்கத்தில இருந்து ஆளுங்களை இட்டாந்து கீமா பண்ணிருவேன். மரியாதை குடுத்து மரியாதை வாங்கு,இன்னா?

"சரிங்க" என்றான், மாணிக்கம், புரியாமல்.

அவன் சட்டை முழுவதும் கிழிந்திருந்தது. பை இருந்த இடத்தில் நூல்பிரிகள் தொங்கிக் கொண்டு இருந்தன.தொட்டுப் பார்த்துக் கொண்டு, "அய்யோ எங்காசு? தங்கவேலண்ணன் அட்ரசு?" என்று கீழே தேடிப் பார்த்தான்.

அவனிடம் இருந்து பர்சை கொத்தாகப் பிடுங்கியவன் பக்கத்திலேயே இருந்து, "செரியாப் பாருய்யா. என்னத்தை காணம்? சரியாப் பாருய்யா" என்று அவனுக்கு உதவியாகத் தேடினான். "எத்தினி பணம் வெச்சிருந்தே?"

"நூத்தம்பது ரூபாங்க! அய்யோ என் தங்கச்சியும் காணம், என் பணத்தையும் காணம். என்ன செய்வேன்!"




"எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவன் உண்மையான பாத்திரக்காரன்தானா?"

"முதல்ல இந்த இடத்தைவிட்டுப் போயிரு. அவங்க தித்துருவாங்க.அப்புறம் தேடிக்க. இல்லே ஏட்டாண்டை புகார் கொடுத்துக்க!"

மாணிக்கம் அங்கு இருந்து விலகி சென்டிரல் ரெயில் நிலையத்தின் வாசல் படிகளில் உட்கார்ந்தான்.

கொஞ்ச நேரம் என்னத்தைத்தான் செய்வது என்று புரியவில்லை. போலீசுக்கு சொல்ல வேண்டும் என்கிற பிரக்ஞை மட்டும் இருந்தது. இங்கே இருக்கும் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் போலீஸ்காரர்களிடம் சொல்லி பிரயோசனம் இல்லை என்பது தெரிந்தது. இவர்களை கேட்டு, போலீஸ் நிலையத்துக்கு நடந்து போக வேண்டும்.

சுகுணாவைப் பற்றிய கவலை இன்னும் விலகவில்லை. இப்போது பணக் கவலை வேறு. பேசாமல் பஸ் அல்லது ரெயிலில் ஏறி உடனே கிராமத்துக்குப் போய் அப்பா அம்மாவிடம் சொல்லிப்போட்டு எல்லோரும் வந்து சுகுணாவைத் தேடலாம். இப்போது போனால் அப்பா கன்னத்திலே அடித்துவிடுவார். என்ன பண்ணுவது?

கன்னத்தில் கை வைத்துக் கொண்டு மலங்க விழித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தவனை ஒரு போலீஸ்காரர் சற்று

**12** நேரம் பார்த்துக் கொண்டு இருந்தார். அருகே வந்தார். "யோவ் எழுந்திரிய்யா."

மாணிக்கம் சற்று பயத்துடன் எழுந்து நின்ருன். போலீஸ்காரர் இப்போது அவனை மேலும் கீழுமாகப் பார்த்து, "உம் பேர் என்ன" என்ருர்.

"மாணிக்கங்க"

"எந்த ஊரு?"

"மடவாக்கத்து பக்கத்தில கிராமங்க"

"எப்ப வந்தே மெட்ராசுக்கு"

"இன்னைக்கு காலையில தாங்க வந்தேன்"

"கையைத் தூக்கு பாக்கலாம்"

மாணிக்கம் புரியாமல் கையைத் தூக்கினுன். அந்த ஆசாமிகள் அடித்திருந்ததால் அதிகம் தூக்க முடியாமல் வலித்தது.

"திரும்பு"

திரும்பினுன்.

"என்கூட ஸ்டேஷனுக்கு வா!"

"சரிங்க. என் தங்கச்சியைக் காணலைங்க. அதைக் கண்டு பிடிச்சுக் கொடுத்திங்கன்னு அய்யா நான் உங்களுக்கு கடமைப்பட்டிருப்பேன்"

"சரி, கண்டு பிடிச்சுக் கொடுக்கறேன். வா, என் கூட!"

மாணிக்கத்தை கூட்டிக் காட்டி இன்ெனுரு போலீஸ்காரரிடம் எதோ பேசிவிட்டு, "வாய்யா போவலாம்" என்ருர், போலீஸ்காரர்.

ஸ்டேசனுக்கு வெளியே நின்று கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் ஒன்றை நிறுத்தி "ஸ்டேசனுக்கு போய்யா" என்று அவனை உட்கார வைத்தார்.

அட, பரவாயில்லையே! நல்ல போலீஸ்காரராக இருக்கிருரே என்று நினைத்து, வழியெல்லாம் தன் தங்கையை பறி கொடுத்த கதையை சொல்லிக் கொண்டே வந்தான்.

அவர் அவன் கதையில் அதிக கவனம் இல்லாமல் அடிக்கடி தன் புஸ்தி மீசையை நீவி விட்டுக் கொண்டே வந்தார். "நல்லாப் பேசறய்யா நீ. சர்க்கிள் உன்னைப் பார்க்கட்டும். அவர்கிட்ட பேசிக்க, என்ன எம்பேரு முத்துசாமி. நான்தான் உன்னை முதல்ல பிடித்தேன். ஞாபகம் வெச்சுக்க, என்ன?"

"சரிங்க" என்ருன், புரியாமலே.

ரிக்ஷா போலீஸ் நிலையத்தின் ஆர்ச் வாசலின் அருகில் நின்றது.

ரிக்ஷாக்காரன் "அய்யா கூலி உண்டுங்களா" என்ருன். "போடா" என்று போலீஸ்காரர் அவனை விரட்டியது. மாணிக்கத்துக்கு பாவமாக இருந்தது. அந்த ஆள் உடம்பு பூராவும் வியர்வையால் பளிச்சிட்டது. "அய்யோ, எங்கிட்ட காசில்லையே! இருந்தா கொடுத்திருக்கலாமே" என்று ஏக்கப்பட்டான்.

வளைவாக சிவப்பில் போர்டு எழுதி, நீ வாளி, துப்பாக்கி எல்லாம் வைத்திருந்தது.

கழுத்தில் சவுக்கத்தைப் போட்டு ஒருத்தனை உள்ளே அழைத்துச் சென்ருர்கள்.

போலீஸ்காரர் ஓர் அறையைப் பார்த்து சலாம் அடித்துவிட்டு, "இங்கதான் உக்காரு. சர்க்கிள் இதோ வந்துருவாரு என்ருர். ஓரத்தில் போய் தன் காது ஓரத்தில் இருந்து எடுத்து பற்றவைத்து புகை பிடித்தார். அடிக்கடி மாணிக்கத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார், அவர் பார்க்கும் போதெல்லாம் மாணிக்கம் சிரித்தான்.



நிறைய துருப்பிடித்த

# பாட்டி வைத்தியம்

## உடல் மெலிய

பாட்டி! நான் வயதுக்கு மீறிய தடிமனாக இருக்கிறேன். தோழிகள் கேலி செய்கிறார்கள். உடல் பருமனைக் குறைக்க என்ன மருந்து சாப்பிட வேண்டும்?

(எம். மாலா, வேலூர்)

நாட்டு மருந்து கடைகளில், சுமுக்கரா கிழங்கு வேர் கிடைக்கும். இதை வாங்கி, இடித்து பொடி செய்து வைத்துக்கொள்ளுங்கள்.

இதில் காலை, மாலை இரு வேளையும் ஒரு சிட்டிகை அளவு எடுத்து, கொதிக் கஞ்சியில் கலந்து குடித்து வாருங்கள். உடல் பருமன் குறைந்து வரும்.

நீர்முள்ளி வேர் என்ற நாட்டு மருந்தும் மருந்து கடைகளில் கிடைக்கும். இந்த வேரை வாங்கி, பொடி செய்து வைத்துக் கொண்டு, தேனில் கலந்து சாப்பிட்டு வந்தாலும், சதைப்போட்ட உடம்பு மெலியும்.

எப்பொழுதும் சாப்பாட்டில் கட்டுப்பாடு தேவை. கொழுப்பு சத்துள்ள உணவுகளை விலக்குவது நல்லது.

## இருமல்!

பாட்டி! எனக்கு ஒரே இருமலாக இருக்கிறது. இதற்கு ஒரு மருந்து சொல்லுங்கள்.

(என். கணேசன், ஆறுமுகநேரி)

சுக்கு, மிளகு, சீரகம் ஆகியவற்றை பனங்கற்கண்டோடு சேர்த்து கசாயம் வைத்து குடியுங்கள். இருமல் நிற்கும்.

இழுப்புக்கும் இது நல்ல மருந்து.

## சிரிந்த மருந்து



மாமனார்: தீபாவளிக்கு உங்களுக்கு என்ன வேண்டும்? மோதிரமா? கைக் கெடிகாரமா?

மாப்பிள்ளை: ஒரு மாவு அரைக்கும் இயந்திரம் வாங்கிக் கொடுங்கள்.

---

சைக்கிள்கள் இருந்தன. கம்பிக்குள் இருந்து ஒருவன் மாணிக்கத்தைப் பார்த்து "இங்க வா" என்று அழைத்தான். மாணிக்கம் வேறு திசையில் திரும்பிக் கொண்டான். "அவர்கள் எல்லாம் செயில் கைதிகள், அவர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ளக் கூடாது"

வாசலுக்கு வெளியே நூற்றுக்கணக்கான வாகனங்கள் ஓடிக் கொண்டு இருக்க, கொஞ்ச நேரம் கழித்து இன்ஸ்பெக்டர் வந்தார், "உள்ளே வாய்யா" என்றார்.

அவர் அறையில் விலங்கு மரப் பலகையில் பொருத்தியிருந்தது. பலபேருடைய போட்டோக்கள் பிரேம் போட்டு மாட்டி இருந்தன. அவர்கள் முகம் எதும் ரசிக்கும்படியாக இல்லை. மாணிக்கம் பக்தியுடன் ஒரத்தில் நின்றான்.

"உம்பேரு என்ன?"

"மாணிக்கம் அய்யா"

"சரி, உன் நிஜப் பேர் என்ன?"

"அய்யா புரியலிங்க"

"உன்னுடை நிஜமான பேர் என்ன? இது புரியலையா!"

"மாணிக்கந்தாங்க"

"உனக்கு வேற பேர் கிடையாது?"

"அதெல்லாம் கிடையாதுங்க" என்று சிரித்தான்.

"எந்த ஊரு?"

"மடவாக்கம்"

"அதான் ஊரா"

"இல்லைங்க, அதுக்கு பக்கத்தில வீரவாக்கம் கிராமம்"

"ஓகோ! ஏன்யா அப்படி ஒரு கிராமம் இருக்குதா? உங்கப்பன் பேர் என்ன?"

"சரவணன்"

"உம்பேரு?"

"மாணிக்கம். இப்ப தாங்களே சொன்னேன்"

"சொன்னே? பொய் சொன்னே! உண்மையான பேர் சொல்லு, எங்க நகத்தைக் காட்டு. மாணிக்கத்தின் கைகளைப் பார்த்தார்.

"முகத்தைப் பாருங்க சார்" என்றார், "கான்ஸ்டபிள்."

"ஏய்யா இந்த வெட்டுத் தழும்பு எப்படி உனக்கு வந்தது?"

"சின்னப் பிள்ளைல மாங்கா மரத்தில இருந்து விழுந்தபோது வெட்டிருச்சுங்க"

"அப்படியா. உம்பேர் என்ன சொன்னே?"

"மாணிக்கம்! அய்யா என் தங்கச்சியைக் காணங்க. அதைப் புகார் கொடுக்கறதுக்குத் தான் இங்க வந்தங்க"

"வந்தியா? எங்கயும் போக மாட்டே, கவலைப் படாதே!"

"காலைல டிரெய்ன்ல இருந்து இறங்கினங்களா"

"எங்கிருந்து வந்தே? பம்பாயா?"

"இல்லைங்க, வீரவாக்கம்"

"வீரவாக்கத்தில உனக்குன்னு ஸ்பெஷலா ரெயில் போட்டிருக்காடா"

"இல்லைங்க. டவுன் பஸ்ல முதல்ல டேசனுக்கு வந்தோம்"

"பொய் சொல்லுவியா, பாத்துரலாமா?"

"இல்லிங்க, மெய்யத் தாங்க"

"மறுபடி பேர் சொல்லு?"

"மாணிக்கந்தாங்க"

"அப்புறம் வேற என்ன பேர்?"

"வேற பேர் கிடையாதுங்க. நான் வந்து என் தங்கச்சியை சேத்துவிட வந்தவங்க"

"உம்பேர் பாச்சா இல்லையா?"

"மாணிக்கங்க, மாணிக்கங்க"

"இந்த தழும்பு எப்படி வந்தது?"

"சொன்னங்களே, மாங்கா மரத்தில இருந்து விழுந்து"

இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபிளைப் பார்த்தார், "எமகாதன், என்ன சாதுவா, அப்பாவி மாதிரி இருக்கான், பாருங்கய்யா"

"அழைச்சுட்டுப் போய்யா. கிரைம் பிரஞ்சில தகவல் சொல்லி அனுப்பிடலாம். அவங்க வந்து பாத்துப்பாங்க"

"அய்யா என் தங்கச்சியை எப்படியாவது கண்டு பிடிச்சுக் கொடுத்துட்டிங்கன்னு......"

"வாய்யா" என்று கான்ஸ்டபிள் அவனை இழுத்துக் கொண்டு போனார்.

"ஒரு வேளை சுகுணா இருக்கும் இடம் இவர்களுக்கு தெரிந்திருக்குமோ?" என்று கூட மாணிக்கம் நினைத்தான்.

கான்ஸ்டபிள் அவனை பின்புறமாக அழைத்துக் கொண்டு சென்றார்.

சாவி வாங்கி கம்பிக் கதவைப் பூட்டியிருந்த பெரிய பூட்டைத் திறந்தார்.

"செத்தநேரம் உள்ள படுத்திரு, அவங்க வருவாங்க" என்று அவனைத் தள்ளினார்.

(தொடரும்)




COMICS PDF TIMES

சுஜாதா

7

முன்கதை சுருக்கம்:

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். இரண்டு பேர், சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, ஒருவன் வந்து அவளைக் காப்பாற்றி அழைத்துப் போனான். மாணிக்கத்தை போலீசார் காவலில் வைத்தார்கள்

"மெட்ராசில நல்லவங்களும் இருக்காங்க"ன்னேன்.

முருகன் என்னைப் பாத்து சிரிச்சாரு. "இருக்காங்க! இருக்காங்க! ஆனால் அவங்களை ஒரு எடத்திலதான் பாக்க முடியும்."

"எங்க?"

"தொல் பொருள் காப்பகத்திலே! இதபாருங்க சுகுணா, முழுசா நல்லவங்களோ முழுசா கெட்டவங்களோ யாரும் கிடையாது, எல்லாருக்கும் விழுக்காட்டிலதான் வித்தியாசம்."

"இல்லிங்க! நூறு சதவிகிதம் நல்லவரு நீங்கள்."

"அதுக்குள்ள சொல்லிராதிங்க. எனக்கும் கோபம் மூர்க்கம் எல்லாம் உண்டு."

"கூடவே கருணையும் இருக்கே."

"ரொம்ப ஐஸ் வெக்காதிங்க. எனக்கு என்னவோ புல்லரிக்குது. இப்ப உங்களைப் பத்திப் பேசலாம். அண்ணனைத் தேடணுமா? ஊருக்கு திரும்பிப் போகணுமா? அதைச் சொல்லுங்க முதல்ல."

"சாயங்காலம் வரைக்கும் பாக்கலாம். அண்ணன் கிடைக்கலைன்னா என்னை நீங்கள்தான் ஊருக்கு கொண்டு விட்ரணும். இல்லைன்னா தங்கவேலுன்னு உறவுக்காரர் இருக்காரு. ஸ்டேசனுக்கு வரதா சொல்லி வராமப் போய்ட்டாரு. அவர் வீட்டில கொண்டு விட்டாலும் சரிதான். எனக்கென்னவோ அண்ணன் அவர் வீட்டுக்குத்தான் போயிருப்பாரோன்னு சந்தேகமா இருக்குது. அட்ரஸ் அவர்கிட்டதான் இருக்கு."

"சரிதான், தங்கவேலுன்னு ஒருத்தரை மெட்ராசில தேடணுமா? கொஞ்சம் கஷ்டங்க."

"அப்ப என்னை ஊருக்கு கொண்டு விட்டுருங்க."

"அதுக்கென்ன! உங்கள் ஊருக்கு பஸ் இருக்கும் இல்லே?"

"இருக்குங்க. ரெயில்லதான் வந்தோம். இப்பதான் முதல் முதல் ஊரை விட்டு வெளியவே வரன்—காலேஜுக்கு டவுனுக்கு போனதோட சரி."

"முதல்ல செண்டிரல் ஸ்டேசன் பக்கம் போகலாம். அங்க உங்கண்ணன் இன்னும் நின்னுக்கிட்டு இருக்காரா பாக்கலாம். அங்க இல்லைன்னா பக்கத்தில போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் விசாரிக்கலாம். அங்கயும் தகவல் சொல்லிட்டு வரலாம். அதுக்கு அப்புறம் கிடைக்கிற பஸ்சை புடிச்சுட்டு உங்கள் ஊரான்டை கொண்டு விட்டுர்றேன்—சரிதானே?"

"ரொம்ப சரிங்க."

"ஆனால் காசுதான் கொஞ்சம் உதைக்குது!"

"என் சங்கிலியை எடுத்துக்கங்க. இதை வெச்சு பணம் வாங்கிடுங்க."

"சேச்சே, அதெல்லாம் வேண்டாம், எங்கயாவது கிடைக்கும். நண்பர்களைப் பாத்து கடன் வாங்கிக்கறேன். அப்பறம் திரும்பக் கொடுத்துரலாம்."

"இல்லிங்க, இதை வாங்கிக்கங்க; பரவாயில்லே"

சங்கிலியை கழட்ட ஆரம்பிச்சேன்.

அவர் தடுத்து, "சுகுணா, வேண்டாங்க — இந்த மாதிரி எல்லாம் தெருவில சங்கிலியைக் கழட்டாதிங்க. போற வரவங்க கவனிப்பாங்க. சங்கிலிக்கு தேவையிருந்தா, வேற எதும் ஏற்பாடு செய்ய முடியலைன்னா, நானே கேட்டு வாங்கிக்கறேன், கவலையே படாதிங்க."

இரண்டு பேரும் மறுபடி ரயில் ஸ்டேசனுக்கு வந்தோம். கொஞ்ச நேரம் இங்க அங்க அண்ணனைத் தேடிப் பார்த்தோம். அவர் கூடவே அலைஞ்சேன். அந்த ஸ்டேசன் கட்டடத்தைக் கண்டாலே எனக்கு பிடிக்கலை. இது வாசல்ல தானே என்னை ஏமாத்தி கூட்டிட்டுப் போனாங்க. இந்த நகரத்தோட அறிமுகமே சரியில்லாமப் போனது இங்கதானே.

அண்ணன் அங்க இல்லை. இருந்தாக்கூட தேடறது விரயம்னுதான் தோணிச்சு அத்தனை கூட்டம். ஒரு ஆளைக் கண்ணிலயே நிறுத்தி வெச்சிருந்தாத்



"எட்டு மாதத்துக்கு முன்பு காணாமல் போன உங்கள் மகள் கிடைத்து விட்டாளா?"

"உம். நேற்று வந்தாள். நாளைக்கு சீமந்தம்."

# இந்த வாரம் எப்படி?

எழுதியவர்: ஜோதிட சிந்தாமணி தா. வி. ரெங்கசாமி ஜோதிடர்.

(23-9-81 முதல் 29-9-81 முடிய)

**மேஷம்** அனுகூலமான வாரம். குடும்பத்தில் பணவரவு ஏற்படும். கொடுத்தகடன் திரும்பவரும். உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன் — மனைவி உறவு மகிழ்ச்சிதரும். பெண்கள் எதிர்பார்த்த தகவல்வரும்.

**ரிஷபம்** சுமாரான வாரம். குடும்பத்தில் பணக் கஷ்டம் ஏற்படும். உடல்நலமும் கெடும். தொழில்—வியாபாரம் முதலியவை சொற்பலாபம் தரும். கணவன்—மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். குடும்பத்துக்கு நல்லது ஏற்பட வேண்டுமானால், அது பெண்களால் மட்டுமே முடியும்.

**மிதுனம்** பிற்போக்கான வாரம். குடும்பத்தில் எதிரிகள் கை ஓங்கும். எச்சரிக்கை தேவை. உடல்நலம் சுமாராக இருக்கும். தொழில் — வியாபாரம் முதலியவற்றில் புதிய முயற்சி தேவை. கணவன்—மனைவி உறவு சீர்படும். பெண்களுக்கு தொல்லை.

**கடகம்** திருப்திதரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி பரவாயில்லை. உடல்நலத்தில் கவனம் செலுத்தவும். தொழில் —வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**சிம்மம்** அனுகூலமான வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி ஏற்படும். உடல்நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை நல்ல லாபம் தரும். கணவன் — மனைவி உறவு பலப்படும். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும்.

**கன்னி** சாதாரண வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பணவசதி கைகொடுக்கும். உடல்நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை சாதாரணமாக நடக்கும். கணவன் —மனைவி உறவு திருப்தி தரும். பெண்கள் வெளியூர் செல்ல நேரிடும்.

**துலாம்** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி ஏற்படும். உடல்நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் அளிக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்களால் காரியம் நடக்கும்.

**விருச்சிகம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி பரவாயில்லை. உடல்நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**தனுசு** சுமாரான வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பணவசதி கைகொடுக்கும். உடல்நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை சாதாரணமாக நடக்கும். கணவன் —மனைவி உறவு சீர்படும். பெண்கள் பெற்றோர் உதவியை நாடுவார்கள்.

**மகரம்** பிற்போக்கான வாரம். குடும்பச் செலவில் சிக்கனம் தேவை. உடல்நலம் பரவாயில்லை. தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்களுக்கு பிள்ளையால் தொல்லை.

**கும்பம்** நல்ல வாரம். குடும்பத்தில் சுபக்காரியம் நடக்கும். பணவரவு ஏற்படும். உடல்நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும்.

**மீனம்** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி பரவாயில்லை. உடல்நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

---

தான் கண்டுபிடிக்க முடியும், இந்த இடத்தில.

முருகன் அங்கருந்து என்னை போலீஸ் ஸ்டேசனாண்டை கூட்டிட்டுப் போனாரு. அங்க நுழைய எனக்கு பயமா இருந்தது. வாழ்க்கையில் போலீஸ் ஸ்டேசனாண்டை போனதே இல்லையா? உள்ளார என்னஎன்னவோ செய்துருவாங்கன்னு, அடிப்பாங்க, நகத்துல ஊசி ஏத்திருவாங்க, இப்படி எல்லாம் விவரம் இல்லாத பயங்கள் எனக்கு உண்டு. அதான் வாசல்லயே தயங்கினேன்.

"நீங்கள் போய் கேட்டுட்டு வந்துருங்க. எனக்கு



"அடடா இவரா! முன்பு கட்சி தாவிக் கொண்டு இருந்தார்!"

பயமா இருக்குது."

"அட என்ன பயம்? கடிச்சு முழுங்கிரமாட்டாங்க. வாங்க தைரியமா."

தலை கலைஞ்ச ஆளைக் கழுத்தில துண்டைப் போட்டு உள்ள இழுத்துகிட்டு போனாங்க. அவன் போற போக்கில என்னைப் பாத்து ஆய் கண்ணம்மான்னு சொல்லிக்கிட்டே போனான். "நீங்கள் போய்ட்டு விசாரிச்சுட்டு வாங்க. தேவைன்னா வரேன்."

போலீஸ் ஸ்டேசன் வாசலாண்டை சோனியா ஒரு வேப்பமரம் இருந்தது. தழைஞ்சிருந்த இலைங்களை எல்லாம் சாமியடிக்க உருவிட்டாங்க போல. பாதி மரம் மொட்டையா இருந்தது. நிழல் பத்தலை. அங்க

தான் நின்னுக்கிட்டேன்.

முருகன் உள்ள போய்ட்டார்.

மீசை வெச்ச கான்ஸ்டபிள் என்னை ஒரு மாதிரியா பாத்துட்டு உள்ள போனார். எனக்கு படபடன்னு வந்தது. காலைல இருந்து அலைச்சலினாலேயும் கவலையினாலேயும் இருக்கலாம்னு தோணிச்சு. கொஞ்ச நேரத்துக்கு முன்னால இருந்த தெம்பு பாதியாக் குறைஞ்சு போச்சு. இங்கிருந்து பாத்தா வெயில்ல தார் ரோட்டு மேல எல்லாரும் பொய்யா ஆடினாங்க. அப்படியே தலையைப் பிடிச்சுக்கிட்டு தரையிலே உக்காந்துக்கிட்டேன். தண்ணி தாகமா இருந்தது. முருகன் வரட்டும் பாத்துக்கலாம். எதுத்தாப்பல சுவர் பூரா எழுதியிருந்தாங்க. மாணவர்களுக்கு ஓட்டுப் போட போஸ்டர் ஒட்டியிருந்தாங்க. சிவப்பும் பச்சையுமா பஸ்சுங்க இரைச்சலா ஓடிக்கிட்டிருந்தது.

மாணிக்கம் அந்த போலீஸ் நிலையத்தில்தான் பின்புறத்தில் அடைபட்டிருந்தான்.

ஒரு தங்கச்சி காணாமற் போனதைப் புகாரிட வந்தவனை எதற்கு கம்பிக்குப் பின்னால் அடைத்து வைத்திருக்கிறார்கள் என்பது புரியவில்லை. "இந்த ஊர்ல அதான் வழக்கம் போலும்" என்று சிவனே என்று உட்கார்ந்திருந்தான். சற்று நேரத்தில் அவனும் களைப்பில் உறங்கிவிட்டான்.

முருகன் உள்ளே நுழைந்தபோது, ரைட்டரின் அறைக்கு செல்லும் வழியில், எதிரே லாக்அப்பில் மாணிக்கம் உறங்குவதைப் பார்த்துவிட்டுத்தான் சென்றான். "என்ன விசயம்?"

"சென்ரல் ஸ்டேசனண்டை ஒரு ஆளைக் காணலைங்க. அந்த ஆளுடைய தங்கச்சி வந்து எங்கிட்ட சொல்லிச்சுங்க."

"அதும் வந்திருக்குதா."

"ஆமாங்க. உள்ள வர பயப்படுதுங்க. அதபாருங்க மரத்தடியில உக்காந்திருக்குது. சுகுணா... சுகுணா... என்ன உக்காந்துகிட்ட?"

"உக்காந்திருக்கட்டும். இங்க வந்தா சங்கடமாத்தான் இருக்கும். அதபாரு முழிக்கிறான் பாரு. பஸ் ஸ்டான்ட்ல சங்கிலியைப் புடிச்சு இழுத்து சங்கிலி வராம பொண்ணு ஆஸ்பத்திரியில இருக்குது. "ஏண்டா!" என்று துண்டால் இழுக்கப்பட்டு, கொண்டு வரப்பட்டு கீழே உட்கார்ந்திருந்தவனை இடது புறங்கையால் அடித்தார்.



அவன் உடனே "அய்யோ அய்யோ" என்று உயிர் போகிற மாதிரி வீறிட்டான்.

"த! பாசாங்கைப் பாருங்க! தொட்டதுக்கே இந்த கூப்பாடு போடறான். இந்த ஸ்டேசன்ல இதாங்க சங்கடம். பிஸி ஏரியாவா? கொஞ்சம் சத்தம் கேட்டாலும் கூட்டம் கூடிப்போயிடும். பய எல்லாத்தையும் தெரிஞ்சு வெச்சிருக்கான். "ஏண்டா வலிக்கற மாதிரி அடிக்கட்டுமா? அடிச்சுக் காட்டட்டுமா? போவுது. நீங்கள் யாரைக் காணம்னு சொன்னீங்க?"

"அந்த ஆள் பேரு... வந்து..." முருகன் மறுபடி சன்னலின் அருகில் சென்று சுகுணாவைப் பார்த்தான்.

"உங்கண்ணன் பேர் என்ன சொன்ன?"

"மாணிக்கம்."

"மாணிக்கம்."

லாக்கப்பில் இருந்த மாணிக்கம் திடுக்கிட்டு விழித்தான். யார் என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டாங்க? மாணிக்கம்னு யாரோ கூப்பிட்டாங்களே?

யாரையும் காணவில்லை. எங்கேயோ பேச்சுக் குரல்தான் கேட்டது. கனவாக இருக்கும்.

கான்ஸ்டபிள் எழுதிக் கொண்டார்.

"எப்பலே இருந்து காணம்?"

"காலைல இருந்து."

"கடன் தொல்லையா? பெண்டாட்டியோட சண்டையா? வயசு என்ன இருக்கும்?

மறுபடி சன்னலில் "வயசென்ன இருக்கும்" என்று கேட்டான், முருகன்.

"அது ஒரு இருபது இருக்கும்."

"கல்யாணம் ஆயிருச்சா."

"இல்லைங்க."

சுகுணா சன்னல் அருகே வர, "நீங்கள் அங்கயே இரும்மா. இங்க கேப்மாரிப் பசங்க சாஸ்தி. பொம்பளைங்க உள்ற வந்

தால் பயப்படுவீங்க. வேணங்கற வெவரம் இங்கிருந்தே கேட்டுக்கிறேன்.

"இந்த ஆளு உம் புருசனா?"

"இல்லிங்க" சிரித்தேன்.

"தொலைஞ்சு போனவன்?"

"அவரு என் அண்ணனுங்க. காலேல ரெயில ஸ்டேசனுக்கு வந்தங்க. ரெண்டு பேரும் பிரிஞ்சுட்டம். என்னை வந்து ரவுடிப் பயங்ககிட்ட இருந்து இவர்தான் காப்பாத்தினரு."

"இது என்ன? எப்படியோ புரியாமப் போவுது கதை. இப்ப ரிப்போர்ட்டு ரவுடிங்களைப் பத்தியா? இல்லே, உங்கண்ணன் காணமப் போனதைப் பத்தியா?"

"அவங்களை ரிப்போர்ட் பண்ணியாச்சுங்க. பூக்கடை போலீஸ் ஸ்டேசன்ல. இப்ப ஆள் காணமல் போனது பத்தித்தான். அதும் அந்த ஆள் இங்க வந்தாரான்னு விசாரிக்கத்தான்."

"அவ்வளவுதானே! நான் எதுக்கு கேஸ் ரிஸ்தர் பண்றேன். சே! இப்ப என்ன அவன் இங்க வந்தானன்னு விசாரிக்கிறீங்க, அவ்வளவுதானே?"

"அவ்ளதானுங்க. வந்து சுகுணங்கற பொண்ணைப் பத்தி விசாரிச்சா "அவங்க வந்திருந்தாங்க. சுகுண பத்திரமா இருக்குது. சாயங்காலம் ஊருக்கு போவுது"ன்னு விவரம் கொடுத்திடுங்க, போதும். ரெண்டு பேரும் பிரிஞ்சுட்டாங்க. அந்த ஆளு எப்படியாவது திரும்பி ஊருக்கு போயிருவாரு. இந்த பொண்ணுக்குதான் துணையில்லாம போவமுடியாது. அதான் நான்தான் கொண்டு விடலாம்னு இருக்கேன். அதுக்குள்ளாற அண்ணன்காரன் வந்தால் தகவல் சொல்லிருங்க."

"அதுக்கென்ன! டீ சாப்பிடறீங்களா?"

"இல்லிங்க. இப்பதான் சாப்ட்டோம். வரட்டுங்களா."

கான்ஸ்டபிள் எழுந்தபோது, "இருங்க. என்ன பேர் சொன்னீங்க" என்றார்.

"மாணிக்கம்!"

"இந்தப் பேரை எங்க...கொஞ்சம் எங்கூட வாங்க."

கான்ஸ்டபிள் எழுந்து, அறைக்கு வெளியே வந்து, எதிரே இருந்த லாக்கப் அறைக்கு முருகனை அழைத்துச் சென்றார். "காலேல சந்தேகத்தின் பேரில ஒரு ஆளை அடைச்சு வெச்சிருக்கோம். ஆளைப் பாத்தா பாச்சான்னு ஒரு ஆளை ரொம்ப நாளாத் தேடிட்டிருக்கோம். அவன் மாதிரி இருக்குது. முகம் தழும்பு கிழும்பு எல்லாம் ஒத்துப்போவுது. ஆனல் ஆள் எம்பேரு மாணிக்கம்னு திரும்பத் திரும்ப சொல்லிக்கிட்டிருக்கான். எதுக்கும் ஒருமுறை நீ பாத்துரு."

முருகன் லாக்கப் அறையில் தரையில் ஏறக்குறைய படுத்திருந்த மாணிக்கத்தைப் பார்த்தான்.

"ஏய் எந்திரி."

சட்டைப் பை கிழிந்திருந்தது. களைத்து இருந்தான்.

மாணிக்கம் மெல்ல எழுந்து, "அய்யா! ஏட்டய்யா, எப்ப என்னை வெளிய விடுவாங்க?"

"உம்பேர் என்னடா."

"மாணிக்கம்."

"இவனா தம்பி?"

முருகனும் மாணிக்கமும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள, கான்ஸ்டபிள் முருகனைத் தனியாக அழைத்து, "அந்தப் பொண்ணை உள்ள கூட்டியாந்து காட்டிரலாமா? காலேல இருந்து என் பேர் மாணிக்கம் மாணிக்கம்னு சாதிச்சுக்கிட்டு இருக்கான்!"

"இல்லைங்க, இதில்லைங்க. அந்தப் பொண்ணோட அண்ணன் இதில்லிங்க" என்று, முருகன் போலீஸ் நிலையத்துக்கு வெளியே வந்து, "வா சுகுண போகலாம்" என்றான்.

(தொடரும்)

# அண்ணா வீட்டில் "அலைகள்"

இத்தனை நாளும் ஓட்டல் அறையில் குடியிருந்த "அலைகள் ஓய்வதில்லை" ராதா, இப்பொழுது வாடகை வீட்டில் குடியேறியிருக்கிறார்!

மறைந்த பேரறிஞர் அண்ணாவின் வீடு, அது.

சென்னை நுங்கம்பாக்கத்தில் இந்த வீடு இருக்கிறது.

இந்த வீட்டை ராதா



ராதா

தேர்ந்து எடுத்தது ஏன்? ராதா சொல்லுகிறார்—

"அக்காள் (அம்பிகா) தனியாக நடித்துக்கொண்டு இருந்தபோது, சென்னையில் படப்பிடிப்பு உள்ள நாட்களில் ஓட்டலில் தங்கினார். மாதத்தில் பத்து, பதினைந்து நாள் சென்னையில் படப்பிடிப்பு இருக்கும். அதற்காக, ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்க முடியுமா? அதனால், அக்கா ஓட்டலில் அறை எடுத்து தங்கினார். அப்படி ஓட்டலில் தங்கியதை பலர் பல்வேறுவிதமாக பேசினார்கள்.

நான் நடிக்க வந்தேன். நானும் அக்காவோடு தங்க வேண்டியதாயிற்று.

ஓர் அறையில் இரண்டு நட்சத்திரம் என்றதும், வரும் தயாரிப்பாளர்கள், நண்பர்கள் — பத்திரிகையாளர் எண்ணிக்கை அதிகமானது! அவர்களை உட்கார வைத்து பேசகூட இடம் இருப்பது இல்லை. அதனால், வேகமாக வீடு தேடினோம்!

நாங்கள் விரும்பியபடியே, நல்ல வீடாகக் கிடைத்தது. அதுவும், முன்னாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் வீடு என்பதை நினைக்கும்பொழுது. உண்மையாகவே எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது! இந்த வீடு எங்களுக்கு வாடகைக்கு கிடைத்ததை ஒரு பாக்கியமாகவே கருதுகிறோம்."

மறைந்த நடிகை ஷோபா சிறுவயதில் இந்த வீட்டில்தான் வளர்ந்தார். பிற்காலத்தில் பெரிய நடிகை ஆகி, "ஊர்வசி" பட்டம் பெற்றார். ராசியான வீடு! எனவேதான், இந்த வீட்டை தேர்ந்து எடுத்தோம்.

ஓட்டலில் எங்களுக்கு இருந்த அசவுகரியம் வீட்டில் இல்லை. ஒரே அறையில் அடைந்து கிடக்காமல் சுதந்திரமாக இருக்கிறோம். வருகிறவர்களை வரவேற்று உபசரிக்கவும் வசதியாக இருக்கிறது" என்றார், ராதா. ☆

# 8

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றி அழைத்துப் போனான். இருவரும் மாணிக்கத்தை தேடி அலைந்தார்கள்.

**போ**லீஸ் ஸ்டேசனை விட்டு வெளியே வந்த முருகன், என்னைப் பார்த்து சிரிச்சார். "வா போகலாம் சுகுணா. உங்கண்ணன் இங்க வந்தா தகவல் சொல்றேன்னு சொல்லியிருக்காங்க. என்னைக் கேட்டா நாம பேசாம உங்க கிராமத்துக்கு போயிரலாம். உங்கண்ணன் வந்தாக்கூட அந்த மாதிரித்தான் தகவல் சொல்லச் சொல்லியிருக்கேன். அதனால அவரு பிற்பாடு வந்தாக்கூட தானா உங்களூருக்கு வந்துருவாரு."

"எனக்காக இவ்வளவு செய்திருக்கிங்க உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலிங்க."

"கவலைப்படாதிங்க. உங்க ஊருக்கு வரன் இல்ல, அப்ப உங்கப்பாரு கிட்ட சொல்லி நல்ல சாப்பாடா போட்டுரச் சொல்லு, குருமா எல்லாம் வெச்சு!"

"அதுக்கென்னங்க! ஊருக்கு இப்பவே திரும்பிப் போயிரலாமா?"

"பஸ்செல்லாம் விசாரிக்கணும்ங்க. மத்தியானம் மூணு மணிக்குள்ள போயிரலாம். எனக்கும் கொஞ்சம் வேலை இருக்குது."

"பணம் வேணும்னா என் சங்கிலியை..."

"சங்கிலியை விக்கறதை மறங்க! உங்கப்பா அம்மா வருத்தப்படுவாங்க. என்னால கடன் வாங்க முடியும் கவலையேபடாதிங்க. எப்படியாவது பணம் புரட்டிருவேன்."

ரெண்டு பேரும் ஸ்டேசனைவிட்டு வெளியே நடந்தோம். எனக்கு மாணிக்கத்தின் மேல கோபம் கோபமா வந்தது. ஆளைக் காணோம்னு போலீஸ் ஸ்டேசனுக்கு வந்து ரிப்போர்ட் கொடுக்க வேண்டாமோ அந்த அளவுக்குகூட புத்தியில்லையே! வந்திருந்தா இப்ப நாங்க போலீஸ் ஸ்டேசனுக்கு போகவும் தகவல் தெரிஞ்சிருக்கும் இல்லையா? இப்ப போலீசுக்கு போறதைவிட வேற முக்கியமான வேலை என்ன இருக்க முடியும். மாணிக்கம் செய்யறது எல்லாமே தப்புத்தான். புதுசா ஒரு இடத்துக்கு வந்தா தங்கச்சியை இப்படி தனியா விட்டுட்டுப் போவலாமா? ஊருக்கு போனதும் அப்பாகிட்ட வசமா மாட்டிவிடத்தான் போறேன். எனக்கு முன்னால ஊரைப் பாக்க போயிருக்கும். இல்லை தங்கவேலு விலாசம் அவர்கிட்ட தானே இருக்கு. அவரைப் பாக்கப் போயிருப்பாரு. எக்கேடு கெட்டுப்போவட்டும் எனக்கென்ன. சரியான துணை கிடைச்சிருச்சு. இனி கவலை இல்லை. இவர் கூட இருக்கறதிலேயே ஒரு தெம்பா இருக்கு. தெம்பு மட்டும் இல்லாம வேற என்னமோ மாதிரியாவும் இருக்கு. ஊருக்குப் போய் அதைப்பத்தி நிதானமா யோசிச்சுப் பாக்கணும்.

"விக்கறதா இருந்தா என் வாட்சைத்தான் முதல்ல விப்பேன்!"

இன்னும் அதைப்பத்தியே கவலை அவருக்கு.

கவலைப்படாதிங்க. ஊருக்குப் போனதும் ஒண்ணுக்கு ரெண்டா உங்களுக்கு பணம் கிடைச்சுரும்."

"திருப்பிக்கிறதைப் பத்தி கவலையே இல்லை. உங்களை பத்திரமா கூட்டிப்போகணுமேன்னுதான் கவலையா இருக்குது. நான் ஒண்ணு ரெண்டு இடங்களுக்கு போகவேண்டி இருக்குது. அதுவரைக்கும் உங்களை என்ன செய்யறதுன்னு தெரியலை."

"நான் உங்க கூடவே வரனே."

"சேச்சே. எதுக்காக நீங்க அலையணும். ஒண்ணு செய்யலாம். பேசாம ஒரு ஒரு நூன் ஷோவில போய் உக்காந்துருங்களேன். ஏதாவது சினிமாப் பாக்கறிங்களா?"

"வேண்டாங்க. சினிமாப் பாக்கற மூடில இல்ல, நானு."

"அப்ப உங்களை வெச்சுக்கிட்டு நான் என்னதான் செய்யறது. நீங்களே சொல்லுங்களேன்."

"உங்களுக்கு சிரமமா இருந்தா பஸ்சில ஏத்தி விட்டுட்டாக்கூடப் போதும்."

"அட்டா! அதுக்குள்ள கோவிச்சுக்கிறிங்களே. அதுக்குள்ள கண்ணில தண்ணி! சேச்சசே. நீங்க எனக்கு ஏதோ பாரம் மாதிரி அந்த அர்த்தில பேசலை, நானு. சரி வாங்க என்கூட. புஸ்தகம் படிப்பிங்கல்ல? படிக்க மாட்டேன்னு சொன்னாலும் இன்னைக்கு படிச்சுத்தான் ஆகணும். உங்களை லைப்ரரியில கொண்டு விட்டுர்றேன். அங்க கொஞ்சம் சவுகரியமா பெஞ்சு நாக்காலி எல்லாம் போட்டிருப்பாங்க. அதுக்குள்ள நான் சோலியை முடிச்சுட்டு வந்துடுறேன். அப்பறம் வீரவாக்கம் இல்லை வியன்னவுக்குக்கூட போகலாம்."

"சரிங்க."

அவர் என்னை பஸ் ஏத்தி அழைச்சுட்டுப் போகையில் "நான் ஏதோ சும்மா சினிமா போங்கன்னு சொல்லி வெச்சேன். நல்லவேளை நீங்க வேண்டாம்னு சொன்னிங்க. போகலாம்னு சொல்லியிருந்தா நான் காலி! காசு கிடையாது. லைப்ரரிதான் சரி. கையெழுத்தைப் போட்டா, உள்ள விட்டுருவான்."

சிவப்பா பழங்கால நவாப் கட்டடம் மாதிரி இருந்தது. உள்ள ஏணி போட்டு ஏறிக்கிட்டு புஸ்தகம் எல்லாம் தேடிக்கிட்டிருந்தாங்க. பெரிய ஹால் போல இருந்த இடத்தில சின்ன சின்னதா மேசை விளக்கு வெச்சு எல்லாரும் சத்தம் போடாம படிச்சிக்கிட்டிருந்தாங்க. நான் ஒரு காலி இடத்தில போய்



"என்னய்யா! நீ கொடுத்த சாராயத்தில் "கிக்கே" வரலே..."



# இந்த வாரம் எப்படி?

எழுதியவர்: ஜோதிட சிந்தாமணி தா. வி. ரெங்கசாமி ஜோதிடர்.

(30-9-81 முதல் 6-10-81 முடிய)

**மேஷம்**

சாதாரண வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பணவசதி கைகொடுக்கும். அரசாங்க உதவி கிடைக்கும். உடல்நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**ரிஷபம்**

சுமாரான வாரம். குடும்பத்தில் ஏற்பட்ட சோர்வு நீங்கும். பணவசதி பரவாயில்லை. உடல்நலத்தில் கவனம் தேவை. தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம்தரும். கணவன்—மனைவி உறவு திருப்திதரும். பெண்கள் பெற்றோர் உதவியை நாடுவார்கள்.

**மிதுனம்**

திருப்தி தரும் வாரம். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும். பணவசதி பரவாயில்லை. உடல்நலம் சீர்படும். தொழில் — வியாபாரம் முதலியவற்றில் கடின உழைப்பு வேண்டும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் தரும். பெண்களால் காரியம் நடக்கும்.

**கடகம்**

சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி பரவாயில்லை. உடல்நலம் சீர்படும். தொழில் — வியாபாரம் முதலியவை சாதாரணமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் வெளியூர் செல்ல நேரிடும்.

**சிம்மம்**

அனுகூலமான வாரம். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். பணவசதி ஏற்படும். உடல்நலம் நன்கு இருக்கும். தொழில் — வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சிதரும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**கன்னி**

திருப்தி தரும் வாரம். குடும்பத்தில் நண்பர்கள் உதவுவார்கள். உடல்நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம்தரும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் அளிக்கும். பெண்கள் நினைக்க காரியம் நடக்கும்.

**துலாம்**

சுமாரான வாரம். குடும்பத்தில் பொருள் விரயம் ஏற்படுவதை தவிர்க்கவும். பணவசதி சுமாராக இருக்கும். உடல்நலம் சீர்படும். தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**விருச்சிகம்**

நல்ல வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி இருக்கும். உடல்நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சிதரும். பெண்களுக்கு பெருமை ஏற்படும்.

**தனுசு**

பிற்போக்கான வாரம். குடும்பத்தில் உறவினர்களிடையே தகராறு ஏற்படும். கவனம் தேவை. பணவசதி பரவாயில்லை உடல்நலம் திருப்திதரும். தொழில்—வியாபாரம் முதலியவை சுமாராக நடக்கும். கணவன்—மனைவி உறவு பரவாயில்லை. பெண்கள் ஏமாற்றம் அடைவார்கள்.

**மகரம்**

சுமாரான வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி போதாது. உடல்நலத்தில் கவனம் தேவை. தொழில் — வியாபாரம் முதலியவை சொற்பலாபம் தரும். கணவன்—மனைவி உறவு சாதாரணமாக இருக்கும். பெண்களுக்கு தொல்லைமேல் தொல்லை.

**கும்பம்**

திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பணவசதி பரவாயில்லை. உடல்நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன் — மனைவி உறவு பலப்படும். பெண்களால் காரியம் நடக்கும்.

**மீனம்**

மகிழ்ச்சிதரும் வாரம். குடும்பத்தில் பணவரவு பெருகும். மகிழ்ச்சி ஏற்படும். உடல்நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு கலகலப்பாக இருக்கும். பெண்கள் நினைத்தகாரியம் நடக்கும்.

---

உட்கார்ந்தேன்.

முருகன் என் காது கிட்ட வந்து ரகசியமா, "ரெஃபரன்ஸ் செக்ஷன்ல நிறைய புஸ்தகங்கள் இருக்கும். அதில எதாவது எடுத்து படிங்க. தூங்கணும்னும் சத்தம் போடாம தூங்கலாம். குறட்டை விடமாட்டிங்களே? நான் போய்ட்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்துருவேன். காணும்ப் போயிராதிங்க."

நான் எனக்கு எதித்தாப்பல கண்ணுபின்னுன்னு மேசை மேல மத்தவங்க படிச்சுட்டு வெச்சிருந்த புஸ்தகங்களைப் புரட்ட ஆரம்பிச்சேன். விதவிதமா புஸ்தகங்கள்.

"இனி ஆண்மக்கள் காமத்தால் கண்மயங்கி பிறனில் விழைந்தும் பெண்வழிச் சென்றும் வரைவின் மகளிர்ச் சேர்ந்தும் கெடுருது பாது காத்தற்கண் ஆண்பாற்கு அறிவுறுத்துப

நுண்ணறிவுடையோர் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே."

எப்ப தூக்கம் வந்து எப்ப தூங்கிப் போனேன்?

மாணிக்கத்தைப் பார்க்க பெரிய போலீஸ் அதிகாரி வந்தார். எல்லோரும் கம்பிக்கு வெளியே இங்கிலீஷில் பேசிக்கொண்டிருந்தார்கள். அவனை அடைபட்ட மிருகத்தைப் போலப் பார்த்தார்கள். "அய்யா! எப்பய்யா என்னை வெளிய விடப்போறிங்க? என் தங்கச்சியைப் பறி கொடுத்துட்டு அதை புகார் கொடுக்கத்தான் வந்தங்க. என்னை விட்டுருங்கய்யா. நானே தேடிக்கறேன்" என்று வணங்கினான்.

"இதே சொல்லிட்டிருக்கான் சார்."

"இஸ் ஹி கன்ஸிஸ்டண்ட் இன் திஸ்?"

"எஸ் ஸார், வெரி மச்!"

"இதபாரு பாச்சா! உன் பேரை சரியாச் சொல்லிரு. விட்டுர்றோம்?"

"அதான் மாணிக்

கம்ங்க!"

"சரி மாணிக்கம். அப்படியே வெச்சுக்குவம். மாணிக்கம் உனக்கு வலி தாங்குமா?"

"புரியலிங்க."

"ஏரோப்ப்ளேன் பாத்திருக்கியா?"

"ஒரே ஒரு முறை மீனம்பாக்கத்தில பாத்திருக்கேங்க."

"அந்த ஏரோப்ப்ளேனை சொல்லலை! இது பூமில தொங்கற ஏரோப்ப்ளேன்."

"தெரியாதுங்க."

"நல்லா பாசாங்கு பண்றான் சார்."

"போட்டோவைக் கொடுங்க."

பெரிய அதிகாரி பைலில் இருந்து காட்டப்பட்ட புகைப்படத்தைப் பார்த்தார்.

"டிப்பார்ட்மெண்ட்டில எடுத்ததில்லையா? இது கொஞ்சம் தெளிவா இல்லையே."

"இவந்தான் இதுவரைக்கும் மாட்டினதே இல்லையே சார்! ஸிமிலாரிட்டிஸ் பாருங்க. அதே முகம் தான்."

மாணிக்கம் அவர்கள் பேசுவது லேசாகப் புரிந்து "என்னய்யா சொல்றிங்க, என்னை வேற எதோ ஆசாமின்னு நினைச்சுக்கிட்டிங்களா?"

"சும்மாருய்யா. மூக்கைப் பாருங்க அதே ஸ்லோப். தழும்பைப் பாருங்க. பாச்சாவுக்கு இந்த தழும்பு இருக்கறதா பலபேர் சொல்லி ரிக்கார்டு ஆயிருக்கு."



"என்னங்க?"

"பிரிண்ட்ஸ் இல்லையா?"

"பாச்சா பிரிண்ட்ஸ் எதும் இல்லைங்க. அதானே சாமர்த்தியம்."

"சரி இவன் பிரிண்ட்டை எடுத்துக்கிட்டு மத்தியானம் ஜே த்ரீக்கு அனுப்புங்க. கொஞ்சம் கேள்வி கேட்டுப் பாக்கலாம்."

"லேசில உடையமாட்டான் சார்."

"உடைச்சுரலாம்— அதுக்கெல்லாம் வழி இருக்கு. பாச்சா நான் போய் வரவா."

"அய்யா எம்பேரு மாணிக்கங்க."

"மாணிக்கம் நான் போய் வரவா."

"தங்கச்சியைப் பத்தி ஏதாவது விவரம் தெரிஞ்சுதுங்களா? என்னை எதுக்காக அடைச்சுப் போட்டிருக்கிங்க. அதை சொல்லிப் போடுங்களேன்."

"எல்லாம் சாயங்காலம் சொல்றேம். அதுவரைக்கும் இங்கேயே தூங்கு பாச்சா! என்ன இவனுக்கு ஓட்டல்ல இருந்து சாப்பாடு வாங்கிக் கொண்டு வந்து கொடுங்க"

"அய்யா நன்றியா. என்னை வெளிய விட்டா நானே போய் சாப்பிடுவங்க."

"பத்தியா பத்தியா! எங்களுக்கு காது குத்தி இருக்கு! எவ்வளவு நாளாத் தேடறேம். எத்தனை நாளா தபாய்ச்சிருக்கே. இப்பதான் சிக்கிருக்கே! அவ்வளவு சீக்கிரம் வெளிய விட்டுரலாமா? கஷ்டமில்லையா!"

"வரட்டுமா பாச்சா?"

"என்னங்க பாச்சா, பாச்சான்னு கூப்பிட்டுக்கிட்டு? எம்பேரு மாணிக்கம்னு எத்தனை முறை சொல்லுறது."

"சரி மாணிக்கம். சாயங்காலம் பாக்கலாம்."

"எப்படியாவது என்



பாரதிராஜாவுக்கும் "ரா"வுக்கும் ராசி அதிகமோ! அவர் அறிமுகப்படுத்திய நடிகைகளின் பெயர் எல்லாமே "ரா"வில் தொடங்குவதுதான். ராதிகா, ரதி, ரோகிணி, ராதா!

★ "என்னை வெறும் கவர்ச்சி நடிகையாக நினைத்து, ஆபாசமான பாத்திரங்களில் நடிக்க அழைக்கிறார்கள். அந்த பாத்திரங்களில் நடிக்க மறுத்ததால், கடந்த ஆண்டு பல வாய்ப்புகளை இழந்தேன்" என்று வருத்தத்தோடு கூறுகிறார், ஒய். விஜயா.

★ ஜார்ஜ் என்ற கிறிஸ்தவரை (இவர், மலையாளப் படத் தயாரிப்பாளரும் கூட) காதல் மணம் செய்து கொண்ட ஸ்ரீவித்யா, யாராவது பேச்சுக் கொடுத்தால், மதக் கொள்கைகளைப் பற்றி, குட்டி பிரசங்கமே செய்கிறார்! பிழைக்கத் தெரிந்தவர்!

★ "ஒருதலை ராகம்" படத்தை தயாரித்த இ.எம். இப்ராகிம், தனது மவுனத்தைக் கலைத்தார். இப்பொழுது "தணியாத தாகம்" என்ற படத்தை எடுக்கிறார். இதுவும் காதல் கதைதானும். புதுமுகம் சோர்ணவும், குருசங்கரும் ஜோடியாக நடிக்கிறார்கள். இப்ராகிம் டைரக்டு செய்கிறார்!

"ஒருதலை ராகம்" படத்தை உண்மையில் டைரக்டு செய்தது யார் என்பது, பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. "தணியாத தாகம்" என்ன செய்யப் போகிறதோ, தெரியவில்லை.

★ ஜெயசித்ரா தனது உடல்கனத்தைக் குறைத்துக்கொண்டு, மீண்டும் நடிக்கத் தொடங்கியிருக்கிறார். ஜெயசித்ரா நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கும் படத்தின் பெயர், "இதில் என்ன வெட்கம்" என்பது. கதாநாயகன், (சங்கர்) கணேஷ்! ஜெய் சாக்ரடீஸ் டைரக்டு செய்கிறார்.

★ காஜா டைரக்சனில் உருவான "அந்தப்புரத்தில் ஓர் அந்தரங்கம்" படம், இப்பொழுது, "பட்டம் பதவி" ஆகியிருக்கிறது. டைரக்டர் பெயரை "திருமுருகன்" என்று போடுகிறார்கள். யார் இந்த திருமுருகன்? புனைப் பெயராம்!

★ **ஸ்ரீதேவி வீட்டிலும், ஸ்ரீபிரியா வீட்டிலும் கறுப்புப் பணம் சிக்கியது!**

ஸ்ரீதேவி வீட்டில் கைப்பற்றப்பட்ட கறுப்புப் பணம் — நகைகளின் மதிப்பு, ரூ. 2 இலட்சத்து 11 ஆயிரம்.

ஸ்ரீபிரியா வீட்டில், ரூ. 2 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்புள்ள கறுப்புப் பணம், நகைகள் கைப்பற்றப்பட்டன!

ஸ்ரீதேவி, ஸ்ரீபிரியா வீடுகளில், வருமானவரி இலாகா அதிகாரிகள், திடீர் சோதனை நடத்தி, இந்த கறுப்புப் பணத்தை கைப்பற்றினார்கள்.

★ காதல் ஒரு பாடம் போய், இப்பொழுது "காதல் ஒரு காவியம்" என்று ஒரு படம் தயாராகிறது. மீரான், கதை–வசனம் எழுதும் இந்தப் படத்தை, ஏ. ஜே. தேவேந்திரன் டைரக்டு செய்கிறார். ★



எப்பொழுதுமே மூடமூடத்தான் மவுசு அதிகம், இங்கே மூடிக்கொண்டு இருப்பவர், சுவீதா. (படம்: "அர்ச்சனைப்பூக்கள்")

தங்கச்சியை மீட்டுக் கொடுத்துட்டிங்கன்னு சரிங்க. நான் எங்க வேணு இருக்கங்க."

"நீ எங்கிட்ட உண்மைய ஒப்புக்கிட்டா ஒரு தங்கச்சி என்ன பத்து தங்கச்சி தரேன். வரட்டுமா பாச்சா?"

அவர் போனதும் மாணிக்கத்துக்கு வயிற்றில் பயமாக இருந்தது. ஏதோ தப்பா நேர்ந்துபோயிருக்கிறது. என்ன என்று தெரியவில்லை. அவர்கள் எதற்காக என்ன என்னவோ ஏரோப்ளேன் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஏரோப்ளேனில் அழைத்துச் செல்லப் போகிறார்களா? அதைவிட எதற்கு எல்லாரும் என்னை பாச்சா பாச்சா என்று கூப்பிடுகிறார்கள்? எனக்கு அப்படி எதும் பெயர் கிடையாதே! பாச்சா என்றால் எதாவது "மிஸ்டர்" போல போலீசுக்காக பிரத்தியேகமாக ஏற்பட்ட வார்த்தையா? புரியவில்லை. ஆனால், போலீஸ் அன்பாகவும் இருக்கிறார்கள். வாழை இலை சுருட்டி சாப்பாடு வந்தது. தம்ளரில் தண்ணீர் வைத்தான். "சாப்பிட்டுக்க பாச்சா. சாயங்காலத்துக்கு தெம்பா இருக்க வேண்டாம்?"

"சாயங்காலம் என்ன?"

"உன்னை அழைச்சுட்டுப் போறமில்லே."

"எங்க?"

"பெரிய பெரிய போலீஸ் அதிகாரிங்கள்ளாம் உன்னைப் பாக்கணும் பாக்கணும்னு ஆவலா இருக்காங்கல்ல."

"அப்படியா" என்றான் ஆச்சரியத்துடன்.

"உங்கூடப் பேசப் போறாங்க. உனக்குப் பரிசெல்லாம் தரப்போறாங்க"

"அப்படியா?"

"அதான் நல்லா, சாப்பிட்டுரு. சீக்கிரம். இன்னும் கொஞ்சம் சோறு வேணும்னுக் கேளு."

மாணிக்கம் லபக் லபக் என்று விழுங்க ஆரம்பித்தான்.

(தொடரும்)

# சுஜாதா

# ஒருத்தி நினைக்கையிலே



## 9

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணு, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணுவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினன். மாணிக்கத்தை போலீசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். எவ்வளவு தேடியும் மாணிக்கம் கிடைக்காததால், சுகுணு ஊருக்கு போக முடிவு செய்தாள்.

"பெண் அறிவு என்பது பெண் அறிவு என்பது"ன்னு திருப்பி திருப்பி மாணிக்கம் சொல்லிக்கிட்டே இருக்கார் ரெயில்ல எல்லாரும் இறங்கிப் போயிட்டாங்க. என்னது மாணிக்கம் நாம இறங்கற ஸ்டேசன் வந்தப்புறமும் "பெண்ணறிவு"ன்னு பேசிக்கிடிருக்கேன்னு கேக்கறேன்.

என்னைப் பாத்தும் பாக்காதது போலவே பெண்ணறிவு பெண்ணறிவுங்கருரு. தண்ணி கொண்டாந்து மூஞ்சில அடிக்கணும் போல இருக்கு.

ஸ்டேசன் காலியா இருக்கு. நான் இறங்கி பிளாட்பாரத்தில நடக்கிறேன். ஒரு சனம் இல்லே. தூரத்தில மூணுபேரு தெரியருங்க. "இதோ இங்க இருக்காடாங்"கருன். நான் ஓடறேன்.

எதுத்தாப்பல ஒருத்தன் வரான், அவங்களும் என்னை நோக்கி வராங்க. என்னடாதுன்னு தண்டவாளத்தில இறங்கி ஓடறேன். ரெயிலு வரது, தண்டவாளத்தை விட்டு விலகி ஓடமுடியலே. ரெயில் என்மேல ஏறுது...

குப்புன்னு வேத்து விட்டுருச்சு. முழிச்சுக்கிட்டேன். எதித்தாப்பல முருகன் நின்னுக்கிட்டு இருந்தாரு. "என்ன? நல்ல தூக்கமா"ன்ருரு.

நான் என்மேல வழிஞ்சிருந்த எச்சிலே வெக்கத்தோட துடைச்சுக்கிட்டு, "மணி என்ன இருக்கும்?"

"நூலகத்தை மூடப் போருங்க. வாங்க, போகலாம்."

அவர் பின்னலே நடந்தேன். "ஏன்யா, தூங்கறதுக்கா கட்டடம் கட்டி வெச்சிருக்காங்க?"ன்னு காக்கி சட்டைக்காரரு அதட்டினரு. "உடம்பு சரியால்லேய்யா"ன்னேன்.

"உடம்பு சரியில்லேன்ன ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டுப் போறது."

"அங்கதான் கூட்டிட்டுப் போறேன்"ருரு, முருகன்.

"மன்னிச்சுக்கங்க"ன்னு அவர்கிட்ட சொன்னேன்.

அவரு என்னை ஒரு மாதிரியாப் பாத்துட்டு, "உம்! சரியான கிராக்கிங்கய்யா"ன்ருரு.

"கிராக்கின்ன என்ன?"

"கிராக்கின்ன என்னன்னு தெரியாதா, உங்களுக்கு?"

"தெரியாது."

"தெரிஞ்சுக்காம இருக்கறதே நல்லது."

வெளிய இருட்ட ஆரம்பிச்சுருச்சு. பக்கத்தில கைத்தறித் துணிங்களை கலர் கலரா வெச்சு பெண்கள் வித்துக்கிட்டு இருந்தாங்க. வர்ண விளக்குகள் மத்தியில் அந்தப் பெண்கள் வாங்க வந்தவங்ககூட சிரிச்சு பேசிக்கிட்டிருந்தாங்க.

பஸ் மாதிரி இருந்தது. அதன் பின்பக்கத்தில கூப்பன் வாங்கிக்கிட்டு காப்பி வாங்கிக் கொடுத்தார், முருகன். "எதாவது சாப்பிடறிங்களா? எங்கிட்ட பணம் இருக்கு, இப்ப."

"வேண்டாம்"னேன். "எனக்கு ஊருக்கு போனப் போதும்."

"அதுக்குத்தான் ஏற்பாடு பண்ணி வெச்சிருக்கேன். உங்க ஊரு வீரவாக்கம்தானே? அங்க போறதுக்கு ராத்திரி பாசஞ்சர் வண்டி ஒண்ணுதான் இருக்கு, பத்து மணிக்கு. ஊருக்கு போய்சேர ரெண்டு மணி ஆயிரும். பின்னிரவில போய்ச் சேந்தா உங்க அப்பா, அம்மா பயந்துக்க மாட்டாங்ளே?"

"இல்லிங்க. போயிரலாங்க. நான் எல்லாத்தையும் சொல்லி சமாளிச்சுக்கறேன். பயப்படமாட்டாங்க. ஒரு பாட்டம் அழுவாங்க. அவ்ளதான்."

"நானும் உங்கள்கூட வந்துதான் ஆகணு



"பட்டம் பறக்கட்டும்" காதல் ஜோடி சந்திரசேகர்—உஷா.

"ஆமாங்க.எனக்கு தனியாப் போகப் பயம் தான். அதும் ராத்திரி வண்டில."

"சரி."

"உங்களுக்கு ரொம்ப சிரமம் கொடுத்துக்கிட்டு இருக்கேன். எங்க ஊர்ல தான் தகுந்த மாதிரி நன்றி சொல்ல என்னுலை முடியும். எங்கப்பாவை சந்திச்சு உங்களைப்பத்தி என்னவெல்லாம் சொல்லப் போறேன்னு இப்பவே ஒத்திகை பாத்து வெச்சுக்கிட்டிருக்கேன்."

"ராத்திரி வரைக்கும் எப்படி நேரத்தை செலவழிக்கிறதுன்னுதான் தெரியலே."

"பேசாம ரெயில் ஸ்டேசன்ல போய் உக்காந்திரலாம். அங்கேயே எதாவது சாப்பிட்டுக்கலாம்."

"அதுகூட சரித்தான்."

"டிக்கெட் எடுக்கப் பணம் இருக்குதில்லே?"

"உங்கள் ஊருக்கு எவ்வளவு டிக்கெட்டு?"

"எனக்கு தெரியாதுங்களே. அண்ணன்தான் வாங்கினுரு."

"நண்பன்கிட்ட கடன் வாங்கிட்டு வந்திருக்கேன்.



"உன் முகம் எனக்கா தெரியாது? பெயரை மாற்றிக் கொண்டால், புது முகம் ஆகிவிடுவாயா!"

சமாளிச்சுரலாம்னு நினைக்கிறேன்."

முருகன் தன் பையில் இருந்து பணத்தை ஒரு முறை எண்ணிப் பார்த்தார். எனக்கு ரொம்ப வருத்தமா இருந்த்து; யாரும் இல்லாம, பணமும் இல்லாம, ஓர் அன்னியருக்கு இத்தனை பாரமா இருக்கமேன்னுட்டு. என்ன செய்வேன்? அழறதைத் தவிர எதும் உருப்படியா செய்ய யோசனையில்லேயே. சங்கிலியை வித்துரலாம்னு வாங்கிக்க மாட்டேன்னுட்டாரே! நல்ல மனுசன்!

அங்கிருந்து பஸ்ஸை புடிச்சுக்கிட்டு மறுபடி ஸ்டேசனுக்கு போனேம். காலேல வந்து நினைச்சா எல்லாமே ஒரு வருசத்துக்கு முன்னுடி நடந்த மாதிரி பிரமிப்பு உண்டாயிருச்சு. அத்தனை விசயங்கள் நடந்து போயிருச்சு. அண்ணன் எங்கதான் போயிட்டாரோன்னு அந்தக் கவலே வேற அழுத்துது.

ஸ்டேசன்ல எப்ப கூட்டம் குறையும்னு தெரியலே. காலேல பாத்த எல்லா, சனங்களும் அப்படியே இருக்காங்களோன்னுட்டு சந்தேகம் வந்தது. அதே போர்ட்டருங்க, அதே டாக்சிக்காரங்க, அதே போலீஸ்காரங்க, அதே சனங்க, அதே சந்தடி, பகல்தான் ராத்திரியா மாறியிருக்கு.

முருகன் என்னை மாடிக்கு அழைச்சுட்டுப் போயி, தட்டில குழிகுழியா வெச்சு சாப்பாடு வாங்கித் தந்தாரு. பிளாஸ்டிக் தம்ளரில தண்ணி கொண்டு வெச்சுட்டு. நான் சாப்பிடறதையே பாத்துக்கிட்டு இருந்தாரு. "நீங்கள்?"

"எனக்கு பசியில்லே. பொட்டலம் வாங்கிக்கலாம்னு இருக்கேன். நீங்கள் சாப்பிடுங்க."

கிட்டு இருக்கும்போது, எனக்கு சாப்பிட விருப்பமில்லே."

"அட, சாப்பிடுங்க!"

"இல்லே, நான் சாப்பிடமாட்டேன்."

"அப்படின்னு சரி"ன்னு என் தட்டில இருந்து அப்பளத்தை எடுத்து பாதியாக்கி அதைக் கடிச்சாரு. "இப்ப திருப்தி தானே"ன்னு சிரிச்சாரு. என்னைப் பாக்கிற பார்வையில எதும் தப்பா இல்லே. சிரிப்பில களங்கம் இல்லே. இவருன்னு தேவபுருஷன்னு நான் மனசுக்குள்ள நினைச்சுக்கிட்டேன்.

அப்ப, "அட! முருகு இங்க இருக்கியா! இங்க எங்க?"ன்னு கேட்டுக்கிட்டு ஒருத்தர் வந்தாரு. அவருக்கும் ஏறக்குறைய முருகன் வயசுதான் இருக்கும். தலையை சுத்தமா சீவியிருந்தாரு. பக்கதில வரதுக்கு முந்தியே புனுகுப் பூனை வாசனை வந்தது. பெல்ட்டு போட்டு கொஞ்சம் தொந்தி காட்டினதை அடக்கியிருந்தாரு. பெரிசா பல்லு. பளிச்சுன்னு காட்ட சிரிச்சாரு.

"வாங்க சாரங்கபாணி.

---

முதலாளி—தொழிலாளி பிரச்சினே; சாதிப் பிரச்சினே, வரதட்சணை பிரச்சினே...என்று மூன்று கால் ஊன்றியிருக்கிறுர்கள். அகல கால் வைத்ததினுலோ என்னவோ, நுனிப்புல் மேய்ந்த கதையாகிவிட்டது.

விஜயகாந்த் கதாநாயகன். அதிகம் சீற விடாமல், கொஞ்சம் சாந்தப்படுத்தியிருக்கிறுர்கள். நன்ருகச் செய்து இருக்கிறுர்.

துணிச்சல் மிக்க இளைஞராக வரும் மற்றொருவர், சக்கரவர்த்தி. முன்னேற்றம் தெரிகிறது.

கவிப்பிரியா, தேவிபாலா என்ற இரு புதுமுகங்களை அறிமுகப்படுத்தியிருக்கிறுர்கள். கவிப்பிரியாவிடம் நடிப்பு தெரிகிறது. இளமை இல்லே. சிறுமிக்கு சேலே சுற்றி விட்டதுபோல இருக்கிறுர், தேவிபாலா.

நாகேசுக்கு நல்ல பாத்திரம். நன்ருக செய்து இருக்கிறுர். படத்துக்கு கலகலப்பு ஊட்டுபவரும், நாகேஷ் தான்.

எஸ். எஸ். சந்திரன் தோன்றும் காட்சியும் கலகலப்பாக இருக்கிறது. என்னத்தே கன்னேயா, எம். என். ராஜம் ஆகியோரும் இருக்கிறுர்கள்.

படப்பிடிப்பு நன்ருக இருக்கிறது.

பாடல்களும் கேட்கும்படி உள்ளன. இசை: சங்கர்—கணேஷ்.

எஸ். சங்கரன் டைரக்டு செய்து இருக்கிறுர். படம் சரளமாக போகிறது. ஆனுல், எப்படி முடிப்பது என்பதில் நன்ருக குழம்பியிருக்கிறுர். அந்த குழப்பத்தோடு வரும் முடிவும் "சப்"பென்று ஆகிவிடுகிறது. "எனக்கு பிறகு நீ" என்று, விஜயகாந்த், கவிப்பிரியாவிடம்



சொன்னதற்காக, கதாநாயகனே இப்படியா குருவியை சுடுவது போல சுட்டு வீழ்த்துவது?

**40 மார்க்!**

எங்க இந்தப் பக்கம்?"

"நான் ரிசர்வேசன் பண்ண வந்தேன். நீ?"

"நான் வந்து...நான் வந்து..." என்னைப் பார்த்து "இது சுகுண, என்ன கிராமம் சொன்னிங்க?"

"வீரவாக்கம்."

"வீரவாக்கம் கிராமத்தில இருந்து காலேல வந்தாங்க. ஒரு கசப்பான அனுபவம். அகஸ்மாத்தா இவங்களை நான் காப்பாத்த நேர்ந்தது. இப்ப ஊர்ல கொண்டு விடறதா இருக்கேன்."

சாரங்கபாணின்னு சொன்ன ஆளு இப்ப என்னை அன்பா பார்த்தார். "அடடா. பொம்பளைங்கள்ளாம் தனியா வரக்கூடாது:ம்மா."

"தனியா வரலே. அண்ணன் கூடத்தான் வந்தாங்க."

"அண்ணன் எங்க?"

"அந்தாளைக் காணோம். அது வேற ஒரு பிரச்சனையாக்கியிருக்கு."

"காணம்னு யாராவது..."

"இல்லே, பாணி. இவங்க ஒரு பக்கம், அவரு ஒரு பக்கம்னு ரெண்டு பேரும் ஒருத்தரைக் காணும ஒருத்தரை தேடிக்கிட்டு இருந்திருக்காங்க. அவரு போன பாதை தெரியலே."

"பேரு என்ன"ன்னு என்னைக் கேட்டாரு.

"மாணிக்கம்."

தன் பையில் இருந்து சின்னதா டயரி ஒண்ணை எடுத்துக்கிட்டு அதில எழுதிக்கிட்டாரு. "மாணிக்கமா! வயசு என்ன இருக்கும்?"

"இருவது இருவத்திரண்டு."

"அடையாளம் ஏதாவது?"

"முகத்தில ஒரு வெட்டுத் தழும்பு உண்டுங்க. சின்னப் புள்ளேல மாங்கா மரத்தில இருந்து விழுந்த போது அடிபட்டது."

"அப்படியா, சரி. அவரைப் பத்தி விசாரிக்கச் சொல்றேன். எனக்கு போலீஸ்ல எஸ். பி. ஒருத்தரைத் தெரியும்."

"சாரங்கபாணி பம்பாய்ல பெரிய பிசினஸ் பண்றாரு"ன்னாரு முருகன்.

"அப்படியா"ன்னு அவரை ஒரு முறை பார்த்தேன். என்னையே கண் கொட்டாம பாத்துக்கிட்டு இருந்தாரு. எனக்கு ஒரு மாதிரியா இருந்தது. எதுத்தாப்பல கிடந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்கிட்டு உக்காந்தாரு. "படிச்சிருக்கீங்களா?"

"பி. எஸ்சி."ன்னு முருகன் பதில் சொன்னாரு.

"இங்கிலீஷ், தமிழ் தவிர வேற ஏதாவது மொழி தெரியுமா, உங்களுக்கு?"

"ஏன் பாணி கேக்கறிங்க?"

"இல்லே, எங்க கம்பெனிலயே ஒரு வேலே கொடுக்கலாம்னுட்டு."

"எனக்கு வேலே வேண்டாங்க"ன்னு முருகனைப் பாத்து சொன்னேன்.

"சென்னேல ஆரம்பதின அனுபவம் நல்லால்லே. முதல்ல ஊருக்குப் போக விருப்பப்படறாங்க."

"எல்லாருமே கெட்டவங்க இல்லேம்மா. இப்ப முருகன் இருக்கான், இவனை கெட்டவன்னு சொல்விங்களா? எதுக்கு சொல்ல வரேன்னா, இந்தி ஏதாவது தெரிஞ்சுதுன்னா எங்க பள்ளிக்கூடம் இருக்கு அதில டீச்சரா சேத்துக்கலாம்னு."

"இப்ப அவங்ககிட்ட வேற எதும் எடுபடாது. வீரவாக்கம் கிராமத்துக்கு முதல்ல போயாகணும். அதானே சுகுண?"

"அதுவும் சரிதான். முதல்ல கொஞ்சம் ஆடிப் போயிருக்கும். அப்பறம் என்ன முருகு, ஊர்ல தங்கச்சி அப்பா அம்மா எல்லாரும் சவுக்கியமா? ஊருக்கு போறதுக்கு பணம் வெச்சிருக்கியா?"

"உங்ககிட்ட பொய் சொல்வானேன். கொஞ்சம் கடிக்குது."

"இதை முதல்லயே சொல்லக்கூடாதோ" அந்த சாரங்கபாணிங்கிறவர் பையில் இருந்து ஒரு கவரை எடுத்துக் கொடுத்தாரு. "இதுல இருக்கறதை வெச்சுக்க. அப்பறம் பாக்கறபோது திருப்பிக் கொடுத்தாப் போதும், என்ன."

"இவங்க நாளைக்கு ஊருக்கு போனதும் ஆன செலவை எல்லாம் திருப்பிக்



கொடுத்துருவாங்கன்னு சொல்லியிருக்காங்க, பாணி. ரொம்ப தாங்ஸ் சுங்க."

"அப்ப நான் வரட்டுமா?" அந்த ஆளு எழுந்திருந்து என்னைப் பாத்து, "பயப்படாதம்மா, முருகன் உன்னை நல்லா கவனிச்சுப் பாம்மா" என்ருர்.

"அவரு எனக்கு தெய்வம் மாதிரிங்க."

"நல்ல பையன்" இப்படி சொல்லிட்டு கிளம்பினவர் பாதி தூரத்தில நின்னு அங்கிருந்து "முருகன் ஒரு நிமிஷம் வரியா? உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும், பார்சனலா."

"இதோ! இப்பவே வந்துர்ரேன், சுகுணு. இங்கயே இருங்கன்னு" முருகன் எழுந்து போனுர்.

ரெண்டு பேரும் ஒதுக்குப்புறமா தூணுக்கு பின்னுல போனுங்க.

நான் என் சாப்பாட்டை முடிச்சேன். தண்ணி சாப்பிடறதுக்கு கழுத்தை நிமித்தினபோது மாடிப்படியில ஓர் ஆள் போனது தெரிந்தது. சட்டுனு மாணிக்கம் மாதிரி இருந்தது. உடனே எழுந்து அந்தப் பக்கம் போனேன்.

மாடிப்படி தெரியுது. எதித்தாப்பல பிளாட்பாரத்தில சனங்க தெரியருங்க. மாணிக்கத்தைக் காணலே. ஆனுல், நிச்சயம் மாணிக்கம் மாதிரித்தான் தெரிஞ்சுது.

எங்க போயிட்டாரு? என்னைத் தேடிக்கிட்டுத் தான் இங்க மறுபடி வந்திருக்கணும். அவரை எப்படி கூப்பிடறது?

உடனே முருகன் கிட்ட சொல்லிரலாம்னு உள்ள வந்தேன். அவரு இன்னும் அந்த ஆள்கிட்டதான் பேசிக்கிட்டிருந்தாரு. நான் அங்க போனேன்.

தூண் மறைச்சுக்கிட்டு இருந்தது. அந்த ஆளு சாரங்கபாணிங்கறவரு நோட்டு நோட்டா எண்ணி கொடுத்துக்கிட்டு, "நேரா பம்பாய்க்குப் போயிரு"ன்னு சொல்லிட்டு இருந்தார்.

(தொடரும்)

# இந்த வாரம் எப்படி?

எழுதியவர்: ஜோதிட சிந்தாமணி தா. வி. ரெங்கசாமி ஜோதிடர்.

(7-10-81 முதல் 13-10-81 முடிய)

**மேஷம்** நல்ல வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி ஏற்படும். உடல் நலம் நன்ருக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவற்றில் உழைப்பு வெற்றி தரும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி அளிக்கும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**ரிஷபம்** அனுகூலமான வாரம். குடும்பத்தில் பணத் தேவை ஏற்படும். நண்பர்கள் உதவுவார்கள். உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு திருப்தி தரும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**மிதுனம்** சுமாரான வாரம். குடும்பத்தில் வீண் குழப்பங்கள் தோன்றும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை சுமாராக நடக்கும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் ஏமாற்றம் அடைவார்கள்.

**கடகம்** கலகலப்பான வாரம். காதலர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். பண வசதி இருக்கும். உடல் நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும்.

**சிம்மம்** திருப்தி தரும் வாரம். குடும்பக் கடன் தீரும். உடல் நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவில் புது பிடிப்பு ஏற்படும். பெண்கள் வெளியூர் செல்ல நேரிடும்.

**கன்னி** சாதாரண வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் திருப்தி தரும். தொழில்—வியாபாரம் முதலியவை சாதாரணமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் பெற்ருேர் உதவியை நாடுவார்கள்.

**துலாம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் திருப்தி தரும். தொழில்—வியாபாரம் முதலியவற்றில் சொற்ப லாபம் கிடைக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**விருச்சிகம்** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்களால் காரியம் நடக்கும்.

**தனுசு** சுமாரான வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பண வசதி கை கொடுக்கும். உடல் நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**மகரம்** அனுகூலமான வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் தரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும்.

**கும்பம்** சுமாரான வாரம். குடும்பக் கடன் ஏற்படும். செலவில் சிக்கனம் தேவை. உடல் நலம் பரவாயில்லே. தொழில்—வியாபாரம் முதலியவற்றில் கடின உழைப்பு தேவை. கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்களுக்கு பிள்ளையால் தொல்லே.

**மீனம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லே. உடல் நலம் தேறும். தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு சீர்படும். பெண்கள் பெற்ருேர் உதவியை நாடுவார்கள்.

# ஒருத்தி நினைக்கையிலே



## சுஜாதா

**10**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலிசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். எவ்வளவு தேடியும் மாணிக்கம் கிடைக்காததால், சுகுணா ஊருக்கு போக முடிவு செய்தாள். சாரங்கபாணி உதவினார்.

மாணிக்கம் நல்ல பசியில் போலீஸ் நிலையத்தில் கொடுத்த சோற்றை ஆசை தீர உண்டான். போலீஸ்காரர் பரிவுடன் "இன்னும் கொஞ்சம் கோழி" என்று விசாரித்து, இலையில் மறுப்புக்கு எதிராகப் போட்டதையும் உண்டான். தண்ணீர் பருகினான். "ரொம்ப நன்றிங்க. இந்த மாதிரி சாப்பாடு சாப்பிடுவோம்னு இன்னைக்கு கார்த்தாலே யாராவது சொல்லியிருந்தா சிரிச்சிருப்பேங்க. என்னங்க, இந்த பெஞ்சியில கொஞ்சம் படுக்கலாங்களா?"

"படு படு. ஏஸிபி வர்றவரைக்கும் படு."

"ஏஸிப்பியா! அது என்னங்க?"

"அது யாருன்னு கேக்கணும்யா! நல்லா நடிக்கிறய்யா, கில்லாடி நீ! ஏஸிபின்னு போலீஸ் அதிகாரி. அவரு உன்னைப் பார்க்கணும்னு விருப்பம் தெரிவிச்சிருக்காரு."

"அப்படிங்களா? அவரு இங்க வராருங்களா?"

"வண்டி வரும். கொஞ்ச நேரம் படு."

படுத்த மாணிக்கத்துக்கு முதலில் தூக்கம் வரவில்லை. வயிற்றில் பசி போய்விட்டாலும் சுகுணாவைப் பற்றிய கவலை போகவில்லை. எங்க போயிட்டாளோ? எப்படி நான் வெறுங்கையோட ஊருக்கு திரும்புவேன்? தங்கவேல் ஏன் வரலே? இவங்க ஏன் என்னை வெளிய விடமாட்டேங்கறாங்க? இதில எதோ புதுசா என்னன்னு சொல்ல முடியாத பயம் இருக்கு. என்னத்தை செய்வேன்? எங்க கூட்டிப் போவாங்க? திருப்பி திருப்பி பாச்சா பாச்சான்னு கூட்டுக்கிட்டு இருக்காங்களே, இது ஏன்?

இந்தக் கவலைகள் பல இருந்தும் சற்று நேரத்தில் அவன் உடல் அசதி அவற்றை ஆக்கிரமித்துக் கொள்ள கொஞ்சம் கண்ணயர்ந்துவிட்டான்.

காலியான பிளாட்பாரத்தில் தங்கையைத் தேடிக்கொண்டு ஓடுவது போலவும், பின் தண்டவாளத்தில் இறங்கி ஓடுவது போலவும், ரெயில் ஒன்று அவர்களைத் துரத்துவது போலவும் கனவு கண்டு கொண்டு இருக்கும் போது, தூக்கத்தில் இருந்து முரட்டுத்தனமாக உசுப்பப்பட்டான்.

"யோவ், எந்திரி, எந்திரிய்யா. இது என்ன சத்திரமா, தூங்கறதுக்கு?"

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். அவன் எதிரே மூன்று போலீஸ் அதிகாரிகள் நின்றுகொண்டு அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு ஆங்கிலத்தில் பேசிக்கொண்டார்கள்.

"அய்யா என்னை விட்டுருங்கய்யா, வீட்டுக்கு போயிர்றேன். என் தங்கச்சியைக் காணும..."

"தங்கச்சியைக் காணுமத்தான் கோழி குருமா அடிச்சியோ?"

"பசி தாங்கமுடியாம."

"இத பாரு இந்த தங்கச்சி பேச்செல்லாம் விட்டுரு. நிறையக் கேட்டாச்சு. புளிச்சுப்போச்சு. நீ யாரு?



ஜெய்சங்கருக்குக் கிடைத்து இருக்கும் புது ஜோடி, மகாலட்சுமி!
(படம்: "மாஸ்டர் சஞ்சய்")

சொல்லீரு. லேசா விட்டுர்ரோம்."

"நான்தான் திருப்பித் திருப்பி சொன்னுங்களே. என்பேரு மாணிக்கம். ஊரு வீரவாக்கம். அங்க எங்கப் பாரு பேரு சரவணன்."

"ஓ அப்படியா" என்று தடியால் முகத்தை சொரிந்துகொண்டே அவனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே சொன்னுர், அந்த அதிகாரி.

எல்லோரும் ஏன் அவனையே பார்த்துக்கொண்டு இருக்கிருர்கள் என்பதே அவனுக்கு சரியாக விளங்கவில்லே.

"கெட்டிக்காரத்தனமா தயார்பண்ணி வெச்சிருக்கான்யா. நல்லா அதையே புடிச்சு வெச்சிருக்கான். வீரவாக்கம், மடவாக்கம். வீரவாக்கம், மடவாக்கம். சரவணன், மாணிக்கம்!"

"யோவ், உன் தங்கை பேர் என்ன?"

"சுகுணு."

"செய்தி கொடுத்து, அந்த கிராமத்தில விசாரிச்சுருங்களேன்" என்ருர் பெரிய அதிகாரி போல இருந்தவர். அவர் சொன்னதில் மாணிக்கத்துக்கு சற்று ஆறுதல் கிடைத்தது.

"விசாரிச்சா அங்க அந்த மாதிரி நிசமாவே ஓர் ஆளு இருப்பான் சார். அதான் சார் பாச்சாவோட ஸ்பெஷாலிட்டி. நம்பக்கூடிய முறையில ஏமாத்தறதில இவனுக்கு ஈடு கிடையாது சார். யோவ், எங்க வெச்சே எட்டு இலட்சத்தையும்?"

"எட்டு இலட்சங்களா? என்ன எட்டு இலட்சம்!"

"இரு இரு. பாஸிட் டிவ்வா ஐடென்டிஃபை பண்ணுமை இவனே எதும் கேக்கறதில பிரயோசன மில்லே. ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எடுத்துக்கங்க."

"பாச்சாவோட பிரிண்ட்ஸ் சாம்பிள் இருந்தா இன்னேரம் காரியம் முடிஞ்சிருக்குமே சார்."

"அது இல்லேயா?"

"இல்லே சார். எங்க திருடினுலும் கவனமா எல்லாத்தையும் துடைச் சுட்டுத்தான் போவான். எமகாதகன்! இந்த போட்டோவே ரொம்ப தற்செயலாத்தான் கிடைச்சுது. பாண்டியனே கேளுங்க, கதை கதையாச் சொல்வாரு, இவனேப் பத்தி."

"இவனே எப்படி உடைக்க முடியும்?"

"சும்மா கேள்வி கேட்டுத்தான் சார்."

"ரெண்டு நாளானு லும் சரி, மூணு நாளானு லும் சரி."

"எதுக்கும் ஒரு செய்தியும் கொடுத்து விசாரியுங்க. யோவ், அந்த வீராணம் எங்க எந்த ஜில்லா. வில இருக்கு."

"விரவாக்கம் சார்."


ராணியில் > புதிய படக்கதை!



திகில் கதை!

25-10-81 இதழில் தொடங்குகிறது!


"சரி வீரவாக்கம். எந்த ஜில்லா?"

"வட ஆற்காட்டில அய்யா. மடவாக்கம்தான் ஸ்டேசன்."

"சரி பாத்துரலாம். முத்து எங்கய்யா இருக்கான். இப்ப?"

"அது யாருங்க?"

"பெரிய கருப்பன்?"

"அதும் யாருங்க?"

"ரங்கநாதன்?"

"ரங்கநாதன்னு பள்ளிக்கூடத்தில வாத்தியார் இருந்தாருங்க. அவரைச் சொல்றிங்களா?"

"உம் பேர் என்ன!"

"மாணிக்கம்."

"பாச்சா, பாச்சா! விளேயாடாதே. செவிட்டில அறை விழறதுக்குள்ள நீ யாருன்னு சொல்லிரு."

"அய்யா, அடிக்காதிங்கய்யா. நீங்கள் என்ன



# பாட்டி வைத்தியம்

## மூலம்

பாட்டி! எனக்கு மலம் கழிக்கும் போது, இரத்தமும் கலந்து வருகிறது. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

(எம். கோவிந்தன், ஆர்காடு)

மலச் சிக்கலும், உடம்பில் உஷ்ணமும் இருப்பதால் ஏற்படும் விளேவு, இது.

மலச் சிக்கல் காரணமாக, சாதாரணமாக ஏற்படும் இரத்தக் கசிவு, சாப்பாட்டில் உள்ள கோளாறு காரணமாக அதிகமாகி, இரத்தம் விழத் தொடங்குகிறது.

வெள்ளே வெங்காயத்தை நெய்யில் வறுத்து, அதற்கு சமமாக, பனங்கற்கண்டு சேர்த்து, மீதம் உள்ள நெய்யை சேர்த்து, அம்மியில் வைத்து அரைத்து எடுக்க வேண்டும். இது லேகியம் போல வரும்.

இந்த லேகியத்தை காலே மாலே இரு வேளேயும் ஒரு கோலி அளவு சாப்பிட்டு வந்தால், உடம்பில் உள்ள உஷ்ணம் குறையும். மலச் சிக்கல் நீங்கும். இரத்தம் போவதும் நிற்கும்.

## நெஞ்சு வலி

பாட்டி! எனக்கு அடிக்கடி நெஞ்சு வலிக்கிறது. என்ன செய்வது?

(என். குமார், குடியாத்தம்)

உடனே, டாக்டரிடம் சென்று பரிசோதனே செய்து கொள்வது நல்லது. டாக்டர் ஆலோசனேப்படி மருந்து சாப்பிடுங்கள்.

## சிறந்த மருந்து



"போராட்டத்தில் கலந்துகொள்ள ஒரு நிபந்தனே என்கிறீர்களே, என்ன அது?"

"முன் ஜாமீன் வாங்கித் தரணும்."

கேக்கறிங்கன்னே தெரியலே!"

"ஐம் இன்க்ளைன்ட் டு பிலீவ் ஹிம், ஹி லுக்ஸ் வெரி இன்னெஸெண்ட்."

"சார் உங்களுக்கு பாச்சாவைத் தெரியாது. இவனைப் போல நல்லவன் உலகத்திலேயே கிடையாதுன்னு சத்தியம் பண்ணவங்கள்ளாம் இருக்காங்க."

"பாச்சா! அந்த கோயில் சிலையை மட்டும் என்ன செஞ்ச, சொல்லிரு. உன்னை விட்டுர்ரோம்."

"எந்தக் கோயில்ங்க? எந்த நகைங்க? எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க."

போலீஸ் அதிகாரி கிட்டத்தில் வந்து, அவன் தாடையில் லேசாகத் தட்டி. "சொல்லுடா, கண்ணு. பிடிவாதம் பிடிக்காதரா" என்ருர்.

"எனக்கு நீங்கள் எல்லாரும் என்ன கேக்கறிங்க..."

"ராஸ்கல், மயிலே மயிலே இறகு போடுன்னு போட்டுருவியா!" என்று அவனை பிடித்துத் தள்ளினுர். பலகையில் தடுமாறி விழுந்த மாணிக்கம், உடனே அழ ஆரம்பித்தான்.

"பாச்சாகூட இப்படித்தான் அழுவான் சார். யோவ் பாச்சா! அழற மட்டும் அழு. அந்த பருப்பு வேகாது. அழுது நிறுத்தினப்புறம் மறுபடி வரோம். விசாரிக்கிறோம். அதுக்குள்ள யோசிச்சுப் பாரு. வசமா மாட்டிக்கிட்ட. எதுக்கு மதராஸ் வந்தியோ, உண்மை வெளிய வர்றவரைக்கும் உன்னை விடமாட்டோம். எட்டு இலட்சத்தை என்ன பண்ணே, கோயில் சிலைங்களை என்ன பண்ணே. அதை மட்டும் சொல்லிரு. பாக்கியை அப்பறம் சொன்ணுப் போதும்."

மாணிக்கம் கண்ணீரைத் துடைக்காமல் அப்படியே அழுது கொண்டிருந்தான். "என்னை விட்டுருங்கய்யா... விட்டுருங்கய்யா......"

அப்போது அந்த அறைக்குள் போட்டோக்காரர்கள் நுழைந்தார்கள்.



முதல்ல அவங்க அந்த தூண் மறைவில் பேசிக்கிட்டு இருந்தது எனக்கு சட்டுனு விளங்கலே. அப்புறம் எதுக்கு நூறு நூறு நோட்டா அந்த சாரங்கபாணிங்கறவரு கொடுக்கராரு? அதை முருகன் வாங்கிக்கிட்டு பம்பாய்க்கு போயிருன்னு என்ன அர்த்தம்? எனக்கு புரியலே. ஏதோ அவங்களுக்குள்ள விசயம் போலன்னு நினைச்சுகிட்டு "அய்யா! முருகன்!"னு அவரைக் கூப்பிட்டேன்.

அவரு சட்டுனு தூண் மறைவில இருந்து வெளிப்பட்டு "என்ன சுகுணு,இங்க வந்துட்டியா? எப்ப, இப்பதான் வந்தியா? சாரங்கபாணி கூட ஒரு சின்ன காரியம் இருந்தது. பம்பாய்க்கு போய் சரக்கு புடிச்சுட்டுவான்னு சொன்ணுரு. அதுக்குத்தான் பணம் கொடுத்தாரு..."

"அப்ப நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். நல்ல டெக்ஸ்ச்சரா பாத்து வாங்கு.இன்வாய்ஸ் எல்லாம் போட்டுக்கிட்டு உடனே பணம் கொடுத்துருவாங்கன்னு பார்ட்டிகிட்ட சொல்லிரு" சாரங்கபாணி போயிட்டார்.

என்னைப் பார்த்து, "குட்பை சுகுணு! பத்திரமா வீட்டுக்கு போய் சேருங்க. உங்களை கிராமத்தில விட்டுட்டு அப்பறம் தான் முருகு பம்பாய் போருன். என்ன முருகு?"

"ஆமாங்க. வா சுகுணு"

"முருகன், எங்கண்ணன் மாதிரி ஓர் ஆளு போனதைப் பார்த்தேன்!"

"எங்க?"

"படியாண்டை."

"உடனே கூப்பிடறது தானே?"

"எனக்கு சட்டுனு ஒண்



ஒளிப்பதிவாளர் நிவாஸ் டைரக்டு செய்து இருக்கும் படம், "எனக்காக காத்திரு".

நல்ல ஒளிப்பதிவாளரான நிவாசுக்கு, ஏன்தான் "டைரக்டர்" ஆசை வந்ததோ தெரியவில்லை. அவர் கதை சொல்லியிருக்கும் விதம், அவரது கேமிரா செய்திருக்கும் வித்தையை கூட ரசிக்க முடியாமல் செய்துவிடுகிறது!

"கராத்தே" வீரர்களைப் பற்றிய கதை! சண்டைக் காட்சிகளை அருமையாக அமைத்து இருக்கிறார். குறிப்பாக கடைசி சண்டை கைதட்டல் பெறுகிறது. ஆனால், எதுவும் கோர்வையாக இல்லை. காட்சிகள் துண்டு துண்டாக தெரிகின்றன. அல்லது தவளைத் தாவு தாவுகிறது!

கதாநாயகன் சுமன், உயிரைக் கொடுத்து சண்டை செய்து இருக்கிறார். பானுசந்தரும் நன்றாக செய்து உள்ளார். எல்லாமே வீண்!

சுமலதா, நிஷா, விஜயமாலினி, ஆகியோரும் இருக்கிறார்கள்.

**நிவாஸ் நல்ல ஒளிப்பதிவாளராக இருப்பதே நல்லது!**

## பொன்விழா கண்காட்சி

இது இந்தியத் திரை உலகின் பொன் விழா ஆண்டு. இதையொட்டி "பிலிம் நியூஸ்" ஆனந்தன், தென் இந்திய திரைப்பட வர்த்தக சபை ஆதரவில், திரை உலகக் கண்காட்சி ஒன்று நடத்த இருக்கிறார்.

பழைய சினிமாக்களின் படங்கள் (ஸ்டில்கள்), பாட்டுப் புத்தகங்கள் முதலியவை இந்தக் காட்சியில் இடம்பெறும். இவை வைத்து இருப்பவர்கள் தனது முகவரிக்கு அனுப்பும்படி "பிலிம் நியூஸ்" ஆனந்தன் கேட்டுக் கொள்ளுகிறார். முகவரி: "பிலிம் நியூஸ்" ஆனந்தன், 169, பீட்டர்ஸ் சாலை, சென்னை-600 014."

னுங் புரியாமப் போயிருச்சு. அதனலே உங்களை கூப்பிட இங்க வந்தேன்.

"எத்தனை நேரமிருக்கும்?"

"இப்ப! அஞ்சு நிமிசம் கூட இல்லை"

"எந்தப் பக்கமா போனன்?"

"இடப் பக்கம். கீழ இறங்கி"

"வா, சட்டுனு கீழ போய்ப் பார்க்கலாம்"

அவரு பின்னடியே ஓடினேன். புத்தகக் கடையண்டை பார்த்தோம். பெரிசா போர்டு வெச்சு எல்லாரும் அண்ணாந்து பாத்துகிட்டு இருக்காங்களே, அங்க பாத்தோம். அப்புறம் ஐஸ் பால் விக்கறாங்களே, அங்க டிக்கெட் எடுக்கற சன்னலாண்டை...

"அதா! அந்த ஆளு தான்! பாருங்க!"

"யாரு? வெளுப்பா சட்டை போட்டுக்கிட்டு குடை வெச்ச ஆளு பக்கத்தில நிக்கறாரே, அவரா?"

"ஆமா. வாங்க கிட்டத்தில போய்ப் பார்க்கலாம்"

நான் "மாணிக்கம் அண்ணே"ன்னு கூப்பிட்டு கிட்டத்தில போறேன்.

சிலபேரு முதுகு,நடை எல்லாம் ஒரே மாதிரியா இருக்கும். கிட்டத்தில போய்த் திரும்பி முகத்தை பார்த்தால் வேற மாதிரி ஆயிரும். அது போலத்தான் ஆயிருச்சு. அந்த மனுசன் திரும்பின உடனே மாணிக்கம் இல்லேன்னு தெரிஞ்சு போயிருச்சு. எனக்கு உள்ளுக்குள்ள என்னவோ உதிர்ந்து விழுந்த மாதிரி ஆயிருச்சு.

"இது மாணிக்கம் இல்லையா?"

"இல்லேங்க" என்றேன் வருத்தத்தோட.

"பரவால்லே. அந்தாளு சமாளிச்சுப்பாரு. உங்களாலதான் தனியா ஒண்ணும் பண்ண முடியாது. இனிமேல் உங்கள் அண்ணனைப் பத்திக் கவலைப்பட வேண்டாம். ஊர்ல போய்ப் பார்த்துக்கலாம்"

அவர் டிக்கெட்டு எடுக்கப் போனர்.

(தொடரும்)

## கப்-சிப்

கேரள ஒளிப்பதிவாளருடன் காதல் என்று பேசப்பட்ட மேனகையான இளம் நடிகைக்கு இப்பொழுது பலத்த காவலாம்! படப்பிடிப்புக்கு போகும் போதும், வரும்போதும், அம்மாவோ, அப்பாவோ ஒருவர் கூடவே இருக்கிறார்கள்!

பயணங்களில் வந்த வில்லன் நடிகருக்கு, "நெஞ்சங்கள்" படப்பிடிப்புக்குப் போன இடத்தில் அலுப்பு வந்துவிட்டதாம். உடலை முறித்துக்கொண்டு, "வ" நடிகைக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்று, படுக்கையில் விழுந்து விட்டாராம்!



## ஊட்டியில் கலர் பிலிம்!

ஊட்டியில் உள்ள "இந்துஸ்தான் போட்டோ பிலிம்" தொழிற்சாலை விரைவில் கலர் பிலிம் உற்பத்தி செய்ய இருக்கிறது. இதற்காக ரூ. 75 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது.

உலகில் உள்ள 6 பெரிய பிலிம் தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்று. இங்கு தயார் ஆகும் பிலிம் வெளி நாடுகளுக்கும் அனுப்பப் படுகிறது.

இறக்குமதி ஆகும் பிலிம்மை விட இங்கு தயார் ஆகும் பிலிம் பாதி விலைதான் ஆகிறது.

# ஒருத்தி நினைக்கையிலே



-சுஜாதா-

COMICS PDF TIMES

**11**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலிசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். எவ்வளவு தேடியும் மாணிக்கம் கிடைக்காததால், சுகுணா ஊருக்கு போக முடிவு செய்தாள். முருகனுக்கு சாரங்கபாணி பணம் கொடுத்தார்.

ஊர்ல போய்ப் பார்த்துக்கலாமின்னு முருகன் சொன்னதுமே, எனக்கு உற்சாகம் வந்திருச்சு. அண்ணன் எக்கேடு கெட்டுப் போகட்டும். என்னை சரியா கவனிச்சுக்கத் தெரியாதவனைப் பத்தி நான் ஏன் கவலைப்படணும்.

முருகன் டிக்கெட் எடுத்திருந்தார். மறுபடி பிளாட் பாரத்துக்கு அழைச்சுட்டுப் போயி ஒதுக்குப்புறமா நிறுத்த வெச்சு பால் வாங்கிக் கொடுத்தார். இனிப்பா இருந்தது. மெல்ல என்கூட நடந்து வந்தார். நடக்கறப்ப ரொம்ப கிட்டக்கவும் இல்லாம ரொம்ப தூரமும் இல்லாம உறவு இல்லே, ஆனா ஃப்ரண்டுங்கற மாதிரி நடந்து வந்தாரு. ஆரஞ்சுப் பழமும் ஆப்பிளும் வாங்கிக் கிட்டார்.

ராத்திரி பிரயாணத்துக்கு இத்தனை எதுக்குங்கன்னு கேக்கவே "உங்க வீட்டுக்கு வெறுங்கையோடவா போவாங்க"ன்னார்.

"கை நிறைய என்னை அழைச்சுக்கிட்டு போறிங்களே, அது போதாதா"

"பரவாயில்லே, இருக்கட்டும். இப்ப எங்கிட்ட நிறையப் பணம் இருக்குது"

வண்டிக்குள் நுழைஞ்சப்ப "என்னது ஸ்லீப்பரா"ன்னு கேட்டேன்.

"ஆமா கொஞ்ச நேரமாவது தூங்கிக்கிட்டுப் போகலாமேன்னுட்டுத்தான் ஸ்லீப்பர் வாங்கினேன்"

"எங்க ஊருக்கு இந்த வண்டி போவுதுங்களா?"

"எதும்மா உங்க ஊரு"ன்னு எதித்தாப்பல ஒரு பெரியவர் கேட்டாரு.

முருகன் குறுக்க பேசி "உங்க ஊர்ல நிக்காது இது.ஜங்ஷன்ல இறங்கிட்டு அங்கிருந்து போயிரலாம்னு ரெயில்வேக்காரங்க சொன்னுங்க"

"எந்த ஜங்ஷன்ல"ன்னு பெரியவர் மறுபடி கேட்டார்.

"ஏங்க, எந்த ஜங்ஷனு இருந்தாக்க என்ன? உங்க வேலையைப் பாத்துக்கிட்டு பேசாம போவிங்களா; அந்தப் பொண்ணை எதும் தொந்தரவு பண்ணும இருக்கிங்களா"ன்னு முருகன் பளிச்சுனு சொல்லிட்டாரு. அந்த மனுசனுக்கு என்னவோ மாதிரி ஆயிருச்சு. சன்னல் பக்கமா திரும்பிக்கிட்டவர் அப்பறம் எங்களைப் பாக்கவே

## உங்களால் முடியுமா?



நீங்கள் சுருட்டு குடிப்பது உண்டா?

இந்த சுருட்டை பற்றவைத்து, கையில் பிடித்து புகைக்க உங்களால் முடியுமா?

நீங்கள் பெரிய பயில்வான் என்றாலும், முடியாது!

இந்த சுருட்டை தூக்கிப் பிடிக்க 5, 6 பேர் வேண்டும்!

இந்த சுருட்டின் நீளம் 13 அடி! சுற்றளவு 4 அடி. எடை 110 கிலோ!!

ஸ்பெயின் நாட்டில் உள்ள ஒரு கம்பெனி இந்த சுருட்டை தயாரித்து இருக்கிறது. உலகிலேயே மிகப் பெரிய சுருட்டு இதுதான்!

—ஏ. வேணு, துபாய்

இல்லே, எனக்கு சங்கடமா இருந்துருச்சு.

முருகன் என் பக்கத்தில உக்காந்துகிட்டு கொஞ்சம் குரலைத் தாழ்த்தி "இந்த மாதிரிதான் எதாவது துருவித்துருவிக் கேப்பாங்க எல்லாருக்கும் அசடு மாதிரி பதில் சொல்லிக் கிட்டிருக்கக்கூடாது யார் கூடயும் பேசாதிருங்க. உங்களுக்கு மெட்ராஸ் தெரியாது."

"எனக்கென்னவோ அந்தப் பெரியவரைப் பார்த்தா நல்லவராகத் தான் தோணிச்சு. ஆனு முருகன் அனுபவப்பட்டவர். அவர் சொல்றதில நிசம் இருக்கத்தான் செய்யும்" நான் பாட்டுக்கு பேசாம சாஞ்ச மாதிரி படுத்துட்டேன்.

"நமக்கு அப்பர் பர்த். மேல ஏறுவியா"ன்னுரு முருகன்.

"உங்களுக்கு பர்த் இல்லையா."

"எனக்கும், எதித்தாப் பல அப்பர் பர்த்தான்"

"வேண்டாம் கொஞ்ச நேரப் பிரயாணம்தானே. இங்கயே உக்காந்துக்கிடறேனே"

"இங்க உக்காந்துக் கிட்டிங்கன்னு இவங்கள் ளாம் எப்படி தூங்கறதாம்?"

"வேணும்னா நீ இந்த லோயரை எடுத்துக்கம்மா"ன்னுரு பெரியவர் மறுபடி.

முருகன் "வேண்டாங்க"ன்னுட்டாரு.

எனக்கு அப்பவே தூக்கம் கண்ணைச் சுழற்ற ஆரம்பிச்சுருச்சு. அன்னிக்கு நடந்ததெல்லாம் கண் முன்னுல சுத்துது. களைப்பு எல்லாமா சேர்ந்துகிட்டு கண்ணில ஒரு டன் வெச்சாப் பல தூக்கம். "முருகன் நீங்க முழிச்சுக்கிட்டு இருப்பிங்கல்ல. எனக்கு ரொம்ப சுத்துது. ஸ்டேசன் வந்தா எழுப்பிருவிங்களா மடவாக்கத்தில நிக்குமில்லே?"

"மடவாக்கமா!"ன்னுரு பெரியவரு.

"ஜங்ஷன்ல இறங்கிக்கணும். சுகுணு நீங்க கவலைப் படாதிங்க, நான் பாத்துக்கறேன். சுகமா தூங்குங்க. மேல ஏறிடுவிங்களா? கொஞ்சம் ஹெல்ப் வேணுமா?"

முருகன் தோள் மேல கையை ஊனிக்கிட்டு எப்படியோ மேல் பர்த்ல ஏறிகிட்டேன். மேலேருந்து பாக்கறப்ப அவர் வகிடு தெரிஞ்சுது. பைல நோட்டுக்கத்தை தெரிஞ்சுது.

"பணத்தை சாக்கிரதையா வெச்சுக்குங்க, முருகன்"

"பேசாமத் தூங்குங்க உங்க கவலையெல்லாம் தீர்ந்து போச்சு"

பெரியவர் "தலைகாணி ஏதாவது வேணுமாம்மா"ன்னு கேட்டார். யாரும் பதில் சொல்லலே. என்னதான் மூஞ்சில அடிச்ச மாதிரி பதில் சொன்னுலும் எதாவது, யாருக்காவது உதவி பண்ணியே தீருவார் போல அந்த மனுசன்.

"வேண்டாம்யா கொஞ்ச நேரம்தானே"ன்னேன்.

"கொஞ்ச நேரமா? என்னம்மா சொல்லுரே?"

நான் முருகனைப் பார்த்தேன்.

"நீ தூங்கு" என்றுர்.

பெரியவர் "இது என்ன வண்டி தெரியும்"ன்னு கேட்டார்.

"எல்லாம் தெரியும்.

தூங்குங்க சுகுணு. நான் எழுப்பறேன்"

படுத்தது, படுத்த பத்தாவது செக்கண்டில கண்ணைச் சொருகிருச்சு. அப்படி ஒரு தூக்கம். கனவே இல்லாம தூக்கம்.

கண் முழிச்சு எழுந்திருச்சப்ப ரெயில் ரொம்ப வேகமா போய்கிட்டு இருந்தது. கீழ எட்டிப் பார்த்தா சன்னல் வழியா பளிச்சுனு சூரிய வெளிச்சம் தெரிஞ்சுது.

மாணிக்கம் பளிச் பளிச் சென்று போட்டோ பல கோணங்களில் எடுக்கப்பட்டான்.

"நல்லா போஸ் கொடுக்கற பாச்சா. என்னைய உடைக்க முடியாதுன்னு இறுமாப்பு போல" என்று ஒரு போலீஸ்காரர்

# பாட்டி வைத்தியம்

## அழும் குழந்தை

பாட்டி! என் குழந்தைக்கு 11 மாதம் ஆகிறது. இரண்டு மாதமாக விடாது அழுகிறது. சிறுநீர் கழிக்கவும் கஷ்டப்படுகிறது. இதற்கு என்ன மருந்து கொடுக்க வேண்டும்?

(திருமதி. ஜெயந்திதாஸ், சென்னை-56)

வசம்பை சுட்டு, இழைத்து, குழந்தையின் வயிற்றின் மேல் பூசுங்கள். அழுகையை நிறுத்தி, குழந்தை தூங்கும்.

குழந்தையின் அடி வயிற்றின் பக்கவாட்டில் இலவம் பஞ்சை வைத்து, அதன் மீது தாய்ப்பாலை கொஞ்சம் கொஞ்சமாக இடுங்கள். தடைபட்ட சிறுநீர் வெளியேறும்.

## அஜீரணம்

பாட்டி! எனக்கு சாப்பிட்டால் ஜீரணம் ஆவது இல்லை. பசி எடுப்பதும் கிடையாது. இதற்கு என்ன மருந்து சாப்பிட வேண்டும்?

(என். கேசபாலன், திருச்செந்தூர்)

பச்சை மஞ்சளை எடுத்து, அதை சிறு சிறு சிலைசுகளாக சீவி வைத்துக் கொள்ள வேண்டும். இந்த சிலைசுகளில் சிறிது உப்புத் தூள் தூவ வேண்டும். பிறகு அதன் மீது எலுமிச்சம் பழச் சாறு விடவும்.

இப்படி பக்குவப்படுத்தப்பட்ட பச்சை மஞ்சள் சிலைசுகளை, தினசரி சாப்பாடு முடிந்ததும் இரண்டு அல்லது மூன்று எடுத்து மென்று விழுங்குங்கள். அஜீரணக் கோளாறு நீங்கும்.

## சிறந்த மருந்து



"'இளமை பொல்லாதது' என்ற படத்தில் நடித்தாயே, என்ன கிடைத்தது?"

"'டைரக்டர் பொல்லாதவர்' என்பதை பிறகு தான் தெரிந்து கொண்டேன்."

# கப்-சிப்

யூனிட் என்ற பெயரில், இசையில் இளையவரான இசை அமைப்பாளருக்கு வாய்ப்பு வாங்கிக்கொடுக்க, மூன்று படக் கம்பெனிகளில் பெரும் முயற்சி செய்தாராம், முத்தான ஒரு டைரக்டர்.

மூன்று இடத்திலும், டைரக்டருக்கு எதிர்



குரலே ஒலித்ததாம்! இசையில் மன்னருக்கே வெற்றியாம்!

விறைப்பு நடிகர் இப்பொழுது படப்பிடிப்புக்குச் சென்ருல், எல்லோரிடமும் நல்லபிள்ளையாகப் பேசி பழகத் தொடங்கியிருக்கிருராம். விறைப்பு காட்டுவது இல்லையாம்.

[illegible] கேட்டார்.

"நான் பாச்சா இல்லிங்க, மாணிக்கம்!"

"பேர்ல என்ன? பாச்சான்னு கூப்பிட்டா பதில் சொன்னா என்ன குறைஞ்சு போயிருவியா. இத பாரு! வசமா மாட்டிக்கினே. எதுக்காக புடிவாதம் புடிக்கிறே. பேசாம எல்லாத்தையும் கக்கிரு. உனக்கும் சவுகரியம், எங்களுக்கும் சவுகரியம் பாரு!"

"நீங்க என்ன சொல்றிங்கன்னே எனக்கு புரியலேயே!"

"சரியான கல்லுக் கோட்டையியா. நீ நல்லா தீனி திங்கப் போறே. அப்பதான் எல்லாம் வெளிய வரப் போவுது. சொன்னா கேக்கமாட்டே இல்லே? வரட்டும் பெரியவர், கேக்கற விதத்தில கேப்பாரு"

மாணிக்கம் இப்போது பயத்தில் வெளிறிப் போயிருந்தான். என்ன செய்வது எல்லாரும் என்னை பாச்சா பாச்சா என்கிறார்கள். என்னை வெளிய விட மறுக்கிறார்கள். ஏதோ ஒரு சிக்கலில் மாட்டிக்கொண்டு விட்டேன்.

மாணிக்கத்தின் எளிய சிந்தனைக்கு, நடப்பது எல்லாம் பிரமிப்பாக இருந்தது. ஒருவேளை நான்தான் பாச்சா என்று சொன்னால் வெளியே விட்டு விடுவார்களோ? எட்டு லட்சம் என்றெல்லாம் கேட்கிறார்களே! எதாவது சொல்லி விட்டுப் போகட்டும். ஒப்புக்கொண்டு விடலாமா? விஷயம் இத்துடன் முடிந்துவிடுமா? இல்லை! பேசாமல் ஓடிப்போய் விட்டால் என்ன? வாசல் தெரிகிறதே. என்னை சும்மாத்தானே உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்கள் அயர்ந்திருக்கும்போது தப்பித்து ஓடிவிட்டால்?

தப்பி எங்கே ஓடிவிட முடியும்? கிராமத்துக்குத்தான். எப்படி போவது? கையில் ஒற்றைக் காசு இல்லையே. ஓடிப்போய் விட்டால் அவர்கள் சந்தேகம் அதிகமாகி என்னை நிரந்தரமாக சிறையில் தள்ளி விட்டார்கள் என்றால் என்ன செய்வது? யாரோ வரப் போகிறார்கள். பெரிய அதிகாரியாமே?

மாணிக்கம் எந்தவித தீர்மானமும் செய்ய முடியாமல் பொறியில் அகப்பட்ட எலி போல இங்கும் அங்கும் உலாவினான்.

"எங்கயாவது ஓடிப் போயிரலாம்னு எண்ணிக்காத. கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கோம்"

"போய்யா! உண்மையைச் சொன்னா புரிஞ்சுக்காதவங்ககூட எனக்கு என்ன பேச்சு?"

"இதபாரு கண்ணு நீ இன்னும் உண்மை சொல்லவே ஆரம்பிக்கலே தெரியுதா? எங்களுக்கு காது குத்தாத! உன்னைய மாதிரி எத்தனை பேரை நிதம் பார்க்கரோம்?"

அப்போது அங்கே ஒரு இளைஞன் வந்தான். உள்ளே சுவாதீனமாக நுழைந்தான். வெள்ளை பாண்டும் கறுப்புக் கோட்டும் போட்டு வக்கீல் போலத்தான் இருந்தான். நுழைந்தவுடன் கான்ஸ்டபிளிடம் "யார்யா இங்க எஸ் ஐ" என்றான்.

"வெளிய போயிருக்காரு."

"வெளிய போயிருக்காருன்னா, சாப்பிடவா? ரவுண்ட்ஸ் போயிருக்காரா?"

"நீங்க யாரு."

அவன் அதற்கு பதில் அளிக்காமல் "இங்க சிவசாமின்னு ஒருத்தரை லாக்அப்பில வெச்சிருக்கிங்களா"

"ஏங்க"

"அந்தாளை விடுதலை பண்ணிக்கிட்டுப் போகணும்"

"சிவசாமியா? இன்ஸ்பெக்டர் வந்ததும்தான் தெரியும்"

"ரைட்டரைக் கேட்டு



## தனபதி குடும்பத்துக்கு ரூ. 25 ஆயிரம்!

இலங்கையில் நடந்த கலவரத்தில் கொல்லப்பட்ட சென்னை இளைஞர் தனபதியின் குடும்பத்துக்கு இலங்கை அரசு ரூ. 25 ஆயிரம் உதவிப்பணம் அளித்து இருக்கிறது.

இலங்கை பிரதமர் பிரேமதாசா, தனது சொந்த முறையில் ரூ. 2 ஆயிரம் கொடுத்து இருக்கிறார்.

## பெண்களுக்கு தடை!

பையன்கள் படிக்கும் பள்ளிக்கூடங்களில் பெண்கள் சேர்ந்து படிக்கக் கூடாது என்று பாகிஸ்




தான் அரசாங்கம் தடை விதித்து இருக்கிறது!

1-ம் வகுப்பு, 2-ம் வகுப்பு பள்ளிக்கூடங்களிலும் இந்தத் தடை அமுல் படுத்தப்படுகிறது!

## சூரியன் சுருங்குகிறது!

சூரியன் நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டு போகிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்!

ஆண்டுதோறும்



7 கிலோ மீட்டர் சுருங்குகிறது.

இப்படியே சுருங்கி சுருங்கி, சூரியன் அழிந்து போகுமோ, என்று அஞ்ச வேண்டியது இல்லை, ஏனென்றால் சூரியனின் குறுக்கு அளவு 13 இலட்சத்து 92 ஆயிரம் கிலோ மீட்டர்.

## பட்டாசுக்கு தடை!

பட்டாசுகள், வெடிகள் விற்க பஞ்சாப் மாநிலத்தில் தடைவிதிக்கப்பட்டு இருக்கிறது.

பட்டாசு வெடிப்பதும் தடை செய்யப்பட்டு உள்ளது.

சீக்கியர்கள் தனி நாடு




கேட்டு போராட்டம் நடத்துவதே இந்தத் தடைக்குக் காரணம்.

## நடிகைகளுக்கு விளம்பரம்!

சினிமா விளம்பரங்களில் நடிகர், நடிகைகளின் பெயர்களை வெளியிட வேண்டும் என்று தென் இந்திய சினிமா அதிபர் சங்கம் தீர்மானித்து உள்ளது.

இப்பொழுது சினிமா விளம்பரங்களில் டைரக்டர், இசை அமைப்பாளர் பெயர்கள் மட்டுமே இடம் பெறுகின்றன.

நடிகர், நடிகைகளின் பெயர்கள் இருட்டடிப்பு செய்யப்படுவதால், புது முகங்களுக்கு புகழ் கிடைப்பது இல்லை! ★

சொல்லுய்யா"

"இன்ஸ்பெக்டர் எங்க? யோவ் போய் ஒரு தம்ளர் தண்ணி கொண்டுவா. வேத்து ஊத்துது!"

கான்ஸ்டபிள் அவருக்கு சற்று கட்டுப்பட்டவர் போல உள்ளே செல்ல புதிதாக வந்த ஆள் மாணிக்கத்தை ஒருமுறை பார்த்து விட்டு கைக்குட்டையால் தன் கழுத்தைத் துடைத்துக் கொண்டான். தன் பைக்குள் இருந்து ஒரு சிகரெட்டை எடுத்து வாயில் பொருத்திக்கொண்டு "தீப்பெட்டி இருக்கா தலைவரே" என்றான் மாணிக்கத்திடம்.

மாணிக்கம் அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவன் "அய்யா நீங்க வக்கீலாய்யா" என்றான்.

"பாத்தா தெரியலையா? ஏன்?"

அந்த இளைஞன் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவன் கால்களில் வந்து விழுந்தான் மாணிக்கம். விழுந்தவன் விசித்து விசித்து அழ ஆரம்பித்தான். அவன் கண்ணீர் அந்த இளைஞனின் வெள்ளை பாண்ட்டை நனைத்தது.

"யோவ் யோவ்! எந்திரிய்யா. என்ன இது. என்ன இது!"

"அய்யா அய்யா என்னை அநியாயமா இங்க அடைச்சு வெச்சிருக்காங்கய்யா. எதுக்குனு தெரியலே. என்னை என்ன என்னமோ கேள்வி கேக்கறாங்க. என்னை யாரோன்னு நினைச்சுக்கிட்டு எட்டு லட்சம்கிறாங்க. கோயில் நகைங்கறாங்க. நான் ஒண்ணும் அறியாதவன்யா. என் ஊரு வீரவாக்கம். என் பேரு மாணிக்கம். தங்கச்சிகூட பட்டணத்துக்கு வந்து அவளைத் தொலைச்சுட்டு சீரழிஞ்சு நிக்கறேன். இவங்ககிட்ட மாட்டிக்கிட்டேன். எதுக்குன்னு சொல்லாம இங்கயே வெச்சிருக்காங்க. அதிகாரிங்கள்ளாம் பேருக்கு பேர் பாச்சா பாச்சான்னு அதட்டறாங்க!"

"பாச்சாவா, நீதான் பாச்சாவா!"

"அய்யோ இல்லிங்க,




நடிகை வீட்டு வேலைக்காரி:—

"தீபாவளிக்கு சேலை எடுத்துக் குடுங்கன்னு அம்மாவிடம் எப்படி கேட்பது?"

நான் மாணிக்கம்ங்க. அய்யா என்னைக் காப்பாத்துங்க"

"இந்தாங்க தண்ணி" என்று கான்ஸ்டபிள் வந்து கொடுத்து "ஏய் உன் மாய் மாலத்தை இவர்கிட்ட காமிக்க ஆரம்பிச்சுட்டியா? போ அப்பால!"

"ஏட்டய்யா இது யாரு?"

"அய்யோ பெரிய ஆளுங்க! இவன் பேர் பாச்சா! ரொம்ப சாலக்குக்காரன்!"

"அந்த பிரபல பாச்சாவா?"

"அவன்தாங்க. ஆளை ஒத்துக்கமாட்டானும். டிஸ்கசன் பண்ணிக்கிட்டு இருக்கோம். டிஸி வரப்போறாரு"

"அய்யோ நான் இல்லிங்க! நான் இல்லிங்க!" என்று கதறினான் மாணிக்கம்.

"இவனை அரஸ்ட் பண்ணி வெச்சிருக்கிங்களா" என்று கேட்டார் அந்த இளைஞன்.

"இன்னும் இல்லேங்க. காலேலதானே புடிச்சோம். சென்ட்ரல்ல வெச்சு அரஸ்ட் எல்லாம் ஆயிருங்க. இவன் மேல பதிநாலு கேஸ் இருக்குது"

"அப்படியா!" என்றான், இளைஞன். நெற்றியை சொரிந்து கொண்டான்.

அவன் பெயர் வஸந்த்.

(தொடரும்)

# ஒருத்தி நினைக்கையிலே...

சுஜாதா



## 12

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலீசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். சுகுணாவை பம்பாய்க்குக் கடத்த முயன்றான், முருகன்.

எனக்கு முதல்ல பிரமிப்பாயிருச்சு. "என்னடா பகல் ஆயிருச்சு, ரெயில் அதுபாட்டுக்கு போயிக்கிட்டு இருக்குது நம்ம ஊர் ராத்திரியே வந்திருக்கணுமே தூங்கிப் போயிட்டமா? முருகன் ஏன் எழுப்பலே, என்ன இது"ன்னு எதித்த பார்த்தைப் பார்த்தேன். காலியா இருந்தது. மெல்ல கம்பிப்படியில கால வெச்சு கீழ வந்தேன்.

முருகன் கதவாண்டை நின்னுக்கிட்டு இருந்தார். அவர்கிட்ட அவசரமாப் போனேன். "என்ன முருகன் பகல் வந்திருச்சு, இன்னும் நாம ரெயில்லயே இருக்கமே. மடவாக்கத்தில இறங்கலியா?"

முருகன் என்னைப் பார்த்து, "எழுந்திருச்சுட்டீங்களா இன்னும் கொஞ்சம் தூங்கலியா! குட்மார்னிங்" என்று விசாரித்தார்.

"இன்னும் எங்க ஊர் வரலியா?"

"சுகுணா! சின்னதா ஒரு சிக்கலாயிருச்சு!"

"என்னன்னு" பயந்துக்கிட்டு கேட்டேன்.

"ஒண்ணுமில்லே பயப்படாத. சரியா எக்ஸ்பிரஸ்னு விசாரிக்காம இந்த ரெயில்ல ஏறிட்டோம்; ஆனா பாருங்க இது எதோ சூப்பர் எக்ஸ்பிரஸ்சாம். நிக்காம போய்க்கிட்டே இருக்குது!"

"இப்ப நாம எங்க இருக்கோம்"

"தெரியலே, குண்டக்கல் தாண்டிட்டோம்னு நினைக்கிறேன்!"

"இது எங்க போற வண்டி"

"பம்பாய்க்கு"

"அய்யோ பம்பாய்க்கா!"

"ஏன் பம்பாய்னா பயமா என்ன?"

"இல்லிங்க என்னை மடவாக்கத்தில கொண்டு விட்டுருங்க அங்கதான் முதல்ல போகணும்!"

"அடுத்த ஸ்டேசன்ல நிக்கறபோது விசாரிச்சுட்டு வந்துர்றேன்"

"வேண்டாங்க என்னை விட்டுட்டு எங்கயும் போயிராதிங்க, எனக்கு பயமா இருக்குது. அந்த பெரியவர் நல்லவரா இருந்தாரு. அவரைக் கேக்கலாமே"

"அவருக்கு தெரியாது"

"இல்லிங்க கேட்டுப் பாக்கலாம்"னு திரும்பி சீட்டுக்கு வந்தேன். பெரியவர் குளிச்சுட்டு சுத்தமா இருந்தாரு. என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டே, "என்னம்மா நல்ல தூக்கம் போல இருக்கே! தலை வாணி கொடுக்கறேன்னு சொன்னனின்லே!... முகம் ஒருபுறம் சப்பை ஆயிருச்சு பாரு."

"பரவால்லீங்க. பெரியவரே, ஒரு சிக்கல் ஆயிருச்சு."

"என்னம்மா சிக்கல்"

இதுக்குள்ளே முருகன், "இதபாருங்க பெரியவரே, நாங்க மடவாக்கம் போகணும்!"

"மடவாக்கம்மா"ன்னு அவர் ஆச்சரியமாக "இது பம்பாய்போற வண்டி!"

"அதாங்க தவறுதலா ஏறிட்டோம்"

"மடவாக்கத்துக்கும் இந்த வண்டிக்கும் சம்பந்தமே கிடையாதும்மா. சரியா விசாரிச்சு ஏறிக்கக் கூடாதோ"

"ஏதோ ஏறிட்டோம் இப்ப என்ன செய்யச் சொல்றிங்க" என்றார் முருகன்.

"மடவாக்கங்கிறது காட்பாடி லைன்லன்னு



நடிகர் வி. கே. ராமசாமியின் மகன் ரகுநாத்தும், கதாநாயகன் ஆனார்.

"ஜோடி புறா" என்ற படத்தில், ரகுநாத் கதாநாயகனாக நடிக்கிறார். வி. கே. ராமசாமியே இந்தப் படத்தை டைரக்டு செய்கிறார்.

படத்தில் ரகுநாத்துக்கு, இதயத்தைக் கொடுத்து இருப்பவர், வைஜயந்தி மாலா.



# பாட்டி வைத்தியம்

## இருமல்

பாட்டி! என் 8 மாத குழந்தைக்கு அடிக்கடி இருமல் வருகிறது. இளைப்பும் ஏற்படுகிறது. இதற்கு என்ன மருந்து கொடுக்க வேண்டும்?

(எம். வேணி, பம்மல்)

உஷ்ணத்தாலும், கால நிலை மாறுவதாலும் குழந்தைகளுக்கு இருமல் ஏற்படுவது உண்டு. காய்ச்சல், பல் முளைத்தல் போன்ற காரணங்களாலும் இருமல் உண்டாகும்.

இதற்கு, இஞ்சிச்சாறு, மாதுளம் சாறு, தேன் இவற்றை சம அளவு எடுத்து கலந்து ஒரு தேக்கரண்டி அளவு உள்ளுக்குள் கொடுத்து வாருங்கள். இருமல், இளைப்பு எல்லாம் உடனே நிற்கும்.

## மாத விலக்கு

பாட்டி! எனக்கு மாத விலக்கு ஏற்படும்போது, இரத்தப்போக்கு அதிகமாகிறது. எரிச்சலும் ஏற்படுகிறது. இதற்கு ஒரு மருந்து சொல்லுங்கள்.

(பி. கிருஷ்ணவேணி, விராலிமலை)

மருந்து கடையில் விளாம் பிசின் கிடைக்கும். அதை வாங்கி, உலர்த்தி தூள் செய்து, ஒரு பாட்டிலில் வைத்துக்கொள்ளவும். அந்த தூளில் இரண்டு சிட்டிகை அளவு எடுத்து பசும் வெண்ணெயுடன் கலந்து, காலை மாலை இரு வேளையும் [illegible] சாப்பிட்டு வாருங்கள். இரத்தப் போக்கு நிற்கும். எரிச்சலும் ஏற்படாது.

மருந்து சாப்பிடும் போது, சாப்பாட்டில் உப்பு, புளி, காரத்தை நீக்க வேண்டும். இரண்டு மூன்று நாள் மருந்து சாப்பிட்டால் போதும்.

## தாய்ப் பால்

பாட்டி! எனக்கு தாய்ப் பால் சரியாக சுரப்பது இல்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

(எஸ். ஜானகி, மதுரை)

கீழா நெல்லியின் வேரை அரைத்து, பாலில் அல்லது வெந்நீரில் கலந்து, தினசரி மூன்று வேளை குடித்து வாருங்கள். குழந்தைக்கு தேவையான பால் சுரக்கும்.

## சிறந்த மருந்து



"எதற்கு இத்தனை இனிப்பு வகைகள் செய்து குவித்திருக்கிறாய்?"

"என் மாமியாருக்கு சர்க்கரை நோய்!"

இருக்குது!"

"இந்த வண்டி போறதா சொன்னுங்களே!"

"எங்க உங்க டிக்கட்டைக் காட்டுங்க பார்க்கலாம்."

"டிக்கட்டு இருக்கட்டுங்க, அப்ப நாங்க அடுத்த ஸ்டேசன்ல இறங்கிகிட்டு அங்கருந்து மடவாக்கம் போகணுமின்னு என்ன செய்யணும் அதைச் சொல்லுங்க"

"ஏய்யா விசாரிச்சுக்கிட்டு வரமாட்டீங்களோ? அடுத்த ஸ்டேசன்ல இறங்கினு ரெயில்வேகாரன் டிக்கெட்டைப் பாத்தான்னு உங்களை உள்ளே தள்ளிருவாங்களே இல்லை பைன் கட்ட வேண்டி வரும்!"

"பைன் கட்டிரலாங்க... அடுத்த ஸ்டேசன்ல இறங்கினு வேற குறுக்குப் பாதையில அந்த லைனை பிடிக்கிறதுக்கு மார்க்கம் இருக்கான்னு சொல்லுங்க!"

"திரும்ப மெட்ராஸ் போய்த்தான் ஆகணும்!"

"இப்ப எவ்வளவு தூரம் வந்திருப்போம்னு சொல்றீங்க"

"அது இருக்கும் ஒரு நானூறு மைல். இங்க இறங்கியும் உங்களுக்கு பிரயோசனமில்லை!"

முருகன் என்னை சோகமாப் பார்த்தார். "சாரி சுகுணா. உங்களுக்கு என்னுலை அனாவசியமா கஷ்டம் பாருங்க. ராத்திரி எழுந்தேனா? ஸ்டேசன் வரும் வரும்னு பாக்கறேன். ரயிலானா போய்க்கிட்டே இருக்குது. அப்பறம்தான் சந்தேகமா போயி விசாரிக்க தப்பு வண்டி!"

"டிட்டி வந்து செக் பண்ணுனே! அப்ப சொல்லலையோ, இறக்கிவிட்டிருப்பானே" பெரியவர்.

"டிட்டி வரப்ப நான் இங்க இல்லை போல இருக்கு"

"ஆமா, அதெப்படி உங்களுக்கு பர்த் கொடுத்தான்?"

"ஆமா! அதெப்படி? எல்லாமே குழப்பமா இருக்குதுங்க!" என்னுரு முருகன்.

பெரியவர் என்னை [illegible]

## கவிஞர் நினைவில்......!

சிறந்த நடிகர்—நடிகைகள், கலைஞர்களுக்கு பரிசு அளிக்கும் விழாவை, சினிமா ரசிகர் சங்கம், இந்த மாதம் 18–ந் தேதி (கண்ணதாசன் மறைந்த நாள் அன்று) சென்னையில் நடத்தியது.

கவிஞர் கண்ணதாசன், நடிகர் முத்துராமன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், ரசிகர்களை இரண்டு நிமிடம் எழுந்து நிற்க வைத்து, இசை நிகழ்ச்சியைத் தொடங்கினார், கங்கை அமரன்.

மேடைக்குப் பாட வந்த, எஸ். பி. பாலசுப்பிரமணியம், இளையராஜா, எஸ். ஜானகி மூன்று பேருமே, "கவிஞர் கண்ணதாசன் மறைவு. நமக்கெல்லாம் பேரிழப்பாகும். இன்று, எங்களால் பாட முடியவில்லை. பாடுவது நன்றி கொன்றச் செயல் ஆகும். அழைத்ததற்காக, ஒரு பக்தி பாட்டு வேண்டுமானால் பாடுகிறோம்" என்று, ஆளுக்கொரு பக்திப் பாட்டு பாடிவிட்டு, இறங்கிவிட்டார்கள்.

இன்னொரு செய்தி: கவிஞர் கண்ணதாசன் நினைவாக, அடுத்த ஆண்டில் இருந்து, சிறந்த பாடல் ஆசிரியருக்கு, எஸ். பி. பாலசுப்பிரமணியம் ஒரு பரிசு அளிக்கப் போகிறார்.

---

மாப் பாத்தாரு. "நான் ஒண்ணு கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே?"

"என்ன?"

"வீட்டை விட்டு ஓடிக்கிட்டிருக்கிங்களா? காதலா?"

"சேச்சே! அதெல்லாம் இல்லிங்க. வீட்டைப் பாக்கத்தான் ஓடிக்கிட்டு இருக்கோம்! இவரு என்... என்...சிநேகிதருங்க. என்னை வீட்டில கொண்டுவிட வந்திருக்காரு!"

"சுகுணா ஒரு ஐடியா!" என்னுரு முருகன்.

"என்ன"

"சொந்தம் [illegible]

வா" ன்னு என்னை கதவு பக்கம் அழைச்சுக்கிட்டு போனாரு. கதவைத் திறந்து வெச்சுக்கிட்டாரு. காத்து அவர் முடியை எல்லாம் கலைக்குது. எனக்கு முகத்தில வெயில் சுள்ளுன்னு படுது. "நீ பம்பாய் பாத்து இருக்கியா?"

"இல்லே, ஏன்?"

"பம்பாய்ல எனக்கு சாரங்கபாணி, நேத்தி ஸ்டேசன்ல பாத்தமே, அவரு ஒரு வேலே கொடுத்திருக்காரு. ஒரு நாள் வேலேதான்.அதை முடிச்சுக்கிட்டு உடனே புறப்பட்டுரலாம். நீங்க என்ன சொல்றிங்க"

நான் ஒண்ணும் சொல்லலே.

"பேசாம நடுவாந்தரத்தில இறங்கி அல்லாடறதைவிட பம்பாய்க்கே போயிரலாம். சாயங்காலத்துக்குள்ளாற போயிரும். போய் என் வேலேயை முடிச்சுக்கிட்டு ஒரு நாள் இரண்டு நாள் உனக்கு இஷ்டமிருந்தா ஊர் சுத்திப் பாத்துட்டு உடனே புறப்பட்டு சென்னேக்கு வந்துரலாம். இந்த முறை சரியா அவசரப் படாம விசாரிச்சுட்டு,உங்க ஊர்ல, உங்க வீட்டில கொண்டு விட்டுறது என் பொறுப்பு என்ன?"

நான் யோசிச்சேன். என்ன சொல்றதுன்னே புரியலே. அழுகை வந்துச்சு. "இந்நேரம் அப்பா அம்மா கிட்ட வீட்டில பத்திரமா போய்ச் சேர்ந்திருக்கலாம்னு எதிர்பார்த்தவளுக்கு என்ன ஏமாத்தம் பாத்திங்களா?"

"ரொம்ப ரொம்ப சாரி சுகுணு! நான்தான் மடத்தனம் பண்ணிட்டேன். முட்டாள்தனம்! சரியா விசாரிக்காம அவசரத்தில தப்பு வண்டில ஏறி உங்களுக்கு அல்லல் தந்துட்டேன். அதுக்கு பிராயச்சித்தமா உங்களுக்கு பம்பாய் காட்டியே ஆகணும்னு தோணுது. எங்கிட்ட இப்ப பணமும் இருக்கு. உங்களுக்கு பம்பாயில யாராவது தெரிஞ்சவங்க இருக்காங்களா?"

"யாரும் இல்லேங்களே"ன்னேன். எனக்கு இன்னும் குழப்பமாத்தான் இருந்துச்சு.

"அப்ப நிறையப் பேரை தெரிஞ்சுப்பிங்க! பம்பாய் ரொம்ப சுறுசுறுப்பான நகரம். ரொம்ப பெரிய நகரம். பார்க்க வேண்டியதெல்லாம் நிறைய இருக்கு உங்களுக்கு."

"நடுவில இறங்கி மட வர்க்கத்துக்குப் போயிர முடியாதா?"

"அதான் சொன்னுங்களே, வண்டி எதும் சரியா இல்லேயே!"

"எதுக்கும் அந்த பெரியவரைக் கேட்டுரலாங்க ஒரு வார்த்தை"

"நீங்க எல்லாரையும் நம்பறிங்க! அந்தப் பெரியவர் ராத்திரி பூரா நீங்க தூங்கறதையே அடிக்கடி பாத்துக்கிட்டு இருந்தார். தெரியுமா? ஒரு முறை நேர்லகூட கேட்டுட்டேன்"

நான் பதில் பேசாம நின்னுக்கிட்டிருந்தேன். பம்பாயா! எனக்கு மலேப்பாத்தான் இருந்தது. இந்த சூழ்நிலேயில் ஒண்ணும் யோசிக்க முடியலே!

"யோசிக்காதிங்க, ரெண்டே நாள். என் வேலேய முடிச்சுக்கிட்டு வேணும்னு அங்க இங்க சுத்திப் பாத்துட்டு வீட்டை உன்ரைப் பாக்கப் போயிரலாம் என்ன? சரின்னு சொல்லிருங்க"

"ஊரை ஒண்ணும் சுத்திப் பாக்க வேண்டாங்க! கூடிய சீக்கிரம் போய்ச் சேர்ந்தா சரி. அவங்க காத்திருப்பாங்க"

"கவலேப் படாதிங்க. உங்க ஊருக்கு அடுத்த



# எல்லாவற்றையும் எழுது!

கவிஞர் கண்ணதாசன் வனவாசம் என்ற தலைப்பில் தனது வாழ்க்கைக் குறிப்பை எழுதியிருக்கிறார். அதில் அவரது புற வாழ்க்கையைப் பற்றிதான் அதிகமாக கூறியிருக்கிறார். அக வாழ்க்கையை அதிகமாக எழுதவில்லை.

கவிஞரின் உதவியாளரான இராம. கண்ணப்பன், "உங்கள் அக வாழ்க்கையும் சுவையானது. அதைப் பற்றி நான் எழுதப் போகிறேன்" என்று ஒருநாள் கவிஞரிடம் வேடிக்கையாகக் கூறினார்.

"எப்பொழுது எழுதப் போகிறாய்?" என்று கவிஞர் கேட்டார்.

"உங்கள் காலத்துக்குப் பிறகு எழுதுவேன்" என்று கண்ணப்பன் சொன்னார்.

கவிஞர் சிரித்துக் கொண்டே, "எழுது! எழுது! என்னைப் பற்றி எல்லாவற்றையும் எழுது. என் வாழ்க்கையின் அந்தரங்கம் முழுவதும் மக்களுக்குத் தெரியட்டும்" என்று கூறினார்.



கண்ணதாசன்

"ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு. ஒரு கோல மயில் என் துணையிருப்பு" என்று பாடிய கவிஞரின் வாழ்க்கை முழுவதுமே ஓர் இனிய காவியமாகும்.

அந்த சுவையான வாழ்க்கையை கொஞ்சமும் ஒளிவு—மறைவு இல்லாமல், கவிஞரின் உதவியாளர் இராம. கண்ணப்பன் "ராணி"யில் தொடர்ந்து எழுதயிருக்கிறார்.

கண்ணதாசன் கதையைப் போன்ற இந்த தொடர் கட்டுரை அடுத்த வார (8–11–81) "ராணி"யில் தொடங்குகிறது.



எடை தூக்குவதில் புதிய "சாம்பியன்" இவர். செக்கசுலோவாக்கியா நாட்டை சேர்ந்த இவர், 185½ கிலோ எடை தூக்கினார். "ஓடேசரெம்பா" என்பது இவர் பெயர்.

—கலியுல் ரகுமான், ஆங்காங்.

ஸ்டேசன் வந்ததும் தந்தி கொடுத்துர்றேன். ஒரு லெட்டரும் எழுதிப் போட்டுரலாம்"

எனக்கு இது தோணவே இல்லே பாத்தியான்னு இருந்தது. இப்ப கொஞ்சம் ஆறுதலா ஆயிருச்சு "சரிங்க உங்களுக்குத்தான் ரொம்ப சிரமம்!"

"சேச்சே! அதெல்லாம் இல்லவே இல்லே. எனக்கு சந்தோசம்தான். ரொம்ப சந்தோசம்." முருகன் உற்சாகமாத்தான் இருந்தாரு "என்னே ஏதும் தப்பா நெனேச்சுக்காதிங்க, எனக்கு சாமர்த்தியம் போதாது."

"சேச்சே! அப்படி எல்லாம் இல்லிங்க"ன்னேன்.

சீட்டுக்கு திரும்பிப் போனதும் பெரியவர் "என்ன தீர்மானிச்சிங்க"ன்னு கேட்டார்.

நான் அவர்கிட்ட பேச விரும்பலே முருகன்தான் "எல்லாம் சரியாய்டுச்சுங்க. வீட்டுக்கு தந்தி கொடுத்துட்டு பம்பாயைப் பார்க்கப் போயிர்றோம்" ஞரு.

வஸந்த் மாணிக்கத்தைப் பார்த்தான். "ஏன்யா உன்னே அரஸ்ட் பண்றதா சொன்னாங்களா"

"அவங்க சொல்றது ஒண்ணுமே புரியலேங்க"

"நீ பாச்சா இல்லேன்ன பின்ன யாச்சா?"

"சத்தியமா என் பேரு மாணிக்கம்தாங்க. என் தங்கையைப் பறிகொடுத்து காணமப் போகிட்டு, இங்க வந்து மாட்டிக்கினேங்க. என்ன என்னமோ ஆயிருச்சுங்க!"

"உன்னே அரஸ்ட் பண்ணலே! தங்கைக்கு என்ன வயசு?"

"அரஸ்ட் பண்ணிருவோம்" என்றார் கான்ஸ்டபிள்.

"இன்னும் அரஸ்ட் பண்ணலேல்ல, தங்கைக்கு என்னய்யா வயசு?"

"இருக்குங்க பதினெட்டு இருபது!"

"அப்ப எங்கூட வாய்யா மாணிக்கம்"

"என்னது?"

"எதுக்காகய்யா இந்த ஆளே போலீஸ் ஸ்டேசன்ல அனாவசியமா நிறுத்தி வெச்சிருக்கிங்க!"

"அது வந்து பெரிய ஆபிஸர்ங்கள்ளாம் கொஸ்டின் பண்ணிக்கிட்டு இருக்காங்க!"

"எந்த சட்டத்தின் பேரில்? அதிகாரம் இருக்கா சும்மா ஒரு ஆளே இழுத்து வெச்சுக்கிட்டு சத்தாய்க்கறிங்களா!"

"இல்லிங்க. இவன் பழைய கேடி பாச்சாங்க. உங்களுக்கு சொன்ன புரியாது."

"இவன் பழைய கேடி பச்சாவா இருந்தாலும், அவன் தாத்தாவா இருந்தாலும் ஒழுங்கா விதிமுறைப்படி வாங்க! யோவ் மாணிக்கம் அல்லது பாச்சா! எங்கூட வா, சரியான ஏமாளி ஆப்ட்டேன்னு உன்னேயடிடெய்ன் பண்ணி வெச்சிருக்காங்க! யோவ் கேஸ் இருக்கா? இல்லேல்ல? வா மாணிக்கம், போயிரலாம். இவங்க உன்னே தொட முடியாது. இவங்க கேள்விக்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டியதே இல்லே. கூட வா! அட வாய்யான்ன! திருதிருன்னு கண்ணன் மாதிரியே விழிக்கிறியே! தங்கை பேரு என்ன சொல்லு"

"என்னது? எப்படி நீங்க இந்தாளே அழைச்சுக்கிட்டு போக முடியும்?"

"கேஸ் இருக்கா, காட்டு! கேஸ் டயரியைக் காட்டு..."

"இருங்க இருங்க. இன்ஸ்பெக்டர் வந்துரட்டும்"

"அதுக்கெல்லாம் நம் மால காத்திட்டு இருக்க முடியாது. இதபாரு இந்த கார்டில என் அட்ரஸ் இருக்கு. அங்கதான் இந்த ஆளேக் கூட்டிட்டு போறேன். வேணும்ன அங்க வந்து பேசிக்கங்க" வஸந்த் மாணிக்கத்தை கையைப் பிடித்து இழுத்து அழைத்துச் செல்ல முற்பட்டான்.

(தொடரும்)

# ஒருத்தி நினைக்கையிலே...



## சுஜாதா

# 13

**முன்கதை சுருக்கம்:**

*கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலீசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். சுகுணாவை பம்பாய்க்குக் அழைத்துச் சென்றான், முருகன்.*

மாணிக்கத்தை வஸந்த் சிறக்குறைய இழுத்துக் கொண்டு செல்ல முற்பட்ட போது காவல் நிலையத்தின் வாசலில் ஜீப் நிற்க, பளபளப்பாக பெரிய போலீஸ் அதிகாரி விரைப்பாக சல்யூட்டுகளுக்கு இடையே நடந்து வந்து, "எங்கய்யா அந்த ஆளு?" என்றார்.

"இதோ இருக்கான், பாருங்க"

"அதுக்குள்ள வக்கீலை கூட்டி யாந்துட்டானா?" என்றார், வஸந்தைப் பார்த்து.

வஸந்த் புன்னகைத்து "ஹலோ சார்! என் பேர் வஸந்த்" என்றான்.

"ஹூம்!" என்று அவர் உறுமிவிட்டு "உங்களுக்கு இங்க என்ன வேலை?"

"என் கட்சிக்காரனை அழைச்சுட்டுப் போக வந்திருக்கேன்"

"யாருய்யா உன் கிளையண்ட்?"

"இதோ! மாணிக்கம்!"

"நடக்காது. இவனை நாங்க கொஸ்டினுக்கு அழைச்சுட்டு போகப் போறோம்"

"நடக்காது! வாய்யா மாணிக்கம்"

"என்னய்யாது புதுக் குழப்பம்?"

"எப்படி நீங்க இவனை சும்மா லாக்கப்பில வைக்க முடியும்"

"இதபாருப்பா சட்டம் பேசறதுக்கு இது சமயம் இல்லை. இவன் யாருன்னு தெரியுமா?"

"ஒரு இந்தியக் குடிமகன்! இவனுக்கு இருக்கிற உரிமைகள் எல்லாம் எனக்கு நல்லாத் தெரியும்"

"இவன் பெரிய கேடிய்யா! இவன் மேல முப்பத்தாறு கேஸ் இருக்குது"

"முதல்ல இவனை பாச்சாதான்னு ஐடென்டிஃபை பண்ணுங்க"

"பண்ணியாச்சு"

"அப்ப அரஸ்ட் பண்ணியிருக்கிங்களா? அரஸ்ட் ரிப்போர்ட்டை காண்பிங்க!"

"இன்னும் அரஸ்ட் பண்ணலை!"

"இன்ஃபார்மல் டிட்டென்ஷனா? ஏன் சார் உங்களுக்கு அடுக்குமா? இவன்தான் பாச்சான்னு யாராவது அடையாளம் காட்டியிருக்காங்களா? எதாவது பரேடு வெச்சிங்களா? என்ன சார் இது அராஜகமா இருக்கு. இந்திய சட்டம் 22–வது ஆர்ட்டிக்கிள்படி இவன் உரிமை என்னன்னு உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லைன்னு நினைக்கிறேன்!"

போலீஸ் அதிகாரி "என்னய்யா இந்தாளோட எழவாப் போச்சு" என்று தலையில் அடித்துக்கொண்டு "இவனை யார் உள்ள விட்டாங்க" என்றார்.

"சிவசாமின்னு ஒருத்தனைப் பத்தி விசாரிக்க வந்தேன். இதபாருங்க சார், இவன்தான் பாச்சாவா இல்லையாங்கறது பற்றி கருத்து வேறுபாடு இருக்கலாம். இவன் பாச்சாவாவே இருக்கட்டும்! நீங்க செய்யறது சரியா? யோசித்துப் பாருங்க. நல்லா தீர யோசித்துப் பாருங்க. இவன்தான் பாச்சான்னு யாராவது அடையாளம் காட்டினாங்களா? இல்லை! இவனை கைது பண்ணியிருக்கிங்களா? இல்லை. இவனை நான் அழைச்சுக்கிட்டுப் போறதில என்ன தப்புங்கறிங்க? வா மாணிக்கம் போகலாம்."

மாணிக்கம் புரியாமல் விழித்தான்.

"யோவ் உம் பேரு என்ன சொன்னே" என்றார் அதிகாரி.

"வஸந்த்! சார் இதோ என் கார்டு"

"கார்டு இருக்கட்டும். கொஞ்சம் தனியா வரியா?"

"எங்க வேணாலும் வரேன். என் கட்சிக்காரனை விட்டுட்டிங்கன்னா சரி"

உதவி கமிஷனர் அவனை தனியாக அழைத்துச்



விஜயகாந்தை திணறடித்துவிட்டு, ஒண்ணும் தெரியாதவர் போல இருப்பவர், சுமிதா.
(படம்: "பார்வையின் மறுபக்கம்")

# அழியாத கவிஞர்

நடிகை பானுமதி

அமரர் கவிஞர் கண்ணதாசன் அவர்களுடன் எனக்கு கடந்த 30 ஆண்டாக—ஜுபிடர் தயாரித்த "ராணி", "மலைக்கள்ளன்" படத்தில் இருந்தே அறிமுகம் உண்டு.

என் சிறு வயதில் இருந்தே—40 ஆண்டாக —சினிமா படங்களில் எத்தனையோ பாடல் ஆசிரியர்கள் எழுதிய பல பாடல்களை பாடி இருக்கும் எனக்கு, இலட்சக்கணக்கான ரசிகர்கள் உண்டு. ஆனல், நான் மட்டும் கவிஞர் கண்ணதாசனின் ரசிகை. அவரது கவிதைகளில் மயங்கிப் போவேன்.

அவர் ஒரு சிறந்த கவிஞர். மாபெரும் தத்துவ மேதை. ஆனல், கர்வம் இல்லாதவர்.

இப்படிப்பட்ட சிறப்பு பெற்றவர்கள் சில பேர் தான் உலகப் புகழ் பெற்றவர்கள். அதில் கண்ணதாசனும் ஒருவர்.

அவர் ஒரு கல்விக் கடல். அந்த மகா சமுத்திரத்தை ஒரு சிறிய அண்டாவுக்குள் அடக்கியது போல அவருடைய அபாரத் திறமையை சினிமா பாடல்களில் மட்டும்தான் நமக்கு கேட்க முடிந்தது.

பண்டிதர் முதல் பாமரர் வரை எல்லோருக்கும் புரியும்படி சுவையான தத்துவம் உள்ள அவருடைய பாடல்களுக்கு இனிமையான இசை அமைக்கக் கூடிய மற்றொரு திறமைசாலி எம்.எஸ்.விசுவநாதன் தான. கவிஞரின் பாடலும் எம். எஸ். விசுவநாதனின் இசையும் பாலும் பழமும் போல இனிக்கும்.

எங்களது சொந்த தயாரிப்பில் கவிஞரின் பாடல் இடம் பெருத படமே கிடையாது.

தற்போது நான் எடுத்து முடித்துள்ள "அவள் ஏற்றிய தீபங்கள்", "இரவில் வந்த சூரியன்" ஆகியப் படங்களுக்கு தலைப்பு கொடுத்தவரே, கவிஞர்தான். அருமையான பாடல்களையும் எழுதினர். அப்பேற்பட்ட மாபெரும் கவிஞரை இழந்தது சினிமா உலகிற்கு துரதிர்ஷ்டமானது.

அவரது பூத உடல் அழிந்தாலும் ஆத்மாவுக்கு அழிவு இல்லை.

அதே போல, அவர் மறைந்தாலும் அவருடைய கவிதைகளுக்கு அழிவு இல்லை. ★

## பல மொழிகளில்...!

கவிஞர் கண்ணதாசன் எழுதிய "அழகி" என்ற கவிதை, 1956–57 ல் 14 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது.

"கண்ணதாசனின் குட்டிக் கதைகள்" என்ற நூல், கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, கன்னட பல்கலைக் கழகத்தில், ஒரு பாட நூல் ஆகவும் வைக்கப்பட்டு உள்ளது.

"விளக்கு மட்டுமா சிவப்பு?" என்ற நாவலும், "புஷ்ப மாலிகா" என்ற நூலும் மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டு இருக்கின்றன.



முதலமைச்சருடன் கவிஞர்.

சென்று அவன் தோளில் கை வைத்து "இதபாரு, இந்த கேசில குறுக்கிடாம இருக்கறதுதான் உனக்கு நல்லது. இவன் அழுது மாய்மாலம் பண்றதைப் பார்த்து மயங்கியிருக்கிறே! பாச்சா அசகாய சூரன்! ரொம்ப சிரமப்பட்டு புடிச்சிருக்கோம். சின்ன விஷயத்தை போட்டுக் குடையாதே! பாச்சா மேல ஏகப்பட்ட கேஸ் இருக்குது"

"நான் கேக்கறதெல்லாம் இவன்தான் பாச்சான்னு உறுதிப்படுத்துங்க.நான் போயிர்றேன்"

"அதுக்குத்தான் இவன் பழைய கூட்டாளி ஒருத்தனை திருநெல்வேலில இருந்து கூட்டியார சொல்லியிருக்கேன். அதுக்குள்ள இவனு ஒப்புக்கொள்கிருனுன்னு பார்க்கரும்"

"போட்டோ எதும் இல்லையா?"

"பழைய போட்டோ ஒண்ணுதான் இருக்குது. படம் பொருந்துது. அடையாளம் எல்லாம் சரியாத்தான் இருக்குது. முக்கியமா கன்னத்தில் உள்ள தழும்பு"

"போட்டோவைக் காட்டறிங்களா, நான் பார்க்கட்டும்"

"காட்டச் சொல்றேன்; இவனை விட்டுரு. நாளைக்கு ஆளை விட்டுருவோம்!"

"இல்லைங்க. அரஸ்ட் பண்ணிட்டு இருபத்தி நாலு மணி நேரம் தாராளமா வெச்சுக்கங்க. மாஜிஸ்ட்ரேட்டு கிட்ட எக்ஸ்டென்ஷன் வேணு வாங்கிக்கங்க"

"அரஸ்ட் பண்ணக் கூடிய நிலையில் இல்லையே இன்னும்"

"இதபாருங்க, உங்களுக்கு அரஸ்ட்டுக்கு நிறைய பவர்ஸ் இருக்குதே! எதையாவது உபயோகித்து கொள்ளுங்க. ஆனு இந்த மாதிரி சும்மா ஒரு ஆளை உள்ள வெச்சுகிட்டு சத்தாய்க்கறது நல்லால்லே. ரூல் ரூல்தானுங்களே! நான் கேக்கறது என்ன?"

"முதல்ல லாயர்ஸுங்களையே ஒழிச்சுக் கட்ட

ஒுமீயா!"

"அப்ப நான் அழைச் ட்டு போகலாங்களா" ன்றுன், வஸந்த். சாந்த ாக.

"போ! ஒழி! எங்க ட்டுட்டுப் போற சொல் ித் தொலே"

"கவலேயே படா ங்க. ஒரு பொறுப்புள்ள டிமகன்கிற முறையில அவன் நிஜமா குற்ற ாளியா இருந்தா உங்க ிட்ட ஒப்படைக்கிறதும் ன் கடமைதான். அவனே ன் ரூமுக்குத்தான் கூட் ட்டுப் போறேன். என் ார்டு கொடுத்திருக்கேன். அதில விலாசம் இருக்குது: உங்களுக்கு எப்ப அவனே ரியா அடையாளம் காட்ட தேவையோ அப்ப தானே கூட்டி வரேன். வாங்க மாணிக்கம் அல்லது ாச்சா எங்கூட வாங்க" என்று அவனே அழைத்துக் கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்த காரின் முன் கதவைத் திறந்து "உக் காருங்க, என்ன நடந்தது சொல்லுங்க" என்றுன்.

"அய்யா, என் தங்கச் சியை பறி கொடுத்துட் டேன்" வஸந்த் காரை கிளப்பினுன்.

"நிச்சயம் நீ பாச்சா இல்லேயா?"

"இல்லேங்க. நீங்களே இப்படிச் சொன்னு எப் படி? என்னேப் பாருங்க அய்யா, என் கண்ணேப் பாருங்கய்யா! உங்களுக்கு நான் எப்படி சொல்லி நம்ப வெப்பேன். என்னேப் பார்த் தால் லட்சக்கணக்கா திருடி னவன் மாதிரி இருக்கு தாய்யா?"

"தங்கச்சியைப் பறி கொடுத்தவன் மாதிரிதான் இருக்குது. பின்ன ஏன் அவங்க அவ்வளவு ஆணித் தரமா நீதான் பாச்சான்னு நம்பறுங்க? உங்க ரெண்டு பேருக்கும் முக ஒற்றுமை நிறையவே இருக்கணும். போலீஸ்காரங்க இந்த மாதிரியெல்லாம் அனுவசி யத்துக்கு சத்தாய்க்க மாட் டாங்க. இதுல ஏதோ சுவாரசியமா இருக்குது. அதை அப்பறம் பார்க்க லாம். முதல்ல உன் தங்கச் சியைப் பத்திச் சொல்லு.



## ஈழத்து ராணி

கவிஞர் கண்ணதாச னின் முதல் புத்தகம்— "ஈழத்து ராணி".

இது 1964–ல் வெளி வந்தது. சிறுகதைத் தொகுதி.

அருணேதயம் பதிப் பகம் இதை வெளியிட்டது. அருணேதயத்தின் முதல் புத்தகமும் இதுதான்.

---

அது எங்க போயிருச்சு?"

**ப**ம்பாய் வந்து சேர்ந்த போது மாலே நேரமாயிருச்சு. ரெயில் போறப்பவே சன்னல் வழியா இத்தனே பெரிய நகரமான்னு மலேப்பா இருந்தது. ரெயில் கூடவே போட்டி போட்டுகிட்டு மின்சார ரெயில் வந்தது. அதில கூரைமேல எல்லாம் சனங்க. கொஞ்சம் கொஞ் சம் கடற்கரை ஓரமா ரோடு தெரிஞ்சுது. அதில மூடிவில்லாம காருங்க. ஒரு ரோட்டு மேல இன் ெனரு ரோட்டு மேல எல் லாத்திலயும் காருங்க. எத் தனே சனங்க. முருகன் கதவு ஓரமா நின்னுக்கிட்டு காத்து வாங்கிக்கிட்டு இருக்க, அந்தப் பெரியவரு முன்னலே ஏதோ ஸ்டேச னில இறங்கிட்டாரு. இறங் கிப் போறப்பகூட என் னேத் திரும்பித் திரும்பிப் பார்த்தாரு. எனக்கு முரு கன் சொன்னது உண்மையா இருக்குமோ, இந்தப் பெரியவரு அப்படி ஒண் ணும் நல்ல மனுசன் இல்லே யோன்னு தோணிச்சு. பின்ன எதுக்கு என்னே அப் படி திரும்பித் திரும்பி பார்க்கணும்?

முருகன், "நாம இறங்க வேண்டிய எடம் வந்தி ருச்சு; சுகுணு" என்ருர்.

எடுத்துக்க சாமான் ஏதும் இல்லே. கட்டின புடவை அவ்வளவுதான்!

"முதல் காரியமா உங்களுக்கு சேஞ்சு புடவை வாங்கிக்கலாம். அப்படியே பல்பொடி, சோப்பு, போக்குவரத்து எல்லாம் வாங்கிக்கலாம்"

"இது என்ன இடம்?"

"இதும் தென்னூர்

மலர்: 22 இதழ்: 43
நுன்மதி: ஐப்பசி 23
(8-11-81)

**அட்டையில்**

நடிகை கே. ஆர். விஜயா.






புதுப்பெண் நடிகை சுமித்ராவின் இல்லறம் எப்படி இருக்கிறது? சுமித்ராவின் பேட்டி அடுத்த வார (15-11-81) "ராணி" இதழில் திருமணப் படங்களுடன் வெளிவருகிறது.






அழகு சிறிது காலம் நிலைத்திருக்கும் ஒரு கடுமையான ஆட்சி!

—சாக்ரடீஸ்.

ஸ்டேசன்தான். பாம்பே சென்ட்ரல்"

சென்ட்ரல்ல இருந்து சென்ட்ரல் வந்துட்டம். எனக்கு பயமாவும் அழுகை யாவும் வந்துச்சு. "இன்னேரம் அப்பாவுக்கு தந்தி போயிருக்குமில்ல"

"தாராளமா. இதோ நாளைக்கு திரும்பிப் புறப்பட்டுரலாம்"

எத்தனை பெரிய இடம்! பொட்டி பொட்டியா குழல் விளக்கு வெச்சு ஸ்டேசன்ல எத்தனை விளம்பரங்க! எல்லாரும் அவசரத்தில இருந்தாங்க.ஒருத்தரை ஒருத்தர் கவனிக்கவோ நின்னு பேசவோ நேரமில்லாம, எல்லாரும் எங்கயோ ஓடிக்கிட்டு இருந்தாங்க. ரெண்டு பக்கத்திலயும் ஓட்டம். ரெயில் வந்துக்கிட்டு இருக்கு அதுக்குள்ள தண்டவாளத்தை தாண்டி ஓடறுங்க. பொண்ணுங்கள்ளாம் பெரும்பாலும் குட்டையா பாவாடையும் மார்ல சட்டையும்தான் போட்டுக்கிட்டு இருந்தாங்க. ஒருத்தி கழுத்திலயும் நகையைக் காணம். எல்லாரும் குடை வெச்சிருந்தாங்க. மேற்கே சூரியன் கோவமா இருந்திச்சு. டிக்கெட் கொடுக்கறவங்க வாசலே நோக்கி நடந்தோம். முருகன் ரெண்டு டிக்கெட்டையும் கொடுத்துட்டு வந்தாரு. நான் பயந்துகிட்டே இருந்தேன்.

"எப்படி முருகன்? டிக்கெட்டை அவங்க பார்க்கலையா?"

"பார்த்தாங்களே!"

"மடவாக்கம் டிக்கெட்டுதானே அது?"

"ஒ, அதுவா! பார்க்கலே! டிக்கெட்டுன்னு எதாவது குடுத்தமின்னு சரி. இவங்களுக்கு அதில மடவாக்கம்னு எழுதியிருக்குதா, பம்பாய்ன்னு எழுதியிருக்குதான்னு பார்க்க எங்க சமயம்?"

"நடுவிலகூட யாரும் செக் பண்ணலியா?"

"இல்லே. நம் அதிர்ஷ்டம்"

வெளிய வந்தோம். தாடி வெச்சவங்க அழுக்கு முண்டாசு வெச்சுக்கிட்டு டாக்சி கிட்ட இருந்தாங்க. அந்த டாக்சிகளில் ஒண்ணை தேர்ந்தெடுத்து என்னை ஏறிக்கச் சொன்னரு. அந்தேரியோ முகந்தேரியோ என்னவோ சொன்னரு. இந்தில பேசினரு.

"உங்களுக்கு இந்தி தெரியுமா முருகன்?"

"எல்லாம் தெரியும்" சிக்கனமா இங்கிட்டும் அங்கிட்டும் பார்த்துக்கிட்டே சொன்னரு.

சாயங்காலமா ராத்திரியான்னு மயக்கமா இருந்தது. தூக்கம் இன்னும் என் கண்ணில மிச்சம் இருந்தது. போற ரோட்டில கலர் கலரா விளக்குகள் வெச்சு எத்தனை கடைங்க ரோட்டில நின்னுக்கிட்டு பல பேர் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. கண்ணாடிக்கு பின்னலே டெலிவிஷன் பெட்டிங்களா எல்லாத்திலயும் ஒரே படம் நடமாடிக்கிட்டு இருந்தது. பார்க்கற [illegible] பிளாட்பாரத்தில கோடி ஜனங்க நடந்துக்கிட்டு இருந்தாங்க.கடைக்காரங்க தொப்பி வெச்சுக்கிட்டு இருந்தாங்க. எத்தனை கடைங்க! எத்தனை பொம்மைங்க! எத்தனை பொம்பளைங்க! எல்லாரும் டாக் டாக்குனு நடந்து போறுங்க. ஆம்பிளைங்களை இடிச்சு தள்ளிக்கிட்டு போறுங்க.எல்லாரும் கைல பை வெச்சுக்கிட்டு இருக்காங்க. நாமகூட அந்த மாதிரி பை ஒண்ணு வாங்கிக்கணும். அரைப் பாவாடை போட்ட பொண்ணுங்கதான் எத்தனை பேரு! அஞ்சு மாடி, எட்டு மாடி, ஏன் திடீர்னு இருவது மாடி! எங்க பார்த்தாலும் சன்னல். எங்க [illegible] கடல்ல மணலே கரையே [illegible] திக்கிட்டு எல்லாம் கட்டடம். [illegible] கிடைச்ச போதெல்லாம் வேகமா போவுது. பச்சை விளக்கு கிடைக்கலேன்னு அங்கங்க கப்பு கப்புனு நிக்குது.ரோடுங்க பரவாலே. ஆனா, இத்தனை சனங்களைப்

## முதலும் முடிவும் "க"

"க" என்ற எழுத்தில் முதல் கவிதையை எழுதத் தொடங்கிய கண்ணதாசன், தனது கடைசி கவிதையும் "க" என்ற எழுத்திலேயே தொடங்கி முடித்தார்.

1944-ல், "திருமகள்" என்ற பத்திரிகையில் கவிஞர் எழுதிய முதல் கவிதை வெளி வந்தது.

"காலைக் குளித்தெழுந்து
கருஞ்சாந்து பொட்டு
மிட்டு
கருநாகப் பாம்பெனவே
கார் குழலைப் பின்ன
விட்டு..."

என்பது அந்தப் பாடல்.

1947-ல், "கன்னியின் காதலி" என்ற திரைப் படத்துக்கு கவிஞர் முதல் முதலாக பாட்டு எழுதினர். அவர் எழுதிய முதல் சினிமா பாட்டும் "க"வில் தொடங்குவதுதான்.

"கலங்காதிரு மனமே—
உன்
கனவெலாம் நனவாகும்
ஒரு தினமே..."

என்பதே அந்தப் பாடல்.

கண்ணதாசன் அமெரிக்காவுக்குப் புறப்படு முன் எழுதிய கவிதையும் "க"வில் தொடங்குவதுதான்! அது:—

"கருவறை தொடங்கி,
கல்லறை வரைக்கும்..."

---

பார்க்கறப்பதான் எனக்கு மயக்கமே வரும் போல ஆயிருச்சு. மெட்ராஸ் தான் சனம் சாஸ்தின்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன். இது என்னடான்னு மெட்ராஸைப்போல நாலு பங்கு! ஒரு கட்டடத்துல வந்து இறங்க மாடியில இருந்து, ஒரு ஆளு "ஆவோ! ஆவோ! முருகன்! மால்ல லாயா?"ன்னு என்னவோ இந்தில கேட்டது. எனக்கு அர்த்தம் புரியலே.

எனக்கு மலைப்பா இருந்தது.

முருகன், "சுகுணா [illegible]ர வேண்டிய இடம் வந்தாச்சு. இறங்குங்க" என்றரு.

(தொடரும்)

**14**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலீசார் "லாக்கப்"பில் வைத்தார்கள். சுகுணாவை பம்பாய்க்குக் அழைத்துச் சென்றான், முருகன்.




அந்த இடம் கொஞ்சம் சந்து போலதான் இருந்தது.

வீடு ஒரு மாடிக் கட்டடம்தான். மாடில இருந்து அந்தக் குரல் கேட்டதால நான் மேல பார்த்தேன்.

ஓர் ஆளு என்னைப் பார்த்து சிரிச்சுக்கிட்டு இருந்தாரு.

மரத்தால பால்கனி மாதிரி கட்டடத்தை சுத்தியும் இருந்தது. அந்தாளு யாருன்னு சரியாத் தெரியலை. குல்லா போட்டுட்டிருந்தாரு. நம்மூர் ஆளில்லை. அவர் சாய்ந்திருந்ததில மரத்தடுப்பு விழுந்துரும் போல இருந்தது.

முருகன் டாக்சிக்காரருக்கு பணம் கொடுத்துவிட்டு "இங்கயே இருங்க சுகுணா"ன்னு சொல்லிட்டு, பக்கவாட்டுப் படி மூலமா, மாடிக்கு போனார்.

அந்த மாடிக்கார குல்லாக்காரன்கூட எதோ தாழ்வாப் பேசினார். அந்த ஆளு என்னை வைச்ச கண் வாங்காம பாத்துகிட்டே பேசினான். இது என்ன இடம்?

"சுகுணா மேல வாங்க! இங்கதான் ரூம் போட்டிருக்கு."

"இது ஓட்டலா?"

"மேல வாங்க சொல்றேன்."

நான் மேல போறப்ப மரப்படி கிறீச் கிறீச்சுன்னு சத்தம் போட்டுது.

படியோட நிழல்ல சின்னதா ஓர் அறை மாதிரி இருந்தது.

கதவு திறந்திருக்க, உள்ள ஒரு வளந்த பொண்ணு பாடி பாவாடை போட்டுக்கிட்டு, கம்பீரமா உக்காந்துகிட்டு, எதையோ கடிச்சு தின்னுக்கிட்டு இருந்தது.

என்னைப் பார்த்து, "ஆவோ"ன்னுது.

நான் சிரிச்சேன்.

"ஆவோ"ன்னா "வாங்க" போல. கொஞ்ச கொஞ்சம் மடவாக்கத்தில இந்தி படிச்சபோது "எஹ் க்யாஹை! யஹ் கலம்ஹை"ன்னு படிச்சிருக்கேன். இங்க உதவுமோ தெரியலை.

அவள் மென்னுக்கிட்டே நான் படியேர்றதை கண்கொட்டாம பாக்கறு.

தயக்கமா மாடிப்பக்கம் வந்தேன். "சுகுணா இவருதான் இந்த கட்டிடத்துக்கு சொந்தக்காரரு. சாரங்கபாணிக்கு தெரிஞ்சவரு. நமக்கு ஆளுக்கு ஒரு ரூம் போட்டுக் கொடுத்திருக்காரு."

குல்லாக்காரரு "நமஸ்தே பெஹன்ஜி"ன்னாரு.

"பெஹன்"னா சகோதரின்னு ஞாபகம் வந்திச்சு. பரவால்லையே, என்ன நல்ல மனுசங்க. எல்லாரையும் சகோதரியா நினைச்சுக்கறதில எத்தனை பண்பாடுன்னு எண்ணிக்கிட்டு நானும் நமஸ்தே பண்ணினேன்.

அப்பறம் அவரு சரமாரியா இந்தில எதோ சொன்னாரு. எனக்கு சுத்தமா புரியலை. பொதுவா அவர் அபினயங்கள்ள இருந்து ரூமெல்லாம் சவுகரியமா இருக்கும்னு சொல்றாருன்னு தோணிச்சு.

பார்க்கலாம்னுட்டு அவர் திறந்துவிட்ட அறையைப் பார்த்தேன். உள்ள இரும்பில ஸ்பிரிங் கட்டில். ஆணில ஒரு படம் மாட்டியிருந்தது. ஒரு ஸ்டூல் மேல பானை கவுத்திருந்தது. சன்னல் சின்னதா இருந்தது. சுவத்தில செத்துப்போன ஊதுவத்தி சொருகியிருந்தது.

"உக்காரு, சுகுணா, கொஞ்ச நேரத்தில பையன் படுக்கை கொண்டாந்து போட்டுருவான்."

"இது ஓட்டலாங்க?"

"இல்லை. பல படிச்ச பொண்ணுங்க மாச வாடகைக்கு இருக்காங்க, மரியாதைப்பட்ட இடம்தான். இதுவே மத்த ஏரியாங்கள்ள எத்தனை வாடகை தெரியுமா? இந்த சின்ன ரூமுக்கு நானூறு ரூபா! அப்பறம் பகடி! சுகுணா நீங்கள் என்ன பண்றீங்க பேசாம ரெஸ்ட் எடுத்துக்கங்க. நான் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யறேன்.

# தமிழனுக்கு பெருமை!

மேல்நாட்டவர் எழுதிய நூல்களை நம் நாட்டு கல்லூரிகளில் பாட நூலாக வைப்பது உண்டு. ஆனால்,ஒரு தமிழர் எழுதிய நூலை லண்டனில் உள்ள பல்கலைக் கழகத்தில் பாட நூலாக வைத்து இருக்கிறார்கள்.

தமிழக பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் கி. வேங்கிட சுப்பிரமணியம் எழுதிய "கல்வியும் பொருளாதார முன்னேற்றமும்" என்ற நூல்தான், அது.

வேங்கிட சுப்பிரமணியம் பொருளாதாரத்தில்



வேங்கிட சுப்பிரமணியம்

"டாக்டர்" பட்டம் பெற்றவர். "கல்வியில் பொருளாதாரம்" என்ற பொருள் பற்றி ஆராய்ச்சி செய்தவர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பேராசிரியர் டாக்டர் சூல்ஸ் என்பவர், "இது மிகச் சிறந்த ஆராய்ச்சி" என்று பாராட்டியுள்ளார்.

"கல்வியும் பொருளாதார முன்னேற்றமும்" என்ற நூலை வேங்கிட சுப்பிரமணியம் எழுதியிருக்கிறார். இந்த நூல் இங்கிலாந்து நாட்டு பல்கலைக் கழகங்களில் எம். ஏ. வகுப்புக்கு பாட நூலாக வைக்கப்பட்டு இருக்கிறது. இது தமிழர்களுக்குப் பெருமை ஆகும்.

சாப்பிட்டுட்டு படுத்து தூங்கிட்டிங்கன்னு நாளைக்கு சுத்தி பாத்துட்டு சாயங்காலமே பம்பாயைவிட்டுப் புறப்பட்டு போயிரலாம். என்ன?"

"சரிங்க."

"கதவை சாத்திக்கங்க. முதல்ல உங்களுக்கு தேவையான சில அயிட்டங்கள் வாங்கிட்டு வரேன்."

கிளம்பிப் போய்ட்டார்.

எவ்வளவு நல்லவருன்னு நினைச்சுக்கிட்டேன்.

சன்னல் வழியா சேட் எட்டிப் பார்த்துட்டு "கப் டைக் ஹைன்" னுன்.

நான் தலையாட்டினேன்.

ஒரு சோக்ராப் பையன் தட்டில சப்பாத்தியும் கப்பில தயிரும் கொண்டு வந்து வெச்சான். கிண்ணத்தில பருப்பு மாதிரி எதோ இருந்தது.

எனக்கு புது அனுபவத்தினாலில் பசியே இல்லை அதும் சப்பாத்தி எனக்கு பழக்கமில்லே. இருந்தும் எதோ சாப்பிட்ட மாதிரி பேர் பண்ணிட்டு, முருகன் வருவாருன்னு காத்திருந்தேன்.

சன்னல் வழியா ஒரு பொண்ணு எட்டிப் பார்த்துது.

அவங்க பாஷயில எதோ சொல்லிச்சு.

நான் மையமாச் சிரிச்சேன்.

வேலைக்கு போகற பொண்ணு போல தோணுச்சு. ஆனல் பவுடர் கொஞ்சம் அதிகம் போட்டிருந்தது. இந்த ஊர் வழக்கம் போலும்.

படிக்க எதாவது புத்தகம் இருக்குமா? பார்த்தேன். அறையில பழைய செய்தித் தாள் மட்டும் தான் இருந்தது. இங்கிலீஷ் செய்தித் தாள். அதை கொஞ்ச நேரம் பொழுது போக படிச்சுக்கிட்டே இருக்கறபோது மறுபடி கண்ணைச் சொருகிருச்சு. தூங்கியே போய்ட்டேன்.

எழுந்திருக்கிறபோது என்ன மணின்னு தெரியலே.



**பா**ம்பு வேண்டுமா? இவர் விற்பனை செய்கிறார்!

பாம்பின் நீளத்துக்குத் தகுந்த விலை. ரூ. 50 முதல் ரூ. 500 வரை ஆகும். சாரைப் பாம்பு, நல்ல பாம்பு எது வேண்டுமானாலும் கிடைக்கும்.

பாம்பை வெட்டி, இரத்தத்தை ஒரு கிண்ணத்தில் பிடித்துக் கொடுக்கிறார். அத்துடன் தேன், சாராயம் கலந்து குடிக்கிறார்கள்!

பாம்பு இரத்தம் குடித்தால், ஆண்மை வளருமாம். முதுகு வலி, கண் பார்வை குறைவு, சிறுநீரகக் கோளாறு ஆகியவற்றுக்கும் நல்லதாம்.

பாம்பை வெட்டி துண்டு போட்டு கொடுப்பார்கள். வீட்டுக்குக் கொண்டு போய் சமைத்து சாப்பிடலாம்!

தாய்லாந்து நாட்டில் இவ்வாறு பாம்பு இரத்தம் விற்கப்படுகிறது!

—எச். ரகுமான், ஆங்காங்.

இன்னும் இரவுதான். ராத்திரி பன்னிரண்டு இருக்கும் போலத் தோணிச்சு.

என்ன இன்னும் முருகன் வரல?

அறைக் கதவைத் திறந்து பாக்கலாம்னு, அது வெளிய சாத்தி தப்பா போட்டிருந்தது.

என்னதுன்னு கூப்ட்டுப் பார்த்தேன். "முருகன்! முருகன்!" அது ஒண்டிதான் எனக்கு தெரிஞ்ச பேரு.

முருகன் அருகில இருக்கிறதா தெரியலே.

சன்னல் வழியா எட்டிப் பார்த்தேன்.

வரிசையா பால்கனில பெண்ணுங்க நின்னுக்கிட்டு இருந்தாங்க. எதோ தெருவில ஊர்வலம் போல இருக்குது. அதான் வேடிக்கை பார்க்கறாங்க போலன்னு நினைச்சுக்கிட்டேன்.

அந்தப் பொண்ணுங்கள்ளாம் ஒரு வேளை இங்க விடுதியில தங்கறவங்க போலன்னு எண்ணிக்கிட்டேன். ஆனல் எந்தப் பொண்ணு போட்டிருந்த டிரஸ்சும் நல்லால்லே. ஒண்ணுத்துக்கும் மார்ல துணி இல்லே. வெறும் ரவிக்கை தான்.

எல்லாரும் கீழ பாத்துக்கிட்டு, யாரையோ கூப்பிடுறப்பல "ஸ் ஸ்"ன்னு குரல் கொடுத்துகிட்டு

இருந்தாங்க.

எனக்கு புரியலே.

ஒவ்வொருத்தியும் வாய் பூரா லிப்ஸ்டிக் போட்டுக்கிட்டு, ஏராளமா பவுடர் போட்டுக்கிட்டு, மார்பை காட்டிக்கிட்டு, பெரிசா சிரிச்சுக்கிட்டு, கீழ போற வங்களேக் கூப்பிட்டுக்கிட்டு இருக்கா.

அய்யய்யோ, இது என்ன இடம்!

“இது என்ன இடங்க?” என்றான், மாணிக்கம்.

“இது தான் என் [illegible]”

“அய்யா, நீங்கள் நல்லா இருப்பிங்கய்யா. என்னே போலீஸ்காரங்க கிட்ட இருந்து மீட்டுக் கொடுத்துட்டிங்க. இந்த உதவியை நான் சென்மத்துக்கும் மறக்க மாட்டங்க. எப்படியாவது என் தங்கச்சியை மட்டும் கண்டுபிடிச்சுக் கொடுத்திட்டிங்கன்னு...”

“முதல்ல உன் தங்கச்சி பேர் சொல்லு.”

“சுகுணுங்க.”

“கல்யாணம் ஆயிருச்சா?”

“சேச்சே, சின்னப் பொண்ணுங்க.”

“சின்னப் பொண்ணுன்னு, எட்டு வயசா?”

“இல்லேங்க. காலேஜ் எல்லாம் படிச்சுட்டு வேலே கிடைச்சு, வேலே ஒப்புக்க வந்த இடத்தில ஆன கதியைப் பாத்திங்களா!”

“ஐ ஸீ! உன் தங்கச்சி போட்டோ ஏதாவது இருக்கா?”

“ஊர்ல இருக்குதுங்க.”

“எந்த ஊர்?”

“வீரவாக்கம்! மடவாக்கத்துக்கு பக்கத்தில.”

“ரெண்டு வாக்கமும் எனக்கு தெரியாது. மெட்ராஸில தெரிஞ்சவங்க யாராவது இருக்காங்களா, உனக்கு?”



## தேள் மருந்து

தேள் விஷத்தில் இருந்து ஒரு மருந்து தயாரிக்கப்படுகிறது.

நரம்புத் தளர்ச்சி நோய்க்கு இந்த மருந்து பயன்படுகிறது.

---

“இருக்காங்கய்யா! தங்கவேலுன்னு ஒருத்தர். அவரு கூட ஸ்டேசனுக்கு வரதா இருந்தது, வரலேங்க.”

“அவரு விலாசம் இருக்குதா?”

“இருந்ததுங்க. தொலேஞ்சு போயிருச்சு.”

“சான்ஸே இல்லே! நீ காலி! மெட்ராஸில சுகுணுன்னு ஒரு பொண்ணே தேடித் தரணுமா? ஆளே விடுய்யா!”

“அய்யா, அய்யா! அப்படி சொல்லாதிங்கய்யா! நான் தங்கச்சி இல்லாம ஊர் போய்ச் சேர முடியாதுங்க. எங்கப்பாரு பெல்ட்டால வீசிப்பிடுவாரு.”

“எப்படித் தொலேச்சே? முழுசா ஒரு பொண்ணே தொலேக்கணும்னு, அதும் பகல்ல! கில்லாடிய்யா நீ!”

“அது வந்துங்க, ஸ்டேசன்ல இறங்கினமா காலேல...” மாணிக்கம் நடந்தது அத்தனேயும் சொன்னுன். பஸ்சுக்கு விசாரிக்க போனது, திரும்பி வந்தபோது சுகுணுவைக் காணுதது, சென்ட்ரல் ரெயில் நிலேயத்தில் நடந்த சண்டை, அதன்பின் போலீஸ்காரர்கள் அவனே அழைத்துப் போனது, பாச்சா பாச்சா என்றது எல்லாவற்றையும் தெரிவித்தான்.

“உம் அப்படியா!” என்று பெருமூச்சு விட்டான், வசந்த். “உன் தங்கச்சி ரெயில் நிலேயத்தில பத்து நிமிஷத்தில காணுமப் போயிருக்கான்னு யாரோ, அவளே ஏதோ

சொல்லி அழைச்சுக்கிட்டுத் தான் போயிருக்கணும். ஒருவேளை அந்த தங்க வேலுன்னியே அவர் வந்து கூட்டிட்டுப் போயிட்டாரோ, என்னவோ?"

"அப்படி தனியா போகாதுங்க, நான் இல்லாம! வேற எதோ நடந்திருக்கு."

"வேற எதோ நடந்திருக்கு! என்னன்னு தெரியாது! நல்லது, சுத்தமா ஒண்ணுமே தெரியாம உன் கேஸை ஆரம்பிக்கலாம். முதல்ல உக்காரு. எனக்கு குருநாதர் கணேஷ்னு இருக்காரு. அவரு வரட்டும்."

"சாமியாருங்களா!"

"இல்லை. என்னைப் போல வக்கீல்தான்! அவரும் கொஞ்சம் யோசிச்சாருன்னா எதாவது வழி சொல்வாரு. அவரு வரட்டும். அதுவரைக்கும் இங்க உக்காரு."

மாணிக்கம் கீழே உட்கார்ந்தான்.

"தரைல உக்கார தம்பியா. இந்த மாதிரி அசடா இருந்தின்னா தங்கை என்ன, குடும்பத்தையே தோத்துருவே! இதபாரு, இந்த ஊர்ல எல்லாம் அடிச்சா மாதிரி பேசணும், நடந்துக்கணும்."

"அய்யா நான் கிராமத்து ஆசாமிங்க. எனக்கு ஒரு சங்கதியும் தெரியாதுங்க."

"உன் நெத்திலே எழுதி ஒட்டிருக்கு, எல்லாரும் வாங்க, என்னை ஏமாத்துங்கன்னு."

மாணிக்கம் மறுபடி அழத் தொடங்கினான்.

"பொட்டை மாதிரி அழறதை நிறுத்து முதல்ல."

"என் தங்கச்சிங்க... என் தங்கச்சிங்க"ன்னு தொடங்கி, பாக்கி வார்த்தைகளைக் கண்ணீரில் மழுப்பினான் மாணிக்கம்.

"இதபாரு, மாணிக்கம், கவலைப்படாத. எப்படியாவது உன் தங்கச்சி எங்க இருந்தாலும் கண்டு பிடிச்சுக் கொடுக்க முயற்சிக்கிறேன்" என்றான், வசந்த்.

அப்போது உள்ளே நுழைந்த கணேஷ், "வசந்த் யார் இது! ஹால் பூரா அழுதிட்டிருக்கான்."

"பாஸ், இந்தாளு கேஸ் ரொம்ப விநோதம்."

"சிவசாமி என்ன ஆச்சு?"

"சிவசாமி கிடைக்கலை. அதுக்கு பதிலா மாணிக்கம். மெட்ராஸ் இவனை எல்லாத்தை உருவி விட்டு அனுப்பிருச்சு. ஜெயிலுக்கு போக இருந்தான், போலீஸ்கிட்ட மாட்டிக்கிட்டு. அவங்க என்னடான்னா இவனை வேற எவனோன்னு நினைச்சுக்கிட்டு கேள்வி மேல கேள்வியாக கேட்டுக்கிட்டு இருக்காங்க. கொஞ்சம் தடாலடி விட்டு, மீட்டுக்கிட்டு வந்தேன்."

"சரிதான்! எதுக்கு கூட்டி வந்தே?"

"பாவம் பாஸ்! தங்கச்சியை தாரைவாத்துட்டான்!"

அப்போது டெலிபோன் ஒலித்தது!

(தொடரும்)



## பாட்டி வைத்தியம்

### குடல் பூச்சி

பாட்டி! என் குழந்தைக்கு குடலில் பூச்சி இருக்கிறது. இதை அழிக்க என்ன செய்ய வேண்டும்?

(என். நாகமணி, கழுகுமலை)

குடல் பூச்சிகள் குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கும். அவற்றை உடனே ஒழிக்க வேண்டும்.

இதற்கு, பூசணிப் பருப்பு, அல்லது வாய் விளங்கம், கடுகு ரோகிணி ஆகியவற்றை சம அளவில் எடுத்து இடித்து தூள் செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தூளை, சர்க்கரையுடன் சேர்த்து, தினசரி காலை, பகல், மாலை மூன்று வேளையும் குழந்தைக்குக் கொடுத்து வாருங்கள். குடல் பூச்சி ஒழியும். குழந்தை ஆரோக்கியமாக வளரும்.

### மஞ்சள் காமாலை

பாட்டி! என் நண்பன் மஞ்சள் காமாலை நோய் அதிகமாகி கஷ்டப்படுகிறான். இதற்கு நன்றாகக் குணமாக்கக் கூடிய நாட்டு மருந்து இருக்கிறதா?

(வே. கோபால், நெல்லை)

எந்தவிதமான மஞ்சள் காமாலை நோயையும் போக்கும் சக்தி, மஞ்சள் கரிசலாங்கண்ணி என்ற செடிக்கு உண்டு.

மஞ்சள் கரிசலாங்கண்ணியின் இலையைப் பிடுங்கி, இடித்து சாறு எடுத்து குடிக்க வேண்டும். முதல்நாள் கால் அவுன்சு குடிக்க வேண்டும். 2-வது நாள் அரை அவுன்ஸ். இப்படி கால் அவுன்சாகக் கூட்டிக்கொண்டு போய், 10-வது நாள் 2½ அவுன்சு குடிக்க வேண்டும். பிறகு, மறுநாளில் இருந்து கால் அவுன்ஸ் குறைத்து குடித்துக்கொண்டு வரவும். இப்படி 10 நாள் குடிக்கவும். 20 நாள் இப்படி குடித்து வந்தால், நாள்பட்ட மஞ்சள் காமாலை நோய்கூட குணமாகும்.

## சிறந்த மருந்து



"எல்லோரும் எங்கே ஓடுகிறீர்கள்?"

"நாகபட்டினத்தில் எண்ணெய் கிணறு கண்டு பிடித்து இருக்கிறார்களாம்"

## காதலுக்குக் கடன் இல்லை!

"இவள் ஓர் ஜப்பானிய அழகி. அங்கு ஒரு பாங்கில் வேலை செய்தாள். திடீர் என்று விடுமுறை எடுத்துக்கொண்டு, மணிலா நாட்டுக்குப் போனாள். அங்கு இவளை போலீசார் கைது செய்தார்கள்.

காரணம்—

தான் வேலை செய்த பாங்கில் ரூ. 60 இலட்சம் திருடிவிட்டாள்!



இடோ

இவள் பெயர் "இடோ" என்பது. 23 வயது ஆகிறது.

திருட்டுக் குற்றத்தை இவள் ஒப்புக்கொண்டாள். போலீசாரிடம் இவள் சொன்னது—

"என் காதலனுக்கு நிறையக் கடன் இருந்தது. அதைத் தீர்க்கவே பாங்கியில் திருடினேன்!"

—கலியுல் ரகுமான், ஆங்காங்.

# சுஜாதா

COMICS PDF TIMES

## கருத்தி நினைக்கையிலே



## 15

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போய், தனி அறையில் அடைத்துப் போட்டார்கள். அவர்கள் சுகுணாவை கற்பழிக்க முயன்றபோது, முருகன் வந்து அவளைக் காப்பாற்றினான். மாணிக்கத்தை போலீசாரிடம் இருந்து வசந்த் அழைத்து வந்தான். சுகுணாவை ஏமாற்றி பம்பாய்க்கு அழைத்துச் சென்ற முருகன், அவளை ஒரு விபசார விடுதியில் சேர்த்தான்.

கணேஷ் டெலிபோனை எடுத்துப் பேசினான். “ஹலோ ராஜேந்திரன் என்ன விஷயம்? நீங்க எனக்கு போன் செய்யறிங்கன்னு எதாவது விஷயம் இருந்துதான் ஆகணும்.”

கணேஷ் சற்று நேரம் கேட்டுக்கொண்டிருந்தான். மாணிக்கம் அதில் கவனமில்லாமல் சன்னல் வழியாக தெரிந்த சென்னை நகரின் சலனங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தான். கணேஷ் போலீஸ் உதவிக் கமிஷனருடன் அவனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறார் என்பது மாணிக்கத்துக்கு தெரிந்திருக்கவில்லை. டெலிபோனை வைத்ததும் கணேஷ் சற்று கவலை முகத்துடன் “வசந்த்! கேஸ் கொஞ்சம் சிக்கலாத்தான் இருக்குது” என்றான்.

“ஏன் பாஸ்.”

“இவன்தான் பாச்சா. அதைப்பத்தி சந்தேகமில்லை!”

மாணிக்கம் அதிர்ந்து திரும்பினான்.

“அய்யா! யாரை? என்னையா சொல்றிங்க?”

கணேசும் வசந்தும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

“பாழாய்ப் போன ஸ்கூலுக்குப் போய்த் தொலைத்திருக்கலாம். மாங்கா மரத்தில் ஏறி இருக்கிற சந்தர்ப்பங்களை எல்லாம் நழுவ விடாமல் இருந்தால் இப்போது இவர்கள் பேசும்போது பேந்தா மாதிரி விழிக்க வேண்டாம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு ஏதோ சமிக்ஞை போலப் பேசிக்கொள்கிறார்கள். அய்யோ இவர்களும் என்னைப் பாச்சா என்று நம்புகிறார்களா? என்ன அவஸ்தை! நான் எப்படி இவர்கள் எல்லோரையும் நம்ப வைப்பேன்” மாணிக்கம் தனக்குள் புலம்பினான்.

“இதபாரு பாச்சா. போலீஸ் பெரிய ஆபீசர் கிட்ட இருந்தே எனக்கு தகவல் வந்திருச்சு. உன்னை அவங்க கைல ஒப்படைக்கும்படி.”

“தகவல் என்ன? உத்தரவு பாஸ்!”

“என்னங்க, நீங்களும் போலீஸ் சொல்றபடி நம்பறிங்களா!”

“ஏன்யா, போலீஸ்காரங்க தீர விசாரிக்காம இந்த முடிவுக்கு வருவாங்களா? அவங்ககிட்ட எத்தனையோ சாதனங்கள்ளாம் இருக்குது. போட்டோ எடுத்திருக்காங்க. அங்க அடையாளங்கள்ளாம் வெச்சிருக்காங்க.”

“அய்யா என்னை போலீஸ்கிட்ட சண்டை போட்டுக்கிட்டு மீட்டுக்கிட்டு வந்திங்களே, எதுக்குங்க?”

வசந்த் அவனை நேராகப் பார்க்காமல் “அதான் தப்பா போயிருச்சு. நான் ஏதோ போகிற போக்கில உதவி செய்யப்



“காவடி ஓசை” என்ற படத்தில், விஜயசாந்தி—சேகர்.

போய் எக்கச்சக்கமாப் போயிருச்சு. இதபாரு பாச்சா, எங்களுக்கு உங்க சங்காத்தமே வேண்டாம். நீங்கள்ளாம் பெரிய கைங்க. உன் கேஸை எடுத்துக் கிட்டா சான்சே இல்லே!"

"அய்யா நான் பாச்சா இல்லேங்க."

"ச்சு! சும்மா இத பாரு பொய் சொல்றதெல்லாம் ஆயிருச்சு. வக்கீல் கிட்ட உண்மையைச் சொல்லிரணும். வக்கீல்கிட்டயே பொய் சொன்னு உன்னே யாரும் காப்பாத்த முடியாது."

"ஏங்க, தெளிவா எளிமையா உண்மைன்னு ஒண்ணு இருக்குமே அது ஏங்க யார் கண்ணுக்கும் படவே இல்லே."

"பாச்சா! நான் சொல்றதைக் கேளு. பேசாம குற்றத்தை ஒப்புக்கிடு. மொத்தம் ஆறு ஏழு வருசத்தோட போயிரும். செயில்ல போய் நல்ல படியா நடந்துக்கிட்டா ரெண்டு வருசம் குறையும். என்ன சொல்றே?"

மாணிக்கம் தரையில் உட்கார்ந்துகொண்டு தலே மேல் கைவைத்து சம்பிரமாக அழுதான். "அய்யா நான் பாச்சா இல்லிங்கய்யா. திடீர்னு யாருங்க உங்கள் மனசை மாத்தினுங்க?"

"சரிதான் போய்யா! பாஸ் இவனே வெச்சுக்கிட்டு என்ன செய்யறது?"

கணேஷ் யோசித்து "போலீஸ்காரங்க வர வரைக்கும் பாதுகாவலா வெச்சிருக்கணும். அவங்க வந்தா ஒப்படைக்க வேண்டாமா?"

"பாஸ் ஒண்ணு செய்யலாம்! இவனேத் தப்பிக்க விட்டுட்டா என்ன?"

"சே சே. போலீசுக்கு நாம ஜவாப் சொல்ல வேண்டாம்? நிச்சயம் நம்மை உள்ள தள்ளிடுவாங்க."

"நம்மகிட்ட தபாய்ச் சுட்டு ஓடிப்போய்ட்டான்னு சொல்லிட்டா என்ன?"

"ஏன்? எதுக்கு செய்யணும்?"

"இவனே பார்த்தா ஒரு ஓரத்தில பரிதாபமும்கூட ஏற்படுகிறது. பாஸ் ஒருவேளே இவன் சொல்றது உண்மையா இருந்தா? ஒரு அறியாத ஆத்துமாவைப் போலீஸ்கிட்ட பிடித்துக் கொடுத்த பாவத்துக்கு நாம ஆளாகறோம் இல்லேயா?"

"அதெல்லாம் பேசக்கூடாது. நான் ராஜேந்திரன்கிட்ட வாக்கு கொடுத்திருக்கேன். இதோ இப்ப போலீஸ்காரங்க வரப் போறாங்க. இவனே அவங்ககிட்ட பிடித்து ஒப்படைக்க வேண்டியது நமது கடமை. ஏற்கெனவே பேப்பர்ல கூட வந்துருச்சாம். போய் ஒரு பிரதி வாங்கிட்டு வா. பார்க்கலாம்."

வசந்த் வெளியே போய் வாங்கி வந்த மாலே செய்தித் தாளில் "பிரபல கேடி பாச்சா கைது!" என்று கொட்டை எழுத்துக்களில் தெரிந்தன. ஸ்டேசனில் வைத்து எடுத்த போட்டோகூட பதிவாகியிருந்தது.

வசந்த் அதை வரி வரியாக வாசித்துக்கொண்டே "பாஸ்! நாமகூட நியூஸ்ல இருக்கோம்."

"எங்கே படி."

"நகரத்தின் பிரபல வக்கீல்களான வசந்தும் கணேசும் பாச்சாவை ஜாமீனில் விடுதலே வாங்கி

## கப் சிப்!

"டா" போட்டு உரிமையோடு பழகி வந்த இசை இளவலுக்கும், வெளிநாட்டு பெயரோடு உள்ள பின்னணிப் பாடகருக்கு இடையே இப்போது ஊடலாம். தகராறுக்குக் காரணம்? மூச்! அது இரகசியம்!

"கா"ந்த நடிகர் பேசுவது என்னவென்றே புரிய



வில்லே. பேசாமல் "டப்பிங்" குரல் கொடுத்து விடுங்கள்" என்று, தயாரிப்பாளர்களிடம் முறையிடத் தொடங்கியிருக்கிறார்களாம், படம் வாங்கி திரையிடும் வினியோகஸ்தர்கள்!



## பாட்டி வைத்தியம்

### சொறி சிரங்கு

பாட்டி! என் தம்பிக்கு சொறி சிரங்கு வந்து இருக்கிறது. இதற்கு ஒரு மருந்து சொல்லுங்கள்.

(நாகராஜன், கரந்தை)

சொறி சிரங்குக்கு ஓர் எளிய, நல்ல மருந்து இருக்கிறது. பயன்படுத்திப் பாருங்கள்.

குப்பைமேனி இலேச் சாறும், தேங்காய் எண்ணெயும் சம அளவில் எடுத்து காய்ச்சி இறக்கவும். அதில் ஒரு கரண்டி மஞ்சள் பொடியை தூவி கலக்கி, புட்டியில் பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த எண்ணெயை தொட்டு, சிரங்கு புண் உள்ள இடங்களில் நன்ருக பூசி வாருங்கள். சொறி சிரங்கு மறையும்.

### விக்கல்

பாட்டி! என் 8 மாத குழந்தைக்கு அடிக்கடி விக்கல் ஏற்படுகிறது. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

(மாலா, செங்கோட்டை)

குழந்தைக்கு விக்கல் வருவது நல்லதுதான். ஆனுல், அதிகமாக வந்தால், ஒரு மருந்து இருக்கிறது. பயன்படுத்திப் பாருங்கள்.

மயில்பீலி சுட்ட கரியும், திப்பிலியும் பொடித்துச் சேர்த்து தேனில் குழைத்து குழந்தையின் நாக்கில் தடவுங்கள். விக்கல் நிற்கும்.

சிறுதேக்கு, திப்பிலி, கடுகுரோகணி ஆகியவற்றை பொடித்து, தேனில் குழைத்து கொடுத்தாலும், விக்கல் போகும்.

### தலைவலி

பாட்டி! எனக்கு வயது 22. மாலே நேரம் வந்துவிட்டால், தவுறுமல் தலே வலியும் வந்து விடுகிறது. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

(எம். கோபால், சென்னை)

உடனே ஒரு டாக்டரைப் போய் பாருங்கள். டாக்டர் ஆலோசனேப் படி, சிகிச்சையை தொடருங்கள்.

## சிறந்த மருந்து



"மாலா! நிச்சயமா சொல்கிறேன். அடுத்த ஆண்டு தீபாவளிக்கு, நாம் உங்க வீட்டுக்கு போகப் போவது இல்லே. என்னுல் மாவு ஆட்டி கட்டுப்படி ஆகாது!"

அழைத்துச் சென்றிருப்ப தாக தெரிகிறது."

"சரிதான் எல்லாம் பொய்! அரஸ்ட்டே இன்னும் ஆகலே! அதுக்குள்ள எத்தனே திரிச்சுட்டாங்க பாத்தியா வசந்த்! இவனேப் பார்த்துக்க. நான் கார் எடுத்துட்டு வெளிய போய்ட்டு சீக்கிரமே வந்துர்றேன். ஜாக்கிரதையா பாத்துக்க."

"சார் வி. ஐ. பி.! என்ன?"

"போங்க பாஸ். பாத்துக்கறேன்."

கணேஷ் போனதும் வசந்த் மாணிக்கத்தைப் பார்த்து "பாத்தியாய்யா நீ எவ்வளவு பிரபல மாய்ட்டே பாத்தியா?"

"அய்யா இந்த செய்தியை வீரவாக்கத்தில யாராவது பார்த்து அப்பா கிட்ட காட்டினுங்கன்னு என்ன ஆவுறது."

"உங்கப்பா சந்தோசப்படுவார். நம்ம மகனேக்கொண்டு பேப்பர்ல வந்திருக்கான்னு!"

"இல்லேங்க. ரொம்ப வருத்தப் படுவாருங்க. உடனே இங்க வந்து என்னே மீட்டுட்டு போக வந்துருவாங்க."

"யோவ் உன்னேப் பாத்தா எனக்கு இன்னும் நம்பிக்கையாகலேய்யா நீயா கேடி?"

"இல்லேய்யா இல்லேய்யா."

வசந்த் யோசித்தான். "ஒரு காரியம் பண்ணு! தப்பிச்சுட்டு ஓடிப்போயிருவியா?"

"எங்கய்யா?"

"கிட்ட வா வழி சொல்றேன். அதுக்கு முந்தி உன் தங்கை சமாசாரம்!"

அய்யோ இது ஒரு மாதிரியான இடம் போல இருக்கேன்னு எனக்கு அதிர்ச்சியாயிருச்சு. என்

## நடிகைக்கு மந்திரி பதவி

கிரேக்க நாட்டில் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டு இருக்கிறது. மெலினு என்ற பெண், பண்பாட்டு அமைச்சர் ஆக நியமிக்கப்பட்டு இருக்கிறுர்.

மெலினு ஒரு புகழ் பெற்ற நடிகை. 55 வயது ஆகிறது.

[redacted]

ணது முருகன் இந்த மாதிரி இடத்துக்கு கொண்டாந்து விட்டுட்டாரு. எங்க போனுரு எப்ப வருவாரு, வெளிய கதவானுப் பூட்டியிருக்குது...

அப்ப வெளிய பேச்சுக் குரல் கேட்டுது.

"நயா மால் ஹை தேக்ளு மத்ராஸி சோக்ரிஹை."

சன்னல் வழியா ரெண்டு மூஞ்சி எட்டிப் பாத்துது. அதில ஒருத்தனே நான் அறைக்கு வரப்ப பாத்திருக்கேன். முருகனே வரவேத்த ஆளு. இன்னெருத்தன் புதுசு. என்னே மேலயும் கீழயும் பாக்கருன். பார்வையிலயே எல்லாத்தையும் உருவி விடறுப்பல.

"சோக்ரி அச்சிஹை!"

"தோ, லேலோ!"

கதவைத் திறக்கருங்க. "ஆவோ! ஏம மாலினி"ன்னு அந்தாளு என்னேக் கூப்பிட்டான். நான் பயந்துபோய் "முருகன்! முருகன்! எங்க?"

"முருகன்? முருகன் சலாகயா!"

ஒருத்தன் மட்டும் உள்ள வந்து கதவை சாத்திக்கிட்டான். எனக்கு சப்த நாடியும் ஒடுங்கிப்போச்சு. என்ன செய்யறது? என்னத்தை செய்வேன். கடவுளே என்னே யார் இப்ப காப்பாத்தப் போருங்க!

உள்ள வந்தவன் சாவகாசமா உக்காந்துகிட்டு தன் பூட்ஸை அவுத்து சாக்ஸை அவுத்து என்னேப் பாத்து சிரிச்சுக்கிட்டே சிகரெட் பத்தவைக்கிறுன்.



நான் ஒரமா உறைஞ்சு போய் நிக்கறேன்—மாரு படபடன்னு அடிச்சுக்குது. நல்ல தாட்டியா இருக்கிறான். தலை கலைஞ்சு கண்ல கலக்கமா இருக்கிறான். சட்டைப் பித்தானை ஒவ்வொண்ணு விலக்கி பனியன் தெரியுற மாதிரி பாடி காட்டறான். உக்காருன்னோ ஏதோ சொல்றான். நான் அவனை சேவித்து "அய்யா! நான் தவறிப்போய் இந்த இடத்தில வந்து மாட்டிக் கிட்டேன். என்னை விட்டுருங்கய்யா."

அவன் சிரித்து "மத்ராஸி பாஷா ஹம்கோ நை ஆத்தா ஹை"ங்கறான். கிட்ட வந்து என் சேலையைப் பற்றி இழுத்தான். இழுத்து சுருட்டிக்கிட்டு இன்னொரு மூலைக்கு போய் ஒதுங்கிக்கிட்டேன்.

"பைசா! பைசா தியாஹை!" என்கிறான்.

"அய்யா நான் அப்படிப்பட்டவ இல்லைய்யா! தெரியாத்தனமா மாட்டிக் கிட்டேன். உங்க தங்கச்சி மாதிரி நினைச்சுக்கிட்டு என்னை விட்டுருங்கய்யா."

அவனுக்கு நான் சொன்னது ஏதும் புரியலை. என்னை மூலையில வெச்சு இரண்டு கைகளையும் சுவத்தில வைத்து அழுத்தி கன்னத்தில முத்தம் கொடுக்கப் பார்த்தான். நல்லா கடிச்சேன். "உஸ் ஆ"ன்னு பின்



மலேசியா வாசுதேவன் வார்த்தையில், மம்தாவுக்கு நம்பிக்கை இல்லையோ!

(படம்: "நிழல் சுடுவதில்லை")

வாங்கினான். நான் கதவை நோக்கி ஓடினேன். அவன் பாஞ்சு வந்து என் இடுப்பைப் பிடிச்சான். முழங்காலால உதைச்சேன் தாடையில பட்டுது. இந்த மாதிரி எதிர்ப்பேன்னு அவன் எதிர்பார்க்கலை போல. அப்படியே தாடையைப் பிடிச்சுக்கிட்டு உக்காந்துட்டான். சத்தம் போட்டு யாரையோ கூப்பிட்டான். நான் அதுக்குள்ள கதவைத் திறந்துக்கிட்டு அறைக்கு வெளிய வந்து தடதடன்னு மாடிப் படியில இறங்கினேன். இறங்கின வேகத்தில மாடிப்படி மொத்தமா பயங்கரமா ஆடுது. என்ன வந்தாலும் சரி இந்த இடத்தைவிட்டு எங்கயாவது ஓடிப்போயிரணும்னு ஒரே மூச்சில காலில செருப்பில்லாம ஓடினேன்.

இதுக்குள்ள அவன் போட்ட கூச்சல்ல மற்ற அறைங்கள்ள இருந்தெல்லாம் பெண்ணுங்க எட்டிப் பார்க்க நான் தெருவில வந்து சேர்ந்துட்டேன். சந்து...உயிரைப் பிடிச்சுக்கிட்டு ஓட ஆரம்பிச்சேன்—குறுகலான சந்து. எதித்தாப்பல, சந்தின் முடிவில ஒரு ஆள் என்னைப் பாக்க ஓடி வர்றான். நான் உடனே எதிர்பக்கம் ஓட ஆரம்பிச்சேன். அங்கயும் ஒரு ஆளு அகலமா கையை விரிச்சுக்கிட்டு ஓடி வர்றான். என்ன செய்யறதுன்னு தெரியாம மத்தியில இருந்த ஒரு வீட்டுக்குள்ள நுழைஞ்சேன். படேர்னு கதவைத் திறந்துக்கிட்டு உள்ள நுழையறேன். அங்க நான் பாத்த காட்சியில அழுகை வந்திருச்சு. பொம்பளை படுத்திருக்கா. அவ மேல... அவமேல். வேண்டாம் அருவெறுப்பா இருக்குது. என்ன செய்வேன். நான் வந்தது அவர்களுக்கு ஒரு பொருட்டாவே இல்லை. தங்கள் காரியத்திலயே கவனமா இருக்காங்க. அது வீடு இல்லை. அறை! சந்து பூரா இந்த மாதிரி சின்ன சின்ன அறைகளாகத்தான் இருக்கும் போல. நான் மறுபடி வெளிய வந்து எந்தப் பக்கம் ஓடலாம்னு தெரியாம திகைச்சு நிக்கறபோது, அவங்க ரெண்டு பேரும் என்னைப் பிடிச்சாங்க.

(தொடரும்)

திருப்பத்தூர் தேர்தல்:

## எம். ஜி. ஆர்.—சிவாஜி மோதல்!

திருப்பத்தூர் இடைத் தேர்தலில் இ. காங்கிரசை ஆதரிக்க முதல்வர் எம். ஜி. ஆர். முன்வந்து இருக்கிறார் அல்லவா? இதுபற்றி சிவாஜி கணேசன் கூறியதாவது:—

"தங்களை காப்பாற்றிக் கொள்ளத்தான் இ. காங்கிரசுடன் திடீர் உறவு கொண்டாட வருகிறார்கள். அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருப்பவர்கள். ஆகவே, இ. காங்கிரசார் விழிப்புடன் இருக்க வேண்டும். சொந்தக் காலில் நிற்க முயற்சி செய்ய வேண்டும்."

### எச்சரிக்கை

எம். ஜி. ஆரை கண்டித்து பேசக்கூடாது என்று தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவர் எம். பி. சுப்பிரமணியம் சிவாஜிகணேசனுக்கு எச்சரிக்கை விடுத்து இருக்கிறார்!

"இது இந்திராவின் நோக்கத்துக்கு எதிரானது ஆகும்" என்று எம். பி. சுப்பிரமணியம் சொன்னார்.

### எம். ஜி. ஆர். பதில்

சிவாஜி கணேசனின் குற்றச்சாட்டுக்குப் பதில் அளித்து முதல்வர் எம். ஜி. ஆர். கூறியது:—

"சிவாஜி கணேசன் என்ன சொல்லுகிறார் என்று எண்ண முடியவில்லை.

அப்படிச் சொல்லியிருந்தால்—

காமராஜர் காங்கிரசில் இருந்த சிவாஜி கணேசன், இந்திரா காங்கிரசில் சேர்ந்தது எப்பொழுது? என்ன காரணத்தால்? இடையில் தாமதம் ஏன்? வருமான வரிப் பிரச்சினை எழுந்தது என்று கூறப்பட்டது உண்மையா? இதையெல்லாம் மக்கள் முன்பே கேட்டார்கள். இதுவரை பதில் இல்லை.

திடீர் லாபத்துக்காக நான் இந்திராவை ஆதரிக்கவில்லை. எந்த மத்திய அமைச்சரிடமும், அதிகாரியிடமும் தன்னலத்துக்காக இதுவரை உதவி கேட்டுப் போனவன் அல்ல, எம். ஜி. ஆர். இனியும் அப்படித்தான் இருப்பேன்" என்றார், எம். ஜி. ஆர்.

# ஒருத்தி நினைக்கையிலே..



சுஜாதா

**16**

**முன்கதை சுருக்கம்:**

**கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினான். முருகனை சுகுணா நம்பினாள். அவளை பம்பாய்க்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்றான், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள்.**

என்னைப் பிடிச்சவங்க உடனே தரதரன்னு மாடிப் படியில பெரும்பாலும் தூக்கிகிட்டே போயி, என்னை மறுபடியும் அந்த அறைக்குள்ள அடைச்சாங்க. எனக்கு அலற நேரமே தரலே. அவ்வளவு விரைவா அவ்வளவு மூர்க்கமா என்னை நடத்தினாங்க. அப்படியே தொண்டை அடைச்சுப்போய் மார்ல திடும் திடும்னு இதயம் கேக்க கைகால் எல்லாம் நடுங்க வியர்த்து, மூச்சு திணறிப்போச்சு. என்னை ஒரு பிரமாண்டமான இக்கட்டில மாட்டிக்கிட்டேன்! என்னத்தை செய்வேன்!

எனக்கு அப்பதான் முருகன் செய்த துரோகம் புரிய ஆரம்பிச்சுது. எல்லாமே திட்டமிட்டுத்தான் செய்திருக்கான். பாதகன் அவன் நாசமாப்போவான். அவன் உருப்படுவானா? அவன் ரத்தம் கக்கி சாக மாட்டானா? அவனைப் பாம்பு புடுங்காதா? எல்லாருமே ஒரே கட்சிதான். என்னை சென்டிரல் ஸ்டேசன்ல ஏமாத்தி அழைச்சுப் போனவங்க, என்னைக் காப்பாத்தற மாதிரி வந்து அவங்களை விரட்டின முருகன், அப்பறம் சாப்பிடறப்ப தூணுண்டை பணம் கொடுத்து பேரம் பேசின அந்த பாணி, எல்லோரும் ஒரே கட்சி! என்னைத்தான் விலை பேசியிருக்காங்க. என்னை பம்பாய்ல கொண்டு வந்து இங்க இந்த மாதிரி கச்சடா இடத்தில வித்திருக்காங்க. அய்யோ நான் என்ன செய்வேன்? அழறதை தவிர நான் என்ன செய்ய முடியும்? சத்தம் போட்டா யார் வருவாங்க? பரமாத்மா வந்து "பெண்ணே கலங்காதே"ன்னு! மாஜிக் மாதிரி படார்னு கதவை திறந்துவிடுவாரா, இல்லை. "ஏய்! யார்ராவன்"னு ஒரு கமல்தான் வருவாரா? எனக்கு இப்ப என்ன கதி? என்ன விதி?

தரையில உக்காந்து யோசிச்சேன். வெளிய அவன் இந்தில சத்தம் போட்டுக்கிட்டு இருந்தான். சன்னல் வழியா விரலை அசைச்சு அசைச்சு என்னைப் பார்த்து பெரிசா விழிச்சுக்கிட்டு வாயில வெத்தலையை மென்னுக்கிட்டு அதட்டறான். நான் அவனைப் பாக்காம கதவை சாத்திட்டேன். உள்ள ஒரு கூண்டு மாதிரித்தான் இருந்தது. சர்க்கஸ்ல மிருகத்தை அடைச்சுப் போட்டது போல உலாத்தினேன். அவன் சத்தம் போட்டு களைச்சுப்போய் கீழ போய்ட்டான்.

எனக்கு வேற வழியே இல்லை. என்னை இனி காப்பாத்தப்போறவங்க யாரு? அண்ணன் மெட்ராஸ்ல இருக்கான். அவனுக்கு நான் பம்பாய் வந்திருப்பேன்னு நினைச்சுகூட பார்க்க முடியாது. என்ன செய்திருப்பான்? பேசாம ஊரைப் பார்க்க போயிருப்பான். அங்க போய் அப்பாறு



விஜயகாந்துடன் கதாநாயகியாக நடிக்க, முதலில் மறுத்து வந்த ஸ்ரீப்பிரியா, இப்பொழுது முழு மனதோடு ஒப்புக்கொள்கிறாராம்!

"பார்வையின் மறுபக்கம்" என்ற படத்தில், விஜயகாந்த்—ஸ்ரீப்பிரியா.






# தாகம் தீர்ந்தது!

மாறுதலான படத்தை எதிர்பார்க்கும் ரசிகர்களின் தாகத்தை தீர்க்கிறது, "தண்ணீர் தண்ணீர்".

குடிதண்ணீர் இல்லாத ஒரு கிராமத்தைப் பற்றிய படம். அத்துடன் அரசியலையும், அரசாங்கத்தையும் கலந்து, (அந்தக் கலப்படந்தான் படத்துக்கு கலகலப்பு ஊட்டுகிறது!) அலுப்புத்தட்டாத முறையில் படத்தைக் கொண்டு போகிறார். டைரக்டர் பாலசந்தர்.

கதை, வசனத்தை கோமல்சுவாமிநாதன் எழுதியிருக்கிறார். படத்தின் வெற்றியில் பெரும் பங்கு வசனத்துக்கு உண்டு. அதிலும் அரசியல் வசனம்! ஆசிரியரும், வெள்ளைசாமியும் பேசிக் கொள்ளும் வசனம் சுவைக்கத்தக்கது.

நடிகர்களும் கச்சிதம். படம் முழுக்க வரும் சரிதா, முகத்தில் நன்றாக உணர்ச்சிகளை காட்டுகிறார். ஆர். கே. ராமன், ராதாரவி, குகன், ராஜ்மதன், சந்தானம், வீராசாமி, பிரசன்ன சீனிவாசன், செல்வி அனைவரும் இயற்கையாக நடித்து இருக்கிறார்கள்.

ஒளிப்பதிவு சிறப்பாக இருக்கிறது. இசை: எம். எஸ். விசுவநாதன். தாலாட்டுப் பாட்டு இனிமையாக இருக்கிறது.

கே. பாலசந்தர் திரைக்கதை அமைத்து, டைரக்டு செய்து இருக்கிறார். ஒவ்வொரு காட்சியிலும் தனது முத்திரையைப் பதிக்கிறார். "பசுமைப் புரட்சி" கைதட்டல் பெறுகிறது. 300 பேர் உள்ள ஓர் ஊரில் ஒருத்தி மீது மட்டும் மழைத்துளி விழுவதும், உடனே அவள் ஊரைக் கூட்டி ஆடிப்பாடுவதும் செயற்கையாக இருக்கின்றன. பத்து ஆண்டாக மழை இல்லாத ஊரில் வாய்க்கால் தோண்டும்பொழுது ஈரமண் வருவதை டைரக்டர் கவனிக்கவில்லை போலிருக்கிறது!

தங்கப்பதக்கம் கிடைக்குமா!

கிட்ட சொல்லி நல்லா திட்டு வாங்கியிருப்பான். போலீஸ் ஸ்டேசன்ல சொல்லியிருப்பாங்க. தமிழ் பேப்பர்ல விளம்பரம் கொடுப்பாங்க. காணவில்லை. சுகுணா என்கிற இந்தப் போட்டோவில் கண்ட பெண்ணைக் காணவில்லை...

யார் பார்த்து, யார் தகவல் சொல்லி, அவங்க பம்பாய் வரதுக்குள்ள என்னை இவங்க என்ன செய்யப் போறாங்களோ? எத்தனை பேர் என்னைப் பதம் பார்க்க வரப் போறாங்களோ? என்ன செய்வேன் சொல்லுங்க!

மேல பார்த்தேன். மின் விசிறி மாட்டறதுக்கு விட்டத்தில ஒரு கொக்கி இருந்தது. ஸ்டூலைப் போட்டா எட்டும் போல இருந்தது.

கதவு சாத்தியிருக்கான்னு பார்த்தேன்.

எனக்கு வேற எதும் செய்யத் தெரியலை. அப்பா என்னை மன்னிச்சுடுங்க, அம்மா என்னை மன்னிச்சுடுங்க, அண்ணா என்னை மன்னிச்சுடுங்க. இந்த சூழ்நிலையில எனக்கு இதைத் தவிர ஏதும் தோணலை!

என் இடுப்புப் புடவையை உருவிக்கிட்டேன். நைலான் சேலை. அந்த ஸ்டூலை எடுத்தேன். இரண்டு தலைப்பையும் ஒண்ணு சேர்த்து இழுத்துப் பார்த்தேன். சுருக்கு போட்டுக்கிட்டேன். அதை தலை நுழைய மாதிரி பெரிசு பண்ணிக்கிட்டேன். கழுத்தில மாட்டிக்கிட்டேன்.

"நல்லா மாட்டிக்கிட்டியா" என்றான் வசந்த். "போலீஸ்காரங்க வரதுக்குள்ள உன்னை எதாவது ஒப்பேத்தியாகணுமே."

"அய்யா, எப்படியாவது என் தங்கச்சியை கண்டு பிடிச்சு கொடுத்துருங்கய்யா."

"பாக்கலாம் பாக்கலாம். என்னை யோசிக்க விடு, லெட் மி திங்க!"

"நல்லா திங்க்குங்கயா, எப்படியாவது..."

அப்போது கணேஷ் திரும்பி வந்தான். "வசந்த்! இன்னிக்கு இவனுக்கு கொஞ்சம் மூச்சுவிட நேரம் கொடுத்திருக்கார் ராஜேந்திரன். நாளைக்கு மத்தியானம் கொண்டு விடும்படியா சொன்னார். நாளைக்குதான் இவனை அரஸ்ட் பண்ணப்போறாங்களாம். மாஜிஸ்ட்ரேட்டை பார்த்து வாரன்ட் வாங்க முடியலையாம்."

"அப்பாடா, பாஸ் நான் ஒரு சின்ன ஐடியாப் பண்ணலாம்னு இருக்கேன்."

"நீ என்ன செஞ்சாலும் நாளைக்கு நாம் போலீசுக்கு பதில் சொல்லணும். ஞாபகம் வெச்சுக்க."

"போலீஸ் இருக்கட்டும் பாஸ். இவன் தன் தங்கையை சென்டிரல் ஸ்டேசன்ல தாரை வாத்துட்டேன்னு சொல்றான். எப்படி தொலைச்சான்? பத்து நிமிஷத்திலே! எப்படி? அய்யா பஸ் ஸ்டாண்டுக்கு விசாரிக்கப் போயிருக்காரு; திரும்பி வந்தா தங்கை காணோம்."

"எல்லாம் தான் சொல்லியாச்சே."

"பாருங்க பாஸ், இவன்

## என் மனைவி!

நடிகை ஜெயாவை சினிமாவுக்கு அறிமுகப் படுத்தியவர், டைரக்டர் குகநாதன். அவரையே திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் குகநாதன் அறிவித்தார். ஆண்டு பல ஆகியும் திருமணச் செய்தி வரவில்லை. குகநாதன்—ஜெயா திருமணம் என்ன ஆனது? குகநாதன் "ராணி" நிருபரிடம் கூறியதாவது:—

"ஜெயா இப்போதும் என் மனைவிதான். என் வீட்டில்தான் இருக்கிறாள். நான் டைரக்டு செய்துவரும் "தனிக்காட்டு ராஜா" படம் முடிந்ததும், நானும் ஜெயாவும் அதிகாரப்பூர்வமாகத் திருமணம் செய்து கொள்ளுவோம்" என்று குகநாதன் கூறினார்.

தங்கையை யாரோ கடத்திக்கிட்டு போயிருக்காங்கன்னு வெச்சுக்கலாம். அந்த கடத்தல் கோஷ்டி சென்டிரல் ஸ்டேசனைச் சுத்தி செயல்படுதுன்னு வெச்சுக்கலாம். அவங்க இன்னும் செயல்பட்டுக்கிட்டு இருப்பாங்க இல்லையா?"

"வசந்த் நீ என்னடா சொல்றே?"

"பாஸ் சுச்சு போட்டாப்பல ஒரு ஐடியா தோணிடுச்சு!"

"பிரில்லியண்ட்! கை குடு, வசந்த்! என்ன பாழாப்போற ஐடியா! சொல்லித் தொலையேன்."

"இதோ இருக்காரே மாணிக்கம் என்கிற பாச்சா என்கிற மாணிக்கம்! இவருக்கு நாளைக்கு நாம தற்காலிகமா ஒரு தங்கையை ஏற்படுத்தப் போறோம். ஒரு நாளைக்காக."

"வசந்த்! புரியும்படியா சொல்லு."

"ரொம்ப சிம்பிள் பாஸ்! நாளைக்கு காலைல நம்ம அய்யாவை அங்க அழைச்சுட்டு போறோம். அய்யா மாணிக்கம் அன்னைக்கு ரெயிலில இருந்து இறங்கி சென்டிரல் ஸ்டேசன் வாசலுக்கு வந்தாரே அதே போல நாளைக்கும் இன்னொரு தங்கையோட வரார். நாம கார் பார்க் பண்ணிக்கிட்டு பார்த்துகிட்டே இருக்கோம். அன்னைக்கு போலவே நாளைக்கும் அய்யா பஸ்ஸை விசாரிக்கப் போறாரு, தங்கையை விட்டுட்டு! ..."

"ஓ எஸ்! இப்ப புரியுது!"

"எனக்கு புரியவே இல்லங்களே."

"இதெல்லாம் அவ்வளவு சீக்கிரம் புரிஞ்சா தங்கையை தொலைச்சிருப்பியாய்யா. யோவ் இத பார். நாளைக்கு நாங்க சொன்னது போல செய்யணும். ஒரு மாதிரி நாடகம் போடப் போறோம். அவ்வளவுதான்!"

"நீங்க என்ன சொன்னாலும் செய்யறேங்க. என் தங்கை கிடைச்சா சரி."

"வசந்த்! புதிய தங்கைக்கு எங்க போவே?"

"கவலைப்படாதிங்க பாஸ். எனக்கு எதுக்கு கேர்ள் பிரண்டுகள் இருக்காங்க? நம்ம நர்மதா கிட்ட சொன்னால் பிச்சு உதறிப்பிடுவா. தியேட்டர் குரூப்ல நடிகை அவள்!"

வசந்த் டெலிபோன் அருகில் சென்று பென்சிலால் எண்களைச் சுழற்றினான்.

கணேஷ் சிரித்துக் கொண்டான். "சரியான கிராக்குடா நீ! உன் திட்டம் வேலை செய்யலைன்னா."

"என்ன போச்சு? தூண்டிலைப் போட்டு மீன் வருமான்னு காத்திருக்கப் போறோம். வந்தா அய்யா அதிர்ஷ்டம். கடிச்சா இன்னும் அதிர்ஷ்டம். சிக்கிக்கிட்டா ஸெலிப்ரேஷன்!"

"ஹாய் நர்மதா! ஸ்வீட் ஹார்ட்! வாலிபத்தின் பூங்கொத்தின் வருடலே! தாலி கட்டும்முன்பு சில தரிசனமே! என்னது? கவிதை வேண்டாங்கறியா? விஷயத்துக்கு வரேன். நாளைக்கு உன் உதவி தேவையா இருக்கு......"

"ஒரு சான்ஸ் உனக்கு. நடிக்க......"

"தியேட்டர் இல்லை. சென்டிரல் ஸ்டேசன்ல. ஒரு தங்கை பாத்திரம்..."



மறுநாள் காலை வசந்தும் கணேசும் காரின் முன் பக்கத்தில் உட்கார்ந்திருக்க, மாணிக்கம் பின் சீட்டில் அந்த நர்மதா என்கிற பெண்ணிடமிருந்து விலகிப்போய் ஓரமாக ஒட்டிக் கொண்டிருந்தான். நர்மதா சூயிங்கம் கடித்துக் கொண்டே "இப்படி வெக்கப்பட்டா என்ன ஆவுறது

மலர்: 22 இதழ்: 46
துன்மதி: கார்த்திகை 14
(29-11-81)

**அட்டையில்**

புதுமுகம் சுபத்ரா
(சுவீதா)

**அடுத்த இதழில்**



மனம் திறந்து பேசுகிருர், ஸ்ரீதேவி! அடுத்த வார (6–12–81) "ராணி" இதழில் படியுங்கள்.

**சிரி! சிந்தி!**



முன் கவனம் உள்ள ஒரு நண்பனைப் போல வாழ்க்கையில் வேறு பாக்கியமில்லை.

—யூரிபிடிஸ்.

[illegible]ணுச்சி!'' என்ருன்.

வசந்த் "இப்படி கூயிங்கம் மென்னு என்ன ஆவுறது தங்கச்சி" என்ருன்.

"கவலேயேபடாதே. ஜமாய்ச்சுர்றேன். உனக்கு என்ன வேணும்? அண்ணனே பறிகொடுத்த தங்கை! புது இடத்தில திரு திருன்னு முழிக்கிற மாதிரிதானே ஆக்டிங் பண்ணணும்?"

"அதேதான்."

"கவலேயேபடாதே வசந்த்! என்ன கணேஷ் சார் பேசாம வரிங்க?"

"நர்மதா, உன்னே யாராவது அணுகி கூப்பிட்டாலும் கூப்பிடுவாங்க."

"அதான் கதை—வசனம் சொல்லிட்டிங்களே. இந்தாளு தங்கை ஏமாந்த மாதிரி நானும் ஏமாறணும். யார் வந்து விசாரிச்சாலும் பசுமாடு மாதிரி அவன் பின்னுலேயே போகணும் அப்படித்தானே?"

"இல்லே நர்மதா! வசந்த் கொஞ்சம் விஷப் பரீட்சை பண்ருன். எதாவது ஆபத்து வந்தாலும் வரலாம்."

"என்ன பாஸ் பய முறுத்துறிங்க."

"இதபாருங்க கணேஷ் நீங்க ரெண்டு பேரும் இருக்கிற வரைக்கும் நான் ஏன் கலங்கணும்?"

"அப்படியில்லே நர்மதா. கொஞ்சம் தாமதம் ஆயிருச்சுன்னு?"

"கவலேப்படாதிங்க, எனக்கு புடதில கண்ணு. உங்க காரை பார்த்துகிட்டே இருக்கும் இந்த மாணிக்கம் அண்ணன்தான் சரியா நடிக்கணும். இத பாருங்க, என்னே நானுவே நினைச்சுக்காதிங்க. தொலேஞ்சு போன உங்க தங்கை மாதிரி நினைச்சுக்கங்க. அன்னிக்கு நடந்தது, பேசினது, எல்லாத்தையும் திருப்பி செய்யணும் அவ்வளவுதான்!"

"இதெல்லாம் எதுக்குன்னே புரியலிங்களே."

"யோவ், நீ சொன்னதை செய். அப்பறம் கேள்வி கேளு. உனக்காக கிடந்து அல்லாடிக்கிட்டிருக்கோம்! நடுவில எங்கயாவது கோட்டை விட்ட? பேசாம நேரா போலீஸ் ஸ்டேசன் போக வேண்டியதுதான்! பொட்டி எங்க? எடுத்துக்க ஸ்டேசன் வந்துருச்சு. முதல்ல பிளாட்பாரம் டிக்கட் வாங்கிகிட்டு ரெண்டு பேரும் உள்ள போயிருங்க. அப்பறம் பராக்கு பார்த்துகிட்டே வெளிய வாங்க. இதபார் வெள்ளைக் காக்கான்னு இந்தம்மாவுக்கு வேடிக்கை காட்டிக்கிட்டே வாங்க... என்ன நர்மதா தயாரா?"

"தயார்."

"பெஸ்ட் ஆப் லக்!"

கணேஷ் சென்டிரல் ரெயில் நிலேயத்தில் கார்கள் நிறுத்தும் இடத்தில் வாகாக கொண்டு வந்து நிறுத்த, நர்மதா இறங்கி விடுவிடுவென்று மாணிக்கத்தை இழுத்துக்கொண்டு நிலேயத்துக்குள் நுழைந்தாள்.

"சரியான பொண்ணு" என்று சிரித்தான் கணேஷ்.

உள்ளே சென்றவர்கள் வெளியே வருவதை எதிர்பார்த்து இருவரும் காரில் காத்திருந்தார்கள்.

(தொடரும்)



இந்தப் பெண் குழந்தைக்கு ஒரு வயதுதான் ஆகிறது. எடையோ, 25 கிலோ! லண்டனில் வசிக்கிறது. சாலி என்று பெயர்.

—ஏ. கே. நிஜாம், குவைத்.




# 17

முன்கதை சுருக்கம்:

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினான். முருகனை சுகுணா நம்பினாள். அவளை பம்பாய்க்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்றான், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள். நர்மதாவை வைத்து நாடகம் நடத்தினார்கள்.

வசந்த் ஒரு சிகரெட்டு பற்றவைத்துக் கொண்டான்.

அதிகாலைதான். இருந்தும் ரெயில் நிலையம் சுறுசுறுப்பாக இருந்தது. அமிருதாஞ்சன் விளம்பரத்தை அணைத்துவிட்டார்கள். டாக்சிக்காரர்கள் வருவோரை "கடத்திச் செல்ல" முயற்சித்துக் கொண்டு இருந்தார்கள். பிளாட்பாரத்தில் புகை பெருங்க இடியாப்பும் தயாராகிக்கொண்டு இருந்தது. போலீஸ் சார்ஜெண்டு பளபளவென்று மோட்டார் சைக்கிளில் வலம் வந்தார்.

வசந்தும் கணேசும் வாயிலை பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

"இதோ வரா" என்றான் வசந்த்.

மாணிக்கம் முதலில் வர, தொடர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டே நர்மதா வந்தாள். கணேசால் அவள் நடிப்பை ரசிக்காமல் இருக்க முடியவில்லை.

அசல் கிராமத்தில் இருந்து பட்டணத்துக்கு முதன் முதல் வரும் பெண் போல, அவ்வப்போது மாணிக்கத்தை முதுகில் இடித்து, அங்கே காட்டி, இங்கே காட்டி, அகலமாக விழித்து, பெட்டியைத் தூக்கமுடியாமல் தூக்கி, மாணிக்கத்தை அதட்டி, அட்டகாசம் செய்தாள்.

"பிரமாதம்" என்றான், கணேஷ்.

"நடிப்பு அவளுக்கு சொல்லியா தரணும்? இரத்தத்திலேயே இருக்கு பாஸ்."

இப்போது அவர்கள் இருவரும் பிளாட்பாரத்தில் செயல் அறியாமல் நிற்க, மாணிக்கம்கூட நம்பும்படியாகத்தான் இருந்தான். அவளிடம் "இங்கேயே இரு, நான் போய் பஸ் விசாரித்துக்கொண்டு வருகிறேன்" என்று சொல்வது தெரிந்தது. அவள் தலையை ஆட்டியதும், அவ்வப்போது சேலையை சரி செய்துகொண்டதும், மாணிக்கம் சென்றதும் அவள் சுற்றிலும் பார்த்து அறியாத்தனமாக விழிப்பதும் தெரிந்தது.

"பாஸ், இனிமேல் தான் இருக்கு" என்றான் வசந்த்.

"பொறு பொறு, பார்க்கலாம்."

ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், ஐந்து நிமிடம் ஆயிற்று. ஒன்றும் நிகழவில்லை. ஐந்து நிமிடமும் ஐந்து நாள் போல இருந்தது.

நர்மதா முகத்தை துடைத்துக்கொண்டு கன்னத்தில் கை வைத்து பெட்டிக்கு அருகில் உட்கார்ந்துகொண்டுவிட்டாள்.

"என்ன வசந்த், ஒண்ணையும் காணமே?"

"அதானே."

"போகலாமா?"

"ஒரு நிமிடம் பார்க்கலாம் பாஸ்! மீனு வருது, மீனு வருது!"

இங்கே அங்கே பார்த்துக்கொண்டு ஒருவன் நர்மதாவின் அருகில் வந்து ஏதோ கேட்க, அவள் எழுந்திருக்காமல் பருவத்தை சுருக்கிக்கொண்டு பதில் அளிப்பதும், அவன் மேலும் பேசுவதும், அவள் எழுந்திருப்பதும், அவன் பஸ் நிலையத்தின் பக்கம் காட்டுவதும், அவள் சரி என்று தலையசைப்பதும், பெட்டி படுக்கைகளை அவன் எடுத்துக்கொள்ள அவள் புன்னகையுடன் நன்றி சொல்லி அவன் பின் நடப்பதும், ஒருகணம் கணேசின் கார் பக்கமாகப் பார்த்துவிட்டு அவள் அவன் பின் தயக்கமின்றி



எம். ஆர். ஆர். ரகுவும் (எம். ஆர். ராதாவின் மகன்), ஸ்ரீலெட்சுமியும் மோதப் போகிறார்களா, பாயப்போகிறார்களா?
- (படம்: "ஜோடிப்புறா").

செல்வதும் தெரிந்தன.

"பாஸ் காரைக் கிளப் புங்க. மீன் கடிக்குது."

கணேஷ் காரை கிளப்பி, உடனே போலீஸ் காரர் அருகில் வெளிப் பட்டு, சென்டிரல் நிலையத்தை அணைத்த, ஒற்றை வாடை பாதையில் இடப் பக்கம் திரும்புவதற்கும் அவர்கள் சந்து ஒன்றில் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"மெல்ல பாஸ்! ரொம்ப கிட்டவும் போகக் கூடாது. சந்தேகப்பட்டுரு வாங்க."

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன். நீ அவனை விட்டுடாதே."

"அதோ போரு பாருங்க. வேகமா இன்னொரு சந்தில திரும்ப றுங்க."

"நாமும் திரும்ப வேண்டியதுதான், வசந்த்! உனக்கும் மூளை இருக்குடா!"

"மீன் இப்பதான் கடிச்சுக்கிட்டு இருக்கு. முள்ளை இன்னும் முழுங் கலை!"

"முழுங்கிரும், கவலைப் படாதே."

அவர்கள் அந்த சந்தில் திரும்பும்போது நர்மதாவை இருவர் வாயைப் பொத்தி ஒரு கட்டிடத்துக் குள் சடுதியில் இழுத்துச் செல்வதைப் பார்த்துவிட் டார்கள்.

வசந்த் உடனே கதவைத் திறக்கப் போக, "வசந்த்! கொஞ்சம் விட் டுப் பிடி. அவனை உள்ள கொண்டு போகட்டும். இப் பவே இறங்கி ஓடினுல் சந் தேகம் வந்து ஓடிப்போயிரு வாங்க."

தெரு ஓரத்தில் காரை நிறுத்தினுன், கணேஷ்.

வசந்த் இறங்கினுன்.

"ஓடாதே. ஓடக் கூடாது. வேகமாக நடக்க லாம். கட்டிடத்தைப் பாத்துகிட்டேன்."

வசந்த் சற்றே பதற்றத் துடன் "ஸாரி நர்மதா" என்று சொல்லிக் கொண்டே நடக்க, கணேஷ் பதற்றமில்லாமல் கார் கதவை பூட்டிவிட்டு

## அந்துலே குஷி!

மராட்டிய முதல்வர் அந்துலே பதவியில் நீடிப் பார் என்று பிரதமர் இந்திரா காந்தி அறிவித்து இருக்கிறுர்.

"அந்துலே பணக்காரர் களிடம் நிதி (ரூ. 5 கோடி) வாங்கியது லஞ்சம் அல்ல. பொதுமக்களுக்கு சேவை செய்யவே இந்தப் பணம் வாங்கினுர். எனவே, இது ஊழல் அல்ல" என்று இந்திரா சொன்னுர்.

---

அவனுடன் நடந்தான்.

"வாங்க பாஸ்."

"ஓடாதே! ஓடினு காரியம் குட்டிச்சுவராய் டும்!"

அந்தக் கட்டிடத்தில் இன்னொரு சந்து போல நடை இருந்தது. பாதி இருட்டாக இருந்தது.

மெலிதாக நர்மதா "ஆவ்" என்று சத்தமிட் டது கேட்டது.

"வசந்த்! மேல! மேல! படி எங்க இருக்கு பாரு."

"கடைசில தெரியுது, பாஸ்."

படிகளை இரண்டு இரண்டாகத் தாவி ஏறி னுர்கள். "பாஸ்! க்விக்!"

படி முடிவில் திருப்பம் இருந்தது. இரண்டாகப் பிரிந்தது. எதில் திரும்பு வது என்று தயங்கினுர்கள்.

மறுபடி நர்மதாவின் குரல் கேட்டது.

இடப் பக்கம் திரும்ப, வரிசை வரிசையாக அறை கள் தென்பட்டன. ஓர் அறை வாசலை ஒருவன் பூட்டிக்கொண்டு இருந் தான். அவனுடன் இன்னும் இரண்டு பேர் இருந்தார் கள்.

வசந்தும் கணேசும் நின்றுர்கள். இவர்களை கடக்காமல் அவர்கள் கீழே இறங்க முடியாது.

"என்ன வாத்தியாரே, என்ன அவசரமா ரூமைப் பூட்டறீங்க?"

"வசந்த்! கைல ஆயு தம் இருக்கா, பாரு. கத்தி கித்தி வெச்சிருக்கப்





தூய வெண்மையான சலவைக்கு

சென்னை அருணு கெமிக்கல்ஸ் & பார்ம்ஸ் (பி) லிட்., (ஸ்ரீ விசாலம் குரூப்) அளிக்கும் புத்தம் புதிய டிட்டர்ஜெண்ட்

அபிமா சோப்

வாங்கி உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

விபரங்களுக்கு அருகிலுள்ள
ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்டை அணுகவும்.

போறுன்."

"யார்யா நீ" என்றுன் அவர்களில் தாட்டியான ஒருவன். பெரிய மீசையும் இடுப்பில் பெல்ட்டுமாக இருந்தான். உள்ளங்கையில் எச்சில் துப்பிக்கொண்டான்.

"எங்க அந்தப் பொண்ணு?"

"எந்தப் பொண்ணு?"

கணேஷ் அவர்களை கண்களால் அளந்தான். ஒருவன் பாய்வான் போலிருந்தது. அருகில் இருந்தவன் மெலிசான ஜிப்பாவின் ஊடே தங்கச் சங்கிலி தெரிய ஷோக் பேர்வழி போல தெரிந்தது. மூன்றுமவன், ரெயில் நிலையத்தில் நர்மதாவைக் கூப்பிட்டவன், சோனியாக இருந்தான்.

"பாஸ், மீசைக்காரன் தான் பிரதானம்."

"யோவ் இது பிரைவேட் இடம். இங்க யாரும் இல்லே."

"பொண்ணு எங்கடா, சோமாரி!"

"அய்யா இவங்களை கீமா பண்ணிரவா?"

"வாய்யா மில்டரி ஒட்டல்! உங்கள் தாத்தா வந்தாலும் முடியாது. நாங்கள் யாரு தெரியுமா? போலீஸ்! மப்டில வந்திருக்கோம்."

"போலீஸ் என்கிற வார்த்தையைக் கேட்டதும் ஒல்லி பாரப்பெட்டில் கால் வைத்து இறங்கப் பார்த்தான். வசந்த் பாய்ந்து அவனைத் தூக்கி "நெருப்புக் கோழி! எங்க ஓடறே" என்றுன்.

"அடேய்" என்று



"மழைதான் நன்றுகப் பெய்து இருக்கிறதே, பால் விலையைக் குறைத்தால் என்ன?"



மீசை வசந்த் மேல் ஆவேசமாகப் பாய்ந்தான்.

வசந்த் ஒதுங்கிக்கொண்டு, நெருப்புக் கோழியை கேடயம் போல உபயோகித்து அவன் வந்த வேகத்தை சமாளிக்க, கணேஷ் முழங்காலால் அவன் மர்மத்தில் உதைத்தான். அவன் அம்மாவைக் கூப்பிட்டு சற்றே தயங்க வசந்த் பூட்ஸ் காலால் அவன் முழங்காலுக்கு கீழ் உதைத்து கைகை மிதித்தான்.

ஜிப்பா இப்போது பின்வாங்கினுன்.

கீழே விழுந்தவன் அடிபட்ட ஆத்திரத்தில் எழுந்து வசந்தை பின்னுல் இருந்து சட்டையைப் பிடிக்க, "சீச்சீ சட்டையை விடு! என்ன இது விளையாட்டு" என்று வசந்த் சொல்ல, கணேஷ் அவன் முகத்தில் முஷ்டியால் வெடித்தான். நிச்சயம் அவன் பற்களில் ஒன்றிரண்டாவது சிதறியிருக்க வேண்டும். அப்படியே வாயைப் பொத்திக்கொண்டு உட்கார்ந்துவிட, கணேஷ் கையை உதறிக்கொண்டான்.

இப்போது ஜிப்பாக்காரன் நடைபாதையின் கோடியில் இருந்தான். வசந்த் ஒல்லியை குறக்கடிளியைப் பிடித்துக்கொண்டு நெருங்க "வேண்டாம் வேண்டாம்! எனக்கு ஒண்ணும் தெரியாது, தெரியாது தெரியாது."

— "ஒண்ணும் தெரியாு

தில்லே? பார்த்துரலாம்."

நர்மதாவின் குரல் ஓர் அறையிலிருந்து ஒலிக்க, அந்த அறையைத் திறக்க, நர்மதா ஒரு ஸ்டூலே ஓங்கிக்கொண்டு வெளிப்பட்டாள்.

"யாரையாவது அடிக்கணுமா" என்ருள்.

"எல்லாம் ஆச்சு."

நர்மதா மீசைக்காரனேப் பார்த்து "இதோ, இவன்தான், ஏண்டா பொம்பளேப் பொறுக்கி! உன்னே... உன்னே..." என்று அவள் மேல் குறி பார்த்து ஸ்டூலே எறிந்தாள்.

எழுந்திருக்கலாமா என்று யோசனேயில் இருந்தவன் மறுபடி அடிபட்டு உட்கார்ந்தான்.

இதற்குள் ஜிப்பாக்காரன் பின்னல் பார்த்து வேட்டியை டப்பா கட்டு கட்டிக்கொண்டு பாரப்பெட் சுவரை தாவி ஏறி ரெய்ன் பைப் மூலம் சரசர்வென்று சரிந்து கீழே நொண்டிக்கொண்டே ஓடிஞன்.

"பாஸ் விட்டுட்டமே."

"கவலேப்படாத. இவங்க ரெண்டு பேரும் இருக்காங்க போதும்!"

"அண்ணே! அண்ணே! என்னே விட்டுருங்க அண்ணே! நான் வேலேக்காரன், கூலிக்காரன்!"

"எல்லாத்தையும் பார்த்துரலாண்டா. நர்மதா இவனே ஒரு வீசு வீசு!"

நர்மதா கிட்டத்தில் வந்து "நெருப்புக் குச்சி" என்று இரண்டு கையாலும் "மடேர்" என்று அவன் மேல் சார்த்திஞள்.

கணேஷ் கீழே கிடந்த மீசைக்காரனே காலரைப் பிடித்து தூக்கி, "எழுந்திருடா" என்ருன்.

"அடிக்காதே! அடிக்காதே! அடி போதும்!"

"பாக்கியை போலீஸ் ஸ்டேசன்ல வெச்சுக்கலாம். எழுந்து நடடா!"

"நடக்க முடியலிங்க."

"அப்ப ஊர்ந்துகிட்டே வா, காருக்கு!"

"அண்ணே அண்ணே" என்று சேவித்துக்கொண்டு இருந்தான்.

"சேவிக்கிறியா? எல்லாத்தையும் கக்கறியா?"

"கக்கறேன், அண்ணே. போலீஸ் வேண்டாம், டின் கட்டிடுவாங்க!"

"இந்த அறிவு எங்கடா போச்சு? எல்லாத்தையும் சொல்றியா?"

"சொல்றேன், சொல்றேன்."

"யாரு, என்ன, எப்படி கடத்தறிங்க? எந்த ஊருக்கு கடத்தறிங்க, எல்லாம்?"

"சொல்லிடறேன்."

கணேஷ் மீசைக்காரனே உந்தி காரின் பக்கம் தள்ளிச் செல்ல, வசந்தும் நர்மதாவும் ஒல்லியை முனிசிபாலிட்டி நாய் போல இழுத்துக்கொண்டு சென்ருர்கள்.

சுகுணு! இதான் உன் கடைசி நாள், கடைசி மூச்சு, இனிமே யாரும் உன்கிட்ட வரமாட்டாங்கன்னு சொல்லிக்கிட்டு கழுத்தில புடவையை இறுக்கி படக்குனு ஸ்டூலே உதறினேன்.

நைலான் சேலே வழுக்கி கீழ விழுந்தேன்!

சட்! என்னடா இது! தற்கொலே செஞ்சுக்க கூட பாக்கியம் இல்லேயேன்னு அழுதேன். அப்பொழுது என் சேலேல ஒட்டிக்கிட்டிருந்த ஒரு கடுதாசி விழுந்திச்சு. நாலா மடிச்சிருந்தது. பிரிச்சுப் பாக்கறேன்.

மூணு வரிதான் எழுதியிருக்கு.

"மகளே! நீ எதோ கஷ்டத்தில மாட்டிக்கொண்டிருக்கிருய்னு நினேக்கிறேன். உன்னுேட வந்த ஆளு சரியா இல்லே. பம்பாய்ல உனக்கு எதாவது உதவி தேவையாயிருந்தா இந்த நம்பருக்கு டெலிபோன் செய்து, நடேசன்னு கேளு. இப்படிக்கு உன் உடன் பிரயாணம் செய்த கிழவன்"னு எழுதி ஒரு டெலிபோன் இலக்கமும் குறிச்சிருந்தது.

அட! நம்மகூட பிரயாணம் செய்த பெரியவர்! எனக்கு நம்பிக்கை வந்திருச்சு.

(தொடரும்)

# குழந்தைகள் படவிழா!

சென்னேயில் தொடங்கிய குழந்தைகள், இளேஞர்களுக்கான உலகப் பட விழா மிகவும் அமைதியாக நடந்து முடிந்தது. இந்திய குழந்தைகள் சினிமா சங்கம், இந்த விழாவை நடத்தியது.

குழந்தைகள், இளேஞர்களுக்காக, இந்தியாவில் சினிமா விழா நடந்தது,இது இரண்டாவது முறையாகும். முதல் விழா, 1979–ல் பம்பாயில் நடந்தது.

பத்து நாள் நடந்த விழாவில், 30 நாடுகளில் இருந்து 100க்கும் மேற்பட்ட படங்கள் கலந்துகொண்டன.

தமிழில் இருந்து, "அரும்புகள்", "அன்பின் அலேகள்" ஆகிய படங்கள் திரையிடப்பட்டன.

"ஐஸ்கில் புக்" (அமெரிக்கா), "யங் டீச்சர்" (சீனு), "கேர்ள் அண்ட் த டிரகான்" (பல்கேரியா), "டாக்ஸ் ஹாலிடே" (செக்கசுலோவேகியா), "பாயம்கி சாப்கர்" (இந்தியா—இந்திப் படம்) ஆகிய படங்கள் மிகவும் பாராட்டும்படி இருந்தன.

படவிழாவில் கலந்துகொண்ட படங்களில், "ஸ்நோ மெய்டன்" என்ற ரஷிய நாட்டு படம் சிறந்த படமாக தேர்ந்து எடுக்கப்பட்டு, "தங்க யானே" பரிசு வழங்கப்பட்டது.

சிறந்த குழந்தை நடிகராக "பாலசிவாஜி" என்ற மராத்தி (இந்தியா) மொழிப் படத்தில் நடித்த மாஸ்டர் ஆனந்த ஜோஷி தேர்ந்து எடுக்கப்பட்டார். அவருக்கு "வெள்ளி யானே" பரிசு அளிக்கப்பட்டது.

"தி அவுஸ் இன் கோட்சுக் கோவா" என்ற செக்கசுலோவேகியா நாட்டு படத்துக்கும் "தங்க யானே" பரிசு கிடைத்தது.

பரிசுகளே அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் வழங்கினுர்.



சிறந்த படத்துக்கு பரிசு. குல்லாவோடு நிற்பவர், இந்திய குழந்தைகள் சினிமா கழகத் தலேவர், டைரக்டர் சாந்தாராம். பரிசு வழங்கியவர் அமைச்சர் ஆர். எம். வீரப்பன்.



# சுஜாதா

## 18

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணு, வேலேக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னேக்கு வந்தாள். அவளே கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினுன். முருகனே சுகுணு நம்பினுள். அவளை பம்பாய்க்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்ருன், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள். நர்மதாவை வைத்து நாடகம் நடத்திஞர்கள். கடத்தல் கூட்டம் சிக்கியது.

எதுக்காக இறந்து போகணும்? கொஞ்சம் யோசிச்சா எந்த ஆபத்தில இருந்தும் தப்பிக்க முடியும். சென்னேயில் என் அண்ணன் எதாவது முயற்சி நிச்சயம் எடுத்துக்கிட்டு இருப்பாரு. போலீஸ் எதுக்கு இருக்காங்க. எத்தனேயோ சாதனங்கள்ளாம் இருக்குது. எப்படியாவது ஏதாவது செய்து யாராவது உதவிக்கு வரமாட்டாங்களா! அதுக்குள்ள கோழைத்தனமா என் உயிரை முடிச்சுக்கறதில அர்த்தமே இல்லே.

“இரு! இரு சுகுணு! ராத்திரி இனிமே யாரும் உன்னைத் தொந்தரவு செய்யமாட்டாங்க. அதுக்குள்ள யோசிச்சுப் பாரு. எதாவது தோணும். இப்ப கொஞ்சம் நம்பிக்கை கிடைச்சுருச்சு. ஒரு போன் நம்பர் கிடைச்சுருச்சு. அந்தப் பெரியவரை எப்படியாவது எதாவது ஒரு கடைக்கோ ஓட்டலுக்கோ போய் டெலிபோன் மூலமா தொடர்பு கொண்டுட்டன்னு போதும். அது வரைக்கும் இந்த ராட்சச ஜென்மங்களே சமாளிக்கணும்” என்று என் உள் மனம் தைரியமூட்டியது.

ஒரு பொண்ணு பார்க்க கொஞ்சம் சுமாரா இருந்துட்டா எத்தனே விதமான கஷ்டங்கள்! நானே வத்தக்காச்சி மாதிரி கண்ணுடி போட்டுக்கிட்டு ஒண்ணரைக் கண்ணு இருந்தா யாராவது சீந்துவாங்களா? மூஞ்சியைக் கீறிக்கலாமான்னு தோணிச்சு... காலேல யாரும் என் உடம்பைக் கேட்டு வர மாட்டாங்க. நாளே மாலே வரைக்கும் எனக்கு சமயம் இருக்குது. அதுக்குள்ள அந்த பெரியவரை எப்படியாவது போன்ல கூப்பிட்டு...

தரைல உக்காந்துகிட்டு எனக்கு தெரிஞ்ச திருவாசகத்தை எல்லாம் சொல்லிப் பார்த்துக்கிட்டேன். என்ன வேடிக்கை! என்னே இங்க கூட்டிட்டு வந்து வித்ததும் ஒரு முருகன்தான்! இப்ப நான் மனசுக்குள்ள பாடறதும் முருகன்தான்!

காலேல் ஒரு இந்திக்காரி லோட்டாவில் பாலும் தட்டில புரோட்டாவும் கொண்டு வெச்சா. அவளேப் பார்த்து சிரிச்சேன். அவள் பதிலுக்கு சிரிக்கலே. இவங்களோட ஒத்துப் போனத்தான் எனக்கு எதாவது சந்தர்ப்பம் கிடைக்கும். வெளிய கதவை தாப்பா போட்டுக்கிட்டாங்க.

பெரிய மூஞ்சி. காலேலயே வெத்தலே பாக்கைப் போட்டுக்கிட்டு என்னே எட்டிப் பார்த்துட்டு “கைஸி ஹை”ன்ருன்.

அவனேப் பார்த்ததும் நான் சிரிச்சேன். அதனுல் அவனுக்கு கொஞ்சம் சந்தோஷமா இருக்கணும். “இத்னி ஜல்தி மாங்தா?” ஜல்தின்னு சீக்கிரம் இத்னே சீக்கிரம் திருந்திட்டாளேன்னு என்னவோ கேக்கருன் போல இருக்குதன்னுட்டு கண்ணே சிமிட்டினேன். அவன் கண்ணு பல்பு போட்டாப்பல ஆயிருச்சு. “போடா பரங்கிக்கா மூஞ்சி”ன்னு சிரிச்சுக்கிட்டே சொன்னேன். திருப்தியா போயிட்டான்.

கொஞ்ச நேரம் கழிச்சு எனக்கு சோப்புத் துண்டம் கொடுத்து ரூமைத் திறந்துவிட்டு கீழ அழைச்சுட்டுப் போனுங்க. பின்னுடி சுவர் உயரமா இருந்தது. கல்லு போட்டிருந்தது. பெண்ணுங்கள்ளாம் வெக்கமில்லாம ஒரே ஒரு குழாயண்டை குளிச்சுகிட்டிருந்தாங்க. என்னேப் பார்த்து “நஹாலோ”ன்னு சொல்லிட்டு பீடி பத்த வெச்சுக்கிட்டு அந்தப் பக்கம் ஒதுங்கினுன்.

நான் ஓரத்தில பாத்துக்கிட்டே நின்னேன். ஒவ்வொருத்தியும் உணர்ச்சி இல்லா ஜென்மம் போல



சிவகுமார்—ராதா இடையே என்ன ஊடல்! (படம்: “ஆயிரம் முத்தங்கள்”)

இருக்கு. மாரு தெரியறதும் தன்னில் நுனைஞ்சு இடுப்பு தெரியறதும் அவங்களுக்கு ஒரு பொருட்டாவே இல்லே. சிரிச்சுக்கிட்டு

கிக்கிக்கிக்கின்னு எனக்கு புரியாத பாசையில் பேசிக் கிட்டு என்னைப் பார்த்து "ஆவோ ஏமமாலினி"ன்னு தண்ணியை எம்மேல வாரி

இரைச்சதுங்க. பத்துப் பன்னிரெண்டு பொம்ப ளைங்க இருந்தாங்க.

நான் அவங்களைப் பொதுவாப் பார்த்து "ஏம்மா உங்கள்ள தமிழ் தெரிஞ்சவங்க யாராவது உண்டா"ன்னேன்.

அவங்க ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொள்ள. நான் மறுபடி அதே கேள்வியைக் கேட் டேன்.

ஒருத்தி மட்டும் எழுந்து என் பக்கமா வந் தாள்.

"நீ மெட்ராஸா?"

"ஆமா! நீங்க?" என் றேன் ஆர்வமா.

"நான் திருச்சூரு. கொறைச்சு தமிழ் அறி யும்!"

"அய்யோ எனக்கு கொறைச்சு போதும்மா! நான் சொல்றது புரிஞ்சா போதும்மா!"

"ஏய்!"ன்னு இழுத் தாப்பல சொன்னாள். "கொஞ்சம் முதுகு தேய்க்கு!"

"எங்க வேணும்னாலும் தேய்க்கறேன்மா. எனக்கு ஒரே ஒரு ஒத்தாசை செஞ்சா போதும்."

"எந்து ஒத்தாசை?"

"அம்மா அம்மா என்னை இங்க கொண்டு வந்து வித்திருக்காங் கம்மா! நான் படிச்ச பொண்ணு! மெட்ராஸ்ல இவங்க வலைல மாட்டிக் கிட்டேன். என்னை ஏமாத்தி பம்பாய்க்கு..."

"இவ்விட எல்லாரும் அப்படித்தான்!"

"அம்மா, நான் நல்ல குடும்பத்துப் பொண் ணும்மா."

"ஞான் மட்டும் என்ன வாம்? ஏய்! நானும் ராஜ வம்சமாக்கும்! கேரள வர்மா!"

இது என்னடாது. எது எடுத்தாலும் ஏறுமாறுப் பேசறாளேன்னு முதுகு தேய்க்கிறதை நிறுத்திட் டேன். "உங்க பேரு என்ன?"

"கிரிஜை."

"கிரிஜையா? கிரி ஜாவ்ர்!"

"அதே! கிரிஜை!"

"கிரிஜை" அவகிட்ட போய் மெல்ல பேசினேன். "என்க்கு ஒரு போன் கால் செய்யணும். அவ்வளவு தான்."

"உன்னை யாரு வெளி யில விடறது? வெளிய யார் போறது? நீ உள் ளேயே இருக்கறது!"

இப்படி அஸிஸ்டென்ஷியிலேயே பேசின. எனக்கு எரிச்சலா வந்தது. "ஒரு பொண் ணுக்கு மற்றொரு பொண்ணு உதவி செய்யற முறையில் நீங்க எனக்கு..."

"ஞான் பொண்ணு இல்லே, கேட்டோ? இவ்ட யாரும் பொண்ணு இல்லே! கேட்டோ?"

"பின்ன யா...கை நீங்

# நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனுக்கு விருது!

நாதசுவர சக்கரவர்த்தி நாமகிரிப்பேட்டை கிருஷ்ண னுக்கு மத்திய அரசு விருது வழங்கியிருக்கிறது.

மத்திய அரசின் சங்கீத நாடகக் கழகம் ஆண்டு தோறும் சிறந்த கலைஞர் களை தேர்ந்து எடுத்து,



நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

விருது வழங்கி சிறப்பிக் கிறது. இந்த ஆண்டு விருது (ரூ. 5 ஆயிரம் ரொக்கம், தாமிரப்பத்திரம்) பெறும் கலைஞர்களில் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணனும் ஒருவர்.

தமிழக அரசுக் கலைஞ ரான இவர், பத்மஸ்ரீ பட் டம் பெற்றவர். திருப்பதி தேவஸ்தான கலைஞர் ஆக வும் இருக்கிறார்.

மலர்



# பழைய கதை! பழைய முடிவு!!

மிகப் பழைய ஒரு கதையை மீண்டும் படம் ஆக்கி இருக்கிறார்கள். முடிவையாவது மாற்றியிருக்கக் கூடாதா?

பிரதாப்பும், சுகாசினியும் ஜோ... பிரதாப் சிரமப் பட்டு நடிக்கிறார். சுகாசினி இயல்பாகச் செய்கிறார். அவரது முல்லை சிரிப்பு பற்பசை விளம்பரத்துக்குப் போதும். ஒரு முழு நீளப் படத்துக்குப் போதுமா?

பிரதாப்பும், வெ. ஆ. மூர்த்தியும் "கிச்சு கிச்சு" காட்டுகிறார்கள். வசனம் காதில் விழும்பொழுது, சிரிக்கத் தான் செய்கிறோம். ஆனால், அப்படியே நாடக மேடை. படத்துடன் ஒட்டவும் இல்லே.

திலீப், சில காட்சிகளில் தோன்றினாலும், கலகலப்பு ஊட்டுகிறார். ரதிஷ் மிடுக்காக இருக்கிறார். ஏ. ஆர். எஸ். கம்பீரமாக நடிக்கிறார்.

கதை, வசனத்தை சோமசுந்தரேசுவரர் எழுதியிருக் கிறார். நகைச்சுவை வசனம் "கலுக்" என்று இருக்கிறது. "நறுக்" என்று எழுதப் பழக வேண்டும்.

ஒளிப்பதிவாளர் சேகர், ஏர்க்காட்டு எழிலே அழகாக வண்ணத்தில் படமாக்கியிருக்கிறார். கங்கை அமரன் இசை அமைத்து உள்ளார்.

பாரதிவாசு டைரக்டு செய்து இருக்கிறார்கள். காட்சி களை இன்னும் வலுப்படுத்தியிருக்க வேண்டும். போலீசை வைத்தே பூட்டை உடைப்பது நன்றாக இருக்கிறது.

**மலரில் அழகு இருக்கிறது. ஆனால், மது இல்லே!**

ஙள்ளாம்!"

"ராவில ஒரு த்வாரம்! கேட்டோ! அத்தரை தான்!"

அப்புறம் அவள் உண்டியப்பொட்டியைக் குலுக்கினப்பல சிரிச்சா. மற்றவர்கள் கிட்ட என்னைக் காட்டி இந்திலயோ மராத்திலயோ என்னமோ சொன்னு. எல்லாரும் சிரிச்சாங்க. இவங்கள்ளாம் ஏதோ ஒரு வகையில் மரத்துப்போன பெண் பிள்ளைங்க. அல்லது பெண்மையே விலகிப்போன மிசினுங்க மாதிரித்தான் எனக்கு தோணிச்சு. ஒருத்தி கிட்டயாவது வெக்கம் கிறதே இல்லே. அந்தாளு பீடி குடிச்சுக்கிட்டு இருக்கறவன் உள்ள வரான். அவங்க மாரை மறைக்கக் கூட இல்லே. பதிலா, அவளையே முதுகுல சோப்பு தேச்சுவிடச் சொல்லுதுங்க! ச்சே. இவங்ககிட்ட எனக்கு ஒரு உதவியும் பேராது!

ஆரம்பத்தில் கொஞ்சம் உற்சாகமா இருந்தது பகல் ஏற ஏற குறைஞ்சுக் கிட்டே போச்சு. பன்னிரண்டு மணிக்கு வட்டமான தட்டில சப்பாத்தியும் கிண்ணத்தில கீரையும் கொஞ்சம் மோரும் கொண்டு வந்து வெச்சாங்க. வாயில வைக்க முடியல; கதவு வெளிய தாப்பா போட்டுத்தான் இருக்குது. அகஸ்மாத்தா திறந்திருந்தா ஒருத்தன் எப்பவும் மாடிப் படியாண்டை நிக்கிறுன். எல்லா பொண்ணும் மத்தியானம் முழுக்க அடிச்சுப் போட்டாப்பல தூங்கிக் கிட்டிருக்கிறது. நான் மட்டும் திருதிருன்னு முழிச்சுக்கிட்டு எப்பவாவது அந்த ஆம்பிளைங்க் கண்ணசரு வாங்களா அவங்களை ஏமாத்தி தப்பிச்சு போகலாமான்னு பாத்துகிட்டே இருக்கேன். ம்ஹூம் சந்தர்ப்பமே இல்லே!

சாயங்காலம் லேசா தூக்கம் வராப்பல இருந்தது. யாரோ குலுக்கி எழுப்பினுங்க. முழிச்சு பார்த்தா அந்த மலையாளப் பொண்ணு லொட்டுனு தரைல பெரிய லோட்டாவை வெச்சுட்டு சாயா குடிக்குருயான்னுச்சு. நான் வெறுப்பா அதை எடுத்து சப்பி பார்த்தேன். சர்க்கரை கம்மியா கசப்பா இருந்தது. அந்தப் பொண்ணு நான் சாப்பிட தவிக்கிறதைப் பார்த்துக் கிட்டு இருந்தது. கைல நகப்பாலிஷை பார்த்து "எவ்ட வாங்கினது"ன்னுச்சு.

"எங்க ஊர்ல, மட்டுவாக்கத்தில"ன்னேன்.

"எனக்கு இந்த மாதிரி கலர் கிடைச்சா வாங்கி அனுப்பு!"

எனக்கு சிரிப்பு வந்தது.

"பேர் பறயு."

"சுகுணு."

"நம்பர் எந்தா பறயு!"

"என்ன நம்பர்?"

"காலைல டெலிபோன் நம்பர் சொல்லிச்சு! அது என்ன?"

எனக்கு சட்டுனு தூக்கமெல்லாம் போயி தெளிஞ்சாப்பல ஆயிருச்சு. "அப்படின்னு அப்படின்னு..."

"சாயங்காலம் நான் வெளிய போறது. கஸ்டமர் கூட்டிட்டு போறது. அப்ப போன் பண்றது. யாருக்கு பண்றது? பறயு!"

"அவரு வந்து, அவரு வந்து, ஒரு பெரியவருங்க. ரெயில்ல என்னைப் பார்த்த பெரியவருங்க!"

"அதான் பேரா? ரெயில்ல உன்னை பார்த்த பெரியவரு!" சிரிச்சுது.

"அடடா. பேர் தெரியாதே! என்ன செய்வேன்?"

"எந்து பறயணும்?"

"என்னை இங்க வந்து காப்பாத்தும்படி!"

"உம் பேரு அவருக்கு தெரியும்?"

"தெரியாதுங்க."

"ஏய்!" இதுக்குள்ள யாரோ அவளைக் கூப்பிட்டாப்பல இருக்கு. கொஞ்சம் அவசரமா "சீக்கிரம் நம்பர் பறயு!"

நான் ரவிக்கைக்குள் வெச்சிருந்த அந்த துண்டு கடுதாசியை அவகிட்ட குடுத்தேன். அவ லோட்



## மூன்று தத்துவம்

தத்துவத்தை நான் மூன்று வகையாகப் பிரிக்கிறேன்.

தொட்டில்
கட்டில்
சுடுகாடு

—கண்ணதாசன்.

# குழந்தைகளுக்கு ஆபத்து!

குழந்தைகளை 3 வயதில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுகிறார்கள். 2, 2½ வயதில் பள்ளிக்கூடத்தில் தள்ளப்படும் பிள்ளைகளும் உண்டு. இது பிற்காலத்தில் குழந்தைகளின் கண்களை கெடுத்து விடும். பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுதே அவர்கள் கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டியிருக்கும்.

டாக்டர் யு. சி. குப்தா நடத்திய ஆராய்ச்சியில் இது தெரிய வந்து இருக்கிறது. குழந்தைகளின் கண் பார்வை கெடுவதை தடுக்கும் ஆராய்ச்சியாளர், இவர்.

"குழந்தைகள் 5 வயதில் பள்ளிக்கூடம் போவதுதான் நல்லது. அதற்குமுன் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுவது அவர்களின் கண்களை பாதிக்கும்" என்று டாக்டர் குப்தா கூறுகிறார்.

"நகரில் படிக்கும் பள்ளிக்கூட மாணவர்களில் பலர் கண்ணாடி போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆனால், கிராமத்து மாணவர் யாரும் கண்ணாடி அணிந்து கொள்வது இல்லை. காரணம், நகரங்களில் குழந்தைக்கு 3 வயது கூட ஆகுமுன்பே பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிடுகிறார்கள். கிராமங்களில் பிள்ளைகள் 5, 6 வயதில் தான் பள்ளிக்கூடம் போகிறார்கள்" என்கிறார், டாக்டர் குப்தா.

# பெண்களுக்கு தடை!

பெண்கள் சன்னல் மீது ஏறி நிற்கக்கூடாது!

ஆண்கள் அதிகாலை 5 மணிக்கு முன்பு பீடி, சிகரெட்டு வாங்க கடைக்குப் போகக் கூடாது!

பசுக்களை சினைப்படுத்த காளைகளை தேடிப் போகக் கூடாது!

இப்படியெல்லாம் ஸ்காட்லாந்தில் தடை இருக்கிறது!!

இந்தத் தடைகளை நீக்க இங்கிலாந்து அரசு முடிவு செய்து இருக்கிறது.

(இங்கிலாந்தில் உள்ள ஒரு மாநிலம், ஸ்காட்லாந்து.)

# கிரிக்கெட்டு போட்டி இன்சூரன்சு!

பம்பாயில் இந்திய அணிக்கும், இங்கிலாந்து நாட்டு அணிக்கும் சென்ற வாரம் நடந்த கிரிக்கெட்டு போட்டி ரூ. 16 இலட்சத்துக்கு இன்சூரன்சு செய்யப்பட்டது.

மழையினால் அல்லது வேறு காரணத்தால் போட்டி நடக்காமல் போனால், பம்பாய் கிரிக்கெட்டு சங்கத்துக்கு இன்சூரன்சு கம்பெனி ரூ. 16 இலட்சம் கொடுக்க வேண்டும்!

இந்தியாவில் கிரிக்கெட்டு போட்டி ஒன்று "இன்சூர்" செய்யப்பட்டது, இதுவே முதல் முறை.

# திருமணம் இல்லாமலே கணவன்—மனைவி!

திருமணம் செய்து கொள்ளாமலே கணவன்—மனைவியாக சேர்ந்து வாழும் வழக்கம் அமெரிக்காவில் வளர்ந்து வருகிறது.

பத்து ஆண்டுக்கு முன் (1970-ல்) 5 இலட்சத்து 23 ஆயிரம் ஜோடிகள் அப்படி வாழ்ந்தார்கள்: இப்பொழுது (1981-ல்) 15 இலட்சத்து 60 ஆயிரம் ஜோடிகள் அப்படி வாழுகிறார்கள்! ★

# யானை பலம்!



யானைக்கும், ஒரு மனிதனுக்கும் இடையே கயிறு இழுக்கும் போட்டி நடந்தது! மனிதன் வெற்றி பெற்றான்!! இது நடந்தது, லண்டனில்!

—ஏ. கே. நிஜாம், குவைத்.

---

[illegible] எடுத்துகிட்டு டாட்டா காட்டிட்டு ஓம் யாரமா போய்ட்டா! நான் கொஞ்சம் சந்தோஷமும் அதே சமயம் இருட்டப்போவுதேன்னு ரொம்ப கவலையுமா முழங்கால் மேல கன்னத்தை வெச்சுக்கிட்டு உக்காந்துக்கிட்டேன்.

"சொல்லுய்யா மீசை! என்ன பேரு சொல்லு. இல்லேன்னா..."

"பாஸ்! அந்த பெல்ட்டை எடுங்க."

"அய்யா அய்யா வேண்டாம்யா" என்றான் ஒல்லி.

"உன்னை யாரு அடிக்கப் போறா! உனக்கு பெல்ட் வேஸ்ட்டு! உனக்கு ஒரு ஈர்க்குச்சி போதும். கண்ணில நிரடப்போறேன். இரு இரு. ஏய் மீசை! எல்லா விவரமும் சொல்லு. டெலிபோன் இருக்கு பாத்தியா? விரல் இருக்கு பாத்தியா? அதோ பாரு பொன்னு! போலீசுக்கு போன் பண்ண எவ்வளவு நேரமாகும் நர்மதா?"

"ஒரு நிமிடம் ஆகும் வசந்த்!"

"சொன்னா விட்டுருவிங்களாய்யா?"

"விட்டுருவோம் சொல்லு."

"பாணின்னு ஒருத்தரு புரசவாக்கத்தில இருக்காரு. அப்புறம் முருகன்னு ஒருத்தரு..."

"இருக்கட்டும். அந்த பொன்னு எங்க இப்ப?"

"எல்லா பொண்ணையும் பம்பாய்க்கு அனுப்பிச்சுருவாங்க!"

"அடி சக்கைன்னானாம். பம்பாய்ல என்ன?"

"அங்க வித்துருவாங்க."

"என்ன ரேட்டு?"

"அதெல்லாம் பாணிக்குத்தான் தெரியுங்க! புரசவாக்கத்தில இருக்காருங்க. பெயிண்ட் அடிச்ச கட்டடங்க. தியேட்டராண்டை..."

"பாஸ் கேட்டிங்களா? ஒரு நடை பம்பாய் போய் வரலாமா?"

(தொடரும்)

COMICS PDF TIMES

# ஒரு நத்தி நினைக்கையிலே...

அஜந்தா



## 19

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினான். முருகனை சுகுணா நம்பினாள். அவளை பம்பாய்க்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்றான், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள். கடத்தல் கூட்டத்தையும் கண்டு பிடித்தார்கள். சுகுணா தப்பிக்க ஒரு வழி கிடைத்தது.

"என்னது? பம்பாய்க்கா!" என்றான் கணேஷ்! "வேற வேலை இல்லை! பேசாம போலீஸ் கிட்ட ஒப்படைச்சுட்டு விலகிடலாம்!"

மாணிக்கம் அப்போது கணேசின் அருகில் வந்து "அய்யா அப்படிச் சொல்லாதிங்கய்யா! என் தங்கச்சியை எப்படியாவது மீட்டுக் கொடுத்திருங்கய்யா. எவ்வளவு செலவானாலும் சரி!" என்றான்.

"இப்ப உன்னை வந்து போலீஸ் அழைச்சுட்டுப் போக வரப்போவுதே அதுக்கு என்ன சொல்றே!"

"அய்யோ அது வேற இருக்குதே!"

நர்மதா மீசைக்காரனைப் பார்த்து "ஏன்யா! பெண்களை விக்கிறிங்களா!" என்றாள்.

"அம்மா நான் இதில நடுவாந்தர ஆசாமிங்க. சென்டிரல் ஸ்டேஷனுண்டை ஆள் புடிச்சுத் தருவேன். ஒரு பொண்ணுக்கு பதினஞ்சு ரூபாயும் பேட்டாவும் கொடுப்பாங்க!"

"வசந்த், இந்த மாதிரியும் அக்கிரமம் நடக்குதா!" என்றாள் நர்மதா அதிர்ந்து போய்!

"பெண்களை எத்தனை விதத்தில உபயோகப் படுத்தறாங்க! ...இந்த நாட்டில! மெடிமிக்ஸ் விளம்பரத்தை பாருங்க... பாஸ் அது யாருன்னு விசாரிக்கணும்!"

நர்மதா: "பம்பாய்க்கு கொண்டு போய் அவங்களை என்ன செய்வாங்க!"

"வித்துருவாங்க. அதான் சொன்னாங்களே!"

"எதுக்கு?"

"தெரியாத மாதிரி கேக்கறியே! எதுக்கு..., உலகத்தின் மிகப் புராதனமான தொழிலுக்குத்தான். தேசிய ஒருமைப்பாடுன்னு இதிலதான்...மொழி வித்தியாசமில்லாத வியாபாரம். பாஸ்டார்ட்ஸ்! உங்களை எல்லாம் நிறுத்தி வெச்சு இடுப்புக்கு கீழ சுடணும்டா! ..."

"அய்யா நான் கூலிக்காரங்க!" என்றான் ஒல்லி!

"உன்னைச் சொல்லலை சுடறதுக்கு. உங்கிட்ட ஒண்ணும் கிடையாது! ஏய் நெருப்புக்குச்சி ஏரோப்ளேன் பாத்திருக்கியா? ..."

"பாத்திருக்கேங்க!"

"அந்த மாதிரித்தான் தொங்கவிடப் போறாங்க போலீஸ் ஸ்டேசன்ல! என்ன செய்யலாம் பாஸ்!"

"அதான் யோசிக்கிறேன். பம்பாய் வரைக்கும் போயிருச்சே கதை!"

நர்மதா உற்சாகமாக "கணேஷ்! இது ரொம்ப இன்டரஸ்டிங்கா இருக்குது. நானும் வசந்தும் பாம்பே போய்ட்டு வரமே! அங்க எங்க சிஸ்டர் இருக்கா?"

"என்ன வயசு?" என்றான் வசந்த்.

"கல்யாணமாகி குழந்தைகள்! ..."

"ஆளை விடு. நான் வரலை!"

"வசந்த்! உன்னையும் சுடணும்!"

"நான் அபலைகள் கட்சி!"

மாணிக்கம் எல்லோரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே "அய்யா, என்ன செலவானாலும் சரி. எங்கப்பாரு ஒத்துப்பாரு. மடவாக்கத்தில..."

"மடவாக்கம் வீரவாக்கம்! அதான் சொல்லிட்டியே! பாஸ்! அதான் கோர்ட்டு ரீஸஸ் வரதே. போய் பார்த்துட்டு வரலாமா?"

"பம்பாய்க்கா!"

"நம்ம மாதவன்தான் அங்க சூப்ரண்டா இருக்காரே! காம்தேவில!"

கணேஷ் யோசித்தான். அதற்குள் டெலிபோன் ஒலித்தது. எடுத்தான். "கணேஷ் இருக்காருங்களா?"

"இருக்கேன் என்ன?"

"கொஞ்சம் இருங்க..." மறுமுனை டெலிபோன் கை மாறி குரல் மாறியது...

"யாரு கணேசா?"

"ஆமாம். நீங்க யாரு!"

"பாச்சா உங்கிட்டத்தான் இருக்கானா?"

"ஆமாம். நீங்க



இது என்ன காதல் சிரிப்பா, மோகச் சிரிப்பா? "கிளிஞ்சல்கள்" என்ற படத்தில், மோகன்—பூர்ணிமா,

# பாட்டி வைத்தியம்

## காய்ச்சல் — தாகம்

பாட்டி! என் தம்பிக்கு காய்ச்சல் இருக்கிறது. தாகம் அதிகம் எடுக்கிறது என்றும் கூறுகிறன். இதற்கு ஒரு மருந்து கூறுங்கள்.

[எம். கணேஷ், ஆத்தூர்]

காணும் வாழையை வேருடன் எடுத்து, நீரில் கழுவி வைக்க வேண்டும். இதில், ஒரு பிடி அளவு எடுத்து, அத்துடன், நாலு மிளகு, சிறிது சீரகம் சேர்த்து, அம்மியில் வைத்து நைத்து, இரண்டு தம்ளர் தண்ணீர் சேர்த்து, அடுப்பில் வைக்கவும். இரண்டு தம்ளர், ஒரு தம்ளராக காய்ந்து சுண்டி வரும் பொழுது, இறக்கி, ஆற வைக்கவும். இதை ஒரு மடக்கு வீதம், தினசரி மூன்று வேளை குடிக்கக் கொடுங்கள். காய்ச்சல் நிற்கும். தாகமும் தணியும்.

## பரு

பாட்டி! என் முகத்தில் வேர்க்கூறு போல தோன்றியிருக்கிறது. பரு மாதிரியும் தெரியவில்லை. இவற்றை எப்படி போக்குவது?

[ஜானகி, செங்கல்பட்டு.]

பேசாமல் இரு. அது தானாக ஒழியும். அடிக்கடி எச்சிலை தொட்டு, வேர்க்கூறு மீது தடவி வரவேண்டும். காலையில் எழுந்ததும், எச்சிலைத் தொட்டு தடவிவிட்டு, பிறகு நன்றாக சோப்பு தேய்த்து குளிக்கவும்.

## சிறுநீர்

பாட்டி! என் ஒரு வயது குழந்தைக்கு அடிக்கடி சிறுநீர் தடைபடுகிறது. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

[டி. ரத்னு, சென்னை]

சிறிது சர்க்கரை எடுத்து, அத்துடன் சம அளவு உப்பு சேர்த்து, குழந்தைக்குக் கொடுங்கள். சிறுநீர் தடைபடாமல் போகும். ★

---

யாரு?"

"அதெல்லாம் இருக்கட்டும். பாச்சாவை ஜாமீன்ல மீட்டு வெச்சிருக்கியா?"

"ஆமாம். நீங்க யாரு?"

"பாச்சா அங்கதான் இருக்கானு?"

கணேஷ் சற்று அதிர்ந்து சமாளித்து "ஆமாம்" என்றான்.

டெலிபோன் தொடர்பு அறுக்கப்பட்டது!

கணேஷ் சற்று ஆச்சரியத்துடன் வைத்தான்.

"என்ன பாஸ்!"

"பாச்சா நம்மகிட்ட தான் இருக்கானு?"

"யாரு கேட்டது?"

"யாரு?"

"என்ன சொன்னன்!"

"பாச்சா உங்கிட்ட தான் இருக்கானுன்னு கேட்டான். ஆமான்னேன். வெச்சுட்டான்! ..."

வசந்த் ஏற இறங்க விசிலடித்தான். "பத்தி யாய்யா உன் மதிப்பைப் பார்த்தியா! பாஸ் இதுக்கு என்ன அர்த்தம்?"

"ஒண்ணுதான் புரியுது. யாரோ பாச்சாவைப் பார்க்க விரும்பறுங்கன்னு!"

"எதுக்கு?"

"தெரியலே. மறுபடி கால் வரும். வரணும். இல்லேன்னு மயிரைப் பிச்சுக்கணும்!"

"அய்யா என் தங்கச்சி!"

"இருய்யா! புதுசு புதுசா கோணங்களிலே பாஞ்சுக்கிட்டு இருக்கு கதை!"

கணேஷ் சிந்தித்துக் கொண்டிருந்தான். "வசந்த்! இதை ராஜேந்திரன்கிட்ட சொல்லணும்.. இன்னொரு கால் வரதா பார்க்கலாமா? ..."

"வராது பாஸ். எனக்கென்னவோ உங்களைக் கூப்பிட்டவங்க மாணிக்கம் என்கிற பாச்சா நம்மகிட்ட இருக்கானு இல்லே போலீஸ்கிட்ட இருக்கானுன்னு தெரிஞ்சுக்க மட்டும்தான் கூப்பிட்டிருக்காங்க."

"தெரிஞ்சு என்ன லாபம்? யாருக்கு லாபம்."

"கேட்டது போலீஸ் இல்லியே?"

"இல்லே. பப்ளிக் அல்ல ஆபீஸ் மாதிரி இருந்தது. காரு, பஸ் சத்தம் எல்லாம் கேட்டுது!"

வசந்த் மாணிக்கத்தை தோளில் தட்டி "இல்லாடிய்யா நீ!" என்றான். "உன்னை எவ்வளவு மக்கள் விரும்புறுங்க. எத்தனை கால் வருது. டி. ஐ. ஜி. கேக்கறுரு...வேற யாரோ கேக்க

---



ஒரே வீட்டில் உள்ள நாலு குடித்தனத்தைப் பற்றிய கதை, "குடும்பம் ஒரு கதம்பம்".

நாலு குடும்பத்திலும், நாலு வகையான பிரச்சினை. அவர்கள் எப்படி தீர்வு காணுகிறார்கள் என்பதைப் படம் சொல்லுகிறது. "இந்த வாழ்க்கை முறைதான் சரி" என்று அடித்து கூறாமல், தீர்ப்பை ரசிகர்களிடமே விட்டு விடுகிறார்கள்.

பிரதாப்—சுமலதா ஒரு ஜோடி. எஸ். வி. சேகர்—சுகாசினி மற்றொரு ஜோடி. கமலா காமேஷ்—விசு இன்னொரு ஜோடி. பாஸ்கர் தனிக்கட்டை. எல்லோருமே பாத்திரத்தை உணர்ந்து செய்து இருக்கிறார்கள்.

சுகாசினி படம் முழுவதும் சேலையோடு வருவதால் ரசிக்க முடிகிறது! விசு (வசனகர்த்தா) ஒரு நல்ல பாத்திரத்தில் அறிமுகம் ஆகிறார். தத்துவம் பேசி கலகலப்பு சேர்ப்பதும், விசுதான்.

நித்யாவிடம் முன்னேற்றம் தெரிகிறது. சாமிக்கண்ணு, கவுண்டமணி, பூபதி ஆகியோரும் இருக்கிறார்கள்.

எம். எஸ். விசுவநாதன் பாடும் (இசையும் எம். எஸ். வி.தான்.) "குடும்பம் ஒரு கதம்பம்" என்ற பாட்டு கேட்கும்படி உள்ளது.

எஸ். பி. முத்துராமன் டைரக்டு செய்து இருக்கிறார். படம் சரளமாகப் போகிறது. "எங்காத்து மாப்பிள்ளை நீ" என்ற கலவைப் பாட்டை தாராளமாக வெட்டி இருக்கலாம்.

குடும்பத்தோடு பார்க்கலாம்!

றுங்க!"

"கேலி பண்ணுதிங்கய்யா!"

"பாஸ்! இப்ப கேஸ் சுத்தமா ரெண்டா பிரியுது. ஒண்ணு இவன், இன்னொண்ணு இவன் தங்கச்சி. மெட்ருஸ், பம்பாய்."

"ஒண்ணு செய்யலாம். நான் மெட்ராஸைப் பாத்துக்கறேன். நீ பம்பாய்! போன் வந்ததும் கொஞ்சம் என் சிந்தனைக்கும் தீனி கிடைச்சுருச்சு! இவன் தங்கையைக் காப்பாத்த வேண்டியதும் முக்கியம் தான்..." கணேஷ் ஓரத்தில் ஒதுங்கியிருந்த மீசைக்காரனைப் பார்த்து "பம்பாய்ல எந்த இடத்தில வித்திருப்பாங்கன்னு தெரியுமாய்யா?" என்றான்.

"அதெல்லாம் பாணிக்குத்தாங்க தெரியும்."

"சரி. இவரைக் கூட்டிட்டுப் போயி அந்த பாணி இருக்கிற இடத்தைக் காட்டு..."

"சரிங்க. என்னை மட்டும் விட்டுருங்க!"

"முதல்ல காட்டுய்யா சோமாரி! பாஸ் நீங்க!"

"நாலும் மாணிக்கமும் இங்கயே இருக்கோம்! இன்னொரு முறை டெலிபோன் வரதா பார்க்கலாம். எனக்கு ஒரு ஐடியா கிடைச்சிருக்கு. ராஜேந்திரன் கூட டிஸ்கஸ் பண்ணணும்..."

"என்ன ஐடியா!"

"இப்ப சொல்ல மாட்டேன்...அவசரப்படக் கூடாது... மாணிக்கம் கவலைப்படாம என் கூட இரு...இவங்க உன் தங்கையை மீட்டுக்கொண்டு வர முயற்சிப்பாங்க!..."



"யோவ்! இதுக்கெல்லாம் நிறைய செலவாகும். உங்கப்பாகிட்ட சொல்லி காசு வாங்கித் தருவியா! நிலம் நீச்சு எதாவது இருக்கா? வித்துக் காசாக்க!..."

"செலவைப் பத்தி கவலைப்படாதிங்க!"

"அய்யா சொல்லிட்டார், பாஸ்! பம்பாய்க்கு பிளேன்ல போயிர வேண்டியதுதான்!"

"பிளேன்லதான் போகணும் வசந்த்! அதிக சமயமில்லை!"

"இது நல்ல திரில்லிங்!" என்றாள் நர்மதா.

"நர்மதா நீ வேண்டாம்...இது ஆம்பிளைங்க சமாச்சாரம்!"

"இல்லை வசந்த். அவளையும் அழைச்சுக்கிட்டுப் போ! சமயத்தில ஒரு பெண்ணோட உதவி தேவையா இருக்கும்!"

"எப்படி சொல்றிங்க?"

"அப்புறம் புரியும்! முதல்ல புரசவாக்கம் போய் அந்தப் பாணியோ, யாரோ, அவனைப் பாரு! நான் பம்பாய்க்கு ரெண்டு டிக்கெட் புக் பண்ணிடறேன். உக்காருய்யா மாணிக்கம்."

"வாய்யா வஸ்தாது! பாணியைக் காட்டு... நர்மதா! வந்து தொலை!" என்றான் வசந்த்.

வசந்த் கிளம்பிப் போக, கணேஷ் டெலிபோனை சுழற்றி "ராஜேந்திரன் இருக்காரா?" என்றான்.

டாக்சியில் நால்வரும் புரசைவாக்கம் சென்றார்

கள். நெடுஞ்சாலையில் நீளப் போகச் சொன்னான் மீசை.

வசந்த் ஒல்லியைப் பிடித்து "ஏதாவது எச கேடா நடந்தா இந்த இடத்திலயே கீமா பண்ணிருவேன்..."

"என்னங்க விசயம்?" என்றார் டாக்சிக்காரர். டாஷ்போர்டில் எம். ஜி. ஆர். படம் இருந்தது.

"தாய்க்குலத்தை அவமதிக்கிற பொறுக்கிப் பசங்கய்யா! கிராமத்து பொண்ணுங்களை வலை போட்டு பி டி ச் சு...பம்பாய்ல விக்கறாங்க!"

"அப்படியா? டாய்! ஹ ா ண் டி ல் வேணுங்களா!"

"தேவை இருந்தா சொல்றேன்!"

"கவலைப்படாதிங்க. நம்ம பேட்டைதான்!"

தெருவோடு இருந்த தியேட்டரில் எம். ஜி. ஆர். படம் ஓடிக்கொண்டிருந்தது. கடைகளில் பிளாஸ்டிக் பக்கெட்டுக்கள் தொங்கிக்கொண்டிருந்தன. இட்லி மாவு அரைக்கும் இயந்திரங்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. கோவிலில் சிலர் தூங்கிக்கொண்டிருக்க, பச்சை பெயிண்ட் அடித்த கட்டிடத்தின் முன் நிற்கச் சொன்னான். டாக்சிக்காரரும் கூட வர பக்கவாட்டில் படி ஏறினார்கள். வீடு போலவும் இல்லை, லாட்ஜ் போலவும் இல்லை. காரை உதிர்ந்திருந்தது. சுவற்றில் மின்சார மீட்டர்கள் வரிசையாக இருந்தன. மகளிருக்கென்று டைப் கற்றுக் கொடுக்கும் அறை பூட்டியிருந்தது. கெடிகார ரிப்பேர் ஷாப்பில் மணி முறையே 7–30, 3–20, 12–00. அதற்கு அடுத்த அறையில் மீசைக்காரன் நின்றான். "இங்கதான் இருக்காரு பாணி."

வசந்த கதவைத் தட்டினான். கதவு தானாகவே திறந்துகொண்டது.

உள்ளே அந்த அறை அவசரமாகக் காலி செய்யப்பட்டு இருந்தது.

(தொடரும்)

**தெலுங்கர்கள் போராட்டம்**

## வெளி ஆளுக்கு வேலை கொடுக்காதே!

"வெளி மாநிலத்துக்காரர்களுக்கு ஆந்திராவில் வேலை கொடுக்கக்கூடாது" என்று தெலுங்கர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்!

ஆந்திராவில் விசாகப்பட்டினத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்ய வடநாட்டில் (பீகாரில்) இருந்து 500 பேர் வரவழைக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்னும் 1,500 பேர் வர இருக்கிறார்கள்.

இவ்விதம் வெளி மாநில ஆட்களை ஆந்திராவுக்கு அழைத்து வருவதற்கு தெலுங்கர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறார்கள். விசாகப்பட்டினத்தில் பெரிய போராட்டம் நடந்து வருகிறது. "உள்ளூர்க்காரன் பிச்சை எடுக்கிறான். வெளி மாநிலக்காரனுக்கு வேலை கொடுக்காதே" என்று ஊர் எங்கும் சுவரொட்டி ஒட்டி இருக்கிறார்கள்.

எல்லாத் தொழிற் சங்கங்களும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு இருக்கின்றன. மாணவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். "நாங்கள் படித்துவிட்டு வேலை இல்லாது தவிக்கிறோம். வெளி மாநிலக்காரனுக்கு இங்கே வேலையா?" என்று மாணவர்கள் கேட்கிறார்கள்.

விசாகப்பட்டின மாநகராட்சி மேயர் என். எஸ். என். ரெட்டி இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இருக்கிறார். "விசாகப்பட்டினத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று போராடியது நாங்கள். இரும்புத் தொழிற்சாலையில் வேலை வெளி மாநிலக் காரனுக்கா?" என்று மேயர் கேட்கிறார்.

## பெண்கள் மேலாடையின்றி நடனம்!

பெண்கள் மேலாடை இல்லாமல் ஓட்டல்களில் நடனம் ஆடலாம் என்று அமெரிக்க நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு அளித்து இருக்கிறது!

அதை தடுப்பது, அவர்களின் சுதந்திரத்தில் தலையிடுவது ஆகும் என்று நீதிபதி சொன்னார்! ★

## ரிக்ஷாக்காரன்!



ஜப்பானின் தலைநகரான டோக்கியோ நகரின் வீதிகளில் இந்த ரிக்ஷா ஓடியபொழுது, எல்லோரும் வியப்புடன் பார்த்தார்கள். அதற்குக் காரணம், ரிக்ஷாவில் அமர்ந்து இருக்கும் அழகி அல்ல. ரிக்ஷாவை இழுத்துச் செல்லும் மனிதன்தான். இவன் இயந்திர மனிதன்!

மோட்டார் கார்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, இந்த இயந்திர மனிதனை உருவாக்கினார். மணிக்கு 5 கிலோ மீட்டர் வேகத்தில் ரிக்ஷாவை இழுத்துப் போவான். ரிக்ஷாவின் விலைதான் கொஞ்சம் அதிகம்—ரூ. 40 ஆயிரம் ஆகிறது!

—அ. அய்யூப், ஆங்காங்.

# ஜே.எப். தனிஸ்லாஸ் அடிகள்

குற்றாலம் என்றாலே குளுமையான நீர்வீழ்ச்சி தான் எல்லோர் மனக்கண் முன்னும் தோன்றும்! அருவிகள் என்ன? அவற்றின் குளுமை என்ன? இனிமை என்ன? — அதை அனுபவித்தவர்களுக்கே அதன் இன்பம் தெரியும்!

ஆனால், எனக்கு, குற்றாலம் என்றாலே, கவிஞர் கண்ணதாசனின் கவிதை வெள்ளம்தான் நினைவுக்கு வருகிறது.

## இயேசு காவியம்

1980 மார்ச் மாதம் கவிஞர் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை காவியமாக வடித்துத்தர இசைந்தார். திருச்சி, கலைக்காவிரியின் இயக்குநர் எஸ். எம். ஜார்ஜ் அடிகள் எவ்வளவோ முயன்றும் கவிஞரை சென்னையில் காவியத்தை எழுத வைக்க முடியவில்லை.

எனவே, உதவியாளர் சந்திரமோகனை அனுப்பி, பல வேலைகளில் மூழ்கிக் கிடந்த கவிஞரை, குற்றாலத்திற்குக் கடத்திக்கொண்டு வரச்செய்தோம்!

குற்றாலத்தில் அப்பொழுது "சீசன்" நேரம். அதனால், இட நெருக்கடி! எனவே, கவிஞர், எங்களையும் தன் குடும்பத்தினராக அரசு விருந்தினர் மாளிகையில் தங்க வைத்தார். அதோடு, எங்களை தன் குடும்பத்தினராகவே கவனித்தார். நாங்கள் அவரை கவனித்துக்கொள்வதற்குப் பதிலாக, எங்களை அவர் கவனித்தார். எங்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் பார்த்துக்கொண்டார்.

இயேசு பெருமானைப் பற்றிய விவிலிய நூலை (பைபிள்) காவியமாக்கத் தொடங்குமுன், அதை ஓரிருநாள் வேலை என்று தான் கவிஞர் எண்ணியிருந்தார். எழுத உட்கார்ந்த பொழுது தான் பிரமாண்டமான வேலை என்று பிரமிப்பு அடைந்தார்! ஆனால், கவியரசரின் ஆட்சிக்குக் கட்டுப்படாத பொருள் எது உண்டு? எனவே, 15 நாளில், தினசரி எட்டு மணி நேரம் எழுதி, இந்த பிரமாண்டமான வேலையை எல்லோரும் பிரமிக்கும் வகையில் செய்து முடித்தார். பலவித சந்தங்களிலும் கவிதைகளை எழுதினார். சில பகுதிகளை இசை அமைப்புக்கு ஏற்றவாறு அமைத்து தந்தார்.

## நம்பிக்கை

அந்த நாட்களில், எங்களிடம் அவர் ஒரு மூத்த சகோதரனைப் போல நடந்துகொண்டதை இப்பொழுது எண்ணிப் பார்க்கும்பொழுது கண்கள் பனிக்கின்றன. தன்னைப் பற்றி, தன் வாழ்வு பற்றி, தன் குடும்பம் பற்றி, தன் இலட்சியங்கள் பற்றி மனம் விட்டுப் பேசுவதற்கு எங்களை நம்பிக்கைக்கு உரியவர்களாகக் கருதினார்.

அப்போது, திருக்குற்றாலநாதர் கோவிலில் சமயச் சொற்பொழிவு ஆற்றுமாறு, கோவில் நிர்வாகத்தினர் கவிஞரைக் கேட்டுக்கொண்டனர். அந்நிகழ்ச்சிக்கு, கோவில் நிர்வாகிகள், கிறிஸ்தவத் தொண்டர்களாகிய எங்களையும் அழைக்க வேண்டுமென்று கவிஞர் விரும்பினார். "ஒன்றாய் நாம் வாழ்ந்திடுவோம், உரையாடல் செய்திடுவோம், ஒரிதயம் கொண்டிருப்போம்" என்ற சமய, சகோதரத்துவக் கொள்கையை நடைமுறையில் செயல்படுத்தும் வகையில், இருந்தது, அவரது வேண்டுகோள். அதன்படி நாங்கள் திருக்குற்றாலநாதர் கோவிலில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம்!



கவிஞருடன் மறைதிரு. தனிஸ்லாஸ் அடிகள் (வலது புறம் இருப்பவர்) இடதுபுறம் கலைக்காவிரி இயக்குனர் மறைதிரு. எஸ். எம். ஜார்ஜ் அடிகள்.

சமயங்களிடையே முன்பிருந்த நிலைமை மாறி இப்போது, சமயம் என்பது இறைவனை அடைய ஒரு சாதனம் என்ற மன நிலை வளர்ந்து, சமயங்கள் ஒன்றோடு ஒன்று உறவாடுவது மட்டும் இல்லாமல், தங்களது ஞான செல்வங்களை பகிர்ந்துகொள்ளவும் முற்படுகின்றன! அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, எங்கள் அருமை நண்பர், கவிஞர் கண்ணதாசன் பைபிளின் ஒரு பகுதியை காவியமாக புனைந்திருப்பதின் மூலம், சமய உறவிலே ஒரு புதுப் பாதை அமைத்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

## இறவா காவியம்

15 நாள் உழைத்து, "இயேசு காவியம்" எழுதி முடித்து, "ஆமென்" என்று முற்றுப்புள்ளி வைத்தவுடன் கவிஞருக்கு இருந்த உற்சாகம் சொல்லி முடியாதது. அன்று அவர் சொன்ன சொற்கள் என் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டு இருக்கின்றன. "பல சமயங்களிலே, பலர் என்னை "ஓர் இறவாக் காவியம் எழுதுங்கள்" என்று கேட்டதுண்டு. அந்த இறவாக் காவியம் "இயேசு காவியம்" தான் என்று உறுதியாகக் கூற முடியும்" என்று கவிஞர் கூறினார்.

வேலை முடிந்ததும், திருச்சி ஜங்ஷனில், அவரை வழியனுப்ப வந்து, நான் அவரோடு தனித்திருந்த நிலையில், என் கைகளைப் பிடித்துக்கொண்டு "மறக்க முடியாத நாட்கள்! மறகக முடியாத அனுபவத்தை எனக்குத் தந்திருக்கிறீர்கள்" என்று மனம் நெகிழ்ந்து கூறினாரே, அதை நினைக்கும்பொழுது என் இதயத்தை சோகம் கவ்விப் பிடிக்கிறது! ★

# ஒருத்தி நினைக்கையிலே

சுஜாதா



**20**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினன். முருகனை சுகுணா நம்பினுள். அவளை பம்பாய்க்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்ருன், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள். பெண் கடத்தல் கூட்டத்தைப் பற்றிய துப்பு கிடைத்தது. சுகுணா தப்பிக்க ஒரு வழி கிடைத்தது.

"**கா**லி பண்ணிட்டு போயிட்டாங்க" என்ருள் நர்மதா.

"பட்சி பறந்து போச்சு. அவங்களுக்கு செய்தி போயிருச்சு. முதல்ல தப்பிச்சுக்கிட்டு போனுனே அவன்தான் செய்தி சொல்லியிருக்கணும். துப்புரவா காலி பண்ணிக்கிட்டு போயிட்டாங்க"

"இப்ப என்ன செய்யறது" என்ருள், நர்மதா.

"வலது கை ஆள்காட்டி விரலை எடுத்துக்க"

"ம்"

"அதை வாயில வெச்சு சப்பு, ஏதாவது ஐடியா கொடுப்பியர, என்ன பண்றதுன்னு என்னையே கேக்கறியே!"

"ஐடியா வேணுமின்ன கணேஷ் சார்தான் சரி."

"ஏன் எனக்கு என்ன குறைச்சல், நான் கொடுக்க மாட்டேனு?"

"அதான் கொடுத்தியே விரல்!" என்று சிரித்தாள், நர்மதா.

"யோவ், இந்தாளு பாலி எங்க போயிருப்பான்னு ஏதாவது தெரியுமாய்யா"

"தெரியாதுங்க, இதான் அவர் அறை"

"இது அவர் மாஜி ரூம், இப்ப!"

"அப்ப நாங்க போவலாங்களா"

"எங்கய்யா போயிருவே. இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்குல்ல கேள்விங்க"

"எல்லாம் ஆயிருச்சுங்களே"

"இத பாரு. அந்தப் பொண்ணு அகப்படற வரைக்கும் உனக்கு எங்க கிட்ட இருந்து விடுதலை கிடையாது. ஏதாவது முரண்டு பண்ணினே! டாக்சிக்காரரே"

"என்னடா? ஹாண்டில் பாக்கிறியா?"

"நீங்க எடுத்துட்டு வாங்க டாக்சிக்காரரே" என்ருள் நர்மதா.

"வேண்டாங்க வேண்டாங்க உங்க கூட வர்றேன்"

"இல்லை நர்மதா இவங்களை போலீஸ் ஸ்டேசுணுண்டை டிராப் பண்ணிட்டு நாம பாட்டுக்கு போய்க்கினே இருக்கலாம்"

"வேண்டாங்க வேண்டாங்க உங்க கூடவே இருக்கங்க"

"பேசாம வா போகலாம். கணேஷ்கிட்டே விசயத்தை சொல்லி இவங்ககிட்ட இன்னும் ஏதாவது கக்க வைக்க வேணுமான்னு கேட்டு வெச்சுக்கலாம்."

—திரும்ப அவ்விருவரையும் டாக்சியில் அழைத்துக் கொண்டு கணேசின் இருப்பிடத்தை நோக்கிச் சென்ருர்கள்.

**இ**ருட்டு வர வர எனக்கு திக்குதிக்குங்குது எப்ப இவங்க வியாபாரத்தை ஆரம்பிப்பாங்க தெரியலே. ஒன்பது மணிக்குத்தான் இருக்கும்னு வ்யிற்றில நெருப்பைக் கட்டிக்கிட்டு காத்திருக்கேன் அந்தப் பொண்ணு கிரிஜை சோக்கா டிரஸ் எல்லாம் பண்ணிகிட்டு டக்டக்குனு நடந்து போயிட்டா எதித்தாப்பல ஒரு வீட்டில் இருந்து ஆர்மோனிய சப்தமும் பாட்டு சப்தமும் கேக்க ஆரம்பிச்சுச்சு. அப்பப்போ சலங்கை குலுங்கறதும் வாவ்வா வாவ்வான்னு சப்தமும் ஆம்பிளைக் குரல்களும் கேக்குது.

கீழே ஒருத்தன் பாடிக்கிட்டே மல்லிகைப்பூ மாலை போட்டுக்கிட்டு "சம்பா பாய் சம்பா பாய்"ன்னு யாரையோ தெருவில் இருந்து கூப்பிடறான். இந்தி சினிமாவில தான் இந்தமாதிரி காட்சிங்



**ச**மர்த்தாகப் பள்ளிக்கூடம் செல்லும் சுபத்ராவிடம், விஜயகாந்துக்கு என்ன விளையாட்டு!

(படம்: "நான் சூட்டிய மலர்")



"உனக்கு ராமுவும் பாய்பிரண்டுதான்; சோமுவும் பாய்பிரண்டுதான்! ஆனால், நீ சோமுவிடம் மட்டும் நெருங்கிப் பழகுகிறாயே ஏன்?"

"அவர் ஏற்கனவே கு. க. செய்துகொண்டவர்!"

---

கள்ளாம் பாத்திருக்கேன். நிசமாவே இருக்குதான்னு ஆச்சரியமாதான் இருந்துச்சு.

கடவுளே கிரிஜைக்கு டெலிபோன் கிடைச்சு, அந்த சமயத்தில பெரியவரு கிடைச்சு, அவருக்கு ஞாபகம் வந்து, எத்தனை இருக்கு! எல்லாம் நடந்தாகணுமே. அதுக்குள்ள எனக்கு கஸ்டமர் வந்தாக்க் என்னதான் செய்வேன். எப்படி சமாளிப்பேன்.

அந்த இடத்து முறை பாடுங்கள்ளாம் எனக்கு கொஞ்சம் கொஞ்சமா புரிய ஆரம்பிச்சுது. எல்லாரும் எப்பவும் பிசியாக இருக்கிறதில்லை. இங்கயும் போட்டி அதிகம் தெரிஞ்சுது. திருதிருன்னு முழிச்சிட்டு வரப்போறவங்க அதிகம் இல்லைதான். பெண்ணுங்தான் ஜாஸ்தியா இருக்கிருப்பல பட்டது. அதும் இன்னிக்கு விரத நாளாம் அதிகமா பிசினஸ் இருக்காதாம்.

"வ்ரத் வ்ரத்" துனு அவங்க இந்தில பேசிக்கிட்டதில இருந்ததே ஊகிச்சுக்கிட்டேன். அதனுலை ஒரு ஆளு மாடி ஏறி வந்தாக்க ஒம்பதுபேர் சூழ்ந்துக்கிட்டாங்க இதில இவங்களுக்கு எதாவது கமிஷன் உண்டு போல இருக்கு வந்தவன், அவன் முன்னுல் நிக்கிறவங்களை ஒரு மாதிரியா பார்த்து ஒருத்தியை தேர்ந்தெடுக்கிறுன். அவளை அழைச்சுக்கிட்டு, கட்டடத்தின் பின்பக்கத்துல, கட்டி விட்டிருக்கிற ரூமுக்கு போயிர்றுங்க. அதனுல எனக்கு சமாளிக்கிறது சுலபமாத்தான் இருந்தது. அந்தப் பக்கமே போனுத் தானே வம்பு!

சன்னல் வழியா கம்பியைப் பிடிச்சுக்கிட்டே பாத்துகிட்டு இருந்தேன். ஒரே ஒரு முறை ஒருத்தன் மட்டும் இன்னொரு பெண்ணை கூட்டிக்கிட்டு போறப்ப சன்னல் வழியா என்னைப் பார்த்து "எ நயி லட்கி ஹை க்யா" ன்னுன். நான் அவனைப் ஒண்ரைக் கண் பார்த்து வாயைக் கிழிச்சுக் காட்டினேன் பயந்துட்டான். அவசரமா முந்தி தேர்ந்தெடுத்தவ கூடவே போய்ட்டான். அதுக்கப்புறம் தொந்தரவு எதும் இல்லை. வராங்க போறுங்க. ரெயில் ஸ்டேஷன் பிளாட்பாரம் மாதிரித்தான் இருக்குது. ஒருத்தி மட்டும் மூணுதடவை உள்ள போய்ட்டு வந்துட்டா. எல்லாரும் அவளைத்தான் அடிக்கடி தேர்ந்தெடுத்துக்கிட்டு இருந்தாங்க. கொஞ்சம் வயசான ஒருத்திக்கு, பாவம், யாரும் வரலை அழுருப்பல மூஞ்சியை வெச்சுக்கிட்டு இருந்தா. என்னைப் பார்த்து ஏதோ இந்தில கேட்டா நான் சிரிச்சேன். என் ரூம்ல எனக்கு பேச்சுத் துணைக்காக வந்து உக்காந்துக்கினு. அவ பேச்சுத்தான் புரியலை இருந்தாலும் அவ அங்கலாய்ப்பு எனக்கு புரிஞ்சுது.

சின்ன குட்டிங்கள்ளாம் வந்துட்டாங்க, என் பொழைப்புல மண்ணைப் போட. இவங்கள்ளாம் ஸ்கூல்ல போய் படிக்கக் கூடாதோ, இங்க ஏன் போட்டிக்கு வராங்க!

அவளைப் பாத்தா பாவமாத்தான் இருந்திச்சு. முகம் பூரா உழுத மாதிரி கோடுகள் அதைக் கஷ்டப்பட்டு பவுடராலயும்



# நெஞ்சில் ஒரு முள்

காதலனுல் ஏமாற்றப்பட்ட கன்னி ஒருத்தி, விதவை கோலத்தில், ஒரு குழந்தையோடு, மாமனுர் வீட்டுக்குள் நுழைகிறுள். "நெஞ்சில் ஒரு முள்" ஆக அங்கே வந்து நிற்கிறுன், பழைய காதலன். இதுதான் கதை!

"கடி பதங்" என்ற இந்திப் பட தழுவல். பூர்ணிமா என்ற புதுமுகம் கதாநாயகியாக அறிமுகமாகி இருக்கிறுர். பரவாயில்லை. முகத்தில் உணர்ச்சியைக் காட்டப் பழகிக்கொண்டால், மின்னலாம்.

கதாநாயகன் பிரதாப். அலட்டிக் கொள்ளாமல் செய்து இருக்கிறுர்.

சிவசந்திரன் வில்லனுக வருகிறுர்.

வி. கே. ராமசாமி, கே. கண்ணன், கல்கத்தா விசுவநாதன், சத்யகலா ஆகியோரும் நடித்து இருக்கிறுர்கள்.

படப்பிடிப்பு நன்றுக உள்ளது.

ஜி. கே. வெங்கடேஷ் இசையமைப்பில், பாடல்கள் பரவாயில்லை.

"மதி ஒளி" சண்முகம் டைரக்டு செய்து இருக்கிறுர். சொல்ல வேண்டியதை ஒழுங்காக சொல்லிக்கொண்டு போகிறுர். ஆனுல், காட்சிகள் விறுவிறுப்பாக அமையவில்லை.

பெண்கள் பார்ப்பார்கள்!

---

## பிரசவ வரி!

பெண்களுக்கு பிரசவ வரி விதிக்க பாகிஸ்தானில் உள்ள "காக்கார் என்ற நகரசபை தீர்மானித்து இருக்கிறது!

ஒவ்வொரு பிரசவத்துக்கும் ரூ. 20 வரி கட்ட வேண்டும்!

பெண் குழந்தை பிறந்தால் சலுகை—ரூ. 10 வரி செலுத்தினுல் போதும்!

மாப்பிள்ளை வரியும் விதிக்கப்பட்டு இருக்கிறது! ஒவ்வொரு புதுமாப்பிள்ளையும் ரூ. 200 வரி கட்ட வேண்டும்!

மறைக்க முயற்சி பண்ணியிருந்தா. பழங்காலத்து கிராமபோன் மிசின்மாதிரி இருந்தா. மூக்கில் கண்ணுடிக்கல்லு இளிக்குது. கையில எல்லா நரம்பும் தெரியுது உதடுகள் தடிப்பா இருக்கு இவகிட்ட வியாதிகள் ஆரம்பத்தை பார்த்தேன். இன்னும் சில வருடங்களில் ஏன் இன்னும் சில மாதங்களில் செத்துப் போயிருவான்னு தோணிச்சு இவளுக்காக யாரும் அழ மாட்டாங்கன்னு தோணிச்சு. அதுக்காக நான் கொஞ்சம் அழுதேன். அவளும் லேசா கண்ணீர்விட ஆரம்பிச்சா. பவுடர்ல கோடு போடுது கண்ணீர். அப்பதான் என்னைத் தேடிக்கிட்டு ஆள் வந்திருச்சு.

"மத்ராசி லட்கி?"

"உருன் உருன்"

"ஓ தேக்கோ" என்று என் அறையைக் காட்டிவிட்டாங்க உள்ள நுழைஞ்ச ஆளைப் பார்த்து அந்தம்மா சிரிச்சு சாகசம் பண்ண ஆரம்பிச்சா. வந்தவன் என்னைத்தான் பார்த்துகிட்டு இருந்தான். அவளை ஏறெடுத்தும் பாக்கலே "அச்சா சலோ"ன்னுன்.

அந்தம்மா சோகமா எழுந்து போயிரவே அந்தாளு என்னை நேராப் பார்த்தான்.

"உம்பேரு என்ன"ன்னுன்.

அடப்பாவி தமிழு! எனக்கு சந்தோசமாவும் அதே சமயம் துக்கமாகவும் இருந்தது.

"அய்யா தமிழ்க்காரரே நான் தெரியாத்தனமா இங்க வந்து மாட்டிக்கிட்டேன்யா. நான் இவங்களைச் சேந்தவ இல்லைய்யா. என்னைக் காப்பாத்துங்கய்யா" என்றேன்.

"உன்னைக் காப்பாத்தறதுக்குத்தான் வந்திருக்கேன். நீதானே டெலிபோன் பண்ணி எங்கப்பாரிக்கிட்ட சொன்னே"

"டெலிபோனு, நானு"

"நீயோ, வேற யாரோ கொஞ்ச நேரம் முன்னாடி எங்கப்பாருக்கு டெலிபோன் வந்துச்சு அவரு பம்பாய் வர்றப்போ உன்னை ரயில்ல வெச்சுப் பாத்தாராம் அப்பவே சந்தேகம் தோணிச்சாம். யாரோ இந்தப் பொண்ணைக் கடத்திக்கொண்டு போறாங்கன்னு, அதனால எதோ சீட்டில் டெலிபோன் நம்பர் எழுதி வெச்சுட்டு வந்தேன்னு சொன்னாரு. எனக்கு முதல்ல புரியலே. அப்பறம்தான் இன்னிக்கு டெலிபோன் வந்தது. எதோ மலையாளப் பொண்ணு பேசிச்சு. இந்த மாதிரி நீ இங்க மாட்டிக்கிட்டு இருக்கன்னு சொல்லி. வந்து மீட்டுக்கொண்டு போகும்படியா சொல்லிச்சு, அப்பா உடனே என்னை அனுப்பிச்சாரு. நானும் அடபாவும் மாதுங்காவில பிஸினஸ் பண்றோம்."

எனக்கு கண்ணில பொல பொலன்னு கண்ணீர் வடிய ஆரம்பிச்சுருச்சு. "அய்யா நீங்க நல்லா இருப்பீங்கய்யா. அய்யா, நீங்க தெய்வம் போல வந்திங்கய்யா என்னைக் காப்பாத்துங்க எப்படியாவது அழைச்சுட்டு போயிருங்கய்யா."

"கொஞ்சம் கஷ்டம் இவங்க லேசில விட மாட்டாங்க, உங்கப்பா பேர் விலாசம் சொல்லு அவங்க சார்பில போலீஸ்ல ஒரு புகார் கொடுத்து உன்னை மீட்டுட்டு போறதுக்கு ஏற்பாடு பண்றேன்."

"இல்லை இல்லை இப்



## முதல் "கிறிஸ்துமஸ்"

முதல் கிறிஸ்துமஸ் விழா, 335–ம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

இதாலி நாட்டு மன்னரின் அரண்மனையில், இந்த விழா நடந்தது.

பலே அழைச்சுட்டு வாயி ருங்க"

"ம்கூம் இவங்க ஒப் புக்க மாட்டாங்க; கவலைப் படாதே உன்பேர் என்ன சொன்ன."

"சுகுணா"

"சுகுணா உன்னை எப் படியாவது மீட்டுக்கிட்டு போயிர்றேன் கவலையே படாதே. எங்களுக்கு தக வல் கிடைச்சிருச்சுல்ல. இனிமே போலீஸ் பக்க பலத்தோட வந்தூர்றோம் இல்லேன்னா ஒண்ணு செய்து பாக்கறேன். இந்த மாலிக் கிட்ட சடாலடி விட்டு பொண்ணு ரொம்ப புடிச் சப்போயிருச்சு நைட்டுக்கு கூட்டிட்டுப் போய்ட்டு வர வான்னு கேட்டுப் பார்க் கிறேன். ஸாரி, நான் ரொம்ப இதில எல்லாம் கரை கண்டவன்னு நினைச் சுக்காதே உனக்கு உதவி செய்யறதுக்கு இவங்க ரூட் லயே போனாத்தான் முடி யும் பெரிய ராக்கெட் இது!"

"கேளுங்கய்யா கேளுங் கய்யா நான் சம்மதம் சொல்லிர்றேன்."

"உன்னை யார் கேக்கப் போறாங்க! கொஞ்சம் நம் பிக்கை உண்டாகும் படி நானும் நீயும் கதவை சாத் திக்கிட்டு சந்தோசமா இருக்கறாப்பல பேச்சு காட்டியாகணும்."

நான் என் உயிரைப் பிடித்து கொண்டு சிரிச் சேன்.

கொஞ்சம் இருன்னு கதவைத் திறந்துக்கிட்டு வெளியே போய் "மாலிக் மாலிக்"னு கூப்பிட்டார். யாரோ வந்தாங்க இந் தியில பேசினாரு, நான் நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு அய்யோ அவன் சம்மதிக்க ணுமேன்னு வேண்டிக்கிட் டேன். அப்பறம் குழப்பமா பேச்சுக்குரல் கேட்டது. ஏதோ சச்சரவு போலக் கேட்டது. அந்தாளு குர லும் கேட்டது. இன்னொரு குரல் பரிச்சயமா இருந் தாப்பல கேட்டது நான் வெளியே வந்து எட்டிப் பார்த்தேன்.

முருகன் நின்னுக்கிட்டு இருந்தான்!

(தொடரும்)

# சிலம்பு நடிகை!

**பா**ண்டிச்சேரியில் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டு இருந்த ஜெயவாணியிடம், "நீ விஜயகுமாரி போல அழகாக இருக்கிறாய். சினிமாவில் நடிக்க முயற்சி செய்தால், "ஓகோ" என்று ஆகிவிடலாம்" என்று நச்சரிக்க, ஜெயவாணிக்கு உண்மையாகவே சினிமா ஆசை வந்துவிட்டது.

சென்னையில் வந்து குடியேறினார், ஜெயவாணி. கையில் தன் புகைப் படத்தை வைத்துக்கொண்டு, இரண்டு மூன்று ஆண்டாக படியேறி இறங்கிக்கொண்டு இருந்த ஜெய வாணிக்கு, "அவளும் தாயானாள்" படம் கதாநாயகி வாய்ப்பை அளித்தது!

இப்பொழுது, "கசப்பும் இனிப்பும்", "தர்மம் தடுமாறுமா?" மற்றும் பல படங்களில் கதாநாயகியாக



ஜெயவாணி

நடித்துக்கொண்டு இருக்கும் ஜெயவாணி, "என் சினிமா அனுபவமும் கசப்பும் இனிப்பும் கலந்தது" என்று சொன்னார்.

22 வயது ஆகும் ஜெயவாணி, நடனத்தில் அரங்கேறி யவர்.

"அவளும் தாயானாள்" படத்தில் சிலம்பு சண்டை செய்தீர்களே, அனுபவமா? பயிற்சியா?" என்று நிருபர் கேட்டார்.

"எனது நீண்ட நாள் முயற்சிக்குப் பிறகு கிடைத்த படம், அது. அதனால், அந்த பாத்திரத்தை சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று, சிலம்பு பயிற்சி பெற்றேன்" என்று ஜெயவாணி சொன்னார்.

நன்றாக தமிழ் பேசத் தெரிந்த நடிகைகளில், ஒருவர் ஜெயவாணி.

நடிகை ஜெயவாணி, 7, இந்து பிரசாரசபா தெரு, தி. நகர், சென்னை-600 017.

மலர்: 22 இதழ்: 50
துன்மதி: மார்கழி 12
(27-12-81)

## அட்டையில்

நடிகை சுமலதா






புத்தாண்டில் ராணி தரும் பரிசு, ரூ. 10 ஆயி ரம்! முழு விவரம், அடுத்த வார (3-1-82) "ராணி" இதழில்.






வயிறுக்கு அடிமையாக உள்ளவன் கடவுளை தொழு தல் அரிது.

—சா. சுதி.



# ஒருத்தி நினைக்கையிலே...

சுஜாதா

21

முன்கதை சுருக்கம்:

கிராமத்து பெண் சுகுணா, வேலைக்காக தன் அண்ணன் மாணிக்கத்தோடு சென்னைக்கு வந்தாள். அவளை கடத்திக் கொண்டு போய் கற்பழிக்க முயன்ற முரடர்களிடம் இருந்து, முருகன் காப்பாற்றினான். முருகனை சுகுணா நம்பினாள். அவளை பம்பாயக்கு அழைத்துப் போய் விபசார விடுதியில் விற்றான், முருகன். போலீசாரிடம் சிக்கிய மாணிக்கத்தை வசந்தும் கணேசும் மீட்டார்கள். பெண் கடத்தல் கூட்டத்தைப் பற்றிய துப்பு கிடைத்தது. சுகுணா தப்பிக்க ஒரு வழி கிடைத்தது. சுகுணாவை மீட்டுப் போக வந்தார், ஒரு தமிழ் வாலிபன்.

நான் சட்டுனு மூஞ்சியை மறைச்சுக்கறதுக்குள்ள முருகன் என்னைப் பார்த்துட்டான். "என்ன சுகுணா சவுக்கியமா"ன்னு சிரிச்சான். "என்னது, அதுக்குள்ள ஊருக்குப் போக ஏற்பாடு பண்ணி ஆளையெல்லாம் வரவழைச் சுட்டியே! பரவால்லை, கெட்டிக்காரிதான். ஏய் உம் பேரு என்ன?"

"என் பேர் எதுவா இருந்தா உனக்கென்ன? அந்தப் பொண்ணை வெளிய விடு. அநியாயமா அவளை பலாத்காரப்படுத்தி இங்க கொண்டாந்து சேத்திருக்கே."

"கியா பக் பக்! மத்ராஸிமே!"

"என்ன செய்துருவே."

"அந்தப் பொண்ணு கிட்ட எல்லா விவரங்களும் வாங்கி வெச்சிருக்கேன் போலீஸ்கிட்ட புகார் கொடுத்து, இங்கேயே கூட்டி வரணா இல்லையா பார். தப்பிக்கணும்னா இப்பவே விட்டுரு."

"போலீஸ்! ஹ! ஸுனா? போலீஸ்!" எல்லோரும் நகைச்சுவைத் துணுக்குகள் கேட்டது போல சிரித்தார்கள். "போலீசுக்கு சொல்றதுக்கு நீ உயிரோட போயிருவியோ?"

"இதபாரு, இந்த மிரட்டல் எல்லாம் நடக்காது."

"போலீஸ் வந்தால் இவதான் இங்கதான் இருக்கப் போறாளா? நான்தான் இருக்கப் போறேனா? இத பாரு, இந்த இடம் ஒரு கடல். முழுசா முன்னூறு ஆளை இங்க மறைக்கலாம்."

"சுகுணா வா போகலாம்."

நான் கிளம்பியதும், "அப்படியா சேதி? எங்க போய்ருவ பாக்கலாம்!" குறுக்கே வந்து நின்னுட்டான். "அரே ஓ பஹாதூர்"னு யாரையோ கூப்பிட்டான்.

தாட்டியா ரெண்டு ஆளு வந்து என்னைக் காப்பாத்த வந்தவனை பாவம் ஆட்டுகுட்டி மாதிரி தூக்கிக்கிட்டு கீழ இறங்கினாங்க. அந்த ஆளு கையைக் காலை உதறிப் பார்த்தான் முடியலை. ஏதோ பார்சல் மாதிரி தெருக்கோடிக்கு அவனைத் தூக்கிட்டு போயிட்டாங்க.

எனக்கு இருந்த நம்பிக்கை எல்லாம் பொசுக்குனு உதுந்து போச்சு. முருகன் வந்து "குறும்பு போகலை பாத்தியா, உனக்கு? இங்க

## தூய்மை மறைந்தது

எளிமைக்கும், அரசியல் தூய்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய முன்னாள் அமைச்சர் பி. கக்கன் மறைந்துவிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஆகவும், சட்டசபை உறுப்பினர் ஆகவும் கக்கன் இருந்தார். 10 ஆண்டு காலம் மந்திரி பதவி வகித்தார். அப்படியிருந்தும், சென்னையில் ஒரு சொந்த வீடு கூடக் கிடையாது. கடைசி வரை வாடகை வீட்டில்தான் வசித்து வந்தார்.



கக்கன்

அவர் மந்திரி பதவியில் இருந்து விலகி, கோட்டையில் இருந்து வெளியில் வந்தபொழுது, அவர் 10 ஆண்டு காலமாகப் பயன்படுத்திக் கொண்டு இருந்த அரசாங்கக் கார், அவரை ஏற்றிச்செல்ல வந்தது. ஆனால், கக்கன் அந்தக் காரில் ஏற மறுத்து, வாடகைக் காரில் (டாக்சி) ஏறி, வீட்டுக்குப் போனார். அவ்வளவு நேர்மையானவர்!

காமராஜரின் நெருங்கிய நண்பராகக் கக்கன் விளங்கினார். 1954-ல் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். இந்தப் பதவி வகித்த முதல் அரிஜன் கக்கன்தான்.

கக்கனுக்கு 72 வயது. மனைவியும், 4 மகன்களும், ஒரு மகளும் இருக்கிறார்கள்.

வெச்சுக்கக்கூடாது. இடப் பெயர்ச்சி செய்யணும். வெளியுலகத்தோட தொடர்பு வெச்சுக்கவும் கூடாது. இதபாரு, நீ என்னிக்கு மனசு மாறி இந்த தொழில் செய்ய எனக்கு சம்மதம்னு சொல்றியோ அன்னிவரைக்கும் ஒரு சின்ன ரூம்ல அடைஞ்சு கிடப்பே. போடி உள்ள!"

"சண்டாளா! படுபாவி! நீ நல்லாயிருப்பியா! உன்னே மாரியாயி வாரிக்கிட்டு போகாதா! முருகன்னு பேர் வெச்சிருக்கியே, உன்ன முருகன் வேலால பிளக்கமாட்டாரா."

"சும்மா கத்தாத."

பக்கத்தில இருந்தவங்க கூட இந்தில பேசினுன். "இதபாரு, இங்க எல்லா பொருளுக்கும் கண்ணு காது எல்லாம் உண்டு. நீ கிரிஜைகிட்ட பேசினது எங்களுக்கு தெரியாதுன்னு நினைச்சியா? அவள் டெலிபோன் பண்ணது தெரியாதா? இந்த மாதிரி ஓர் ஆளு உன்னைக் காப்பாத்த வரப்போறுன்னு தெரியாதா, எங்களுக்கு? இதபாரு, இந்த இடத்தில இருந்து தப்பிக்கிறது அத்தனை சுலபமில்லே. எவ்வளவு ரூபா செலவழிச்சு எத்தனை பேர் இதில பிழைக்கணும். எங்க பொழைப்புல மண்ணைப் போடலாமா, கண்ணு. உனக்கு வழியே இல்ல. சொன்னபடி கேளு. என்ன? இது ரொம்ப சுலபமான வேலே. ஒரு நாளைக்கு பத்து நிமிச வேலே. கமிசன் உண்டு. சோப்புக்கட்டி, எண்ணே முழுக்கு எல்லாம் உண்டு. வைத்திய வசதி உண்டு. யாருக்காவது மாத மாதம் மணியார்டர் அனுப்பணுமா, செய்யறோம். அப்பப்ப கஸ்டமருங்க மனம் வந்து பக்சீஸ் கொடுத்தாங்கன்னு நீயே வெச்சுக்கலாம். வேலேயில்லாத் திண்டாட்டம் பரவிக் கிடக்கிற இந்த தேசத்தில வேலே கொடுத்தா வேணுங்கறியே, நியாயமா."

நான் ஒரு கோடியில ஒதுங்கியிருக்க முருகன். கிட்ட கிட்ட வந்து என்னைப் பார்த்து சிரித்து நுனி விரலால் என் மூக்கை ஒரு தடவை தொட்டுவிட்டு, "தொல்காப்பிய காலத்தில இருந்து தொன்று தொட்டு இருக்கிற தொழிலே கைவிடலாமா? சொன்னதைக் கேளு. சமர்த்தாயிரு. அது ஒண்ணுதான் உனக்கு வழி"ன்னு சொல்லிட்டு வெளிய என்னவோ பேசிட்டு போனுன். கொஞ்ச நேரம் கழிச்சு பளீர்னு கன்னத்தில அறையற சத்தமும், கிரிஜை மலேயாளமும் தமிழும் கலந்து அழற ஒலியும் கேட்டன. நான் அப்படியே சாஞ்சேன்!

"நல்லா சாஞ்சுகிட்டு உக்காந்திரு; தங்கச்சி எங்க இருக்கான்னு கவலேப்படாதே" என்றுன் வசந்த், மாணிக்கத்தைப் பார்த்து.

கணேஷ், "அந்த இடத்தில வேற ஒரு துப்பும் கிடைக்கலேயா வசந்த்."

"இல்லே பாஸ்."

கணேஷ் யோசித்தான். "ஏன்யா பம்பாய்னு சரியாத் தெரியுமா, உனக்கு."

"பம்பாய்தாங்க" என்றுன், மீசைக்காரன்.

"பம்பாய்ல எங்க?"

"அதெல்லாம் தெரியாதுங்க."

"நீ அவங்ககூட எப்பவாவது பம்பாய்க்கு போயிருக்கியா?"




"இல்லீங்க."

"பொய் சொல்றியா, படவா ராஸ்கல்."

"அடிக்காதிங்க... அடிக்காதிங்க."

நர்மதா, "வசந்த், வாங்க பம்பாய்க்கு போய்த் தேடலாம்."

"சரியாப்போச்சு. பம்பாய் என்ன கொண்டி தோப்புத் தெருவா!"

கணேஷ் யோசித்தான். "வசந்த், போலீஸ்ல ரிப்போர்ட் கொடுக்கிறது நல்லது."

"வேண்டாங்க! வேண்டாங்க! போலீஸ் வேண்டாங்க."

"யோவ் உன்னே சுதந்திரமா காத்தாட விடப் போறேம்னு எப்பய்யா சொன்னேம்?"

"அய்யோ. அடிப்பாங்க. அடிப்பாங்க!"

"என்னது? முன்ன பின்ன அடிவாங்கிப் பழக்கம் இல்லையா?"

"ரொம்ப அடிப்பாங்க."

"அதெல்லாம் மரத்துப்போயிரும், பயப்படாத."

"வேண்டாங்க, வேண்டாங்க."

"அப்ப சொல்லு, பம்பாய்ல எங்க அழைச்சுக்கிட்டு போயிருப்பாங்க? அதையாவது சொல்லு."

அவன் முகத்தில் உண்மையான கலவரத்துடன், "சொல்லத் தெரியலிங்களே, எங்களுக்கு அவ்வளவுதூரம் பிஸினஸ் தெரியாதுங்களே. பம்பாய்க்கு அழைச்சுட்டு போனாங்க. அது மட்டும்தான் தெரியும், அய்யா. இங்கயே வெச்சிருங்க. இங்கயே சாத்துங்க; போலீஸ் வேண்டாங்க."

"பயப்படாத! நல்ல போலீஸ்காரங்களா பார்த்து புடிச்சுக் கொடுக்கறேன்."

"அய்யா பாத்ரூம் வருதுங்க" என்றான் ஒல்லி.

"அடக்கிக்க! பாஸ் என்ன செய்யலாம்? இவங்க கிட்ட கிடைச்ச சமாசாரம் போதாது."

கணேஷ், "முதல்ல ஒரு நம்ப்ளெயிண்ட் கொடுக்கலாம்."

"அவ்வளவுதானா?" என்றாள், நர்மதா.

"அவ்வளவுதான் செய்ய முடியும், இப்போதைக்கு."

"பம்பாய் போகலியா?"

"பம்பாய் போய் அத்தனே பெரிய நகரத்தில எங்கன்னு தேடறது? அந்தாளு பாணியைச் சந்திச்சிருந்தாலும் பரவால்ல. அவனைப் பிசைந்து ஏதாவது தகவல் வாங்கியிருக்கலாம்."

நர்மதாவின் உதடுகள் இறுகின. "நீங்கள் எல்லாம் கோழைங்க. இவ்வளவு தூரம் உங்களுக்கு உதவி செஞ்சேனே, எல்லாம் வேஸ்ட்டு."

"இப்ப என்ன செய்யணுங்கறே?"

"வாங்க, பம்பாய் போயி அவளைத் தேடலாம்."

"சரியாப் போச்சு. பாஸ், ஒண்ணு பண்ணி இருக்கலாம். அப்பவே தெரியாமப்போச்சு! இந்த நர்மதா அந்த குண்டங்க கிட்ட மாட்டிக்கிட்டா இல்லே? அப்ப நாம காப்பாத்தி இருக்கக்கூடாது. பேசாமல் விட்டிருந்தால் இவளையும் பம்பாய்க்கு அழைச்சுட்டு போயிருப்பாங்க. நாமும் இவளைத் தொடர்ந்து பம்பாய்க்கு போயி, அங்க ரெட் லைட் ஏரியாவில... ஆ! கற்பனே பண்ணிப் பார்க்கறதுக்கே சுவையா இருக்கு. நூறு பெண்ணுங்க மத்தியில, நர்மதா நர்மதானுன்னு நான் கைல ஒரு ரத்த ரோஜாவை வெச்சுக்கிட்டு..."

"வசந்த் ஒரு ஐடியா."

"என்ன?"

"இப்ப நீ சொன்னியே



மலர்: 23 இதழ்: 51
துன்மதி: மார்கழி 19
(3-1-82)

## அட்டையில்

நடிகை கவிதா

## அடுத்த இதழில்



ஜெமினி கணேசனின் மகள் சினிமாவில் நடிக்கிருர்! படத்துடன் பேட்டி. அடுத்த வார (10–1–82) "ராணி" இதழில் பாருங்கள்.

## சாரி! சிந்தி!!







கோபத்துக்கு சிறந்த மருந்து, தாமதித்தல்.

—செனிகா.

அதே மாதிரி."

"அதே மாதிரி."

"நானும் நீயும் பம்பாய் போயி சிவப்புவிளக்கு பகுதிகளில் எல்லாம் அந்தப் பொண்ணு பேரைச் சொல்லி கூப்பிட்டு தேடிஞல் என்ன? சுகுண... சுகுணன்னு!"

"கோணத்தனமா பேசாதே. சிவப்பு விளக்கு பகுதியில போயி சுகுணன்னு கூப்பிட்டா பத்து சுகுணவாவது கூப்பிட்டிங்களா சுண்ணன்னு வருவாங்க!"

"சரி, நீங்கள் வராட்டிப் போங்க. நான் போய் தேடிட்டு வர்றேன். வா, மாணிக்கம்."

"மாணிக்கத்தை அத்தனை சுலபமா அழைச்சுட்டு போக முடியாது. அவரு வி. ஐ. பி."

"சரி, நான் தனியாப் போறேன்" என்ருள் பிடிவாதமாக.

"வசந்த் நீ ஒருமுறை பம்பாய் போய் பார்த்துட்டு வந்துரு. முதல்ல போய் மாதவனை சந்திச்சுப் பாரு. அவர் எதாவது உதவி செய்வார்."

"செலவு?"

"மாணிக்கம்தான்! என்ன மாணிக்கம்?"

"அதான் சொல்லிட்டிங்களே."

"உங்கள் ஊர்ல டெலிபோன் உண்டாய்யா."

"இருக்குங்க, பஞ்சாயத்தில."

"உங்கப்பாவை கூப்பிட்டா கூப்பிடுவாங்களா?"

"நிச்சயம்."

"என்ன பாஸ், இந்த வெத்து குண்டங்களை என்ன செய்யறது?"

"நீ வரதுக்கு முந்தி நான் ராஜேந்திரனுக்கு போன் செய்து சொல்லிட்டேன். எந்த நேரமும் அவங்க வந்துருவாங்க."

"யாருங்க?"

"போலீஸ்தான்! வசந்த், நீங்கள் ரெண்டு பேரும் புறப்பட்டுடுங்க, சாயங்காலமே!"

(தொடரும்)



"எனக்கு வயது 31 ஆகிறது. இதை மறைக்க வேண்டிய அவசியம் என்ன? வயதை குறைத்துச் சொன்னதும் இளமை வந்துவிடவா போகிறது. வயதைத்தான், முகம் காட்டி கொடுத்துவிடுகிறதே!" என்கிருர், மூன்று எழுத்து சு நடிகை!

எந்த நடிகை மீது இப்படி கோபத்தைக் கொட்டுகிருரோ!



மாலை நேரத்தில் மகாபலிபுரம் நோக்கி உல்லாசமாகப் பறந்து கொண்டு இருந்த ஜோடியின் திருமணச் செய்தியை விரைவில் எதிர்பார்க்கலாம் என்கிருர்கள்.

சாதாவாக இருந்து இப்பொழுது சாதா ஆகிவிட்ட அந்த நடிகர் மீது சித்ர நடிகைக்கு எப்படித்தான் மோகம் ஏற்பட்டதோ!

[illegible]யில் நடிகை வேறு நடிகர்களுடன் சிரித்துப் பேசிஞல் பிரதாப நடிகருக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிடுகிறதாம்!

ஆனுல், அந்த பிரதாப நடிகரை வேறு நடிகைகளுடன் பார்த்தால் சோலை நடிகை விறைத்துக் கொண்டு போகிருராம்!

முன்னாள் அரசியல் நடிகை இப்பொழுது படங்களில் நடிக்கிருரோ இல்லையோ, வீட்டில் கலகலப்புக்கு குறைவு கிடையாதாம்.

வந்து போகிறவர்களின் கூட்டம் ஏராளமாம்.

எல்லாம் தம்பியின் ஏற்பாடாம். எப்படியோ தொழில் வளரவேண்டியதுதானே!

அந்த டைரக்டர், கதை விவாதத்துக்காக ஓட்டலில் தங்கியிருந்தார். விஷயம் இரண்டாவதுக்கு எட்டியது. ஓட்டலை நோக்கி பறந்துவிட்டார்!

இரண்டாவது ஓட்டலில் இருக்கும் செய்தி, முதலாவதுக்குத் தெரிந்துவிட்டது! அவரும் விரைந்தார்!

கடைசியில், சக்களத்தி சண்டையை தீர்த்துவைக்கவே டைரக்டருக்குப் பெரும்பாடாகிவிட்டதாம்!

பம்பாயில் புதிய இளவரசருக்கும், மன்மதன் காதலிக்கும் இடையே எப்பொழுதும் கசமுசாதாஞம்! இந்த சிண்டை முடிந்துவிட்டு இருப்பவர், மனைவியேதாஞம்.

இப்படி சிண்டு முடிந்துவிடாவிட்டால், இளவரசர் தன் பிடியில் இருந்து நழுவிவிடுவார் என்று அஞ்சுகிருரோ!

# ஒருத்தி நினைக்கையிலே



சுஜாதா

22

முன்கதை சுருக்கம்:

கிராமத்துப் பெண் சுகுணவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுண வின் அண்ணன் மாணிக் கம் போலீசில் சிக்கி ஞன். அவனே வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணவை மீட்க, வசந் தும் நர்மதாவும் பம் பாய் போனர்கள்.

வசந்தும் நர்மதா வும் பம்பாய்க்கு வந்து சேர்ந்தபோது இருட்டி இருந்தது. நகரம் தன்னுள் பொதிந்திருக்கும் பாவங் களை எல்லாம் மறைத்து ஜொலிப்புக் காட்டியது.

"இங்கிருந்து சுகு ணன்னு கூப்பிடலாம், வராளா பார்க்கலாம்" என்ருன். வசந்த்.

"அவங்கள்ளாம் எங்க இருப்பாங்க."

"யாரெல்லாம்?"

"சுகுண மாதிரி மாட் டிக்கிட்ட பொண்ணுங்கள் ளாம்."

"நான் என்னமோ பம்பாய்ல உள்ள சிவப்பு விளக்கு பகுதிகளுக்கெல் லாம் அட்டவணை வெச்சி ருக்கிற மாதிரி கேக்க றியே."

"வசந்த் இதில உனக்கு அனுபவம் உண்டே!"

"யாரைப் பார்த்து, அப்படிச் சொல்றே? அய்யா என்ன கற்பு!"

"சத்தியமா சொல்லு நீ அங்கெல்லாம் போனதே இல்லே?"

"இதபாரு, அய்யா வைப் பொறுத்தவரை ஒண்ணு, பெண்ணுங்களே, தேடிக்கிட்டு நான் போக வேண்டிய அவசியமே இருந்ததில்லே. அவங்களாத் தான் என்னைத் தேடிக்கிட்டு இதுநாள் வரை வந்திருக் காங்க."

"சரிசரி. உங்கிட்ட இருந்து உண்மையே வராது. இப்ப வந்த காரி யத்தைப் பார்க்கலாம்."

"வசந்துடைய அனுப வத்தைப் பற்றி இப்ப என்ன கவலே! இந்த வேளையில நாம் என்ன செய்ய போகிருேம் சொல்லு."

"முதல்ல தங்கறதுக்கு தனித்தனியா ரெண்டு ரூம் பார்த்துக்க சித்தார்த்தா ஓட்டல் போகிருேம்."

"தனித்தனியா?"

"ஆமா."

"கற்பா?"

"பின்ன? ரெண்டு பேரும் அறியாத உள்ளங் கள். பேதைகள். சந்தர்ப்ப மும் தனிமையும் கொடுக் கிற தைரியத்தில் எதாவது ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆயி நச்சுன்னு? நற்றினே யில வரமாதிரி..."

"அய்யே உன்கிட்ட போய் நான் மோகிப் பேன்னு சொல்றியா? கனவிலயும் நடக்காது" இவ்வாறு பேசிக்கொண்டு இருக்கும்போதே அவர்கள் விமான நிலையத்திலிருந்து வெளிப்பட்டு தத்தம் சிறு பெட்டிகளுடன் ஒரு டாக்சி யில் ஏறிக்கொண்டார்கள்.

"ஒண்ணு பண்ணலாமே நர்மதா."

"உங்க ஐடியா எதும் வேண்டாம். அசந்து மறந்தா என்னையும் ரெட் லேட் ஏரியாவில வித்திட லாம்னு ஐடியா கொடுப்ப! பேசாம நாளைக்குப் போய் கணேஷ் சொன்ன மாதிரி அந்த போலீஸ் சூப்ரண்ட் மாதவனைப் பார்க்கலாம். ராத்திரிக்கு ஓட்டலுக்கு போய் சாமான்களை "டம்ப்" பண்ணிட்டு "ஏக் துஜே கேலியே" பார்க்கலாம். எங்க ஓடறதுன்னு விசா ரிச்சு வை."

"அய்யா அந்த மாதிரி சினிமாவெல்லாம் பாக்க மாட்டாரு!"

"'படுத்திருந்த ராத் திரிகள்' போன்ற மலே யாளப் படம்தான் அய்யா வுக்கு விருப்பமாக்கும்?"

"நர்மதா ஒரு



மார்கழி குளிர் என்னே ஒன்றும் செய்யாது என் கிருரோ, "சில்க்" சுமிதா.

(படம்: "பார்வையின் மறுபக்கம்")

## சிவாஜி, பத்மினி கட்டுரை

நடிகை சாவித்திரியை பற்றி சிவாஜி கணேசன், நடிகை பத்மினி ஆகியோர்



பத்மினி

எழுதும் சிறப்பு கட்டுரைகள் அடுத்த வார (17-1-82) "ராணி"யில் இடம்பெறுகின்றன.

யோசனே. போனதும் ஒரு வாய் அள்ளிப் போட்டுக்கிட்டு இன்னிக்கு ராத்திரியே தேட ஆரம்பிச்சுட்டா என்ன?"

"எங்க தேடறதுன்னு தெரியாம."

"டாக்சிக்காரனைக் கேட்டா தெரிஞ்சு போவுது." "தேக்கோ பாய்" என்று வசந்த் படபடவென்று டாக்சி ஓட்டியிடம் இந்தியில் ஏதோ கேட்டான். அவன் ஒரு மாதிரி நர்மதாவைப் பார்த்து பதில் சொன்னன்.

"உனக்கு இந்தி தெரியுமா?"

"டெல்லில பத்து வருடம் இருந்திருக்கேனே."

"என்ன கேட்டே அவனே?"

"இந்தப் பொண்ணு ஊருக்கு புதுசு. இவ தங்கச்சி விலாசம் தப்ப விட்டுருச்சு. ஆஒ அது ஒரு மாதிரியான பொண்ணு. அந்த மாதிரி பொண்ணுங்கள்ளாம் கிடைக்கக்கூடிய எடம் எங்க இருக்குன்னு கேட்டேன். அஞ்சாறு ஏரியா இருக்காம். எங்க போகணும்னுன்."

"ஏர்ப்போர்ட்டில இருந்து எது கிட்டவோ அங்க போகச் சொல்!"

"அதுகூட வாஸ்த்தவந்தான்! "தேக்கோ பாய்!"

"முதல்ல இதைப் பார்த்துட்டு அப்பறம் பார்க்கலாம்!"

"அதுகூட சரிதான்" தேக்கோ பாய் என்று வசந்த் இன்னும் கொஞ்சம் இந்தி பேச டாக்சிக்காரன் கண்ணுடி வழியாக நர்மதாவை ஒரு மாதிரி பார்த்துக்கொண்டே ஒற்றைக் கையால் ஓட்ட ஆரம்பித்தான். "நீ வேற ஏதோ அவங்கிட்ட சொல்லியிருக்க. இவன் என்னைப் பார்க்கிற பார்வை சரி இல்லே."

"சேச்சே."

"எங்க போறோம்?"

"ஏதோ அந்தேரியாம். சாண்டாக்ரூஸ் பக்கத்தில இந்த மாதிரி ஏரியா இதாணும். பாக்கலாம். தீவிரமா எதும் வேண்டாம். சும்மா பொம்மை பார்த்துட்டு வரலாம். அதிர்ஷ்டம் இருந்தா இன்னிக்கே சிக்கலாம். இல்லேன்னு கொடுத்த காசுக்கு தரிசனம் பண்ணிட்டு வரலாம்."

டாக்சி டிரைவர் கொண்டு சென்ற பாதையில் மூன்று, நான்கு மாடிக் கட்டிடங்கள் வரிசையாக இருந்தன. அந்த வீடுகள் யாவும் குடும்பப் பாங்காக கொடியில் ஆடும் துணிகளும், டெலிவிஷன் ஏரியல்களும், வீட்டுக் கணக்குப் போடும் பிள்ளைகளுமாகத் தான் இருந்தன. திடீர் என்று ஒரு பகுதி மட்டும் கொஞ்சம் மோசமாகியது. சட்டென்று சந்துகளாகப் பிரிந்து சன்னல் சன்னல்களாக முகங்கள் தெரிய ஆரம்பித்தன.

வசந்த் டாக்சி டிரைவரிடம் நிறுத்தச் சொல்லி விட்டு "இறங்கு. வந்தாச்சு" என்றுன்.

"இங்கயா" என்று ஆச்சரியத்துடன் இறங்கினுள் நர்மதா. இருவரும் கையில் பெட்டிகளை எடுத்

## சிட்டுகளுக்கு விருந்து!

"அலைகள்" ஓயாது. தொடர்ந்து வீசுகிறது. இதுவும் ஒரு சின்னச் சிட்டுவின் காதல் கதை.

முற்பகுதி முழுவதும் குளுகுளுப்பான காதல். மழையில் நனையும் காட்சி "கிளுகிளு"ப்பாக இருக்கிறது. பிற்பகுதி வழக்கமான "லைலா—மஜ்னு".

மோகனும், பூர்ணிமாவும் காதல் சிட்டுகள். இயற்கையாக நடிக்கிறார்கள். மோகன் அலட்டிக்கொள்ளாமல் நன்றாக செய்கிறார். பூர்ணிமாவிடம் இளமை இருக்கிறது. நல்ல உடல் கட்டு இருக்கிறது. நடிப்பும் இருக்கிறது. திலீப் அவர்களுடன் ஒத்துழைக்கிறார். வி.கே. ராமசாமி, வி. கோபாலகிருஷ்ணன், ஜி. சீனிவாசன் ஆகியவர்களும் நடித்து இருக்கிறார்கள்.

பாடல்கள் கேட்பதற்கு இனிமையாக இருக்கின்றன. (இசை: டி. ராஜேந்தர்) ஒளிப்பதிவு கண்ணுக்குக் குளிர்ச்சி. "ஜாலி ஐ லவ் யூ" பாடல் காட்சியில் ஒளிப்பதிவாளர் திறமையைக் காட்டுகிறார்.

கதை, வசனம், டைரக்டர் பொறுப்புகளை துரை ஏற்று இருக்கிறார். வழக்கமான பாணியில் இருந்து விலகி, ஊருடன் ஒத்துப்போகத் தொடங்கிவிட்டார் போலிருக்கிறது! "ஜெயமாலினி" நடனம் பிரமாதம். ரெயிலில் தலைவைத்துப் படுக்கும் காட்சி சுவைக்கும்படி இருக்கிறது.



### கிளிஞ்சல்கள்

வகுப்புகளுக்கு மட்டம் போடுகிறவர்கள் பார்ப்பார்கள்!

தூக்கொள்ள வசந்த் டாக்சிக்கு பணம் கொடுத்து விட்டு அதை விடுவித்தான். நர்மதாவின் பெட்டியை வாங்கிக் கொண்டான். "நட" என்றான்.

பவுடர் திட்டுக்கள். ரத்த உதடுகள். துருத்திய மார்பகங்கள். முழங்கால் பாவாடைகள். மஞ்சள் வெளிச்சத்தில் மினுக்கும் கண்ணாடி நகைகள். பாதி திறந்தது போல இருந்த கதவுகளில் முழங்கையை ஊன்றிக்கொண்டு சில இடங்களில் கொத்துக் கொத்தாகப் பெண்கள் நின்றுகொண்டு இருந்தார்கள். ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு தினுசாக உடை அணிந்திருந்தாள். ஒருத்தி மாக்சி, ஒருத்தி பாவாடை, ஒருத்தி மேற்கத்திய உடை, ஒருத்தி சரிகை தாவணி, ஒருத்தி சர்க்கஸ்காரி போல.

நர்மதா "மை காட்!" என்றாள். "இத்தனை பெண்களா!"

"இன்னும். இது ஒரு முன்னோட்டம்தான். உள்ள போனா எலி மாதிரி வெளிய வரும்."

"இதெல்லாம் தப்பு இல்லையா?"

"இந்த தப்பு செஞ்சு தானே நானும் நீயும் உலகத்தில வந்திருக்கோம்."

"சே. நான் அதைச் சொல்லலை. வசந்த், விபச்சாரம், தப்பு இல்லையா?"

"இந்த நகரத்தில அதை சமாளிக்க முடியாம ஒழிஞ்சு போங்கடான்னு சில பகுதிகளில சட்டம் பண்ணிட்டாங்க. ஒழிக்க முடியலை என்கிறதை ஒத்துக்கிட்டாங்க!"



'இவங்களுக்கு ஒரு நாளைக்கு எத்தனை கிடைக்கும்?"

"ஆடிட்டரை கேட்டு சொல்றேன்."

"முதல்ல இவங்களைப் பார்த்தா பரிதாப உணர்ச்சிதான் ஏற்படுது, இல்லை? அதோ பாரு வசந்த் அங்க நிக்குதே, அந்தப் பெண்ணுக்கு இருந்திருந்து பதிமூணு வயசு இருக்குமா?"

"கரெக்ட்."

"வசந்த்! எனக்கு அழுகை வரது. நான் இந்த மாதிரி பார்த்ததே இல்லை. கேள்விப்பட்டிருக்கேன். பார்த்ததில்லை. இத்தனை பெண்களா? ஒவ்வொருத்தருக்கும் ஒரு சோகம், ஒரு காரணம், ஒரு ஏழ்மை இருக்கணுமில்லையா?"

"ஈஸி மணி. நீ இப்ப ஆபீசில் போய் எட்டு மணி நேரம் வேலை செஞ்சா, ஒரு நாளைக்கு எத்தனை சம்பாதிக்க முடியும்? இருபது ரூபா? முப்பது ரூபா? இங்க ஒரு மணி நேரத்தில புரட்டிரலாம். படுத்துக்கிட்டே சம்பாதிக்கிற ஒரே தொழில்!"

ஆனா, இதுக்காக அவங்களோட இழப்பு?"

"என்ன இழப்பு!! இதில பாதி கேஸ் திமிராத்தான் இருக்கும். வீட்டை விட்டு ஓடிவந்திருக்கும்!"

"என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுங்கற நிலையில எனக்குத் தெரியும். அவங்க எல்லாரும் இதுக்காக ஒரு நாள், ஒரு கணத்தில யாவது, ரொம்ப வருத்தப்பட்டு ரத்தம் வர அழுவாங்க! பத்தியா நமக்கு மத்த பெண்களைப் போல வாழ்வு இல்லாம போயிருச்சேன்னு!"

"அதெல்லாம் மரத்துப்போயிருக்கும். இப்ப இதுங்கள்ளாம் பெண்களே இல்லை. ஜடப் பொருள்கள். அதோ பாரு அது? பேசாம அவுத்தே காட்டுது பாரு!"

"உன்னை மாதிரி ஆண் பிள்ளைங்க இருக்கிறவரைக்கும் இந்த மாதிரி தொழில் இருந்துகிட்டே இருக்கும்."

"மரம் வந்துதா, விதை

மலர்: 22 இதழ்: 52
துன்மதி: மார்கழி 26
(10-1-82)

## அட்டையில்

நடிகையர் திலகம்
சாவித்திரி

## அடுத்த இதழில்




அடுத்த இதழ் (17–1–82) "ராணி" பொங்கல் மலராக வெளி வருகிறது. "லக்ஷ்மி" எழுதும் புதிய தொடர்கதை ஆரம்பம். கண்ணதாசன் எழுதிய கரும்புக் கதை. அதிகப் பக்கங்கள். விலை 80 காசு.






பழிவாங்குதல் வீரம் அன்று. பொறுப்பதே வீரம்.

—சேக்ஸ்பியர்.

வந்ததா முதல்லங்கற மாதிரித்தான்! ரொம்ப சரித்திர புராதனமான உத்தியோகம். இதபாரு நர்மதா, நம்மை நோக்கி ரெண்டு பேர் வராங்க. பேசாம இரு. நான் எல்லாம் பேசிக்கிறேன்"

"ஆவோ பாய்! கியா ஹால் கை."

அவர்கள் இரண்டு பேரும் வசந்தின் மேல் கவனமின்றி நர்மதாவையே பார்த்தார்கள். "சோக்ரி கஹான் ஸே லாயி?" என்றான்.

அவன் தொப்பியை சற்று குறுக்கே அணிந்து, வாய் வழிய வெற்றில பாக்கு போட்டுக்கொண்டு கண்களில் மை தீட்டியிருந்தான்.

"என்ன சொல்றான்?"

"இத்தனை இந்திப் படம் பாக்கறியே, இது கூட தெரியலையா!"

"மத்ராஷி லோக்!"

"முருகன் கோ தேக்னே ஆயா ஹும்!"

"அச்சா முருகன் கா ஆத்மி? மால் லாயே ஹோ?"

"வசந்த் என்ன சொல்றான்? பாரேன். திரு திருன்னு முழிக்கிறான்!"

"நர்மதா நீ விக்கிறதுக் கான்னு கேக்கறான். வித்துறவா?"

"படவா ராஸ்கல் என்னை மட்டும் வித்தியோ! கொன்னுருவேன்."

"போல்தி கியா ஹை?"

"குச் நஹி அப்னி பாஷாமே தாட்டினே. நர்மதா, முருகன் இங்க தான் கொண்டாந்து விக்க றான் போல இருக்கு. அதனால நீ தைரியமா இருந்தா இந்த பாதைல இன்னும் கொஞ்சம் பூந்து பார்க்கலாம். என்ன சொல்றே!"

"எங்க அழைச்சுட்டு போவாங்க?"

"எங்க அழைச்சுட்டு போனாலும் நான் உன் கூடவே இருப்பேன். பிராமிஸ். ஆர் யூ கேம்?"

"சரி பார்த்துரலாம்" என்றாள்.

(தொடரும்)



சொந்தப் படம் எடுக்கும் இரண்டு வீட்டு குமார நடிகர், கதாநாயகனைப் பார்க்க ஸ்டூடியோவுக்கு சென்றார். கதாநாயகன் ஒரு நாற்காலியில் கம்பீரமாக சாய்ந்திருக்க, மற்



றொரு நாற்காலி காலியாக இருந்தது!

குமார நடிகருக்கு, கதாநாயகன் அருகே உட்கார அச்சம். கதாநாயக நடிகரோ, ஒப்புக்காவது தயாரிப்பாளரான நடிகரை உட்காரச் சொல்லவில்லை. இந்த நாடகம் நடந்து கொண்டு இருந்தபோது, "அலோ. சார்" என்று அங்கு வந்த வேலனை சிரிப்பு நடிகர், காலி நாற்காலியில் "ஜம்" என்று உட்கார்ந்து விட்டார். பாவம், குமார நடிகர்.

"அலைகள்" பார்வை, புஷ்ப நடிகர் மீது விழுந்து இருக்கிறதாம். நடிகருக்கு நடிகை சிபாரிசு செய்யத் தொடங்கியிருக்கிறார்! அரும்பிய காதல் மலருமா?

"இங்கே என்னிடம் வந்து "சுகமா?" உங்கள் நடிப்பு "பிரமாதம்" என்று அக்கரையோடு புகழுகிறவர்கள் கூட, தெலுங்கில் நான் வளருவதை பொறுமைக் கண்ணோடு பார்க்கிறார்கள். எனக்கு எதிராக சதி செய்கிறார்கள்" என்று மன வருத்தத்தோடு சொன்னார், மூன்று எழுத்து சு நடிகை.

சு சாடுவது, ஸ்ரீயையா, மயிலையா?

வர்ச்சி சம்பாத்தியத்தில் மாய ஆட்டக்காரிக்கும் சு ஆட்டக்காரிக்கும் கடும் போட்டி ஏற்பட்டு இருக்கிறதாம்!

நடிகரைவிட்டு விலகி, ஒரு மலையாள தயாரிப்பாளரை மணந்த இரண்டு எழுத்து டைரக்டர் நடிகை வாயும் வயிறுமாக இருக்கிறாராம்!

அக்காள் மீண்டும் ஆட வர, அக்காளா தங்கையா என்ற போட்டியில் அக்காதான் அதிக வாய்ப்புகளை தட்டிக் கொள்ளுகிறாராம்.

அக்காள் என்றாலும், அனுபவம் இருக்கிறதே! பிள்ளை பெற்றாலும் உடலை கொடி போல வைத்து இருக்கிறாராம்.

சந்திர டைரக்டரின் "டேஸ்டே" அலாதியானது என்று கூறி மகிழ்ந்தாராம், அதில் வயப்பட்ட ஒரு "தூ" நடிகை.

# சாவித்திரி குழந்தைகள்

**நடிகை சாவித்திரிக்கு 2 குழந்தைகள் இருக்கிறர்கள். மூத்தவள், பெண். இளையவன், பையன். இவர்கள் இருவரும் என்ன செய்கிறர்கள்? படியுங்கள்!**

நடிகை சாவித்திரி, 1944-ல் "சம்சாரம்" என்ற தெலுங்குப்படத்தின் மூலம் சினிமாவுக்கு அறிமுகம் ஆனர். பெரும் புகழைத் தேடிக் கொடுத்த படம், "தேவதாஸ்". இது 1953-ல் வெளிவந்தது.

"தேவதாஸ்" படத்துக்குப் பிறகு, சாவித்திரிக்கு மளமளவென்று படங்கள் குவிந்தன. நட்சத்திர நடிகை ஆனர். நடிகர் ஜெமினிகணேசனை காதலித்து மணந்தார். ஜெமினி—சாவித்திரி திருமணம், 1956 செப்டம்பர் மாதம் நடந்தது.

## விஜயசாமுண்டீசுவரி

1958 டிசம்பர் 2-ந் தேதி, சாவித்திரிக்கு விஜயசாமுண்டீசுவரி என்ற பெண் குழந்தை பிறந்தது.

விஜயசாமுண்டீசுவரிக்கு 1973 டிசம்பர் 5-ந் தேதி திருமணம் நடந்தது. மணமகன் கோவிந்தராவ் எம். ஏ. பட்டதாரி. சாவித்திரிக்கு தூரத்து உறவினர். சென்னையில் ஒரு வங்கியில் வேலை.

திருமணத்தின்போது, விஜயசாமுண்டீசுவரி கல்லூரி மாணவி. அதனல், திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து படித்து, எம். ஏ. பட்டதாரி ஆனர்.

கணவனேடு சென்னையில் தனிக் குடித்தனம் நடத்திவரும் விஜயசாமுண்டீசுவரிக்கு ,6 வயதில் ஒரு மகன் மட்டும் இருக்கிறன்.

"உங்கள் அம்மா சாவித்திரி நடிகையர் திலகமாகத் திகழ்ந்தார். நடிகர், நடிகைகளின் மகன்கள், மகள்கள் இப்பொழுது சினிமாவில் நடிக்கிறர்கள். நீங்களும் நடிப்பீர்களா?" என்று விஜயசாமுண்டீசுவரியிடம் நிருபர் கேட்டார்.

"என் திருமணத்துக்கு முன்பே என்னை நடிக்க அழைத்தார்கள். அப்பொழுதே அதற்கு நான் ஒப்புக்கொள்ளவில்லை. என் அம்மாவும் அதை விரும்பவில்லை. இப்பொழுதும் நான் நல்ல குடும்பப் பெண்ணுக வாழவே ஆசைப்படுகிறேன். என் அம்மா பட்ட பாடே போதும்" என்று விஜயசாமுண்டீசுவரி சொன்னர்.

## ஆண் குழந்தை

விஜயசாமுண்டீசுவரி பிறந்து, நீண்டநாளாக சாவித்திரிக்கு குழந்தை இல்லை. எனவே, ஆண் குழந்தை வேண்டி ஜெமினியும்,சாவித்திரியும் கோவில் குளங்களுக்குப் போனர்கள். அப்படி, அவர்கள் இராமேசுவரத்துக்குச் சென்ற போதுதான், புயலில் சிக்கி, தெய்வாதீனமாக உயிர் தப்பினர்கள்.



சதீஷ்

அதைத் தொடர்ந்து, சாவித்திரிக்கு சதீஷ் என்ற மகன் பிறந்தான்.

சதீசுக்கு, இப்பொழுது 16 வயது ஆகிறது. சென்னை சேத்துப்பட்டில் உள்ள சின்மையா மேல்நிலைப் பள்ளியில் 11-ம் வகுப்பு படித்துக்கொண்டு இருக்கிறன். படிப்போடு, தவுல் வாசிக்கவும் பயிற்சி பெற்று வருகிறன்.

சதீஷ், கடைசிவரை அம்மா சாவித்திரியோடு, அண்ணு நகர் வாடகை வீட்டில் (சாவித்திரி கடைசி காலத்தில் அண்ணு நகரில் ஒரு வாடகை வீட்டில் தனியாக வாழ்ந்து வந்தார்.) தங்கி, படித்து வந்தான். இப்பொழுது, தந்தை ஜெமினிகணேசனேடு நுங்கம்பாக்கம் வீட்டில் இருக்கிறன்.

"உங்கள் மகன் சதீஷ் சினிமாவில் நடிப்பானு?" என்று ஜெமினிகணேசனிடம் கேட்டதற்கு, "நான் தெய்வாக வணங்கும் தொழில் சினிமா. அதில் என் பிள்ளைகள் ஈடுபட விரும்பினுல், நான் தடுக்க மாட்டேன்" என்று கூறினுர் ★



மகன் அருணுடன் விஜயசாமுண்டீசுவரி—கோவிந்தராவ் தம்பதிகள்.

 COMICS PDF TIMES

# ஒருத்தி நினைக்கையிலே..



## சுஜாதா

**23**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணாவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுணா வின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினான். அவனை வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணாவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய் போனார்கள்.

வசந்தையும் நர்மதாவையும் பம்பாய்க்கு அனுப்பியபின் கணேஷ் சற்று கவலைப்பட்டான். எங்கேயாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகி இருவரும் எக்கச்சக்கத்தில் மாட்டிக் கொண்டு விடுவார்களோ என்று பயந்தான். அவர்கள் ஒட்டல் போய்ச் சேர்ந்ததும் தினம் ஒரு முறையாவது வசந்தை போன் பண்ணச் சொல்லி இருந்தான். அவர்கள் இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். ஓட்டலில் ரூம் எடுத்திருப்பார்கள். எடுத்து இரண்டு மணி நேரம் ஆகியிருக்க வேண்டும். ஏன் இன்னும் போன் வரவில்லை. பார்க்கலாம் இன்னும் ஒரு மணி நேரம் பொறுத்துப் பார்க்கலாம். அதன்பின் அவர்கள் தங்குவதற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்த ஓட்டல் சித்தார்த்தாவிற்கு போன் போட்டுப் பேசலாம்.

கணேசுக்கு வசந்தைப் பற்றிக் கவலையில்லை. வசந்த் எந்த ஊரிலும் எந்த மொழியிலும் பேசி பிழைத்துக்கொள்வான். இந்தப் பெண்ணையும் கூட அனுப்பி வைத்து சற்று தப்பு பண்ணிட்டோமோ, என்று நினைத்தான் கணேஷ். கொஞ்சம் அசட்டு தைரியம்தான்.

நர்மதா நவீனமான வள்தான். எந்த சூழ்நிலைக்கும் தயாரானவள்தான். இருந்தும் இவளை தனியாக வசந்துடன், அதும் சிவப்பு விளக்கு பெண் கடத்தல் தொடர்பாக அனுப்பி வைத்தது இப்போது முட்டாள்தனம் என்று தோன்றியது. அதுவும் அவள் பெற்றோர்கள் சம்மதம் கேட்காமல் போயிருக்கிறாள். அவள் விடுதியில் இருப்பதால் இது சாத்தியமாக இருந்தும் அவசரப்பட்டு விட்டோம் என்று கணேஷ் கவலையுடன் ராஜேந்திரனுக்கு போன் செய்து விவரத்தை சொன்னான்.

"பம்பாயா?"

"ஆமா சார்."

"எதுக்கு அனுப்பிச்சிங்க. எங்கள் கிட்ட சொல்லியிருக்கலாமில்லே?"

"ஏதோ ஒரு ஆர்வத்தில; கோவிச்சுக்காதிங்க நாங்க போலீஸ்காரங்க பணியை எடுத்துக்கிட்டதா நினைச்சுக்காதிங்க. பம்பாய்க்கு போன உடனே அங்க எஸ். பி. மாதவனை தொடர்பு கொள்ளச் சொல்லியிருக்கேன்."

"உங்கள் வசந்தா! நிச்சயம் செய்ய மாட்டாரு. தாம்பாட்டுக்கு ஸோலோ பூந்து தடாவடி அடிப்பாரு. எங்கயாவது எக்கச்சக்கமா மாட்டிக் கிட்டப்புறம்தான் போலீஸ் கிட்டயே நீங்கள் வருவீங்க."

"இல்லே ராஜேந்திரன். இந்த கேஸ்ல முதல் காரியமா அவரை தொடர்பு கொள்ள சொல்லி இருக்கிறேன்."

"அது சரி! அந்த பாச்சா விஷயம் என்ன ஆச்சு?"

"அதையேன் கேக்கறிங்க; பாச்சாவை விசாரிச்சு இன்னொரு கோஷ்டி எனக்கு போன் பண்ணிச்சே."

"சொன்னிங்களே, அவங்க அப்புறம் தொடர்பு கொண்டார்களா?"

"இல்லே."

"அப்ப கண்டுக்காதிங்க. ஆளு உங்கள்கூடத்தானே



காதல் ஒத்திகை பார்ப்பவர்கள், ரஞ்சித்—பானு ரேகா.

(படம்: "இதோ வருகிறேன்")

இருக்கான்?"

"யாரு?"

"பாச்சா."

"அவன் பாச்சா இல்லே, ராஜேந்திரன். நீங்க இந்த மாதிரி சின்ன தப்பு பண்றது எனக்கு ஆச்சரியமா இருக்குது."

"ஆச்சரியம் எல்லாம் அப்புறம் பட்டுக்கங்க. ஆமா வேற எதோ ரெண்டு ஆளை அனுப்பிச்சி ருந்திங்களாமே யாரது?"

"அதான் சொன்னனே வசந்தும் நர்மதாவும் போயிருக்கிற காரியத்தைப் பத்தி. இவங்க மெட்ராஸ்ல பம்பாய் பார்ட்டிக்கு குட்டி புடிச்சுக் கொடுக்கிற கோஷ்டியைச் சேர்ந்த வங்க. சப்ளை லேன்!"

"அப்படியா? தட்டிர லாம்! நீங்க என்ன பண்ணுங்க, சாயங்காலம் கான்ஸ்டபிள் அனுப்ப றேன்... நீங்களும் கூட வந்து பாச்சாவை கொண்டாந்து விட்டுருங்க. இங்க எக்மோர் ஆபீசுக்கே வாங்க. உங்ககிட்ட இந்த பாச்சா விஷயமா முக்கியமா பேசணும்."

"சரி ராஜேந்திரன்" என்று டெலிபோனை வைத்துவிட்டு சிந்தித்தான் கணேஷ். போலீசின் பிடிவாதம் அவனுக்கு பிடிபடவில்லே. ஒரு நிமிடம் தரையில் உட்கார்ந்திருந்த மாணிக்கத்தைப் பார்த்தான். நிசமாகவே இவன் மாணிக்கம்தானு, இல்லே ரொம்ப தேர்ந்த நடிகனு?

"என்னய்யா, பாக்கறிங்க?"

"உன்னே பாச்சா இல்லேன்னு நம்ப மறுக்குறுங்க, போலீஸ்காரங்க. என்னவோ, தப்பு நடந்திருக்கு. எங்க தப்புன்னு புரியலே. சாயங்காலம் நான் உன்னே கொண்டு விடவேண்டியிருக்கும். ஆளு அனுப்பறேன்னுரு போலீஸ் ஆபீசரு."

"அய்யோ மறுபடியும் போலீசுங்களா? என்னங்க இது!"

"இதபாரு நான் வாக்கு கொடுத்தாச்சு. நீ கேள்வி கேக்காம போயிர்றதுதான் மரியாதை உனக்கு. உன் தங்கச்சியைக் காப்பாத்தறதுக்கு நாங்க உதவி செய்யலே, அதுக்கு பிரதிபலனு நீ வந்து முரண்டு பண்ணுமை என்னுடை ஒத்துழை. நான் போலீஸ் அதிகாரி கூட விவரமா பேசி விஷயம் என்னன்னு தெளிவா தெரிஞ்சப்புறம் உனக்கு எந்த வகையில வக்கீல்ங்கற முறையில உதவி செய்ய முடியும்னு சொல்றேன். அதுவரைக்கும் கம்முனு நடக்கிறதைப் பாத்துக்கிட்டு இரு."

"என் தங்கச்சி?"

"அதுக்குத்தான் முழுசா ரெண்டு ஆளு பம்பாய்க்கு அனுப்பிச்சிருக்கேனெய்யா. எனக்கு அவங்களைப் பத்தித்தான் கவலையா இருக்குது."

"என்ன செலவானும் சரிங்க."

"செலவைப் பத்தி யாருய்யா பேசினு இப்ப? தண்ணி மாதிரி அதுபாட்டுக்கு போயிக்கிட்டு இருக்குது. நீ அங்க போய் பேசாம உக்காந்திரு. அவங்க வர்றவரைக்கும் கண்ணை மூடிக்கிட்டு பெஞ்




**மோ**கன புன்னகை புரிந்துகொண்டு இருக்கும் நடிகையின் பார்வை, வேறு ஒரு புதுமுக நடிகர் மீது விழுந்து இருக்கிறதாம். நடிகருக்கு நடிகையின் சிபாரிசு கொடி கட்டிப் பறக்கிறதாம்!

"பா. ம." என்ற படத்தில் "பா"வை முதல் எழுத்தாகக் கொண்ட ஒரு புது முக நடிகை நடித்து வந்தார். ஆனல், திடீர் என்று ஒருநாள் "பா" நடிகை படத்தில் இருந்து நீக்கப் பட்டார். அந்த வேடம் "வ" நடிகைக்கு போனது! இடையில் நடந்துபோனது என்ன?

**இ**ளம் காந்த நடிகரை, நடிகைகள் கூட்டம் மொய்க்கத் தொடங்கி இருக்கிறதாம். நடிகர் உஷாராக இருப்பாரா?

**அ**க்காளைப் போல, தங்கை ஆட்டக்காரியும் திடீர் திருமண அறிவிப்பு கொடுக்கத் தயாராகிக் கொண்டு இருக்கிறராம்!

**நெ**லுங்கில் இப்போது களத்தில் இருக்கும் மழலே நடிகைக்கு மவுசு அதிகமாம். அதனல், ஒரு ஸ்ரீ நடிகைக்கு தலைவலி ஏற்பட்டு இருக்கிறதாம்!

**இ**ளைத்து உருமாறிப் போன பிரிய நடிகை, இப்பொழுது உப்ப முயற்சித்து வருகிறர்.



**ப**த்மா: அய்யய்யோ... கூச்சமா இருக்குங்க. இங்கே வேண்டாம்?

(43-ம் பக்கம்)

சில படுத்து தூங்கு. இவங்க என்ன ஆனுங்க பம்பாய் போய்ச் சேர்ந்தாங்களா இல்லையா..."

கணேஷ் போனில் எட்டு தடவை முயற்சி செய்து, அந்த சித்தார்த்தா ஓட்டலைப் பிடித்தான்.

"சாரி சார். அந்தப் பெயரில் யாரும் இன்று இதுவரை பதிவாகவில்லை."

"சரியாகப் பாருங்கள் நர்மதா, வசந்த்!"

"சாரி!"

எங்கே போனார்கள்? என்ன ஆனார்கள்? பிளானை மாற்றிவிட்டார்களா? எல்லாம் இந்த வசந்த் தான் மாற்றியிருப்பான். அவனைத் தனியாக விட்டிருக்கக் கூடாது. எதாவது புது யோசனையில் இறங்கி குறுக்கு வழியில் போய் மாட்டிக் கொண்டிருப்பான்!

அப்போது வாசலில் கதவைத் தட்டும் சத்தம் கேட்க, கணேஷ் போய் திறக்க, ஒரு ஆஜானுபாகு நின்றுகொண்டு இருந்தான். "அய்யா அனுப்பிச்சாருங்க."

"யாரு ராஜேந்திரனா?"

"ஆமாங்க."

"கொஞ்சம் இருப்பா. யோவ் பாச்சா எந்திரி... சாரி! மாணிக்கம் எந்திரி! உனக்கு வேலை வந்துருச்சு. உன்னை அங்க கொண்டு போய் விடணும். என் கார்ல போகலாமா இல்லை டிப்பார்ட்மெண்ட் கார் வந்திருக்கா?"

"நம்ம கார்லயே போயிரலாங்க. பாச்சாவை கூட்டிட்டு வரச்சொன்னாருங்க!"

"அதான்."

வாசலில் நின்று கொண்டிருந்த காரில் கணேஷ் முன் சீட்டிலும் பாச்சா பின் சீட்டிலும் ஏறிக்கொள்ள கார் உடனே விரைந்தது. பாரிசைக் கடந்து பீச்சாங் கறைப் பக்கம் போயிற்று.

"என்னய்யா எக்மோர் போகிறதுக்கு இப்படிப் போறிங்க?" என்றான் கணேஷ்.

"சும்மா இரு" என்று ஒரு குரல் அதட்ட அப்போதுதான் கணேசுக்கு இவர்கள் போலீஸ் ஆசாமிகள் இல்லை என்பது உறுத்தியது. அடப்பாவி! ஏமாந்து விட்டோமே. "ஏய் ஏய் யாருய்யா நீங்க."

"கப் சிப்புனு வா துரை!"

"எங்கய்யா கொண்டு போறிங்க எங்களை?"

"பேசாம வரியா அடி ஒதை வேணுமா? சாமிக் கண்ணு வக்கீலை ஒரு மொத்து மொத்து."

கணேஷ் உடனே எச்சரிக்கையாகி தன்னைப் பந்து போல சுற்றிக்கொள்ள அந்த அடி சரியாக விழாமல் தப்பித்தான். கணேசின் மூளை அதிவேகத்தில் செயல்பட்டது. இவர்கள் வேறு. இவன்களுக்கும் பாச்சாவின் மேல்தான் ஆர்வம். இவர்கள்தான் முன் தினம் எனக்கு போன் செய்து பாச்சா உங்கிட்டதான் இருக்கானு என்று கேட்டுவிட்டு டெலிபோனை சட்டென்று வைத்துவிட்டவர்கள். இது வேற கும்பல். பாச்சாவை தேடிக் கொண்டு எத்தனை கும்பல்களோ? இதில் வேடிக்கை பாச்சா பாச்சா இல்லை! பாச்சா இல்லாத பாச்சாவை பாச்சா என்று நினைத்துக்கொண்டு... சே. எனக்கே தலை சுற்றுகிறது. வண்டி எங்கு போகிறது?

காரின் கண்ணாடிக் கதவுகளில் கருமை படர்ந்திருக்க, வெளியே விரையும் விளக்குகள் மங்கலாகத் தான் தெரிந்தன. இருந்தும் இடது பக்கம் வெட்டவெளியாக இருப்பதில் இருந்து கடற்கரை ஓரமாக செல்கிறோம் என்பது தெரிந்தது. கணேஷ் மூச்சு பிடித்துக்கொண்டு திருப்பங்களை எண்ணினான். மணியை பார்த்துக்கொண்டான். இரவு பத்தரை. எங்கே கூட்டிப் போகிறார்கள்?

மாணிக்கம் இதைப் பற்றி கவலையே இல்லாமல் "அய்யா இப்ப நாம எங்க போறம்? போலீஸ் ஸ்டேசனுக்கு இல்லை போல இருக்கே."

"பேசாம வா. எனக்கும் எங்க போறம்னு தெரியாது!"

"இப்ப நீங்க என்னை கூட்டிக்கிட்டு போவலியா?"

"இல்லை. இப்ப நாம ரெண்டு பேரும் ஒரே கதி தான்!"

"சரித்தான்!"

"ஊத்தாம வாங்க" என்று அதட்டினது இருட்டு.

"ஊத்தாம" என்பது அவர்கள் பரிபாஷை போலும். கணேஷ் நட்சத்திரங்களைப் பார்த்தான். நிலா வருவதற்கு கொஞ்



# இந்த வாரம் எப்படி?

எழுதியவர்: ஜோதிட சிந்தாமணி தா. வி. ரெங்கசாமி ஜோதிடர்.
(13-1-82 முதல் 19-1-82 முடிய)

**மேஷம்** நல்ல வாரம். குடும்பத்தில் வர வேண்டிய பணம் வந்து சேரும். உடல் நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**ரிஷபம்** உற்சாகம் தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி ஏற்படும். உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் அளிக்கும். பெண்களால் காரியம் நடக்கும்.

**மிதுனம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் தேறும். தொழில் — வியாபாரம் முதலியவை சுமாராக நடக்கும். கணவன்—மனைவி உறவு சிறப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**கடகம்** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பண வசதி கை கொடுக்கும். உடல் நலம் சிறப்படும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் தரும். பெண்கள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை.

**சிம்மம்** சுமாரான வாரம். குடும்பச் செலவில் சிக்கனம் தேவை. உடல் நலம் திருப்தி தரும். தொழில்—வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் அளிக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் பெற்றோர் உதவியை நாடுவார்கள்.

**கன்னி** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவற்றில் லாபம் கிடைக்கும். கணவன்—மனைவி இடையே ஒற்றுமை ஏற்படும். பெண்களுக்குப் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**துலாம்** அனுகூலமான வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் திருப்தி தரும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் அளிக்கும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**விருச்சிகம்** திருப்தி தரும் வாரம். குடும்பத்தில் திருமண பேச்சு நடக்கும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்களால் காரியம் நடக்கும்.

**தனுசு** உற்சாகம் தரும் வாரம். சினிமாத் துறையில் இருப்பவர்களுக்கு புதுப் படங்கள் வரும். பண வசதி இருக்கும். உடல் நலம் சிறப்படும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு கலகலப்பாக இருக்கும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**மகரம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் தேறும். தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**கும்பம்** திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**மீனம்** சாதாரண வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் தேறும். தொழில் — வியாபாரம் முதலியவை லாபம் அளிக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்களால் முன்னேற்றம் ஏற்படும்.

சம் லேட்டாகும் போல இருந்தது. கணேஷ் இப்போது தன் நிலைமையை அதன் எதிர்பாராத தன்மையை விரும்பக்கூட ஆரம்பித்து விட்டான். எதற்கோ யாருக்கோ போலீசைப் போல இந்த பாச்சாவின் தேவை இருக்கிறது. என்னையும் அவர்கள் சந்திக்க விரும்புகிறார்கள். இல்லையெனில் சுலபமாக என்னை ஒதுக்கி தள்ளிவிட்டு பாச்சாவை மட்டும், மாணிக்கத்தை மட்டும் கடத்திக்கொண்டு போயிருக்கலாம்.

யார் இது! என்ன



"எங்கள் கிராமத்துக்கு வந்து யாரும் குட்டையை குழப்ப முடியாது!"
"ஏன்?"
"குட்டை வறண்டு கிடக்கிறது."

கேட்கிறார்கள்? பார்த்து விடலாமே உயிருக்கு ஆபத்தில்லாத மட்டில் இந்த செயலில் ஒரு துடிப்பும் இருக்கிறது. கணேஷ் சாய்மானத்தில் சாய்ந்து லேசாக பாட ஆரம்பித்தான்!

"வக்கீலு! கூவாத! சும்மா வா" என்று அதட்டியது இருட்டு.

இப்போது திருவான்மியூர் தாண்டியிருக்க வேண்டும் என்று நினைத்தான் கணேஷ்.

கடற்கரையோரமாக சவுக்குத் தோப்புக்குள் வீடு தெரிந்தது.

(தொடரும்)

# சுஜாதா



# ஒருத்தி நினைக்கையிலே...

**24**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணாவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுணாவின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினான். அவனை வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணாவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய்க்குச் சென்றார்கள். கணேசையும் மாணிக்கத்தையும் இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போனார்கள்.

நர்மதாவை அந்த ரெண்டு பேரும் "ஆவோ" என்று சொல்லி கூட்டிச் செல்வதை வசந்த் பார்த்து உடனே அவர்களைத் தொடரத் தயாரானான். ஆனால், அவர்கள் சட்டென்று இருள்படிந்த சந்துக்குள் சென்றுவிட அவர்களை ஒட்டநடையாகத் தொடர்ந்த வசந்த் திடுக்கிட்டான்.

சிறிய சந்து. அதில் இருந்து பற்பல கிளைச் சந்துகள் பிரிந்து அவைகளில் ஏதோ ஒன்றில் அவர்கள் உடனே திரும்பியிருக்க வேண்டும். எதில் திரும்பினார்கள் என்பது தெரியவில்லை! ஒரு நிமிடத்தில் அவர்களை விட்டுவிட்டான்.

வசந்துக்கு முதுகுத் தண்டில் சில்லென்றது. இது, என்னடா விபரீதமாகிவிட்டது. இந்தப் பெண்ணை பொறுப்புடன் அழைத்து வந்து, நிமிடத்தில் தாரை வார்த்துவிட்டோமே! இப்போது கணேசுக்கு என்ன பதில் சொல்வது. ஓட்டலுக்கு போனதும் முதல் காரியமாக போன் செய்கிறேன் என்றோமே! அய்யோ என்ன ஒரு மடத்தனம். எப்படி, எங்கே என்று தேடுவேன். அரேபிய இரவு பாக்தாத் போல இருக்கிறதே இந்த இடம்.

வசந்த் திருதிருவென்று விழித்துக்கொண்டு இங்குமங்கும் நடந்தான். "நர்மதா! நர்மதா!" என்று கூப்பிட்டுக்கொண்டு சென்றான். அந்த இடத்து இரைச்சலிலும், பாட்டிலும் யாருக்கும் பக்கத்தில் இருந்தால்கூடக் கேட்டிருக்காது. இடம் களை கட்டியிருந்தது. போவோரும் வருவோரும் அதிகமாகிக் கொண்டிருக்க, புதுசாக உடை மாற்றிப் பெண்கள் பார்வையாளர்களுக்காக வெளியே வர, உபரி ஆசாமிகள், கழுத்தில் கைக்குட்டை கட்டினவர்கள், வெற்றிலைப் பாக்கு போட்டுக்கொண்டு தலையில் குல்லா அணிந்தவர்கள், சிறுவர்கள், டாக்சிகாரர்கள் எத்தனை கூட்டம். நர்மதாவைத் தவிர அத்தனை பேரும் இருந்தார்கள். வசந்த் மிகவும் கவலைப் பட்டான். சே, அவளை ஒரு கெஜம்கூட தனியாக விட்டிருக்கக்கூடாது! அவளுடனேயே ஒட்டிக்கொண்டிருந்திருக்க வேண்டும். இப்போது அதை நினைத்து என்ன செய்வது. சந்து சந்தாக எப்படித் தேடுவது? என்ன செய்வது?.

போலிசை நாடலாமா, இந்த நேரத்தில் அந்த சூப்பரண்ட் மாதவனை தொந்தரவு செய்யலாமா? வசந்துக்கு அழுகை வரும் போல இருந்தது. தான் பின் வருகிறேன் என்கிற தைரியத்தில்தானே நர்மதா அந்த அன்னியர்கள் பின்னால் சென்றிருக்கிறாள். நான் வாக்குத் தவறிவிட்டேன். அப்போது அவன் அருகே ஒரு இளைஞன் வந்து "சேட்! என்ன பார்க்கிறாய்" என்று கேட்டான், இந்தியில்.

வசந்த் அவனை மேலும் கீழும் பார்த்தான்.

"இதோ பார். நீ இந்தத் தொழில் செய்கிறாயே உனக்கு ஒரு நாளைக்கு எத்தனை கிடைக்கும்" என்றான்.

"அது பிசினசைப் பொறுத்தது. சீசனுக்கு சீசன் மாறும்."

"தோராயமாகச் சொல்லேன். எத்தனை கிடைக்கும்?"

"பத்துப் பதினைந்து, மிஞ்சிப் போனால் அம்பது. பண்டிகை நாட்களில் நூறு கூட கிடைக்கும்."

"ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் பண்ண விருப்பமா உனக்கு?"

"எனக்கு மட்டுமா, பெண்ணுக்கும் சேர்த்தா?"

"உனக்கு மட்டும்டா, சோம்பேறி" என்றான்.

"அடடா! செய்தால் போயிற்று."

"இந்தா அட்வான்சாக நூறு வைத்துக் கொள். காரியம் ஆனதும்



"உண்மையாகவே உங்களுக்குக் கிடைத்து இருப்பது, உயர்ந்த மனைவி தான்!"

பாக்கி பைசாவை வாங்கிக் கொள்."

அவன் "சுக்ரியா" என்று சொல்லிவிட்டு நோட்டை தொப்பிக்குள் வைத்துக்கொண்டான்.

"என்ன செய்ய வேண்டும். ஆயிரம் ரூபாய்க்கு மும்தாஜ் மாதிரி சரக்கு வேண்டுமா, இல்லே சினிமாவில் வரும்..."

"அதெல்லாம் வேண்டாம் எனக்கு. இரண்டு பெண்கள் வேண்டும்."

"சபாஷ்! இரண்டு! ஆளைப் பார்த்தால் தாக்கத் தாகத்தான் இருக்கிறாய். இரண்டு என்ன ஒரு கிரிக்கெட்டு கோஷ்டியையே கொண்டு வந்து நிறுத்தி விட்டால் போச்சு!"

"அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதே. எனக்கு வேண்டியது குறிப்பிட்ட இரண்டு பெண்கள்."

"சரி, முதல்தர சரக்காக கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினவனை

"நில். சொல்வது முழுவதையும் கேட்டுவிட்டுப் போ. இரண்டையும் நான் தான் தேர்ந்தெடுப்பேன்."

"அதற்கென்ன வரிசையாக நிறுத்திவிட்டால் போச்சு."

"குறுக்கே பேசாமல் கேள். எனக்கு வேண்டியது என் மொழி தெரிந்த பெண்கள்."

"என்ன மொழி மதராஸிதானே."

"மதராஸி என்று ஒரு மொழி கிடையாது. நான் விரும்புவது தமிழ் பேசத் தெரிந்த இரண்டு பெண்களை."

"தமில்! புரிகிறது. எம்ஜியார்! சிவாஜி கணேசன்!"

"ஆ...அதேதான்."

"ஏகப்பட்ட தமில்ப் பெண்கள் இருக்கிறார்கள். சென்டிரல் பம்பாய்க்கு போகலாம் வா."

"இல்லே. இந்த ஏரியாவில்தான் வேண்டும்."

"இரு கூட்டி வருகிறேன்."

"இல்லே. நானும் வருகிறேன். உனக்கே ஆயிரம் கொடுக்கிறேன் என்றால் பெண்களுக்கு எத்தனை கொடுப்பேன் யோசித்துப் பார்."

"சேட் நீயும் உன் குடும்பமும் மனைவி மக்களும் நீடூழி வாழ்க!"

"அதனால் நான் கொஞ்சம் நல்ல சரக்காக தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்."

"தமில் பெண்கள் என்றால் கொஞ்சம் சிறப்போ?"

"ஆமாம். அது ரொம்ப புராதன மொழி. முதலில் இங்கிருக்கும் தமிழ்ப் பெண்களை எல்லாம் தெரியுமா உனக்கு."

"எனக்கு இந்த வட்டாரத்தில் இருக்கும் சுண்டெலிகளுக்குகூட பெயர் தெரியும். இங்கயே இரு சேட். நான் ஒவ்வொருத்தியாக கொண்டு வருகிறேன்."

"முருகன் தெரியுமா உனக்கு?"

"முருகன்? முருகன்! ஓ தெரியுமே. தெரியாமல் என்ன?"

"அவனிடம் என்னை முதலில் அழைத்துப் போயேன்."

"அவன் புரோக்கரல்லவா. ஆபீஸ் மூடியிருக்கும். ஒருவேளை சம்பாபாயிடம் இருக்கலாம். சர்க்காருக்கு இப்போது முருகன் தேவையா இரண்டு தமில் பெண்கள் தேவையா?"

வசந்த் யோசித்து "முதலில் பெண்கள்" என்றான்.

"என் பின் வாருங்கள்! "தக்கத்தை தரிகடதை" என்று சின்னதாக பரத நாட்டிய முத்திரை காட்டி விட்டு உற்சாகமாக சென்றான், வசந்த். அவனை வேகமாக தொடர்ந்தான்.

அவன் காட்டிய பெண்கள் பல பேர் சேதப்பட்டு இருந்தார்கள். நர்மதாவை அங்கே வசந்த் எதிர்பார்க்கவில்லே. அவளை அவ்வளவு சீக்கிரத்தில் வெளியே கொண்டுவர மாட்டார்கள். எங்கே இருக்கிறாளோ, யாருடன் சண்டை போடுகிறாளோ அவளை நினைக்கும் போது வயிற்றில் பகீர் என்றது.

பல பெண்களை சேட்டின் டேஸ்ட்டுக்கு ஒவ்வாது என்று அவனே வடிகட்டிவிட்டான். இருப்பதற்குள் சுமாராக இருக்க வேண்டுமல்லவா!

"நிச்சயம் மதராஸி தான் வேண்டுமாக்கும்."

"நிச்சயம்."

அந்தப் பெண்கள்



## நாய் ஆண்டு

ஜப்பான், கொரியா, சீனா ஆகிய நாடுகளில் ஆண்டுகளுக்குப் பெயர் உண்டு.

1982–ம் ஆண்டின் பெயர்—"நாய் ஆண்டு"!

முகங்களைப் பார்க்கும் போது, திட்டான பவுடர் முகங்களையும், சொர சொரப்பான கன்னங்களையும், வெட்கம் மரத்துப் போன உடல்களையும், அவைகளில் தெரிந்த களைப்பையும், அலுப்பையும் பார்த்தபோது வசந்துக்கு கண்ணீர் ததும்பியது. யாரைப் பெயர் கேட்டாலும் மையமாக, ராணி, ஸ்ரீதேவி, மாதவி, ராதா என்று சினிமாப் பெயர்களாகவே சொன்னார்கள். அவசரத்தில் அந்தப் பெண் சுகுணாவின் போட்டோ வாங்கி வந்திருக்க வேண்டும். இப்போது சுகுணாவை எப்படிக் கூப்பிடுவது, எப்படி அடையாளம் கண்டு கொள்வது, சுகுணா என்று ஒரு சிலரை கூப்பிட்டுப் பார்த்தான். அவர்களிடம் எந்தவித சலனமும் இல்லை. எப்போதும் இயந்திரத்தன மாக எதையோ மென்று கொண்டு அவனை உணர்ச்சி இல்லாமல் பார்க்கும் இந்த இயந்திரப் பெண்களில் சுகுணா இல்லை.

"சேட் இன்னும் திருப்தி ஆகவில்லையா?"

"இல்லை. எல்லாம் ரொம்ப மோசம்."

"உங்களுக்கு மால் எந்தவிதத்தில் வேணும்? குடும்பப் பாங்காகவா? அதற்கு அந்தேரி வரக் கூடாது..."

"இங்கேதான் நான் விரும்பும் இரண்டு பெண்களும் இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் ஞாபகம் வை."

அந்த ஞாபகத்தில் அவன் சுறுசுறுப்பாகி "ராத்திரி முழுவதும் இருக்கிறது. தேடினால் போச்சு" என்று அடுத்த சந்துக்கு சென்றான்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு வீட்டு வாசலில் இருந்து வெளிப்பட்டு "புதிதாக ஒரு சரக்கு வந்திருக்கிறதாம். பார்க்கிறாயா சேட். கொஞ்சம் முரண்டு பண்ணுமாம், பரவாயில்லையா" என்றான்.

(தொடரும்)



எழுதியவர்: ஜோதிட சிந்தாமணி தா. வி. ரெங்கசாமி ஜோதிடர்.
(20-1-82 முதல் 26-1-82 முடிய)

**மேஷம்**

சாதாரண வாரம். குடும்பச் செலவு சரளமாக ஏற்படும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு திருப்தி அளிக்கும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**ரிஷபம்**

திருப்தி தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி கை கொடுக்கும். உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்களால் காரியம் நடக்கும்.

**மிதுனம்**

சாதாரண வாரம். குடும்பத்தில் உறவினர்களால் மனச் சஞ்சலம் ஏற்படும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் அளிக்கும். பெண்கள் பெற்றோர் உதவியை நாடுவார்கள்.

**கடகம்**

சுமாரான வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி கை கொடுக்கும். வழக்குகள் சாதகமாக அமையும். உடல் நலம் திருப்தி தரும். தொழில் — வியாபாரம் முதலியவை சாதாரணமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு சீர்படும். பெண்களுக்கு விருந்தினர் வருகையால் தொல்லை.

**சிம்மம்**

உற்சாகம் தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி ஏற்படும். உடல் நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் தரும். கணவன்—மனைவி உறவில் புது கலகலப்பு ஏற்படும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**கன்னி**

நல்ல வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி ஏற்படும். உடல் நலம் சீர்படும். தொழில்—வியாபாரம் முதலியவற்றில் முயற்சி வெற்றி தரும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி அளிக்கும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும்.

**துலாம்**

வெற்றி தரும் வாரம். குடும்ப வழக்குகள் வெற்றி பெறும். பண வசதி ஏற்படும். உடல் நலம் நன்றாக இருக்கும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபம் அளிக்கும். கணவன்—மனைவி உறவு உற்சாகம் தரும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் வரும்.

**விருச்சிகம்**

சாதாரண வாரம். குடும்பத்தில் திருமணப் பேச்சு நடக்கும். பண வசதி பரவாயில்லை. உடல் நலத்தில் கவனம் தேவை. தொழில்—வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் தரும். கணவன்—மனைவி உறவு அன்புடன் காணப்படும். பெண்கள் வெளியூர் செல்ல நேரிடும்.

**தனுசு**

திருப்தி தரும் வாரம். குடும்பத்தில் பெண்களால் பெருமை கூடியும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு பலப்படும். பெண்களுக்கு பெருமை.

**மகரம்**

சுமாரான வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி பரவாயில்லை. உடல் நலம் திருப்தி தரும். தொழில் — வியாபாரம் முதலியவை சொற்ப லாபம் அளிக்கும். கணவன்—மனைவி உறவு சீர்படும். பெண்கள் எதிர்பார்த்த தகவல் தாமதப்படும்.

**கும்பம்**

உற்சாகம் தரும் வாரம். குடும்பச் செலவு பெருகும். பண வசதி கை கொடுக்கும். உடல் நலம் சீரடையும். தொழில்—வியாபாரம் முதலியவை லாபமாக நடக்கும். கணவன்—மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். பெண்கள் செல்வாக்கு அடைவார்கள்.

**மீனம்**

நல்ல வாரம். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். எதிர்பாராதவிதமாக பணப் பெருக்கம் ஏற்படும். உடல் நலம் தேறும். தொழில்—வியாபாரம் முதலியவை முன்னேற்றமாக நடக்கும். கணவன்—மனைவி உறவு மகிழ்ச்சி தரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும்.

COMICS PDF TIMES



# ஒருத்தி நினைக்கையிலே..

## 25

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுண வின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினன். அவனை வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய்க்குச் சென்ருர்கள். கணேசையும் மாணிக்கத்தையும் இரண்டு முரடர்கள் கடத்திக் கொண்டு போனர்கள். நர்மதா சென்ற இடம் தெரியாமல் தவித்தான், வசந்த்.

கணேஷ் சற்றும் பதட்டப்படாமல், கடற்கரையில் இருந்த அந்த இருண்ட வீட்டுக்கு அவர்கள் பின்னல் சென்ருன்.

தட்டி கட்டின தாழ்வான வீடு. கடற்காற்று ஓலமிட்டு ஊடே செல்ல "ஓ" என்று இரைச்சலாக இருந்தது. மூங்கில் மூலம் கொஞ்சம் விசித்திர சங்கீதம் கேட்டது.

நல்ல இருட்டாக இருந்தது. மின்விளக்குகள் இருந்தாலும், உள்ளே எல்லாவற்றையும் அணைத்திருக்க வேண்டும் அல்லது திரை போட்டு மறைத்திருக்க வேண்டும்.

"கொஞ்ச நேரம் இரு. பாத்துக்க, உஸ்தாத்" என்று ஒருவன் கதவைத் தட்டி உள்ளே போனன்.

கணேஷ் சுற்றுமுற்றும் பார்த்தான்.

தூரத்தில் நகரத்தின் வெளிச்சம் வானத்தில் தெரிந்தது. வெட்டின நகம் போல நிலா தோன்றியது. கடலோசை காற்றோசையுடன் கலந்திருக்க—

"வாங்க, உள்ள வாங்க. வக்கிலு நீயும் வாய்யா!"

தலையைக் குனிந்து கொண்டுதான் உள்ளே போக முடிந்தது.

போனதும் சின்ன கூடம் போல இருந்தது. அதன் மையத்தில் மேசை மேல் ஒரே ஒரு விளக்கு எரிய, கீழே பாய் போட்டு இரண்டு மூன்று பேர் உட்கார்ந்து இருந்தார்கள். அவர்களில் நடுமையத்தில் ஒருவன் உள்ளே நுழைந்ததுமே மாணிக்கத்தை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"இவருதானய்யா."

"ஆமாங்க, பாச்சா."

"இதான் வக்கிலா."

"ஆமாங்க, பாச்சா..."

கணேசுக்கு சட்டென்... புரிந்துவிட்டது. "இதே... இவன்தான் நிஜமா... பாச்சா. நிஜ பாச்... போலீஸ் சந்தேகித்... கைது செய்திருக்கு... போலி பாச்சாவை... பார்க்க விரும்புகிருன்."

"ஏய்யா வக்கிலு... இவனை சாமீன்ல வெளி... கொண்டாந்திருக்கியா."

"ஆமா."

"எதுக்கு?"

"போலீஸ்காரங்... இவனை நீன்னு நம்பி தப்ப... அரஸ்ட் பண்ணியிருக்... காங்க. அது அநியாய... இல்லையா?"

பாச்சா அட்டகா... மாக சிரித்தான். "தெரியு... தெரியும்! அவங்க பாச்சா... ஆப்ட்டுக் கிட்டான்னு... மெடல் கொடுத்துக்கிட்... டாங்களா."

"ஏறக்குறைய அப்ப... டித்தான்."

பாச்சா இப்போது... அட்டகாசமாக சிரித்தான். "பாச்சாவைப் புடிச்... சாச்சு! பாச்சாவை புடிச்... சாச்சு!" என்று கை... கொட்டி குழந்தை போல் சிரித்தான்.

சட்டென்று சிரிப்பை...



சிவாஜியை மயக்கும் வித்தையை நன்ருகத் தெரிந்து வைத்து இருக்கிறார், ஸ்ரீபிரியா. (படம்: "தியாகி")

நிறுத்தி "அவனை கிட்ட கொண்டு வாடா, பாக்கலாம், போலீஸ் பாச்சா எப்படி இருக்கான்னு?"

மாணிக்கம் "அய்யா! அய்யா! எனக்கு ஒண்ணும் தெரியாதய்யா. கணேசய்யா, என்ன நடக்குது இங்க?" என்று கண்களில் பீதியுடன் கெஞ்ச, கணேஷ் "கிட்டப் போ, ஒண்ணும் பண்ணமாட்டாங்க" என்றான்.

தரதரவென்று பாச்சாவுக்கு அருகில் இட்டுச் செல்லப்பட்டான். "உக்காரு! உன் பேர் என்ன?"

"மமமாணிக்கம்!"

"பயப்படாத. நான் உன்னை சாப்ட்டுர மாட்டேன். நான் சொல்றபடி கேட்டன்னா, உனக்கு எத்தனையோ பலன் இருக்கு. உங்க வக்கிலய்யா கிட்ட பேசிக்கலாம். கிட்ட வா. உன்னே பாக்கணும். கொண்டுவா, உம் மூஞ்சியை."

அவன் பிடரியைப் பிடித்து பாச்சாவுக்கு அருகில் மாணிக்கத்தைக் காட்டினார்கள்.

கணேஷ் கூர்ந்து பார்த்தான்.

இருவருக்கும் ஒரே மாதிரி உடற்கட்டு, நிறம், எல்லாம் இருந்தது. சுருண்ட தலை முடியும்கூட ஒரே மாதிரி இருந்தது. மூக்கின் வளைவில் இருவருக்கும் கொஞ்சம் வித்தியாசம் தெரிந்தது. தாடை நிஜ பாச்சாவுக்கு கொஞ்சம் கிழ்வாங்கியிருந்தது. கண்கள், புருவ அடர்த்தி எல்லாவற்றிலும் ஒற்றுமை இருந்தது. மொத்தத்தில் இருவருக்கும் அடையாள ஒற்றுமைகள் நிறைய இருந்தன.

"அப்படி ஒண்ணும் என்னே மாதிரியே இல்லையே."

"இல்லை, பாச்சா. போலீஸ்கிட்ட இருக்கறது, உன் பழைய போட்டோ. உன்னை நேரா சரியாப் பாத்தவங்க போலீஸ்ல அதிகம் கிடையாது. அதான் திருநெல்வேலில இருந்து உன் பழைய சகா ஒருத்தனை கொண்டாந்து காட்டப்போறாங்க" என்றான், கணேஷ்.

"யாரு பலவேசமா? அவன் எப்பவோ போய்ட்டானே" என்று மறுபடி பெரிதாக சிரித்தான், பாச்சா. "அவனைத்தான் மண்ணைப் போட்டு மூடியாயிடுச்சே, என்னடா, ராஜ்?"

"அதாங்கண்ணே."

"போலீசைப் பொறுத்த வரையில இவனைத்தான் பாச்சான்னு நம்பிட்டு இருக்காங்க, பாச்சா."



"அப்படியா? ரொம்ப சவுகரியமா போச்சு. வக்கிலு, கிட்டக்க வா. நீ ஒதுங்கு தம்பி. வக்கிலு சொல்றாப்பல செய். அது போதும் உன்னை சீமானாக்கிடறேன். என்ன?"

கணேஷ் கிட்டத்தில் வந்தான்.

"வக்கிலு நீ என்ன செய்யுறே, இந்த சாமீன் பொளைப்பெல்லாம் விட்டுரு. பேசாம இவன் ரெண்டு வருசமோ மூணு வருசமோ செயிலுக்குப் போயிரட்டும்."

"புரியலை."

"வக்கிலு, என்ன இது புரியலிங்கறே. பேசாம இவனை நாந்தான் பாச்சான்னு ஒத்துக்கச் சொல்லு."

"அய்யய்யோ" என்

## இந்துசமய மாநாடு

இலங்கை அரசு நடத்தும் முதலாவது உலக இந்து சமய மாநாடு, ஏப்ரல் மாதம் கொழும்பு நகரில் நடக்கும்.

இந்த மாநாடு ஜனவரி மாதம் நடப்பதாக இருந்தது. மாநாட்டுக்கான ஏற்பாடுகளை விரிவாகச் செய்ய வேண்டியிருப்பதால், ஏப்ரல் மாதத்துக்குத் தள்ளி வைத்து இருக்கிறார்கள். ஏப்ரல் 21 முதல் 4 நாள் நடைபெறும்.

தான், மாணிக்கம்.

"இரும்மா கண்ணு! அவசரப்படாத. கொஞ்சம் பொறுத்துக்கினு செயிலுக்குப் போனியோ அதுக்கப்புறம் உனக்கு சுபிட்சம், நல்வாழ்வு காத்திருக்குது. வக்கீலுக்கும் கொழிக்கப் போகுது."

"ராஜு, எடுறா, அதை!"

ராஜு என்று சொல்லப்பட்டவன் ஒரு மர பீரோவைத் திறந்து, ஒரு பொட்டலத்தை எடுத்து, பாச்சாவின் கையில் கொடுத்தான்.

பாச்சா அதை அலட்சியமாகப் பிரித்து, நாலைந்து தங்கக் காசுகளை இரைத்தான். "பாத்தியா, எதோ பெருமா கோயில்ல எடுத்தது. எங்கடா எடுத்தம்? ஞாபகமில்லை. ஆனா தங்கம், சொக்கத் தங்கம்! கிஸ்ன தேவராயர் காலத் தங்கம்! ஒவ்வொரு காசும் ரெண்டாயிரம் பெறும்" என்று குலுக்கிக் காட்டினான்.

"என்ன செய்யணுங்கற?"

"இதபாரு வக்கீலு, நான் என் தொழிலை வுட்டுட்டு அமெரிக்கா போறேன். ஒரு பெரிய, ரொம்ப பெரிய வேலை பாக்கி இருக்குது. போலீஸ் என்னடான்னா உஷாரா இருக்காங்க. வெளில தலை காட்ட முடியறதில்லை. களவாணிப் பயலுவ என்ன என்னவோ மிசின்லாம் வெச்சிக்கிட்டு, ரேடியோ பொட்டி எல்லாம் வெச்சுக்கிட்டு, ரொம்ப கஷ்டமா போயிருச்சு. வேலை ரொம்ப சிக்கலானது. இந்த சமயத்தில பாச்சா ஆப்ட்டுக்கிட்டான், அவனை உள்ள தள்ளியாச்சு, அவன் கேஸ் முடிஞ்சு போயிருச்சுன்னு ஆயிருச்சுன்னா, கொஞ்சம் அசந்து மறந்து இருப்பாங்க. அது போதும் எனக்கு. வேலையை முடிச்சுருவேன். முடிச்சுட்டு வெளிநாடு போயிர்றேன்..." நிறுத்தி மூச்சு வாங்கிக்கொண்டான்.

"நீ என்ன செய்யறே வக்கீலு, இவன் பாச்சா தான்னு ஒத்துக்கட்டும். சாமீன்லாம் வேண்டாம், சொகுசா சிறைக்கு போவட்டும். அங்க தம்பிக்கு எல்லா வசதிங்களும் நான் பார்த்துக்கறேன். வீட்டில பணமுடையா இருந்தா பணம் தாரேன். கல்யாணம் ஆயிருச்சாய்யா, உனக்கு?"

"இல்லைய்யா. அய்யா என்ன சொல்றிங்கன்னே புரியலையே!"

"ஒண்ணும் இல்லை. சுலபமான வேலை. எம் பேர்ல நீ ரெண்டு வருசம் செயிலுக்கு போயிர்றே, அவ்வளவுதான். அதுக்காக உனக்கு ஒண்ணரை லட்சம் தர்றேன்."

"சேச்சே, முடியாது" என்றான், கனேஷ்.

"சரி, ரெண்டு ரூவா வெச்சுக்க."

"இல்லை, பாச்சா! அந்த பேச்சே இல்லை. அந்த மாதிரி பொய் சொல்ல நானோ என் கட்சிக்காரனோ தயாரா இல்லே."

"அட! அப்படின்னா."

"நாங்க இங்க வந்ததை நேரா போலீசுக்கு சொல்லிட்டு, என் கட்சிக்காரருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்துறப் போறேன். உண்மையை மறைக்கறதுக்கு நான் ஒருக்காலும் சம்மதம் கொடுக்க மாட்டேன்."

"மறைக்க மாட்டே" என்றான், பாச்சா சிரிப்பு மாறாமல்.

"ஊகூம், முடியாது."

"அப்ப உன்னையே மறைச்சுற வேண்டியது தான்."

"புரியலை, பாச்சா."

"இதபாரு, நான் சொல்றதைக் கேட்டா நீ முழுசா இங்கருந்து வெளிய போயிர முடியும். இல்லை எதுக்கு இம்மா நீளம் கடல் இருக்குது? பீச்சாங்கரை இருக்குது? சவுக்கு தோப்பு இருக்குது? உன்னை புதைக்கறதுக்குத் தான்."

(தொடரும்)

# கொறிக்க..

## சிங்கப்பூரில் லதா!

நடிகை லதா சிங்கப்பூருக்குப் போயிருக்கிறார்.

கடந்த இரண்டு வாரமாக சிங்கப்பூரில் இருக்கிறார்.

சென்னைக்கு திரும்பி வரும்பொழுது ஜோடியுடன் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கப்பூரில் உள்ள முஸ்லிம் தொழில் அதிபர் ஒருவரை லதா திருமணம் செய்துகொள்ளப் போகிறார் என்றும், செய்துகொண்டார் என்றும், சென்னை சினிமா வட்டாரத்தில் கிசுகிசுக்கப்படுகிறது.



லதா

இதுபற்றி விசாரிக்க, சென்னையில் உள்ள லதாவின் வீட்டுக்கு "ராணி" நிருபர் போனார்.

"வெளிப்புற படப்பிடிப்புக்காக லதா கொச்சிக்கு போயிருக்கிறார்" என்று வீட்டில் இருந்த உதவியாளர் சொன்னார்.

லதா திரும்பி வந்தால் தான் உண்மை தெரியும்.

## முதல் இரட்டையர்!

அமெரிக்காவில் வாழும் லூசியும், எலிசபெத்தும் இரட்டையர். இவர்கள் இருவரும் சென்ற வாரம் தங்களது 100-வது பிறந்த நாள் விழாவை கொண்டாடினார்கள்.

உலகில் 100-வது பிறந்த நாள் கொண்டாடிய முதல் இரட்டையர் இவர்களே! இதற்கு முன் இரட்டையர் யாரும் 100 ஆண்டு வாழ்ந்தது இல்லை.

## நிதி மந்திரியின் விதி, இது!

மந்திரிகளின் பதவி காலம் 5 ஆண்டு. ஆனால், மத்திய நிதி மந்திரியாகப் பதவி ஏற்கும் யாரும் இது வரை 5 ஆண்டு காலத்துக்கு அந்தப் பதவியில் நீடிக்கவில்லை! ஆர். வெங்கட்ராமனும் இந்த "விதி"யில் இருந்து தப்பவில்லை.

2 ஆண்டுக்கு முன்பு நிதி அமைச்சராக வெங்கட்ராமன் பதவி ஏற்றார். இப்பொழுது இராணுவ அமைச்சராக மாற்றப்பட்டு இருக்கிறார்!

## இந்தியாவுக்கும் வந்துவிட்டது!

ஆண்களின் உயிர் அணுக்களை சேர்த்து வைக்கும் வங்கிகள் மேல்நாடுகளில் இருக்கின்றன. சென்ற வாரம் பம்பாயிலும் இந்த வங்கி ஒன்று திறக்கப்பட்டு இருக்கிறது.

திடமான இளைஞர்களின் உயிர் அணுக்கள் இந்த வங்கிகளில் சேர்த்து வைக்கப்படுகின்றன. 3 ஆண்டு வரை வைத்திருக்க முடியும்.

குழந்தை இல்லாத பெண்களுக்கு செயற்கை முறையில் (ஊசி மூலம் செலுத்தி) கருத்தரிக்க வைக்க இந்த உயிர் அணுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.



# சமைத்துப் பார்

## ஆரஞ்சு புலவு

**தேவை:—**

பச்சரிசி (புலவு அரிசி) 2 கோப்பை, ஆரஞ்சு பழம் 6, திராட்சைப் பழம் (கொட்டை நீக்கியது) ¼ கிலோ, முந்திரி பருப்பு 5, பூண்டு 12, இலவங்கம் — பட்டை சிறிது, ஆரஞ்சு கலர்ப் பொடி ½ தேக்கரண்டி, பச்சை மிளகாய் 9, வெங்காயம் 4, நெய் ½ கோப்பை, இஞ்சி ஒரு துண்டு, கொத்தமல்லி 1 சிறு கொத்து, ருசிக்குத் தகுந்த அளவு உப்பு, தேங்காய் (சிறியது) 1.

**செய்முறை:—**

முதலில் 4 ஆரஞ்சுப் பழங்களை பாதியாக நறுக்கி, சாறுபிழிந்து எடுத்து தனியே வைக்கவும். மீதம் உள்ள 2 ஆரஞ்சுப் பழங்களை, மேல் தோலை உரித்து, சுளைகளை தனியே எடுத்து, கொட்டைகளை நீக்கி, உள்ளே இருக்கும் சதைப் பகுதியை எடுத்து ஒரு கிண்ணத்தில் போட்டு வைக்கவும்.

வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாயை பொடியாக நறுக்கிக்கொண்டு, பூண்டை பல்பல்லாக உரித்து வைக்க வேண்டும்.

தேங்காயை உடைத்து துருவி, ஆட்டுரலில் சிறிது தண்ணீர் விட்டு விட்டு அரைத்து தேவையான அளவில் பால் எடுத்துக் கொள்ளவும்.

இலவங்கம், பட்டையை ஒன்றிரண்டாக தட்டிக் கொண்டு, ஏலக்காயை பொடியாகத் தட்டி வைக்க வேண்டும்.



சமையல் செய்பவர், பூமலர் குமாரி இந்திரா.

அரிசியை கல் நீக்கி, களைந்து, தேவையான அளவு தண்ணீரில் சுமார் 20 நிமிடம் ஊற வைக்கவும்.

ஓர் அகலமான பாத்திரத்தில் நெய் முழுவதையும் ஊற்றி அடுப்பில் வைக்கவும். நெய் காய்ந்ததும், தட்டி வைத்த இலவங்கம்; பட்டை, ஏலக்காய், பூண்டு ஆகியவற்றை நன்றாக வதக்கிக்கொள்ள வேண்டும். வதங்கியதும், ஊற வைத்த அரிசியை நீரை வடித்துவிட்டு அதில் போட்டு கிளறிவிடவும். சிறிது நேரம் கழித்து தேங்காய்ப் பால், தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, கிளறி மூடி வைக்க வேண்டும். அரிசி நன்றாக வேகும். அரிசி முக்கால் வேக்காடு வெந்ததும் உப்பு, ஆரஞ்சு கலர்ப் பொடி, பச்சை-மிளகாய், இஞ்சி, வெங்காயம், ஆரஞ்சுப் பழச்சாறு ஆகிய வற்றை போட்டு கிளறி மூடி வைக்கவும்.

சாதம் பதமாக வெந்ததும் இறக்கி, ஒரு தட்டில் கொட்டி பரப்பி வைக்கவும். அதில் சிறிது நெய்யில் வறுத்த முந்திரி பருப்பை பரவலாகப் போட வேண்டும். ஆரஞ்சுப்பழச் சுளையின் சதைகளையும், திராட்சைப்பழங்களையும் பரவலாகப் போட்டு, கொத்தமல்லியை கிள்ளிப் போட்டு, ஒரு கரண்டியால் கிளறி விடவேண்டும்.

இதுவே, "ஆரஞ்சு புலவு" என்பது. இது சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

—எல். லீலா, பெங்களூர்.

## வெள்ளை பூரி

**தேவை:—**

அரிசி 200 கிராம், துவரம்பருப்பு 100 கிராம், எள்ளு 1 தேக்கரண்டி, மிளகாய்வற்றல் 8, கடலை எண்ணெய் 200 கிராம், பெருங்காயம் ஒரு சிறு துண்டு, தேவையான அளவு உப்பு.

**செய்முறை:—**

முதலில் அரிசியை தேவையான அளவு தண்ணீரில் ஊற வைக்கவும். துவரம்பருப்பை தனியே ஊற வைக்கவும்.

அரிசி நன்றாக ஊறியதும், கல் நீக்கி, களைந்து ஆட்டுரலில் ஆட்ட வேண்டும். அத்துடன் துவரம் பருப்பு, மிளகாய்வற்றல், பெருங்காயம், உப்பு ஆகிய வற்றையும் சேர்த்து விழுதாக அரைக்க வேண்டும். நன்றாக அரைத்ததும் வழித்து எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு, எள்ளை தூவி, பிசைந்து வைக்கவும்.

ஒரு வாணலியில் எண்ணெய் முழுவதையும் ஊற்றி அடுப்பில் வைக்கவும். எண்ணெய் காய்ந்ததும், பிசைந்து வைத்த மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, அப்பளம் போல தட்டிப் போட வேண்டும். அப்பளத்தின் ஒருபுறம் வெந்ததும், திருப்பிப் போடவும். நன்றாக வெந்ததும் எடுத்து விடவேண்டும்.

இதுவே, "வெள்ளைப் பூரி" என்பது. இது சாப்பிட காரமாய், சுவையாய் இருக்கும்.

—திருமதி. லெட்சுமி ஆனந்தன், அரக்கோணம்.

# ஒருத்தி நினைக்கையிலே



## சுஜாதா

## 26

**முன்கதை சுருக்கம்:**

*கிராமத்துப் பெண் சுகுணவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுண வின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினன். அவனே வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய்க்குச் சென்றுர்கள். கணேசையும் மாணிக்கத்தையும், உண்மையான பாச்சா கடத்திக் கொண்டு போனன்.*

**வ**சந்த் ஆவலுடன் அவன் பின்னே சென்றான். பக்கவாட்டாகப் படியேறி முன்பக்கம் வந்து சற்று தூரம் நடந்து, பூட்டியிருக்கும் ஒரு அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

"இங்கேயிருந்தே பாருங்கள் முதலில் பெண் பிடித்து இருக்கிறதா தெரிய வேண்டும்."

வசந்த் எட்டிப் பார்த்தான். ஒற்றை பல்பு வெளிச்சத்தில் இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். இவன் எட்டிப் பார்ப்பதை கவனித்தார்கள் "வாய்யா மைனர்!" என்றாள் நர்மதா!

"நர்மதா நீ இங்க இருக்கியா! கிரேட்!"

"இது யாரு தெரியுமா" என்று பக்கத்தில் அழுது கொண்டிருந்த பெண்ணைக் காட்ட,அவள் நிமிர.

"சுகுணா!"

"ஆமா சும்மா பேசிக்கிட்டு இருக்காதே எங்களை வெளிய கூட்டிப் போக வழியைப் பாரு, இந்தப்பொண்ணு கிலியில நடுங்கிக்கிட்டு இருக்குது."

"இதோ" வசந்த் தன்னை அழைத்து வந்தவனைப் பார்த்தான். அவன் "மதராஸியில் என்ன பேசிக்கொண்டீர்கள்" என்றான் சந்தேகத்துடன்.

"ரேட்டு", என்றான் வசந்த்

"எந்தப்பெண் வேண்டும்?"

"இரண்டு பேரும் பிடித்தமாக இருக்கிறது. இரண்டுபேரையும் அழைத்துச்செல்ல விருப்பம்."

"அப்படியா! இரண்டு பேரையுமா? தாங்குவாயா?"

"இந்த இரண்டுபேரை அழைத்துவிட்டு குஜராத் மாநிலத்தை கவனிக்க விருப்பம்" என்றான் வசந்த்.

"உஸ்தாத் நீ பெரிய ஆள்தான்."

"சரி அழைத்துச் செல்லட்டுமா, சாவி எங்கே!"

"அழைத்துச்செல்வதாவது! அதெல்லாம் நடக்காது. ரூமிலேயே எல்லாவற்றையும் முடித்துக் கொள்."

"இடம் போதாதே" என்றான் வசந்த்.

"தாராளமாக இடம் இருக்கிறது. மூன்று பேர் படுக்க எத்தனை இடம் வேண்டும்! என்னை எப்போ கவனிக்கிறாய்."

"என்ன கவனிக்க வேண்டும்."

"ஆயிரம் ரூபாய்" என்றான் குரலைத் தழைத்து.

"அதுக்கென்ன இரண்டாயரமாகக் கொடுத்து விட்டால் போச்சு, இரண்டையும் வெளியே அழைத்துச்செல்ல ஏற்பாடு பண்ணிக் கொடுத்துவிட்டால் நல்லது."

"அது என்கையில் இல்லை அது முடியாது. உங்களுக்கென்ன ரூம் சவுகரியமாக இருக்கிறது.



வனிதா: ச்ரிதா, அக்கா! நீ எப்படி வாய்ப்பு தேடுகிறாய்! எனக்கும் அதன் இரகசியத்தைச் சொல்லேன்!
(படம்: "நெஞ்சில் ஒரு முள்")

உள்ளே போங்கள் ஒன்றும் அவசரமில்லை போகும்போது பைசா கொடுத்தால் போதும். பெண்களிடம் எதும் கொடுக்கவேண்டாம் என்ன... சம்பா பாய் சாபி லாவோ!"

"சரி"

ஏராளமான பெண்மணி ஒருத்தி வந்து தன் மார்பிலிருந்து சாவி எடுத்துக் கொடுத்தாள்.

"உள்ளே செல்லுங்கள்" என்று வசந்தைப் பார்த்து கண்ணடித்துவிட்டுச்சென்றான் அவன்.

வசந்த் உள்ளே போகிறாற்போல் பாவனை செய்து எட்டிப் பார்த்தான். அவன் வாயிற்படியருகில்தான் காத்துக் கொண்டிருந்தான். வேறு வழியில்லாமல் வசந்த் அறைக்குள் சென்றான்.

"வாய்யா சேட்டு! எங்களுக்கு கஸ்டமரா வந்திருக்கியா."

"ஏறக்குறைய அப்படித்தான். சுகுணாதானே நீங்க?, என்பேர் வசந்த். இது நர்மதா. ரெண்டு பேரும் உங்களைத் தேடிக்கிட்டு மதராஸில இருந்து வந்திருக்கோம். நர்மதா சொல்லியிருப்பா."

"ஆமா ஆமா"ன்னேன் நான். இவங்க ரெண்டு பேரையும் நிஜமாவே கடவுள்தான் அனுப்பிச்சு வெச்சிருக்காரு. எனக்கு வந்து சேர்ந்த உதவியெல்லாம் போயி, நம்பிக்கை எல்லாம் போயி, ஒரு அறையில் அடைச்சு சோறு தண்ணி இல்லாம பூட்டிட்டு ஏறங்குறைய நான் அவங்க சொல்றதை ஒப்புக்கிடக் கூடிய நிலையில இருக்கறப்ப அந்தம்மாவை அரைமணிக்கு முன்னே உள்ள கொண்டு வந்தாங்க, வந்த உடனே அறைக்குள்ள சுத்துமுத்தும் பார்த்தாங்க. வந்தவங்க என்னை கவனிக்காமயே ஒரு மூலையில உக்காந்துக்கிட்டாங்க. தன் நகத்தைப் பார்த்துக்கிட்டு ஏதோ முணு முணுத்துக்கிட்டு "இந்த வசந்த்தைப் போல ஒரு அஜாக்கிரதையான ஆசாமியைப் பார்த்ததே இல்லை"ன்னு தமிழில் முனகிக்கிட்டே இருக்கவும் நான் பதறிப்போயி "அம்மா உங்களுக்கு தமிழ் தெரியுமா"ன்னு கேட்க, "அட நீயும் தமிழா உம் பேர் என்ன"ன்னாங்க.

"சுகுணா"ன்னேன்.

"அட கும்பிடப்போன தெய்வம் குறுக்க வந்துருச்சு. உன்னைத் தேடிக்கிட்டுத்தான் நாங்க வந்தோம்."

"என்னைத் தேடிக்கிட்டா."

"ஆமா நானும் வசந்த்துனு ஒரு ஆளும் வந்தோம். அவன் என்னடான்னா பாதில காணாம போயிட்டான். நான் கொஞ்சம் அசட்டு தைரியமா இங்க தொழில்ல சேர வந்த பொண்ணு மாதிரி நடிச்சேன். அவங்க தரதரன்னு இழுத்து வந்து இங்க வந்து அடைச்சுட்டாங்க."

"அய்யயோ நீங்களும் மாட்டிக்கிட்டிங்களா."

"நானா? என்ன எவனாவது தொட்டான் கடிச்சுருவேன்! ஆமா என்ன ஆச்சு சொல்லு" சொல்றதுக்கு முந்தி அழுகை வந்திருச்சு.

"சரிதான்! அப்பறம் சொல்லிக்கலாம், முதல்ல இங்கருந்து தப்பிக்க வழி பார்க்கலாம். வெளிய பூட்டி இருக்காங்க



மலர்: 23 இதழ்: 4
துன்மதி: தை 25 (7-2-82)

நடிகை சுவப்னு







"இது என் சொந்த விஷயம்" என்கிறார், ராதிகா. சரி, இதுபற்றி பிரதாப் என்ன சொல்லுகிறார்! பரபரப்பான பேட்டி! அடுத்த வார (14-2-82) "ராணி" இதழில் இடம்பெறுகிறது!





போர் திருடர்களை உண்டாக்குகிறது. அமைதி அவர்களை தூக்கில் ஏற்றுகிறது.

—மாக்கியவில்லி.

இல்லை?"

"ஆமாம்மா"

"கொஞ்ச நேரம் இரு யோசிக்கிறேன் வசந்த் வரானா பார்க்கலாம். ராஸ்கல் எங்கயோ தொலைஞ்சு போயிட்டானே."

"இந்த இடத்தை விட்டு வெளிய போறதுக்கு ஒரே வழி அவங்க சொல்றபடி கேக்கறது தாம்மா."

"நான்சென்ஸ்! பாத்துரலாம். நீ உக்காரு முதல்ல உங்கண்ணன் என்னடான்னா அங்க மெட்ராஸில சிங்கியடிச்சுக்கிட்டு இருக்காரு. நீ பம்பாயில..."

"அண்ணனுக்கு என்ன ஆச்சும்மா."

"அது இன்னொரு கதை அப்பறம் சொல்றேன்."

அப்பதான் கதவுக்கு வெளியே யாரோ வர்ற சத்தம் கேக்கவும் நாங்க ரெண்டு பேரும் கம்முனு உக்கார்ந்துக் கிட்டோம். பாத்தா வசந்த்.

வசந்த் உள்ள வந்தது;ம் "இதபாருங்க சுகுணா. நீங்க என்னை தப்பா நினைச்சுக்ககூடாது நாம மூணு பேரும் உள்ள கொஞ்ச நேரமாவது விளக்கணைச் சுட்டு சும்மா இருக்கணும்"

"இருக்கங்க."

"எதுக்கு?" என்றாள் நர்மதா.

"இதெல்லாம் விவரமா கேக்கணுமா! நான் வந்தது கஸ்டமர் மாதிரி உங்க ரெண்டு பேத்தையும் ரூமுக்குள்ள வெச்சு...சே! எனக்கு சொல்ல வெக்கமா இருக்கு......"

"பயப்படாதிங்க நான் உங்க ரெண்டு பேரையும் தொடக் கூடப்போறதில்லை. கொஞ்ச நேரம் விளக்கை அணைச்சுட்டு கம்முனு உக்காந்துக்கிட்டு இருந்துட்டு, அப்பறம் சரேல்னு மூணு பேரும் அவங்க அசந்திருக்கிற சமயத்தில ஒரே ஓட்டம்! என்ன?"

"சரி"ன்னு சிரிச்சுது அந்தப் பொண்ணு, நர்மதா. எனக்கு ஒரே சமயம்



சென்னை நகர செரீப் பா. சிவந்தி ஆதித்தனுக்கு ஏவி. எம். நிறுவனத்தின் சார்பில் பாராட்டு விழா நடந்தது. ஏவி. எம். சார்பில் நடிகர் சிவாஜி கணேசன், சிவந்தி ஆதித்தனுக்கு கேடயம் வழங்கினார்.

மகிழ்ச்சியாகவும் பயமாவும் இருந்துச்சு. வசந்த் விளக்கை அணைச்சுட்டு "எதாவது பேசுங்க" என்றாரு.

நர்மதா "ஆ வசந்த்! என்னங்க அப்படி எல்லாம் கடிக்காதிங்க"ன்னு சொல்லி சிரிச்சா மெலிசான வெளிச்சத்தில ஆளுக்கொரு மூலைல தான் உக்காந்துகிட்டு இருந்தோம். இருந்தும் மூணு பேரும் அன்னியோன்னியமா எதோ காரியம் செய்யறாப்பல பாசாங்கு சத்தங்கள்ளாம் அவங்க தான் செஞ்சாங்க! எனக்கு சிரிப்பா வந்துச்சு கொஞ்ச நேரம் ஆனபிறகு போதுமில்லே?ன்னாரு வசந்த், நம்பும்படியா. "நேரமாயிருச்சில்ல"

"எனக்கென்ன தெரியும்" நர்மதா.

வசந்த் குரலைத் தாழ்த்தி "சுகுணா கேளுங்க மூணு பேரும் பிச்சுக்கட்டு ஓடப் போறோம், செருப்பை கைல எடுத்துக்கங்க. யாரையும் எதையும் பாக்காதிங்க, என் பின்னால ஒரே ஓட்டமா ஓடிவந்துருங்க. இரைப்பு களைப்பு எதையும் பார்க்கக்கூடாது. என்ன?"

"சரி மெட்ராஸ் வரை கூட ஓடி வரேங்க"ன்னேன்.

"ரெடி! தயாரா இருங்க."

வசந்த் சட்டுனு கதவைத் திறந்து எட்டிப் பார்த்துட்டு உடனே மூடிட்டாரு.

"எதிர யாரோ வாராங்க.அந்தாளு போகட்டும்."

யாரோ வர காலடி சத்தம் கேட்டது. அப்புறம் பேச்சுக் குரல். இந்தக் குரல் எனக்கு பரிச்சயமானதா இருந்தது. முருகன் குரல்!

"வசந்த்! வரது முருகன்"னேன் பதட்டத்தோடு.

"அப்படியா, வரட்டும்."

"இங்கதான் வருவான்! கூட ஆளுங்களும் வருவாங்க."

(தொடரும்)

# போட்டி முடிவு

## விளையாட்டு பிள்ளை!

**சா**வித்திரி "மாயா பஜார்" என்ற படத்தில் நடித்த குறும்புத்தனமான நடிப்பு எனக்கு மிகவும் பிடித்தது. அவர் உண்மை வாழ்க்கையிலும் குறும்புத் தனம் மிக்கவர் என்பது அவரோடு பழகிய பொழுது நான் தெரிந்து கொண்டேன்.

ஒருமுறை, படப்பிடிப் புக்கு போகும் வழியில் என் கணவரைப் பார்க்க சாவித்திரி வீட்டுக்கு வந் தார். அவர் அப்போது வெளியே சென்றிருந்தார்.

"இருங்கள், அவர் வந்துவிடுவார்" என்று சாவித்திரியை உட்கார வைத்துவிட்டு, நான் வீட்டு வேலையில் ஈடுபட்டேன்.

அந்த நேரத்தில், சாவித்திரி எங்கள் வீட்டு தொலைபேசியை எடுத்து, அன்று அவர் நடிக்கப் போகும் படத்தின் டைரக் டருக்கு போன் செய்து "சாவித்திரி திடீர் என்று இறந்துவிட்டார். உடல், அவர் வீட்டில் வைக்கப் பட்டு இருக்கிறது" என்று குரலை மாற்றி சொல்லி விட்டு, தொலைபேசியை வைத்துவிட்டார்.

பதறிப்போன அந்த டைரக்டர் உடனே சாவித் திரியின் வீட்டுக்கு ஓடியிருக் கிறார். சாவித்திரி படப் பிடிப்புக்குச் சென்றிருப்ப தாக வீட்டில் சொல்லியிருக் கிறார்கள். எனவே, அங்கு இருந்து ஸ்டுடியோவுக்குப் போன் செய்து கேட்டு இருக்கிறார்.

மேக்கப் எல்லாம் முடிந்து சாவித்திரி காத்துக்கொண்டு இருப்ப தாக ஸ்டுடியோவில் இருந்து தகவல் கூறி இருக் கிறார்கள்.

டைரக்டருக்கு அப் போதுதான் புரிந்து இருக் கிறது, அவருக்கு தொலை பேசி மூலம் செய்தி சொன் னது சாவித்திரிதான் என் பது. தேதியைப் பார்த்து இருக்கிறார், அன்று ஏப்ரல் 1–ந் தேதி "முட்டாள்" தினம்!

பி. அமிர்தா பாய்,
போரூர்.

## குறும்புக்காரி

**ஜெ**மினிகணேசன் மகள் திருமணம் ஆபட்ஸ்பரி மாளிகையில் நடந்தது. நானும் சென்றிருந்தேன். விருந்தின்போது, எல் லோரையும் உபசரித்துக் கொண்டு வந்த சாவித்திரி என் அருகே இருந்த வயது



சாவித்திரியுடன் கட்டுரை எழுதிய அமிர்தாபாய்.

முதிர்ந்த ஒரு மாமியிடம் வேடிக்கையாகப் பேச்சு கொடுக்கத் தொடங்கினார்.

"மாமி, நிதானமா சாப்பிடுங்கோ. நான் ஏதா வது பரிமாறட்டுமா? சாப் பாடு நன்னாருக்கா. சாப் பிட்டுப் பாத்துச் சொல் லுங்கோ" என்றார்.

அதற்கு மாமி, "நன் னாத்தான் பண்ணிருக்கா. நன்னாயிருக்கு" என்று சாதாரணமாக பதில் சொல்லிவிட்டு, சாவித் திரியை ஏற, இறங்கப் பார்த்தார்.

உடனே சாவித்திரி, "என்ன மாமி, அப்படி பாக்கறேள், — நான் யாருன்னு தெரியாதா? நான்தான் சாவித்திரி" என்று சிரித்தார்.

"நீ எந்த சாவித் திரி? நீ யாரு ஆத்து மாட்டுப் பொண்ணு, தெரியலியே!" என்று விழித்தார், மாமி.

"மாமி! நீங்கள் சினிமா பாக்கிறதே இல் லியா?" என்று வினவினார், சாவித்திரி.

"போடி,போ. யாருக்கு வேணும் இந்த சினிமா? ராமா, கிருஷ்ணான்னு கோயிலுக்குப் போனாலும் புண்ணியம் உண்டு" என்று வெறுப்போடு சொன்னார், மாமி.

சாவித்திரி சிரித்துக் கொண்டே, "அது சரி, இது தேறாத கேஸ்" என்று! சிரித்துவிட்டு, வேறு பக் கம் நகர்ந்தார். எல்லோ ரும் விருந்தை மறந்து சிரித்தோம்.

பி. ஸ்ரீதர்,
சென்னை-5.

## குழந்தை உள்ளம்

**ந**டிகையர் திலகம் சாவித்திரியும் நடிகர் தில கம் சிவாஜி கணேசனும், இணைந்து நடித்த "கை கொடுத்த தெய்வம்" என்ற படத்தின் மூலம், சாவித்திரி யின் ரசிகன் ஆனவன் நான். சாவித்திரியின் குழந்தைத் தனமான நடிப்பு என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

படத்தில் சாவித்திரி காரில் போய்க் கொண்டு இருக்கும்போது சிவா ஜியை சந்திக்கிறார். இரு வரும் ஒரு தோட்டத்தில் உட்கார்ந்து பேசுகிறார் கள். அப்போது சாவித் திரி "என்னை ஒருவருமே கட்டிக்க மாட்டேன்னு சொல்லுகிறார்கள். நான் கெட்டவளாம். ஏய்யா நான் இவ்வளவு நேரமும் உங்கிட்ட பேசிக்கிட்டு இருந்தேனே, உங்கிட்ட எதாவது தப்பாக நடந் தேனா?" என்று சிவாஜி யிடம் கேட்கிறாரே, அந்த அப்பாவித் தனமான நடிப்பை இனிமேல் எந்த நடிகையிடம் காணப் போகிறோம்.

ஆர். வேலப்பன்,
மணவாளக்குறிச்சி.

## பாசமலர்

**பா**சத்தை கொட்டி நடித்திருக்கும் "பாசமலர்" என்ற படத்தின் மூலம் சாவித்திரி என்னைக் கவர்ந் தார்.

வெளி உலகு என்ன வென்று தெரியாத சாவித் திரி பொம்மை விற்க போகி றார். வழியில் ஜெமினியை சந்திக்கிறார். அப்போது, ஜெமினி, "நான் உன்னை காதலிக்கிறேன்" என்கிறார். அதற்கு சாவித்திரி "அப்படி என்றால் என்ன?" என்று கேட்கிறார். "நான் உன்னை திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என் கிறார், ஜெமினி. "அப்படி என்றால் என்ன?" என்று சாவித்திரி மீண்டும் கேட் கிறார்.

அதற்கு ஜெமினி "நீ உன் அண்ணனை பிரிந்து என் வீட்டிற்கு வர வேண் டும்" என்கிறார். அதைக் கேட்டதும், "அண்ணா, அண்ணா!" என்று விக்கி விக்கி அழும் அவருடைய குழந்தைதனமான நடிப்பை இனிமேல் எந்த நடிகை யிடம் காணப் போகிறோம்.

வி. ராணி,
பழையபேட்டை.

— (நாலு வாசகர்களும் தலா ரூ. 25 பரிசு பெறு றார்கள்.)

# ஒருத்தி நினைக்கையிலே...



## சுஜாதா

**27**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுணுவின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினன். அவனை வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய்க்குச் சென்ருர்கள். கணேசையும் மாணிக்கத்தையும், உண்மையான பாச்சர கடத்திக் கொண்டு போனன்.

கணேஷ் சிரிப்பு மறையாமல் தன்னையே பார்த்துக்கொண்டு இருந்த பாச்சாவைப் பார்த்தான். சற்று கலவரப்பட்டான். ஒருவேளை அவசரப்பட்டு விட்டோமோ என்றுகூட நினைத்தான். இவன் சொன்னதுக்கு தலையாட்டியிருக்க வேண்டும். ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். மாணிக்கத்தை சிறைக்கு அனுப்புவதாக வாக்கு அளித்திருக்க வேண்டும். அப்போதுதான் இங்கிருந்து தப்பிக்க முடியும். சே மடத்தனம்! எதிர்ப்பே தெரிவித்திருக்கக் கூடாது. என்ன செய்வது? நிவர்த்தி செய்து பார்க்கலாம்.

"பாச்சா! நீ சொல்றதை யோசித்துப் பார்த்தேன். நீ சொல்றபடியே செய்யறேன்."

"என்ன செய்யறே?"

"இவனை விட்டுக் கொடுத்துடறேன். போலீஸ்காரங்க கூட்டிக்கிட்டு போகட்டும். மேற்கொண்டு இவன் விசயத்தில ஒரு முயற்சியும் எடுத்துக்கலை."

பாச்சா யோசித்து "வக்கீல் சொல்றதை நம்பலாமாடா" என்றான்.

ராஜு என்பவன் "இல்லைங்க. ஒண்ணு கெடக்க ஒண்ணு சொல்றான். முதல்ல மாட்டேன்னு சொன்னவன் இப்ப ஒப்புத்துக்கிடறான். ஏதோ சூழ்ச்சி செய்யறான்."

"அப்ப என்னடா செய்யலாம்?"

"பீச்சாங்கரை எதுக்கு இருக்கு? பேசாமல் படுக்க வெச்சுரலாம். நல்லா தூங்கட்டும்."

"நம்ம மாணிக்கத்தை?"

"மாணிக்கத்தை கொண்டு போலீஸ் ஸ்டேசனாண்டை விட்டுர வேண்டியதுதான்."

"அங்க போய் எதாவது உளறிட்டான்னா?"

"அதுக்கு தனியா அய்யாகூட பேரம் பேசிக்கலாம். இதில வக்கீலை உள்ள கொண்டார வேண்டாம்."

"நீ சொல்றதும் சரிதாண்டா. வக்கீலு, எதாவது சாப்ட்டியா?"

கணேஷ் பேசாமல் இருந்தான்.

"வக்கீலை அழைச்சுட்டுப் போய் காரியத்தை முடிச்சுட்டு வாங்கடா. எனக்கு முன்னால எதும் செய்யாதிங்க. ரத்தத்தைக் கண்டா எனக்கு ஆகாது."

கணேஷ் பார்த்துக் கொண்டே இருக்க சட்டென்று ஒருத்தன் பின்னால் வந்து அவன் கைகளைப் பின்பக்கத்தில் இறுக்க கயிற்றால் கட்டினான். அதே சமயம் மற்றொருவன் செயல்பட்டு அவன் வாயில் துணி வைத்து அடைத்துக் கட்டினுன், கணேஷ், திமிரிப் பார்ப்பதற்கு அவர்கள் அவகாசமே தரவில்லை. கீழே உருண்டான். "தூக்குங்கடா" என்றான், ஒருவன்.

"அய்யோ! அய்யோ, அவரை விட்டுருங்க. நீங்கள் சொல்றது எல்லாம் செய்யறேன்."

"செய்யத்தான் போற மாணிக்கம். உன் உயிருக்கு ஆபத்தே இல்லை. கூவாத! நீ முழுசா உயிரோட எனக்கு தேவையா இருக்கே. நான் சொல்றதைக் கேட்டா உனக்கு லட்ச ரூபா சுளையா கிடைக்கும். நம்ம கூட வரியா? தூக்கிட்டுப் போங்கடா வக்கீலை."

கணேசை கால்மாடு தலைமாடாக இருவர் தூக்கி அந்த வீட்டின் வெளியே, இருட்டில் கொண்டு வந்தார்கள்.



"என்னை தெரியவில்லை. நான்தான் ஸ்ரீபிரியா!" (படம்: "சிம்லா ஸ்பெஷல்")

அலை ஓசை கேட்டது. சில்லென்று காற்று அடித்தது. கணேஷ் தன்னால் இயன்றவரை திமிரிப் பார்த்தான். அவர்கள் அவனை அலாக்காக தூக்கிக்கொண்டு வேகமாகக் கடற்கரை நோக்கி சென்றார்கள். சவுக்கு காடு தெரிந்தது. கணேஷ் அந்த நேரத்தில் செய்வதறியாது திணறினான்.

அங்கேதான் கொண்டு செல்கிறார்கள். அய்யோ இது என்ன விபரீதம்! நிசமாகவே என்னை கொல்லப் போகிறார்கள். இவர்கள் எதற்கும் தயங்காதவர்கள். என்ன செய்வேன்! வாயைத் திறந்து அலற முடியவில்லை. கிலியில் உடல் எங்கும் வியர்வை பொங்கியிருந்தது. அவர்கள் விரைவாகவே தூக்கிச் சென்றார்கள். "ஆயுதம் கொண்டு வந்திருக்கியா ராஜு?"

"எல்லாம் இருக்குடா."

பிசாசுகள் போல் இருந்த சவுக்கு மரங்களின் ஊடே எடுத்துச் செல்லப்பட்டு கீழே வைக்கப்பட்டான், கணேஷ். புரண்டு பார்த்தான்.

அந்த இரவின் மங்கலான நிலா வெளிச்சத்தில் பளிச்சென்று ஏதோ அவன் கையில் தெரிந்தது. அய்யோ கத்தி! கொல்லப் போகிறார்கள். என்ன செய்வது? ஏதாவது பிரார்த்தனை செய்யவேண்டுமா?





## ராதிகா வீடு தேடுகிறார்!

நடிகை ஷீலா வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கும் ராதிகா, விரைவில் சொந்த வீடு வாங்கி குடியேற திட்டம் போட்டு இருக்கிறார்.

கணேஷ் தன் உணர்வுகள் அத்தனையையும் உசுப்பிவிட்டு கையோங்கிய கரிய உருவத்தை படுத்திருந்த வாக்காகப் பார்த்தான். சரேல் என்று அந்தக் கை தன் கழுத்தில் இறங்க ஒருகணம் உருண்டு தப்பித்தான். அவன் ஆத்திரம் அதிகமாகி, மறுபடி முயன்றபோது, கணேஷ் மறுபடி புரள, கத்திக்குத்து தோளில் பட்டு சட்டை கிழிந்து கொஞ்சம் ரத்தம் வந்தது.

"ரொம்ப புரள்றான்! புடிச்சுக்கங்கடா."

இருவர் அவனை இறுகப் பிடிக்க, ராஜு மண்டி போட்டுக்கொண்டு ஒரு கருப்பு விளிம்பாக இரண்டு கைகளாலும் கத்தியைப் பிடித்துக்கொண்டு, நேராக கணேசின் மார்பில் குறி வைத்து ஆவேசமாக அவன் மேல் இறங்கினதை முழுவதும் பார்ப்பதற்குள் கணேசுக்கு பயத்தில் மயக்கம் வந்துவிட்டது.

வசந்த் அதேசமயம் இருட்டில் காத்திருந்தான். காலடியோசை அந்த அறையை நோக்கி வர, நர்மதா சுகுணா, வசந்த் மூவரும் மூச்சைப் பிடித்துக்கொண்டு காத்திருந்தார்கள். காலடியோசை அறை வாசலில் நின்றது.

"சுகுணா சுகுணா" என்று முருகன் அன்பாக கூப்பிட்டான்.

வசந்த் அவள் காது அருகில் "என்னன்னு கேளுங்க" என்றான்.

"என்னங்க" என்றாள்.



"ஏன் கோபித்துக் கொண்டு இருக்கிருள்?"

"குளத்து மீன் சாப்பிட்டு சலித்துவிட்டதாம். வைட்டமின் வேண்டுமாம்!"

சுகுனா.

"எப்படி இருக்கிறே."

"சரியாத்தாங்க இருக்கிறேன்."

"எதாவது சாப்பிட்டியா."

"உம்."

"யோசிச்சுப் பாத்தியா."

"உம்."

"எதாவது முடிவுக்கு வந்தியா."

உம்...

"என்ன செய்யப் போறே."

வசந்த் லேசாக "நீங்கள் சொல்றதை கேக்கறதா முடிவுக்கு வந்துட்டங்க" என்ருன்.

சுகுணா அதை திருப்பி சொன்னுள்.

"சபாஷ்! அதான் நல்ல பொண்ணுக்கு அடையாளம். யாருக்கும் தொந்தரவு வேண்டாமில்ல? ஆளு அனுப்பவா."

"இப்ப வேண்டாங்க. நாளையில் இருந்து வெச்சுக்கலாம்."

"வரட்டுமா? நல்லாத் தூங்கு என்ன?"

"சரிங்க" அவன் செல்லும் சத்தம் கேட்க சுகுணா பெருமூச்சு விட்டாள். முருகன் விலகட்டும் என்று காத்திருந்தான் வசந்த். அவன் கடைசி வரைக்கும் சென்று மாடிப் படியில் இறங்கும் சத்தம் கேட்கும் என்று நினைத்திருந்தான்.

இப்போது முருகனும் மற்றும் யாரோ ஒருவனும் பேசும் பேச்சு கேட்டது. வசந்த் உன்னிப்பாக கவனித்தான். உரையாடல் இந்தியில் இருந்தது.

"என்ன அந்த அறை முன்னால் உனக்கு என்ன வேலை?"

"நீ யார் அதைக் கேட்க! வெளியே போ."

வசந்த் திடுக்கிட்டான். மற்றவன் குரல் அவனை இந்த அறைக்கு அழைத்து வந்த தரகனின் குரல்!

"போச்சுரா" என்றான்.

"என்ன வசந்த்" என்றாள் நர்மதா.

"முருகனும் தரகனும் சந்திச்சுட்டாங்க."

"கஸ்டமர் உள்ளே போயிருக்கிறார்" என்ருன், தரகன்.

"எங்கே?"

"நீ நின்றுகொண்டிருந்தாயே அந்த அறையில்தான்."

"என்னது? உளறாதே!"

"நான் அழைத்து வந்த கஸ்டமர் அங்குதான் இருக்கிறார், இரண்டு பெண்களுடன்."

"இரண்டு பெண்களா? உளறாதே!"

"எனக்கு அந்த ஆள் பணம் தரவேண்டும். காத்திருக்கிறேன். பான் போட்டுக்கொள்ள சென்றேன். அவன் இன்னும் போகவில்லையே."

"என்னது? நீ சொல்வதே புரியவில்லை. வா போய்ப் பார்க்கலாம்."

அவர்கள் மறுபடி வரும் காலடியோசை கேட்கவும், "நர்மதா! இதுதான் சமயம் வெளியே ஓட. இரண்டு பேரும் தயாராக இருங்கள்" என்றான் வசந்த்.

அதேநேரம், வெளியே கதவு தாளிட்டு பூட்டப்படும் ஓசை கேட்டது.

"முதல்ல பூட்டிக்கலாம். அப்புறம் உள்ள யாருன்னு பார்க்கலாம்!" என்றான் முருகன்.

(தொடரும்)

# கொசுக்க..

## நேரடி மோதல்

தி. மு. கழகத் தலைவர் கருணுநிதி இம்மாதம் 15–ந் தேதி திருச்செந்தூருக்கு பாத யாத்திரை தொடங்குகிருர்.

15–ந் தேதி மதுரையில் இருந்து நடக்கத் தொடங்கி, 22–ந் தேதி திருச்செந்தூரில் முடிக்கிருர்.

முதல்மைச்சர் எம். ஜி. ஆர். இம்மாதம் 22–ந் தேதி மதுரையில் இருந்து திருச்செந்தூருக்கு பாத யாத்திரை தொடங்குகிருர்!

திருச்செந்தூரில் கோவில் அதிகாரி சுப்பிரமணியபிள்ளை மரணம் அடைந்தது பற்றியும், அது பற்றி விசாரித்த பால் கமிஷன் அறிக்கை பற்றியும் வழி நெடுக கருணுநிதி பிரசாரம் செய்துகொண்டு போவார்.

அவருக்கு அடுத்து பாத யாத்திரை தொடங்கும் எம். ஜி. ஆர்., வழி நெடுக கருணுநிதிக்கு பதில் அளித்துக்கொண்டு செல்லுவார்!

## சிங்கப்பூரில் லதா!

சிங்கப்பூரில் முஸ்லிம் தொழில் அதிபரை மணந்துகொண்டதாக கிசு கிசுக்கப்படும் நடிகை லதா, போன வாரம் ஜோடியாக சென்னைக்குத் திரும்புவதாக இருந்தது. ஆனுல், வரவில்லை.

அதற்குப் பதில் சென்னையில் இருந்த லதாவின் உதவியாளர் போன வாரம் சிங்கப்பூருக்குப் பறந்து போய், லதாவுடன் சேர்ந்துகொண்டார்.

லதா சிங்கப்பூரில் குடும்பம் நடத்தப் போகிருர் என்பதும், சென்னைக் குத் திரும்ப நாள் ஆகும் என்பதும் இந்த வார "கிசு கிசு"!

லதா மணந்து கொண்டு இருக்கும் தொழில் அதிபர் முஸ்லிம் அல்ல என்றும், அவர் பெயர் சபாபதி என்றும் சிங்கப்பூரில் இருந்து ஒரு வாசகர் கடிதம் எழுதி இருக்கிருர்.

## நாகேஷ் டைரக்டர் ஆகிருர்!

நடிகர் நாகேஷ், முதன் முறையாக ஒரு படத்தை டைரக்டு செய்கிருர்!

நாகேஷ் டைரக்டு செய்யும் படத்தின் பெயர், "ஜாதிப் பூக்கள்." குழலி மூவிசார் தயாரிக்கிருர்கள். கதாநாயகன், கார்த்திக்.

கவிஞர் கண்ணதாசனிடம் உதவியாளராக இருந்த வி. பி. சுந்தரராஜும் டைரக்டர் ஆனுர். "சட்டம் யார் பக்கம்" என்ற படத்தை சுந்தரராஜ் டைரக்டு செய்கிருர். விஜயகாந்தும் வடிவுக்கரசியும் நடிக்கிருர்கள். ஜே. கே. கம்பைன்சார் தயாரிக்கிருர்கள். சுந்தரராஜ், டைரக்டர் ஐ. வி. சசியிடம் உதவியாளராக இருந்து, டைரக்சன் பயிற்சி பெற்றவர்.



சுந்தரராஜ்

# உருத்தி நினைக்கையிலே



## சுஜாதா

## 28

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுண வின் அண்ணன் மாணிக் கம் போலீசில் சிக்கினன். அவனை வசந்தும் கணேசும் மீட்டார்கள். சுகுணவை மீட்க, வசந்தும் நர்மதாவும் பம்பாய்க்குச் சென்ருர்கள். கணேசையும் மாணிக்கத்தையும், உண்மையான பாச்சா கடத்திக் கொண்டு போனன். வசந்த் இருந்த அறைக்கு முருகன் வந்தான்.

"உள்ளே கஸ்டமர் போயிருக்கிறார். நான் தான் கொண்டுவிட்டேன்" என்றான் தரகன்.

வசந்த் மூச்சைப் பிடித்துக்கொண்டு கதவில் காதை வைத்துக் கேட்டுக் கொண்டு இருந்தான். சன்னலில் நிழல்கள் விளையாடின. நர்மதாவின் மூச்சுக் கேட்டது. அந்தப் பெண் சுகுணா தரையில் உட்கார்ந்து கொண்டு தலை மேல் கை வைத்துக் கொண்டுவிட்டாள். "என் விதி" என்றாள்.

வசந்த் "பேசாதே" என்று அவளுக்கு சைகை காட்டினான். என்ன செய்வது என்று அவன் மனதில் கேள்வி சுழன்றது. வெளியே தாளிட்டுக் கொண்டு விட்டார்கள். இரண்டு பெண்களை வைத்துக்கொண்டு தப்பிப்பது என்பது ஏறக்குறைய முடியாத காரியம். வசந்த் தீர்மானித்தான். சன்னலுக்கு வந்தான் "என்ன முருகன் சவுக்கியமா" என்றான்.

"யாரது?" என்று முருகன் திடுக்கிட்டான்.

"எதுக்கு என்னைப் போட்டு பூட்டிப்பிட்டிங்க. நான் யாரு தெரியலை?"

"யார்றா நீ."

"பாணி அனுப்பிச்ச ஆளு! என்னைத் தெரியலை."

"எனக்கு ஒரு பாணியையும் தெரியாது."

"கிட்ட வாப்பா. வந்து என்னைப் பாரு. பாத்துட்டுப் பேசு. ரெண்டு பேருக்கும் ஒரே தொழில்! எதுக்காக பாசாங்கெல்லாம் செய்யணும்?"

"யார்றா இவன் புதுசா இருக்கு" என்று முருகன் சன்னலில் வந்து எட்டிப் பார்த்தான். வசந்த் சரேல் என்று செயல்பட்டான். சன்னலின் கம்பிகளின் இடுக்கில் கையைச் செலுத்தி முருகனின் காலரைக் கொத்தாகப் பிடித்து முத்தமிடப் போவது போல் முருகனை குரங்குப் பிடியாக நெருக்கினான். அப்படியே முருகனின் முகம் சன்னலில் பதிந்தது.

"அய்யோ அய்யோ" என்று பேசக்கூட இயலாமல், அவன் உதடுகளில் இருந்து முனுகல் சத்தம் வெளிவரவும், வசந்த் இரைந்து "தர்வாஸா கோலோ!, தர்வாஸா கோலோ" என்று இந்தியில் "நான் ஒரு போலீஸ் ஆபீசர்! சென்னையில் இருந்து வந்திருக்கிறேன். உங்கள் எல்லோரையும் கைது செய்ய போலீஸ் படை வாசலில் காத்திருக்கிறது. உடனே திற! முட்டாள்களா! இல்லையென்றால் இந்த ஆள் சட்டினி" என்று, முருகனின் முகத்தை இன்னும் சன்னலுக்குள் திணித்தான்.

முருகனுக்கு விழி பிதுங்கி, வாயில் லேசாக ரத்தம் வர, எச்சில் வழிய, "காப்பாற்று" என்று சொல்லப் பார்த்தான். "கதவைத் திற முட்டாளே! போலீஸ் வந்து எல்லோரையும் அழைத்துக்கொண்டு செல்லப் போகிறது."

போலீஸ் என்கிற வார்த்தை அவர்களுக்கு அச்சத்தை விளைவித்தது. இதே சமயம் நர்மதா டமார் டமார் என்று கதவை தட்டினாள். வசந்த் படபடவென்று பேசிக் கொண்டேயிருந்தான். "உங்கள் எல்லோரையும் வண்டி வண்டியாக அழைத்துச் செல்லப்போகிறோம். இவன் இந்த இடத்தில் சமாதி."

நர்மதா சமயம் பார்த்து உள்ளே ஒரு பேப்பர் பையை ஊதி பட்டென வெடித்தாள்.

"கேட்டதா! துப்பாக்கி சத்தம்! மறுபடி சுட வேண்டுமா? எல்லோரையும் கைலாசத்துக்கு அனுப்ப வேண்டுமா?" என்று சத்தமாகக் கேட்டான் வசந்த்.

போலீஸ் போலீஸ்

## எம். ஜி. ஆருக்கு மிரட்டல் கடிதம்!

**எம்.** ஜி. ஆரை குத்திக் கொல்லுவேன் என்று இளைஞர் ஒருவர் மிரட்டல் கடிதம் எழுதினர்!

இந்தக் கடிதத்தை முதல்வர் எம். ஜி. ஆருக்கே அவர் அனுப்பி வைத்தார்.

அந்த இளைஞரின் பெயர், மயில்நாதன். 20 வயது ஆகிறது. வட ஆற்காடு மாவட்டம் மேல குப்பம் கிராமத்தை சேர்ந்தவர்.

இவர் முதல்வர் எம். ஜி. ஆருக்கு ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில் "உங்களை கத்தியால் குத்திக் கொல்லப் போகிறேன்" என்று மிரட்டியிருந்தார்.

இந்தக் கடிதத்தை போலீசாருக்கு எம். ஜி. ஆர். அனுப்பி வைத்தார். போலீசார் புலன் விசாரித்து, வாலிபர் மயில் நாதனை கைது செய்தார்கள். எம். ஜி. ஆருக்கு கொலை மிரட்டல் கடிதம் எழுதியதாக மயில்நாதன் மீது வழக்குத் தொடரப்பட்டது.

வேலூர் குற்ற இயல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்தது. மயில் நாதன் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அறியாமல் செய்ததாக மன்னிப்புக் கேட்டார். அதன் பேரில் நன்னடத்தை ஜாமீனில் அவர் சென்ற வாரம் விடுதலை செய்யப்பட்டார்.

என்று அவர்கள் கலவரமாகப் பேசிக்கொள்ள முருகன் இல்லை என்று சொல்வதற்கு முடியாமல் "ஊம் ஆம்" என்று திணறிக்கொண்டு இருக்க, உள்ளே செலுத்திய அவன் கையை நர்மதா செமையாக முறுக்கிவிட, முருகன் அழ ஆரம்பிக்க, நமக்கேன் வம்பு என்று ஒருவன் கதவைத் திறந்துவிட நர்மதாவையும் சுகுணாவையும் "வெளியில் செல்லுங்கள்" என்று வசந்த் பணித்தான்.

முருகனைத் தளர்த்தினான். அவன் கண்கள் இருண்டு அங்கேயே சரிந்தான்.

வசந்த் வெளியே வந்தான். அவர்கள் அவனை சந்தேகத்துடன் பார்த்துக்கொண்டு இருக்க, ஆர்ப்பாட்டமாக "யாராவது கையில் கத்தி பிளேடு எதும் வைத்திருந்தால் உடனே கீழே போடுங்க" என்றான்.

"சர்க்கார் சர்க்கார் நான் ஒன்றும் செய்யவில்லை" என்று சிலர் நழுவ ஆரம்பிக்க, வசந்த் "எங்கே போகிறாய் வான் வரப்போகிறது. யாராவது நகர்ந்தால் இங்கேயே சமாதி பண்ணிவிடுவேன்" என்றான். தன் பையில் இருந்து பாக்கெட் டிரான்சிஸ்டரை எடுத்துக்கொண்டு அதன் ஏரியலை உருவி "சார்லி திஸ் இஸ் இன்ஸ்பெக்டர் வசந்த் ஸ்பீக்கிங்! எல்லோரையும் வளைத்துப் போட்டாயிற்று. வண்டி கொண்டு வரலாம்" என்று சொன்னான்.

"ரேடியோவில் சொல்லிட்டேன். இனி அவர்கள் வரவேண்டியதுதான் பாக்கி" என்று வசந்த் முருகனிடம் சென்றான். "என்ன முருகன்? மெட்ராஸ்ல உன் கூட்டாளிங்கள் அகப்பட்டாச்சு. நீ ஒருத்தன்தான் பாக்கி! உன்னைத் தேடிக்கிட்டுத்தான் இவ்வளவு தூரம் வந்திருக்கோம். ஏன் கூட வரியா பிரதர்?" என்றான்.



முருகன் இருமிக்கொண்டே "அய்யா, அய்யா என்னை விட்டுருங்கய்யா. எல்லாம் அந்தப் பாணி வேலைதான்" என்றான்.

முருகன் நம்பிவிட்டான் என்பது தெரிந்தது. வசந்துக்கு சந்தோசமாக இருந்தது. கிரிக்கெட் கமெண்டரி கேட்பதற்காக கொண்டு வந்திருந்த பாக்கெட் டிரான்சிஸ்டர் சமயத்துக்கு உதவியது.

"எழுந்திருடான்னா!" அவன் காலர் கழுத்தைப் பிடித்து, எலியைத் தூக்குவது போலத் தூக்கினான். இதற்குள் சிலர் நழுவிச் செல்ல பிரயத்தனப்படுவதை ஓரக்கண்ணால் பார்த்தும் கவனிக்காமல் இருந்தான். முருகனைத் தள்ளி அழைத்துக்கொண்டு "நர்மதா நட! சுகுணா நட!" என்றான்.

எல்லோரும் ஒதுங்கிக்கொள்ள, "யாராவது இந்த இடத்தைவிட்டு அசைந்தீர்களோ! நாலா பக்கமும் போலீஸ் சூழ்ந்திருக்கிறது. உங்கள் எல்லோரையும் சுட்டுப்போடுவோம்" என்று இந்தியில் கத்திவிட்டு முருகனை உந்தித் தள்ளினான். எல்லோரும் அவர்கள் செல்வதைப் பார்த்துக்கொண்டிருக்க வசந்த் ஓரத்தில்

## அலைகள் ஓய்வதில்லை!

சென்ற ஆண்டு 137 தமிழ்ப் படங்கள் வெளிவந்தன.

அவற்றில் 14 படங்களே வசூலில் வெற்றி பெற்றன. மற்றவை தோல்வி அடைந்தன.

சிறுவர் — சிறுமிகளை காதல் ஜோடிகள் ஆக வைத்து 3 படங்கள் வெளி வந்தன. மூன்றும் வெற்றி பெற்றன!

தென் இந்திய சினிமா அதிபர்கள் சங்கத் தலைவர் ராமானுஜம் இந்தத் தகவலை தெரிவித்து இருக்கிறார்.



"உனக்கு பனங்கள் பிடிக்குமா? தென்னங்கள் பிடிக்குமா?"

"பெண்கள்தான் பிடிக்கும்!"

---

நடுங்கிக்கொண்டு நின்றவனிடம், வாயில் சிகரெட் பொருத்திக் கொண்டு நெருப்புக் கேட்டான். சிகரெட்டைப் பல்லால் கடித்துக்கொண்டு "நான் யார் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"சர்க்கார்! போலீஸ்! போலீஸ்" என்று அவனை இரு கரம்கூப்பி வணங்க, நிதானமாக முருகனை முன்னால் தள்ளிக்கொண்டே அந்தப் பெண்களை அழைத்துக்கொண்டு, அந்த சந்தைவிட்டு வசந்த் வெளியே வந்தான்.

"அய்யா என்னை விட்டுருங்கய்யா" என்று இருட்டில் முருகன் கெஞ்ச "விடத்தான் போறேன் மெட்ராஸ் போலீஸ் ஸ்டேசன்ல."

முருகன் ஓடத் துவங்க, நர்மதா அவன் காலை இடற ஜீவன் அற்று விழுந்தான். "எங்க போறே! செஞ்ச காரியத்துக்கு எல்லாம் பதில் சொல்லிட்டுப் போயிரு. ஏண்டா மெட்ராஸ்ல இருந்து ஒரு பெண்ணை ஏமாத்தி ஊருக்கு கூட்டி போறேன்னு சொல்லிட்டு பம்பாய்ல கொண்டு வந்து வித்தியா? சுகுணா, உன்னை அடிச்சானா?"

"ஞாபகம் இல்லைங்க."

"ஞாபகம் இருக்குதோ இல்லையோ இவன் உனக்கு செஞ்ச அநியாயத்துக்கு ஒரு சாத்து சாத்து. வா, பயப்படாத! கிட்ட வா."

நான் கிட்டப் போயி அவனை தலைல தட்டினேன்.

"என்னது! பூச்சி காட்டுரே! ஓங்கி அடி! பல்லெல்லாம் பேர்ற மாதிரி தாடைல ஒண்ணு குடு."

"அடிக்க வலு இல்லைங்க" என்று அழுதேன்.

"அழாத சுகுணா. அழற வேளையெல்லாம் ஆயிருச்சு. நீ தப்பிச்சாச்சு."

"உனக்கு அடிக்க முடியலைன்னா நான் ஒரு சாத்து சாத்தறேன்" என்று அந்தப் பொண்ணு நர்மதா அவன் கன்னம் பழுக்கறா மாதிரி ஒண்ணு விட்டுது. "அய்யய்யோ அய்யய்யோ. அடிக்காதிங்க, சிஸ்டர் அடிக்காதிங்க."

"சிஸ்டராடா! உன் சிஸ்டரை இப்படித்தான் விப்பியோ"ன்னு மறுபடி அடிச்சாங்க.

"சார் நீங்க போலீஸ் அதிகாரின்னு எனக்கு தெரியாம போச்சு. தக்க சமயத்தில வந்து ஒத்தாசை செஞ்சிங்க. இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்."

வசந்த் என்கிட்டக்க வந்து காதில "நான் போலீஸ் ஆபீசருமில்லை ஒரு எழவும் இல்லை. ஏதோ தடாலடி! பேசாம எம்பின்னல வாங்க. முதல்ல போலீஸ் ஸ்டேசன் எங்கன்னு விசாரிச்சுட்டுப் போகலாம். கணேஷ், ஒரு சுப்பிரமண்டு பேர் சொல்லியிருக்காரு. அங்கருந்து அவருக்கு டெலிபோன் பண்ணிச் சொல்லிரலாம். மாதவன்னு பேரு. நம்மூர்க் காரர்தான். கணேஷ் ஏற்கனவே அவர்கூடப் பேசியிருக்காரு. நடரா சோமாரி! பேரைப் பாரு முருகனாம்! ஏண்டா சாமி பேரையெல்லாம் வெச்சுக்கிட்டு பொம்பளை பொறுக்கறிங்க! டாக்சி!"

முருகன் நடக்க முடியாம திணர்றான். மென்னியை வசந்த் நல்லாவே திருகிட்டாரு. சின்னப் பையனாட்டம் இருந்தாலும் புஜமெல்லாம் நல்ல வலுவாத்தான் இருந்தது. எப்பவும் ஒரு சிரிப்பு. பதட்டமே இல்லாம இப்பகூட வாயில விசில். வசந்தைக் கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுக்கலாம் போல இருந்தது எனக்கு.

"என்ன பாத்கறிங்க? நான் உங்களை யாருக்காவது வித்துரப்போறேனான்னா?"

"சேச்சே அதெல்லாம் இல்லை வசந்த்!"

"உங்களை பத்திரமா உங்கண்ணா மாணிக்கத்தின் கிட்ட கொண்டு சேர்க்கிறது என் பொறுப்பு. அதுக்கு முன்னால அய்யாவை போலீஸ்ல சேர்க்க வேண்டாமா? வாங்க முருகன்! டாக்சில ஏறுங்க."

(தொடரும்)

# காலம் மாறுகிறது! கோலம் மாறுகிறது!!

அ, ஆ, க, ச என்று இன்று தமிழ் எழுத்துக்களை எழுதுகிறோம். ஆனால், ஆயிரம் ஆண்டுக்கு முன் தமிழ் எழுத்துக்கள் இப்படி இல்லை. காலங்கள் தோறும் தமிழ் எழுத்துக்கள் மாறுதல் அடைந்து வந்துள்ளன.

தமிழ் எழுத்துக்கள் எப்பொழுது தோன்றின என்பதை இப்பொழுது கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், 2 ஆயிரத்து 500 ஆண்டுக்கு முந்தைய கல்வெட்டுகளை கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்த கல்வெட்டுகளில் தமிழ் எழுத்துக்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன. (பிராக்கெட்டில் இருப்பது இப்போதைய எழுத்து.)



(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ)
(அப்பொழுது ஐ எழுத்து கிடையாது.)

1,500 ஆண்டுக்கு முன் தமிழ் எழுத்துக்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன:



(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ)

700 ஆண்டுக்கு முந்தைய தமிழ் எழுத்துக்கள்:



(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ)

200 ஆண்டுக்கு முந்தைய தமிழ் எழுத்துக்கள்:



(அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ)

## 51 எழுத்துக்கள்

தமிழில் இப்பொழுது உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18 இருக்கின்றன.

திருமூலர் காலத்தில் உயிர் எழுத்துக்கள் 16, மெய் எழுத்துக்கள் 35 ஆக மொத்தம் 51 எழுத்துக்கள் இருந்தன!

(ஆதாரம்: வே. தில்லைநாயகம் எழுதிய "தமிழ் எழுத்து சீர்மை.")

COMICS PDF TIMES

# ஒருத்தி நினைக்கையிலே



-சுஜாதா-

**29**

**முன்கதை சுருக்கம்:**

கிராமத்துப் பெண் சுகுணாவை முருகன் கடத்திக்கொண்டு போய், பம்பாயில் விபசார விடுதியில் சேர்த்தான். சுகுணாவின் அண்ணன் மாணிக்கம் போலீசில் சிக்கினான். அவனை கணேஷ் மீட்டார். பம்பாய் விபசார விடுதியில் இருந்த சுகுணாவை, வசந்தும் நர்மதாவும் மீட்டு வந்தார்கள்.

கணேஷ் கண் விழித்தபோது இன்னும் இருட்டாக இருந்தது. காதில் அலையோசை கேட்டது. நாம் எங்கு இருக்கிறோம்? இறந்துவிட்டோமா? இது எந்த இடம்? எனக்கு உயிர் இருக்கிறதா? இல்லை இது தேவலோகமா? அவன் எங்கே என்னைக் கத்தியால் குத்தினான் எனக்கு வலிக்கவில்லையே? செத்ததற்கு அப்புறம் வலியாவது ஒன்றாவது! பின் ஏன் இந்த அலையோசை? ஏன் என்னைச் சூழ்ந்துள்ள கரிய உருவங்கள்?

"கணேஷ் எழுந்திருங்க" என்று மேலேயிருந்து குரல் கேட்டது. அந்தக் குரலுக்கு உரிய முகம் இருட்டில் இருந்தது. கரிய வானத்தில் நட்சத்திரங்கள் தெரிந்தன. நிலவு காணாமற் போயிருந்தது.

"நான் உயிரோடத்தான் இருக்கேனா?"

"உயிரோடத்தான் இருக்கிங்க"

"கத்தி?"

"குத்தலே. கவலைப் படாதீங்க"

"உங்கள் குரல் கேட்ட மாதிரி இருக்குதே"

"ராஜேந்திரன் தான்! எழுந்திருங்கள், கணேஷ்! எழுந்திருக்க முடியுதா? பாருங்கள். உங்களுக்கு ஒண்ணும் இல்லை. அதிர்ச்சி அவ்வளவு தான்!"

"நான் சாகலை?"

"இல்லை. சாக விட்டுருவோமா"

"என்ன நடந்தது"

"எழுந்திருங்க. வாங்க நம்ம பாச்சா வீட்டில போய் பேசிக்கலாம்"

"ராஜேந்திரன்! இப்ப புரியுது" என்றான் கணேஷ்.

"முதல்ல எழுந்திருங்க"

மெல்ல எழுந்து மண்ணை உதறிக் கொண்டான். இருவர் மண்ணைத் தட்டிவிட்டார்கள். இருவர் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொள்ள, கணேசுக்கு எல்லாம் வலித்தது. நொண்டி நொண்டி நடந்தான். ராஜேந்திரன் அவனை தோளில் அணைத்துக்கொண்டு "ஸாரி. உங்களுக்கு ரொம்ப டிரபிள் கொடுத்து விட்டோம்" என்றார்.

"பாச்சா என்ன ஆனான்?"

"பாச்சாவைப் புடிச்சாச்சு. மாணிக்கம் பத்திரமா இருக்கான்"

"மாணிக்கம் பாச்சா இல்லைன்னு..."

"எங்களுக்கு அப்பவே தெரியும்"

"இப்ப எல்லாம் புரியுது"

மெல்ல அவர்கள் அந்த கடற்கரையோர வீட்டை அடைந்து நுழைந்தார்கள். வாசலில் இரண்டு மூன்று போலீஸ் வண்டிகள் நின்றுகொண்டு இருந்தன. அவைகளின் லைட் வெளிச்சத்தில் பல போலீஸ்காரர்கள் தெரிந்தார்கள். கலகலப்பாக இருந்தது. வீட்டுக்குள் நுழைந்ததும் அவர்கள் எல்லோரும் ஓர் அறையில் அடைக்கப்பட்டு இருந்ததைப் பார்த்தான். பாச்சா கீழே உட்கார்ந்து இருந்தான், தன் கூட்டாளிகளுடன் சத்தம் போட்டுப்



இப்படித்தான் மரம் ஏறவேண்டுமோ! "மூன்றாம் பிறை" என்ற படத்தில் கமலஹாசன்—சுமிதா.



## வாங்க, சிவாஜி வாங்க!

சிவாஜி கணேசனின் நடிப்புக்கு ஏற்ற கதை. வயதுக்கு உகந்த பாத்திரம். விடுவாரா, சிவாஜி! புகுந்து விளையாடியிருக்கிறார்!

படத்துக்கு கலகலப்பு ஊட்டுவதும் சிவாஜி பாத்திரம்தான். சுந்தரராஜனை "பைத்தியம்" என்று எண்ணி அவர் அச்சப்படுவதும், பாதுகாப்பு தேடிக்கொள்வதும் வெடிச் சிரிப்பு. அப்படி, வயிறு குலுங்க சிரிக்க வைக்கிறவர், தன் ஒரே மகளை பறிகொடுக்கும் காட்சியில் கண் கலங்க வைத்துவிடுகிறார். இடைவேளைக்குப் பிறகு கண் கலங்கல் அதிகம்!

சிவாஜிக்கு ஈடுகொடுத்து நடித்து இருக்கிறார், சுஜாதா. சரியான ஜோடி என்றும் சொல்லத் தோன்றுகிறது! கணவனும் மனைவியும் சண்டை போட்டுக் கொள்ளுவது நல்ல விளையாட்டு.

வடிவுக்கரசிக்கும் ஒரு நல்ல பாத்திரம் கிடைத்து இருக்கிறது. நன்றாகச் செய்து இருக்கிறார். ஜெய்கணேசும் கச்சிதம்.

மேஜர் சுந்தரராஜன், வி. கே. ராமசாமி, நாகேஷ், மகேந்திரன், பிரேம்ஆனந்த், குள்ள மணி, வி. ஆர். திலகம், விஜயசந்திரிகா, சிறுவன் சுரேஷ் ஆகியோரும் நடித்து இருக்கிறார்கள்.

படப்பிடிப்பும் வண்ணமும் நன்றாக இருக்கின்றன.

இசை: எம். எஸ். விசுவநாதன். பாடல்கள் எல்லாம் கேட்கும்படி ஒலிக்கின்றன.

"வியட்நாம் வீடு" சுந்தரம் வசனம் எழுத, யோகானந்த் டைரக்டு செய்து இருக்கிறார். படம் சரளமாகப் போகிறது. கொஞ்சமும் ஆபாச கலப்பு இல்லாதது சிறப்புக்குரியது. ஆனால், தாடி சிவாஜி, "பாபு" சிவாஜியை நினைவுபடுத்தவில்லையா? கடைசியில் அவ்வளவு ஓட வைத்து இருக்கவேண்டியது இல்லை. கினற்றோடு முடித்து இருக்கலாம்!

**குடும்பத்தோடு பார்க்கவேண்டிய படம்.**

பேசிக் கொண்டிருந்தான். எட்டிப் பார்த்த கணேசை "டேய் வக்கிலு ஏமாத்திப் பிட்ட இல்லை! எங்க போயிருவே?"

"நான்கூட ஏமாந்துட்டேன் பாச்சா" என்று அவனைப் பார்த்து புன்னகைத்தான்.

மாணிக்கம் ஓரத்தில் தெரிந்தான். "அய்யா, எனக்கு ஒண்ணுமே புரியலைய்யா"

"எனக்கு இப்பதான் புரிய ஆரம்பிச்சிருக்கு மாணிக்கம். ராஜேந்திரன் நீங்கள் பெரிய ஆள்! நான் முதல்ல கொஞ்சம் ஆச்சரியப்பட்டுப் போயிட்டேன். என்னடா போலீஸ் இந்த மாதிரி தப்பு பண்ணுவாங்களான்னு. ஒரு ஆளைப் போட்டு இன்னொரு ஆளுன்னு சொல்லுவாங்களா? இப்பதான் சரியாப் புரியுது. எல்லாம் பிளான் பண்ணித்தான் செஞ்சிருக்கிங்க!"

"ஆமா, கணேஷ். முதல்ல இந்த மாணிக்கத்தை பூக்கடை போலீஸ் ஸ்டேசன்ல பாச்சான்னு சந்தேகப்பட்டு பிடிச்சதும் ரெண்டு பேருக்கும் இருக்கிற ஒற்றுமையைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டுப் போயிட்டோம். ஆனா முதல்லயே எனக்கு இவன் பாச்சா இல்லைன்னுட்டு தெரிஞ்சு போயிருச்சு. பாச்சா கொஞ்ச நாளா தலை மறைவா இருக்கான். அவனை வெளிய கொண்டு வர ஒரு தந்திரம் பண்ணிப் பார்க்கலாம்னு தோணிச்சு. பாச்சாவை போலீஸ் பிடிச்சதா நம்ப வெச்சுட்டு பேப்பர்ல எ ல் ல ா ம் போட்டுர வேண்டியது. அப்பறம் நிஜ பாச்சா என்ன செய்வான்? உள்ளுக்குள் சிரிச்சுகிட்டு "அட நம்ம வேலையைத் துவங்க வே ண் டி ய து தான்" னு தயாராயிருவான். அந்த சமயத்தில நீங்களும் வசந்தும் சேர்ந்து கொஞ்சம் குட்டையை குழப்பிட்டிங்க. அப்பறம் யோசித்துப் பார்த்ததில் நீங்கள் அவனை ஜாமீன்ல விடு



"வரதட்சணை இல்லாமலே மகளை கட்டிக் கொடுத்தீர்களே; மாப்பிள்ளை என்ன செய்கிறார்?"

"கை நிறைய பென்ஷன் வாங்குகிறார்!"

தலை செய்துட்டு போறதும் போலீசுக்கு ஒரு விதத்தில் சாதகம்தான்னு தோணிச்சு. எப்படியாவது உண்மையான பாச்சா உங்கள் கூட தொடர்பு கொள்ள விரும்புவான் என்று எதிர்பார்த்தோம். ஒண்ணு அந்த போலி பாச்சாவை பாக்கணும்கிற விருப்பமா இருக்கலாம். இல்லை அவனை விடுதலை பண்ணாதே, நான் அவனை ஜெயில்ல பாத்துக்கறேன். போலீஸ் அவன் ஜெயிலுக்கு போயிட்டதா நினைச்சுக்கிடட்டும்னு உங்கள்கூட பேரம் பேசறதுக்கு பாச்சா உங்களோட தொடர்புகொள்ள முயற்சிக்கலாம்னு உங்கள் வீட்டை ராப்பகலா கண்காணிக்கச் சொன்னேன். நினைச்ச மாதியே பாச்சா உங்களோடு தொடர்பு கொண்டுவிட்டான். அவன் என்ன கேட்டான்?"

"நீங்க சொன்ன மாதிரி பேரம்தான் பேசினான்."

"பாச்சா பெரிய ஆளு. கோயில்ல திருடறதில அசகாய சூரன்! வெளிநாட்டுக்கு தங்கக் காசு, சிலை கடத்தல்னு, இவன் மேல ஜில்லா ஜில்லாவா கேஸ் இருக்கு. கணேஷ் சாரி. உங்களுக்கு கொஞ்சம் தொந்தரவு கொடுத்துட்டேன். தக்க சமயத்

தில, உங்கள் மேல கத்தி பாயறதுக்குள்ள வந்துட்டோம்."

"ராஜேந்திரன் நீங்க என்கிட்ட இதை முன்னமேயே சொல்லியிருக்கலாமே, ரெண்டு பேரும் கூட்டா சேந்துக்கிட்டே இதை செய்திருக்கலாமே."

"இல்லை கணேஷ். இந்த திட்டத்தை டாப் போலீஸ் ஆபீசர்களுக்கு மட்டுமே தெரிஞ்சு செயல்படுத்த விரும்பினோம். கொஞ்சம் எதாவது லீக் ஆயிருச்சுன்னா எல்லாமே வீணாப் போயிடுமே. கணேஷ், கோபமில்லையே?"

"ஏதோ சமயத்தில வந்து சேந்திங்களே. இல்லைன்னா பேப்பர்ல பேர் வந்திருக்கும் காலமானார்னு!"

"இப்பவும் வரும் "பாச்சாவைப் பிடிப்பதில் போலீசுக்கு உதவினர்"னு. கணேஷ் உங்களுக்கு நான் தனியா ஒரு விருந்து கொடுத்தாகணும். வாங்க மாணிக்கம். இனிமே பயப்படாதிங்க. நீங்க போலீசுக்கு இனி தேவையே இல்லை!"

எல்லோரும் தாஜ் கோரமண்டல் ஓட்டலில் உட்கார்ந்தார்கள். எதிரே ஒரு சின்ன மண்டபத்தில் ஒரு பெண் பரதநாட்டியம் ஆடிக் கொண்டிருக்க, சோழ ராஜா காலத்து சேவகர்கள் போலிருந்த வெய்ட்டர்கள் என்ன என்னவோ கிண்ணங்களில் தினுதினுசாகப் பரிமாறினார்கள்.

நர்மதா தாங்க முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள். வசந்த் அவள் தலையில் தட்டினான். எதிரே கணேஷ் ஸ்பூனைத் துறந்து விரல்களைப் பயன்படுத்தி பாயசத்தை சுவைத்துக்கொண்டிருந்தான்.

"எதுக்கு சிரிக்கிறீங்க" என்றார் ராஜேந்திரன்.

"பாம்பே மார்கெட்டில சேட்டு மாதிரி எங்க ரெண்டு பேருக்கும் ஒரே சமயத்தில பேரம் பேசிக்கிட்டு வந்து நிக்கிறான் சார் இந்த வசந்த்! அப்பறம் பாக்கெட் டிரான்சிஸ்டரை வெச்சுக்கிட்டு அதான் போலீஸ் ரேடியோவாம்! "கண்ட்ரோல் கண்ட்ரோல்!"

"ஏதோ சமயத்துக்கு உபயோகமாச்சுது. என்ன மாணிக்கம் பேசாமயே இருக்கிங்க. சாப்பிடுங்க."

"இத்தனையும் ஒரு ஆளுக்குங்களா" மாணிக்கம் வியந்தான்.

"ஆமா."

"அந்தம்மா டான்ஸ் ஆடறாங்களே எவ்வளவு வாங்குவாங்க?"

"அதைப்பத்தி என்ன கவலை. இப்ப ஊருக்குப் போனதும் உங்கப்பா கிட்ட எல்லாத்துக்கும் சேத்து வெச்சு பில் நாங்க வாங்கப் போறமே! என்ன சுகுணா பேசாம இருக்கிங்க..."

"உங்கள் எல்லாருக்கும் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலிங்க"ன்னேன்.

"சொல்லாதிங்க"ன்னாரு வசந்த்.

"வசந்த்! நீங்க நர்மதாவைக் கல்யாணம் செஞ்சுக்கங்களேன் பொருத்தமா இருக்கும்!"

நர்மதா சிரித்தாள். "சரிதான்! இந்த குரங்கையா? கல்யாணம் ஆன கையோட பம்பாய்ல என்னை வித்துருவான்."

"சுகுணா என்ன செய்யறதா உத்தேசம்? பட்டணத்துக்கு நீ எதுக்கு வந்த! வேலை பாக்கத்தானே? இண்டர்வ்யூ ஆயிருச்சா?"

"ஆயிருச்சு பட்டணத்தோட. இன்டர்வ்யூ ஆயிருச்சு. பேசாம எங்கள் கிராமத்துக்கே திரும்பிப் போயிரலாம்னு தீர்மானிச்சுட்டேன்!"

"சேச்சே பட்டணத்தில் அங்கங்க நல்லவங்களும் இருக்காங்க" என்றான் வசந்த்!

(முடிந்தது)



## தெலுங்கு ராதிகா!

ராதிகா, தெலுங்கில் அதிகப் படங்களில் நடிப்பது ஏன்?

"என் மகள்(ராதிகா) பணத்துக்காக தெலுங்குப் படங்களிலும், புகழுக்காக தமிழ்ப் படங்களிலும் நடிக்கிறாள்" என்று கூறுகிறார், அம்மா கீதா.



# கத்தரிக்காய் தோல் சட்டினி

**தேவை:—**

பெங்களூர் கத்தரிக்காய் 1, தேங்காய்த் துருவல் 2 மேசைக் கரண்டி, மிளகாய் வற்றல் 6, புளி 1, நெல்லிக்காய் அளவு, உளுத்தம் பருப்பு 1 மேசைக் கரண்டி; கடுகு 1 தேக் கரண்டி, தேவையான அளவு உப்பு, சிறிது நல்லெண்ணெய், பெருங்காயம் 1 சிறு துண்டு.

**செய்முறை:—**

முதலில் சமையலுக்கு வாங்கிய பெங்களூர் கத்தரிக்காயின் மேல் தோலை சீவி எடுத்து, பொடியாக நறுக்கி, கழுவி சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

ஒரு வாணலியில் எண்ணெய் முழுவதையும் ஊற்றி அடுப்பில் வைக்கவும்.

எண்ணெய் காய்ந்ததும், மிளகாய் வற்றல், பெருங்காயம், கடுகு, உளுத்தம பருப்பு ஆகியவற்றை போட்டு, சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதே வாணலியில், நறுக்கி வைத்த பெங்களூர் கத்தரிக்காய் தோலை போட்டு நன்றாக வதக்கி வைக்கவும்.

அம்மியில் மிளகாய் வற்றல், புளியை போட்டு விழுதாக அரைக்க வேண்டும். அதோடு வதக்கி வைத்துள்ள தோலை சேர்த்து நைசாக அரைக்கவும். பின்பு தேங்காய்த் துருவல், கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் உப்பு சேர்த்து, சிறிது தண்ணீர் விட்டு வெண்ணெய் போல நன்றாக அரைத்து வழித்து எடுக்க வேண்டும்.

"பெங்களூர் கத்தரிக்காய் தோல் சட்னி" சோற்றில் கலந்து பிசைந்து சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். மோர் சாதம், தயிர் சாதம், இட்லி, தோசை ஆகியவற்றுக்கு தொட்டுச் சாப்பிடவும் ஏற்றது.

—திருமதி. தாயம்மாள், பெரம்பூர்.



டிபனுக்கு தயாராகிறார், ஸ்ரீகாமு.

# ஆரஞ்சு கேக்

**தேவை:—**

மைதா மாவு 2 கோப்பை, சீனி 2 கோப்பை, முட்டை 4, ஆரஞ்சு பழச் சாறு 3 கோப்பை, சமையல் சோடா 1 தேக் கரண்டி, ஆரஞ்சு சுளை 2.

**செய்முறை:—**

முதலில் முட்டையை உடைத்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி நன்றாக அடிக்கவும். பிறகு அதில் சீனியைக் கொட்டி அடிக்கவேண்டும். சீனி கரைந்து வெண்ணெய் போல் வரும்.

மற்றொரு பாத்திரத்தில் மைதா மாவு, சமையல் சோடா, ஒரு சிட்டிகை உப்பு, ஆரஞ்சு பழச் சாறு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து நன்றாகப் பிசைய வேண்டும். பிசைந்த மாவை சீனி — முட்டைக் கலவையில் போட்டு கிளறி விடவும்.

இந்தக் கலவையை கேக் தயாரிக்கும் தட்டில் போட்டு சமமாகப் பரப்பி, கேக்குகளாகக் கீறி, அடுப்பில் வைத்து சூடாக்க வேண்டும்.

தேவையான அளவு சூடாக்கியதும், தட்டை வெளியே எடுங்கள். "ஆரஞ்சு கேக்" தயாராகி விடும். கேக்கின் மீது ஆரஞ்சு சுளையின் சதைப் பகுதியை பரவலாகப் போட்டு வைக்க, அழகாகத் தோன்றும். சாப்பிடவும் இனிப்பாய், சுவையில் இருக்கும்.

—குமாரி. துர்க்காபாய், சென்னை-81.

---

* கதவுக் கைப்பிடி, தண்ணீர்க் குழாய் போன்ற உலோகப் பொருள்களை எலுமிச்சம்பழத் தோலால் தேய்த்தால், அவை பளபளப்பாகும்!

* கிழங்கு வகைகளை உடனுக்குடன் சமையல் செய்ய முடியாவிட்டால், சிறிது உப்புக் கலந்த நீரில் போட்டு வையுங்கள். கெடாமல் இருக்கும்.

* தயிர் சாப்பிடும் போது, நெல்லிக்காயையும் சேர்த்து சாப்பிடுங்கள்! உடல்நலத்திற்கு நல்லது.

* உருளைக்கிழங்கு வறுக்கும்போது, காய வைத்துள்ள எண்ணெயில் முதலில் ஒரு துண்டு ரொட்டியை போட்டுவிட்டு, பிறகு உருளைக்கிழங்குகளை வறுத்தால் எண்ணெய் கையில் தெறிக்காது.

* தேயிலை பானம் அல்லது காபி தயாரிக்கும் போது டிகாஷனில் ஒரு சிட்டிகை உப்பை சேருங்கள். காபி "கமகம" என்று மணக்கும்!

# ஒருத்தி நினைக்கையிலே

## சுஜாதா



COMICS PDF TIMES

SS